உ

ஸ்ரீ கணபதிக்கு வணக்கம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட மயம்

# தொல்காப்பியச் சண்முகவிருத்தி மறுப்பின்

# முதற்பகுதியாகிய

# பாயிர விருத்தி மறுப்பு.

இது

திருக்கைலாய பரம்பரை
ஸ்ரீ மெய்கண்ட பெருமான் சந்தானத்து
ஸ்ரீ திட்டைத் திருத்தளியின் திருமுன்னுள்ள
ஸ்ரீ அன்னப்பன்பேட்டை ஆதீனமுடைய
ஸ்ரீ தாயுமானபிரான் மருமானாய
ஸ்ரீசபாபதித் தாயுமான தேசிக சுவாமிகள் நேர்முக
மாணாக்கனாகிய ஸ்ரீ சேப்பறை, மெய்கண்டதேவருரைமுக
மாணாக்கனால் ஆக்கப்பட்டு

சிதம்பரம் பாலாம்பிகா விலாசம் பிரஸிலும்
சென்னை சிவரஹஸ்ய முத்ராலயத்திலும்
பதிப்பிக்கப்பட்டது.

1916.

இங்ஙனம்
ஆர். சா. பெரியசாமிப் பிள்ளை.
ஸ்ரீ சிவஞானத் திருத்தளி,
ஸ்ரீ சிதம்பரம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
6 - JUN 1917
MADRAS.

P31, DX1
Ń14.
18/06.

# விற்பனைக்குத் தயாராகவிருக்கும்
# புத்தகங்கள்

OFFICE OF THE REGISTRAR OF SOC...
REGISTERED
5 - JUN 1917
MADRAS.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | தொல்காப்பியச் சண்முகவிருத்தி மறுப்பின் முதற்பகுதியாகிய பாயிரவிருத்தி மறுப்பு. | 1 | 0 | 0 |
| 2. | தசகாரியவிளக்கச் சூறாவளி. | 0 | 2 | 0 |
| 3. | மாயாவாத விபரீதவுரை மறுப்பு. | 0 | 2 | 0 |
| 4. | சித்தாந்ததீபிகைப் புத்துரைவிளக்கச் சூறாவளி. | 0 | 2 | 0 |
| 5. | போலுமென்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக் குப்பாயம். | 0 | 2 | 0 |
| 6. | சைவதரிசன மறுப்பு. | 0 | 1 | 0 |
| 7. | சிவஞானபோத வசனுவசனம். | 0 | 1 | 0 |
| 8. | சங்கராசாரிய நீலகண்டாசாரிய சம்வாதமென்னு மாஸ்திக பாஸ்கரகேது. | 0 | 2 | 0 |
| 9. | ஞானசித்திப்போலி. | 0 | 1 | 6 |
| 10. | தில்லைச் சித்திரகூடமான்மிய சூன்யத்தேற்றம். | 0 | 3 | 0 |
| 11. | புட்பவிதி புதியது. | 0 | 4 | 0 |
| 12. | இம்மறுப்புக்கொத்து | 1 | 8 | 0 |

மேல்வாசகம்:—

ஆர்-சா. பெரியசாமிப் பிள்ளை.
சிவஞானத் திருத்தளி,
செங்கழுநீர் பிள்ளையார்கோவில் தெரு,
ஸ்ரீ சிதம்பரம்.

ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள்.
திருநாவுக்கரசு சுவாமி மடம்
சாமி சன்னதித் தெரு
திருநெல்வேலி.

ஸ்ரீ சிவரகசிய முத்ராலயம்
181, 182, இராசப்ப செட்டித் தெரு,
பார்க்குடவுன், சென்னை.

சிவரஹஸ்ய முத்ராலயம், சென்னை

# பிழை திருத்தம்.

| க்கம். | கூறு. | வரிசை. | பிறழ்வு. | பிறழாமை. |
|---|---|---|---|---|
| 12 | 3 | 2 | குயா | கே |
| ,, | ,, | 9 | தவே | துவே |
| 41 | 2 | 12 | டிச் | டி |
| 47 | 1 | 1 | றவும் | கவும் |
| 50 | 2 | 22 | மன்ெ | மன்றே |
| 52 | 2 | 7 | அத் | அற் |
| 55 | 3 | 5 | ரோதல் | தோதல் |
| ,, | ,, | 10 | முக | முத |
| 60 | 3 | 3 | ருக | ருநக |
| 72 | 3 | 12 | மர | மா |
| 80 | 1 | 11 | த | தா |
| 84 | 1 | 5 | ம | மா |
| 87 | 1 | 2 | யா | ய |
| 93 | 1 | 5 | த்தே | த்தோத் |
| ,, | ,, | 24 | தமு | தம |
| 94 | 1 | 3 | லறி | வறி |
| 97 | 2 | 10 | ம | மா |
| 98 | 1 | 8 | ள | ளங் |
| ,, | ,, | 32 | ல | லவ |
| 99 | 1 | 18 | ரு | ருங் |
| ,, | ,, | 29 | ம | மர |
| 100 | 1 | 10 | ஞெ | ஞே |
| 102 | 1 | 9 | தி | தியெ |
| ,, | ,, | 12 | வா | வாறு |
| ,, | 2 | 2 | ன் | டின் |
| 101 | 2 | 22 | ரு | து |
| ,, | ,, | 23 | டும | டுமாற |
| 105 | 1 | 10 | புல | புலவ |
| ,, | ,, | 18 | தி | திய |
| 108 | 2 | 3 | ப | பத |
| ,, | ,, | 5 | றுத் | று |
| 109 | 2 | 11 | பொ | போ |
| 112 | 4 | 2 | றத் | றப் |
| ,, | ,, | 5 | ணி | ணிபு |
| 113 | 2 | 1 | தேரி | தெரி |
| 114 | 1 | 25 | தோ | தொ |
| 115 | 1 | 3 | மையு | மை |

| பக்கம். | கூறு. | வரிசை. | பிறழ்வு. | பிறழாமை. |
|---|---|---|---|---|
| 116 | 1 | 8 | ரி | ரிய |
| 120 | 1 | 24 | இ.ரு | இரு |
| ,, | ,, | ,, | ருணி | ருணி |
| 125 | 2 | 11 | தூலு | நூலு |
| 133 | 1 | 9 | காலா | கலா |
| 135 | 1 | 16 | யிற் | பிற் |
| 138 | 2 | 5 | ளல | லில |
| 150 | 1 | 3 | முட | முட் |
| 156 | 1 | 22 | ரீ | ரீண் |
| 158 | 2 | 9 | பது | மது |
| 159 | 1 | 29 | மெது | மேது |
| ,, | ,, | 30 | குறி | கூறி |
| 161 | 1 | 1 | லைபப | லைப் |
| ,, | ,, | 3 | வறி | வறிவு |
| ,, | ,, | 11 | ருபு | ருவி |
| ,, | ,, | 19 | னுலு | ணாலு |
| ,, | ,, | 26 | தியெ | திரையே |
| ,, | ,, | 30 | லுடை | லுடைய |
| 160 | 1 | 10 | ளுற் | ளுல் |
| ,, | ,, | 19 | குது | கு |
| 167 | 1 | 10 | ஊத் | ளேத். |
| ,, | ,, | 15 | பா | பாடு |
| 168 | 1 | 1 | ருன் | ருனு |
| 175 | 3 | 2 | மன்மே | மன் |
| 176 | 1 | 30 | யது | யாது |
| 178 | 1 | 5 | மய் | மாய் |
| 181 | 1 | 11 | யின | யின் |
| 183 | 1 | 2 | தமேல | தமில |
| 198 | 1 | 20 | தாம | தாம் |
| 200 | 2 | 3 | ரோ | ேணா |
| 202 | 1 | 5 | மெய்யருளிற்ற | யுமருளத்த |
| ,, | ,, | 21 | ணி | ணிஙனி |

உ

ஸ்ரீகணபதிக்குவணக்கம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட மயம்.

தொல்காப்பியச் சண்முகவிருத்தி மறுப்பின்

## முதற்பகுதியாகிய

# பாயிரவிருத்திமறுப்பு.

மெய் மொழி மனங்களான் வேண்டரும் பொருளை
மெய் மொழி மனங்கனான் வேண்டுதும் பெரிதே.

நூலியல்பெல்லா நுண்ணிதி னுணர்ந்தே
நூலிய லெந்நூ லந்நூ லாற்று
னூலியல் பின்னூ னுவன்று நுணித்த
நூலியல் குரவனை நுவறுமன் னிசையே.

அருமறைமெய் நெறிதழைப்ப வாகமநற்றுறை விளங்கப்
புருட பரம்பரை பொலியப் போதம்வாய் மலர்ந்தருளும்
பெருகு புனற் பெண்ணைவயல் வெண்ணெய் வளர் மெய்கண்டான்
றிருவடியெம் முடியாக்கி யவைநோக்கிச் செப்பிடுவாம்.

அத்துவிதப் பொருளேக மெனுங்கேவ லாத்துவித வரியு மாய
வத்துவிதந் துவிதமில தெனும்விசிட்ட வத்துவிதக் கரியு மோட
வத்துவிதந் துவிதார்த்த மெனும்பேத வாதமாம் பசுவு மாள
வத்துவித முணர்த்தும்புல்லரிவருடைச்சிவஞானியடியையுள்வாம்

திருமலையார் சந்ததியுட் சிவஞான போதநெறி காட்டும் வெண்
ணெய்க், குருவாய்மை மெய்கண்டான் மரபிடையோர் மெய்யறி
வின் கோனையாகி, மருவாரும் பொழிற்றுறைசை வாயமர்ந்து

விருத்தி பாடியம் பொழிப்பென், றொருவாறுன் முதலுரைத்
தோன்றிருநெறிதின் றென்று நன்றேயோங்க மாதோ.

ஆபவிம்மொழி தாங்கி யவாவுமாங்
தூயஞான முன்னையிரு தொல்குண
மேயவைந்தெழுத் தாசிரி யன்விழி
வாயவம்பல வாண னறிவளை.

P31/824
NK

மாபினை மரபன்றென்ன மறுக்கது வகுத்தாற் கிந்தே
விரவுறு சமவாதத்தை யறுத்தனை மெய்யன்பர்க்காப்
பரவுறு விருத்தி முன்னும் பல்புகழ் நிற்கா வேண்டுங்
குரவனே துறைசையின்வாய்ச் சிவஞானக் கொழுந்தேயெற்கே.

இஞ்ஞான்றின் இயனூலுடையரு ளொருசாரார் கானமயிலாடக்கண்டிருந்த வான்கோழியொப்ப மேனுளெழுந்து நின்று மேன்மேனிலவு முண்மை விருத்தியொன்றுகண்டு தாமுமொரு விருத்தி காண்பாராய் பாயிர விருத்தியென வறிதேயொரு பெயரிட்டுக்கொண்டு ஆதற்கேற்ப இயனூல் வாக்கியங்கண் முழுதையுந் தமக்குத் தோன்றியவாறெல்லா மீர்த்திடர்ப்பாடுற்றுப் போலிவிருத்தி யொன்றுசெய்து அதனைத்தம்முள் வைத்துத்தாமே நயம் பாராட்டா நிற்பர். இனி அது கேட்ட வறிவறைபோயின ரொருசாராரும் அப்போலி விருத்தியையு முண்மைவிருத்தியையு மொருங்குவைத்தொப்பு நோக்கி இது போலி இஃதுண்மையென அவைதந்தரதமமுள்ளவாறறியு மறிவொரு சிறிதுமின்றிக் கேவலங்கதானுகதிக நியாயம்பற்றி அப்போலி விருத்தியே யுண்மை விருத்தியென மயங்கித்திரியக்கொண்டு அவர் தாமுமதனயம் பாராட்டாநிற்பர். அல்லதூஉமஃதுடையர் அவ்வுண்மை விருத்தியுடைய ரிவ்வுலகின்கண் ஒருரையாணியென மிகச்சிறந்து அரிய பெரிய சீரிய மேம்பாடுடையராய் யாண்டும்

யார்க்கும் புலனுமாறு மேன்மேனிலவும் பேரியல்புடையராகலின் அவர் தம்மைமாத்திரையே யாண்டு மிகழப்புகின் தந்தொழில் யாதும் பயன்படாதென்றுகங்கொண்டு ஆண்டாண்டாசிரியர் பிறரையுமகப்படுத்து வைத்துக்கொண்டிகழா நிற்றன்மேலும் பபனிலாட்டியொப்ப ஒரோவோருழி யவ்வாசிரியர் பிறரைப்பு றத்தே புகழ்வார்போன்று அகத்தே யிகழாநிற்பர். இனியத ன்போலியியல்பெல்லாந் தனித்தனியாய்தல் மணற்சோற்றுட்கல் லாய்தல்போலாம். ஆகலினவற்றையெல்லா மிலக்கியப்பாற் படுத் துக் கண்டித்தல் பெருங்கணப்பிரயோகத்திற்கு முயன்மாவொ ன்றை யிலக்கியப்படுத்த லொக்கும். ஆயினுஞ் சிவாசாரிய சிவ பத்தி யஃகியொழியாமைப் பொருட்டும் அவ்வியனூற்பயிற்சி பெரிதுமின்றிக் கேட்கு முறையானே சிறிது கேட்டுச்சிந்தித்து வைகுஞ்சிற்றறிவுடைய வொருசாரார் அதன்கண் மயங்காமைப் பொருட்டுஞ் சிறிதோராறுகாட்டுகவென வான்றோரொரு சில ராணை தந்தருளுதலின் அஃதெம்முடிமேற்கொண்டு ஆண்டைச் சொற்பொருளிரண்டனுள் சொல்லெல்லாம் வழுவாயினிது விளங் காமை முதலிய விழுக்கெல்லா மொருங்குடைமையின் அஃதொழி த்தொழிந்து நின்ற பொருட்போலிபுள்ளும் ஸ்தாலிபுலாக நியா யம்பற்றி யொரு சிறிது மாத்திரையே யெடுத்துக்கொண்டு எம தாசிரியருண்மை விருத்தியியல்புண்மையர்மாறு சாதிக்கு முக த்தான் அது போலியாமாறு சாதிக்குதும்.

அஃதாமாறு. "தொல்காப்பியச் சண்முகவிருத்தி" யென்னு மத்தலைப் பெயர் பொருந்துமோ பொருந்தாதோ வென்னுமையப் பாட்டின்கண் பொருந்துமென முதற்கணே நதும் அதுவருமாறு தொல்காப்பியமென்னு மந்நூற்குச் சண்முகனுராணுக்கப்பட்ட விருத்தியாகலானும், அல்லதூஉமதற்குரையு முரைசெய்தாரும் பலவும் பலருமாமன்றே ஆகலினஃதங்ஙனங் கிளந்தோதா தொ

ழியின் அஃதியார் செய்ததாய யாதாமோவென வொருதலைப்
படாது பலதலைப் பட்டையப் பாட்டிற் கேதுவாமாகலின் அஃ
தன்னனமாகாதினிது விளக்குதற்பொருட்டு அவ்வாறோத லொ
ருதலையான் வேண்டுமாகலானும், பவுட்கர விருத்தி யென்றாற்
போலுமவ்வழக்கு நிகழக்காண்டலானு மன்னபிறவாற்றானும்
அது பொருத்தமுடைத்தெனப்பிறர் கூறும் பக்கம் பெறப்பட்ட
வழி அது விருத்த முடைத்தெனச் சித்தாந்தங் கூறுதும்.

ஒருநூற் கொருவ னொரு விருத்தி செய்து வைக்குமாயின்
இஃதின்னன் செய்த வின்னநூல்விருத்தி யென்றுதல் அல்லது
இஃதின்னநூல் விருத்தி இன்னன் செய்தது அல்லது செய்ததி
ன்னனென்றுதல் இம்முறையான் வைத்து வழங்கும் வழக்கே
எங்கு மென்ஞான்று நிகழ்தலுண்மையின் அதுவே முறையாம்
அவ்வாறன்றி யிவ்வாறோதல் யாண்டு மின்று மென்பது. அற்
றேல் தொல்காப்பியச் சண்முக விருத்தி யென்பதூஉநீயிர் மே
லோதிய வற்றுளாக்கியோன் பெயரொழுவாயிறு வாயென்னு மவ்
விருழியும் பெய்யப்பட்டு நின்றாற்போல ஈண்டிதனை யாக்கியோ
ன் பெயர் இடைவாய்ப் பெய்துவைத்த வத்தனையே பிறிதின்மை
யின் இதுவுமது ஆகலான் அஃதன்னனம் வைத்தோது மாற்றாற்
படுமிழுக் கென்னை யெனின். அற்றன்று தம்முளிவையும் பெய
ராய நூலுரை யிரண்டற்கு மிடைவாய் அவற்றொடியை வுபடா
தஉரையாக்கியோன் பெயர், பெய்துரைக்கப்பட்டு நின்ற
இது அஃதவற்றொடியையாது வேறு நிற்கு மவைபோலா மென்
றற்கியாதும் ஏலாமையானும் அல்லதூஉ மவ்வழக்கு யாதும்
யாண்டு மின்மையானும் அன்றி யஃதியசது மியைபின்மையானு
மஃதிழுக்காகாமை யாண்டையதென் றொழிக.

அற்றேல் மேலோதிப் போந்தமுறை காண்டிகைக்கே இஃ
தஃதன்றி விருத்தியே யாகலான் இதற்கப் பெயரியையு மென்

ருற் படுமிழுக்கென்னை யெனின். அற்றேல் அஃதங்ஙன மென் றற்குப் பிரமாணமென்னை ஒன்று மின்றாகலானும் பாடிய மொழித்தொழிந்தவை யாவை அவையனைத்து மவ்வழக்கே யுடைய னவன்றி வழக்கு வேறுடையவாதல் யாண்டு மின்மையானு மன்னபிற வாற்றானு மஃதிழுக்காகாமை யாங்ஙன மென்றொழிக. இனிப்பாடியம் ஆக்கியோனாற் பெயர் பெறுமாறதனை னோர்ந் துணர்ந்து கொள்க.

அஃதேல் மாபாடியமென வழங்கப்படுதலின் அஃதியாண்டு ஞ்செல்லாதாலெனின் அற்றன்று அதுபதஞ்சலபாடிய மாகாமை சண்முகபாடியமாகாமை யானென்பதுபிறவுமன்ன

அற்றேலற்றற்றாக நீயிரோதியவாறே உரையாக்கியோன் பெயர்முன்பின்னென்னு மீருழியும்பெய்து கோடற்குப் பிரமாண மென்னை யெனின் ஆன்றோராசாரத்தானுண்டென்றனுமிக்கப்படு ஞ் சுருதியேயா மென்பது.

அஃதேலஃதஃதாக யாமோதியதூஉ மதுபற்றி யென்றாற் படுமிழுக்கென்னையெனின் அவ்வழக்கியாதும் யாண்டுமின்றென மேலோதிமொழிந்தனமாகலானு மன்னபிறவாற்றானு மஃதங்ஙன மிழுக்காதலொருதலையேயா மென்றொழிக.

இனியுரையுமுரைசெய்தாரும் பலவும்பலருமென்பது பற்றி அஃதங்ஙன மென்றோதியதூஉ மேலாது. ஈண்டெடுத்தோதப் படுமிவ்வாக்கியத்தின் மேன்மொழியைவிட்டு நீங்காதியாண்டுமு டனாய் நிகழுமம்முன்வாக்கியமே அவ்வையப்பாடொழித்தற்கொ ருதலையானமையுமாகலானென்பது. அற்றேலஃதங்ஙனமாக நீயி ரோதியவாறுபற்றியுமின்ன நூல்விருத்தியென்பதொழித்தொழி ந்தன விறந்தொழிதலுளவாதல் காண்டுமாகலான், அங்ஙனமிற ந்தவற்றுளுரையாக்கியோன் பெயருணரப்படாமையின் அஃதங்

நூலுரையிரண்டற்கு மிடைவாய்ப் பெய்து வைக்கப்படுமாயின் எஞ்சுமவற்றோடதுவு மிறவாதென்று நின்றவவ்வுரையாக்கியோனை யுணர்த்தற்குரித்தாகலான் அதுபற்றி அஃதொருகாலியையு மாலோவெனின். அற்றன்று. ஒரோவோருழி யுரையாக்கியோர் ன் பெயரிறந்தொழியுமாறே அந்நூலாக்கியோன்பெயருமிறந் தொழிதல் காண்டும். அற்றேலாண்டு மிவ்வாறே நூற்பெய ரோடு நூலாக்கியோன் பெயரு மியைத்தோதவேண்டு மெனப்ப டும். படுமாயின் அருண்மொழித்தேவத் திருத்தொண்டர் புரா ண மென்றித் தொடக்கத்தான் வழங்கப்பட்டு அதுபிறிதினியை பு நீக்கிய தெனவேபடும் படவே திருத்தொண்டர் புராணம் பிற வு முளவென்பது பெறப்படு மாகலானும் அல்லதூஉமொரு சார் கைவரை முறையுள் நூற்பெயர் முதலியபாவு மிறந்தொழியக்கா ண்டலானு மன்னபிறவாற்றானு மதுபோலியேயாமாறறிக.

அஃதே லஃதங்ஙனமியைத் தோதாது நீயிரோதியவாறே வேறுபெய்தோதினு மதுவும் பிறிதினியைபு நீக்குதற்பொருட் டாலோ வெனின் அற்றன்று அதனியல்புண்மையா னேக்குவா ர்க்கஃதைய மறுத்தற் பொருட்டாகலானும் அஃதியைத் தோ துவதூஉமது வென்றற்கியாது மேலாமை அவற்றின் ஒற்றுமை வேற்றுமை பற்றி யறியப்படுமாகலானும் இனி மறுதலையானேக் குவாரோதுவனயாதும் பொருள்படாமையினவராசங்கை ஆசங் கைபன்றென்றெறிக.

இனிப்பவுட்கர விருத்தியென்றெடுத்துக்காட்டு மவ்வெடுத் துக்காட்டுப் பற்றியுநுங்கருத்து நிரம்பாதுஅது பவுட்கரவுரை யென்பதே அடிப்பட்டுப்போந்த ஆன்றோர் வழக்காகலானும் அல் லதூஉம் அஃதங்ஙனங்கோடுமேனும் பவுட்கர உமாபதி விருத்தி யென விங்ஙனம் வழங்கப்படாமையானு மன்றி யவ்வடமொழி வழக்கு நுமக்குடம் பாடன்மையானு மென்பது அற்றேல்

பவுட்கரவுரை யென்பதறியார் வழக்கென்னுமோ வெனின் என்னும் என்னை அறிந்தார் வழக்கு வேறின்மையானென்பது

இத்துணையுமோதியவாற்ருன் அத்தலைப்பெய ரொருதலையா னே போலியாயொழிதல் உண்மையுணர்ந்துடையர்யார்க்குமொப் பமுடிதலான் ஒருபுடையொத் துண்மைவிருத்தி யொப்பத்தோ ன்றி நின்ற வதன் பொருளு மவ்வாறே போலியேயாத லொரு தலையாமென்பதோதா தேயினிதுவிளங்கும் இன்னுமிதனுனே ஸ்ரீகண்டபாடியம் அன்னம்பட்டீயம் நீலகண்டீய முதலிய வழக்கியாது மீண்டைக்கேலா வென்பதூஉந்தானே போதரும் போதவே தொல்காப்பியச் சண்முகவிருத்தி யென்னு மத்தலைப் பெயர் ஸ்ரீராமலிங்கத் தசரத ராமவிமானம் போலு மென்னு ம னுமானம் பற்றியும் போலியாதல் தெற்றென வறிக. இன்னு மஃ தங்ஙனமாதலீண்டோதியவாறுபற்றி விரித்துணர்ந்துகொள்க.

இனி நன்றியறிதலேயன்றிநன்றிகூறலென்பதொன்றின்மை யானும் அது செய்ந்நன்றி யறிதலென்னு மான்ருேர் வழக்கான றியப்படுதலானு மின்னுமின்னேரன்ன பிறவாற்ருனு நன்றிகூற லென்பது போலியுட் போலியாதலறிக. ஆசிரியருபதேசித்தரு ளியவாறே நன்றியறிதலென்ருேதாது நன்றிகூறலென்ருேது ம துவுமத்தலைப்பெயர் போலியாதற் கமையுஞ் சான்ருதலறிக. இ னிஅது செய்நன்றியிது செய்யா நன்றியென விவ்வாறு வேற்று மைப்படுத்தோதன் முதலிய போலிகளீண்டைக்கியாது மேலா மை யாண்டைப்பொருள்பற்றி யுணர்ந்து கொள்க.

அற்றே லஃதறிதலஃதோதற் பொருட்டன்ருே வெனின் அற்றேல் செய்நன்றிமுதலிய அறங்கள் செய்தார் அவற்றை யெ டுத்தோதன் மேலு நினைத்தலுமாகாவெனச் சுருதியுளோதல் அ வையவரறியாதாற்றினுரென்பது பற்றியே கொல்லோ அற்றன்று தன்னைத்தானே மீக்கூறல் தகுதி யன்றென்ப வாகலானுமஃதது

வேயாய் முடியுமாளானு மன்னபிறவாற்றானு மென்பது இது வுமதுவேயன்றியதனின்வேறன்றாகலானு மன்றி யஃததுவன் றேல் ஆசிரியர் நன்றிகூறலென்றே யதிகாரம் வகுத்தருளல் வேண்டும். அஃதங்ஙனம் வகுத்தருளாமையானும் அன்னபிறவாற்றானுமஃதுய்த்துக்கொண்டுணரவைத்தாரென்பதூஉ மேலோதியவாற்றானேலாமையானும் இனிஅஃதங்ஙனங் கோடுமேனும் அது.விருத்தியவயவங்களுள் வைத்தோதாவவயவ மன்மையானும் அன்றி அஃதான்றோரா சாரமன்மையானும் பொருந்துமாற்றிற் குமது பொருந்தாமையானு மதுவே முகவுரையின் முகவுரை யெனக்கோடுமென்பதற்கு மிஃதொக்குமாகலானு மின்னு மின்னோரன்ன பிறவாற்றானு மஃதாண்டுவைத்தோதல் யாது மியையாமையிற் போலியுட் போலியாதல் தெற்றென வறிக. உ வது இனி ஈண்டு "தொல்காப்பியம் சண்முகவிருத்தி" என்பதூஉம் மேல்தொல்காப்பியச் சண்முகவிருத்தியென்பதூஉந் தம்முளொன்றன்மை யுய்த்துணரப்படுமாயினு மீண்டுமொரு சிறிதோதுதும் அதுவருமாறு அவை தம்முளொன்றேயாயினவற்று ளொன்று நின்றுழி யொன்று சென்று மாறிநிற்பினும் அமைதல் வேண்டும் அஃதங்ஙன மமையுமாலோவெனின் அற்றேல் நீயிரவ்விருழியும வற்றுளொன்றே பெய்தோதலமையும் அஃதங்ஙன மோதாது இங்ஙனம் வேறு வேறு பெய்தோதற்கேது வென்னை யொன்றுங் காண்கிலம் இதனால்நுங் கருத்துவேறு செயல்வேறாத வினிது தெளியப்படும் படவே அது நுமக்கு முடம் பாடன்மை பெற்றாம்ஸ்ரீ ராமலிங்கம் தசரத ராமவிமானம் போலு மென்னுமனுமானம் பற்றியுமது போலியாதல் தெற்றெனவறிக. இன்னு மீண்டோதிய வாறுபற்றி யோதற்பாலனபிறவுமிவ்வாறேயோர்ந்துணர்ந்து கொள்க

௩வது இனி கல்வி கல்லாமைகளின் பின் அவ்விரண்டுமுடையர்க்குரிமையுடைமையிற் கேள்வியதிகார மெழுந்து நின்றதென்றேதுப. அஃதொப்ப ஈண்டுத் "தொல்காப்பியம் பாயிரவிரு

த்தி," யென்பதூஉம் மேற்போந்த வவ்வீரியல்பு மொருங்குடைத்தாய் மேலவற்றின் பின்னெழுந்தவ்விடை நிலைப்பெயர் கெட்டொழிந்து நிற்றலின் அது போலியும் போலியுட் போலியுமாய வவ்வீரியல்பு மொருங்குடைத்தாய வாறுகாண்க.

போலி—இயல்பொருசாருண்மை, போலியுட்போலி—இயல்பொருசாருமின்மை ஸ்ரீராமலிங்கம் பதண விரிவு போலுமென்னு மனுமானம் பற்றியும் அஃதவ்வீரியல்புடைத்தாதல் தெற்றென வறிக. அல்லதூஉ மொருநூற்கொரு விருத்திப்பொருளுரைக்கு மொருவன் அதனை யந்நூன்முழுது மாக்காததனுளொரு சாருறுப்பு மாத்திரையேபற்றி யாக்குமாயின் அஃதந்நூன்முற்றிய விருத்தி யென்றற்கேலா மையாறும் அஃததனு ளெவ்வெவ் வுறுப்பிற்கு மாத்திரையே யாக்கப்படும் அவ்வவ்வுறுப்புக்கு மாத்திரையன்றி யொழிந்தவுறுப்பிற் கின்மையானு மஃதந்நூன் முழுதுமியைந்தந் நூல்விருத்தி யெனப்படாதாய் ஆக்கப்படுமவ் வவ்வுறுப்பு மாத்திரையே யியைந்து நிற்றலின் அஃதவ்வவவுறுப்பி னவ்வம்பெயர் மாத்திரையே பெறுதன் முறையாம்.

அங்ஙனமன்றி முழுதுமாக்கப்படுமவ்விருத்திப்பொருள் அந்நூன்முழுதுமாகியந்நூல்விருத்தியென்னு மப்பெயர் பெறுதற்குரிமையுடைத்து ஆகலான் அஃதங்ஙனமப்பெயர் பெறுதந்நூலுறுப்பெவற்றோடுந் தனித்தனியியைந்து ஆண்டைச்சிற்றுறுப்புப்பேருறுப்பாய வவ்வவ்வுறுப்பின் பெயரானெடுத்துக்கொண்டு வேறுவேறு வழங்கல்யாதுமேலாமையறிக அற்றேல் அதற்கெடுத்தோதென்னை யெனின்நீயிரிங்ஙனம் போலிமுறையா னெடுத்துக்கோடற்கு மூலமாய்நின்று நும்மைவழிப்படுத்துக் கெடுத்ததியாது அதுவே அதுவாமென்பது அல்லதூஉம் பொருந்துமாறு மதுவேயாமென்றொழிக

சவது இனிப்பொதுமையினிப்பெயர் தலைபெய்து கோடற் கேற்பப் பாயிரம் பொதுச்சிறப்பெனவிருவேறுவகைத்து அவற் றுளிது பொதுப்பாயிரமெனத் தலைப்பெயர்பெய்துகொண்டு, அதனியல்பெடுத்தோதி யொழிந்தபின்னன்றோ, முறையானே சிறப்புப்பாயிரமென்னுமத்தலைப்பெயர் பெய்து கோடல்வேண்டும் அவ்வியல்பறியுமறிவியாது மின்றிப் பின்னுண்ணற் குரியனொருவனை முன்னர்க்கூவி, முன்னுண்ணற்குரியன்வைகற்குரியதோருழிஅவன்வைகுமாறு செய்து, அவற்குரியனயாதுஞ் செப்பாதொழிந்து, அதன்பின் அவன் முன்னுண்ணற்குரியனையுங் கூவி அவனெதிர் வைகுமாறு செய்து அவற்கு வேண்டுவன செய்யுந் துணையும் மேற்போந்து வைகியானை யுறங்க வைக்குமாறொப்ப சிறப்புப்பாயிரமென்னுந் தலைப்பெயர் பெய்து, அஃதிடையறவுபடாததனியல்பெல்லா மெடுத்தோதா தொழிந்து நமது பொதுவியல்பு விரித்தன்மேலுந் தலையின்றிக் காலுளதாமாறொப்ப,பொதுப்பாயிரமென்னு மத்தலைப்பெயரின்றிப் பொதுப்பாயிரமுடிந்ததென முடித்துவைத்து இனிச்சிறப்புப்பாயிர முறைக்கற்பாற்றென்னுஞ் சிறப்பு சிறப்பிற் சிறப்பாயதோர் சிறப்பேயாகலான் அதுமேனின்று சென்று சென்று அச்சேறல்யார்க்கும் புலனாகாமை மேலும் பொதுவுட்டோய்ந்துந் தோயாதாய்ச் சிறந்து தோன்றுங்கால் ஆண்டத்தலைப்பெயரின்றித் தோன்றியுந்தோன்றாதாய்ப் பரவிப்பெருகிவிரிந்ததன்றோ இன்னு மாண்டை நிகழ்ச்சிஅத்துணையேதாமோ அன்றன்று இன்னுமுடன்றோன்றியாருள் வலியபின்னோனொருவன் மெலிய முன்னோனொருவனை அவன் பெயர் தானுமேற்றோன்ற வொட்டாது தன்பெயரொன்றேயாண்டுந் தோற்றுவித்தன்மேலு மவனையுந் தன்னுளடக்கி தனக்குரிமையுடைய நிலமாத்திரையேயன்றி அவற்குரிமையுடையவந்நிலத்தையுந் தன்னாணையுட்படுத்துக்கொண்டு யாண்டுந் தன்னாணை

யே நடப்பச்செய்யுமாயினுந் தானவனையின்றி யமைந்து நிற்றற் செல்லாமையானும் அல்லதூஉ மவன்மெலியனே யாயினும் அவன் தன்முன்பிறந்து நிற்றல் தன்னியல்பிற்கின்றி யமையாமையானும் அவனியல்பு மொரோவழிச்சிறி தஃகித்தோன்றச்செய்யுமாறொப்ப பொதுப்பாயிரமென்னுந் தலைப்பெயர் பெய்ததனியல்பெடுத்தோதலே நூன்முறையெனப்படும், அங்ஙனமப்பெயர் தலைப்பெய்ததனியல்போதாதொழிதன்மேலுஞ் சிறப்புப்பாயிரமென்னுந் தலைப்பெயர் பெய்தோதியதணையினு மமையாது பொது

பாயிர முடிந்ததென முடித்துக்கோடல் சிறப்பின் பொதுவினுஞ்சிறப்பின்பொதுவேயாம். நுமதிம்முறை ஆன்றோராசாரமோ அன்றிநீயிர் வழக்கெனப்படுவ துயர்ந்தோர் மேற்றன்றி யிழிந்தோர்மேற்று மென்றோதுதலின் அசான்றோராசாரமோ அல்லது அவற்றின் வேறுபிறி தோராசாரமோ அஃதியாதோ யாமறியகில்லேம் அதனைத னியல்போதாதொழிதலேயமக்குச்சால்பென்றொழிந்தனம்.

அற்றேலற்றற்றாயினுமேற் பொதுமையிற் பாயிர விருத்தியென்றனமாகலினஃதப்பொதுச் சிறப்பென்னும் பாயிரமிரண்டற்கும் பொதுவாய்நிற்றலின தனாற்பொதுப் பாயிரமென்னுமத்தலைப்பெயர்பெய்தோதாததன்முடிவு பேறோதலமையுமாலோவெனின் அற்றேலவ்வாறே சிறப்புப்பாயிரமென்னுமத்தலைப்பெயர்

பெய்தோதா தன்முடிவுபேறு மாத்திரையே ஓதுமாறுமமைதல்வேண்டுமன்றே அஃதங்ஙனமன்றி யதற்குபாத்திரமத்தலைப்பெயரின்றியமையாது வேண்டப்படுதலும் இதற்கு அஃதின்றியமைந்து வேண்டாமையும் போலியாகலானஃதமையுமாறியாங்ஙனமென்றொழிக. அற்றேல் நுமதாசிரியரவ்வாறோதியொழியவு நுங்குற்ற நோக்கா தெங்குற்ற நோக்கல்நுந்தீமையேபோலுமெனின் அற்றன்று நுங்கேட்டிற்கெல்லாம் வழிகாட்

டியெமதாசிரியரே யெனமேலோதின மாகலானுமதற்கதுவே அமைதியாதலமையுமாகலானு மல்லதூஉ மெமதாசிரியர் நும்மொப்பப் பொதுப்பாயிர வியல்பெடுத்தோதி யருளாமை மேலும் பொதுப்பாயிரமுடிந்ததென்றோதி யருளினரல்லராகலானு மென்னபிறவாற்றானு மென்பது. அற்றற்றாயினுஞ் சிறப்புப்பாயிரமென்றெழுந்து பாயிரவிருத்தி மூற்றியதென்றல் சாலாது போலுமெனின் அற்றன்று அது சாகபசுநயம்பற்றிச் சாலுமென்பது மெய்கண்டபாடியத்துளோதினமாகலான் ஆண்டுக்காண்க. ஈண்டுரைப்பிற்பெருகும் அது கிடக்க.

இனியாமொருதலையானீண்டுப்புகந்தது ஓதாதெல்லா மொருங்குணர்ந்தோரன்னராய்ப் பரமநூலாக்கியருளிய பரமாசாரியப்பரம்பொருள், சிற்றறிவு சிறுதொழிலுடைய நம்மனோரொப்பச்சிறிது சிறிதாய் மேல்நாடாதன நாடிக் காணுதனகண்டுகல்லாதன கற்றுப்பயிலாதனபயின்று அறியாதன வறிந்து இவ்வாற்றானறிவுநிறைந்து இந்நூலாக்கி யருளினரென நீயிரோதன்மேலுமவ்வோத்திற் கேதுயாது மோதாது

அப்பரமாச்சாரியப் பரம்பொருளைநம்மனோரோடொப்புறுத்துக்கோடன்மேலு மின்னுமிவ்வாறேயுள் ளொழுக்கின்மைக்குயாதுவோதாது வறிதேஅகத்தேதவநடைநிறையாது புறத்தே வேடமாத்திரையே யுடையசிவஞானமுனிவர் முதலாயினர்வினவயப்பட்டிழுக்குப்பலவேறுமாறுக்கிய நூலெல்லா மிழுக்குடையன, ஆகலான் அவையாம் யாதுங்கைக்கொண்டு போற்றப்படற்பாலவல்லவென்னுமின்னோரன்னவாய் விரிந்து கிடந்த சிவாசாரிய சிவ்தூஷண பரிகாரார்த்த மாத்திரையே யல்லது எமக்கு ஈண்டு வேண்டப்படுவனவேறியாது மின்மையின் இதுனுளதவே ஆண்டாண்டுமிக்குப் பெரிதும் பரவிமேம்பட்டு நிகழ்தலின் அது

நோக்கி யிதன்கட்படுமிழுக்கெல்லா மெஞ்சாது முறையானே இதனானிஃதிழுக்கு இதனானிஃதிழுக்கெனத் தனித்தனியேது முகத்தானெடுத்துக்காட்டிக் கண்டித்தொழிக்குங்கருத்துடையமாயினுமதனாற் பெரும்பயனின்மையானும் அல்லதூஉமிஃதிழுக்கு இதனைக்கண்டித்தொழிப்பதே யெமக்கின்றியமையாதுவேண்டப்படுவதொன்றென்னு மின்னோரன்ன கருத்தெமக்கெஞ்ஞான்றும் யாதுமின்மையானும் இனி இதன் முதற்பாகு பாட்டுளோதப்படும் பொருளெல்லாம் யாமுன்னோதுமாற்றாற்போலியா தன்மேலும் அங்ஙனமோது முகத்தா னிவ்வுலகமுயிர்ப் பொருளுயிரில் பொருளென்னுமவ்வேற்றுமையின்றி யெல்லாஞ்சேதனமென்பது பெறப்பட்டு மாயாவாதப் பொருளாய் முடிதன்மேலு மின்னுமின்னோரன்ன விழுக்குப்பாடெண்ணிறந்தன அல்லதூஉமாண்டு ஆசிரியர்ப்பழித்தோது மோத்தோருழி யீருழிமூவுழி மாத்திரையேயன்றி யாண்டுமின்மையானு மேனையிரண்டாம் பாகுபாடு எழுவாய்தொட்டு மறுகலைக்கடாவிறு வாய்ப்பட்டு நின்ற அவ்விரண்டனிடைவாய்க் கிடந்த பொருளெல்லாமேலைபதொப்பப் போலியேயாயினும் ஆண்டுமாசிரியர்ப்பழித்தோதுமோத்தொரோவோருழி மாத்திரையேயன்றி யாண்டு மின்மையானு மவற்றையொழித் தொழிந்து நின்றவிறுவாய்த்துணையுமெமதாசிரிய ருரையோகதப்பற்றி நிகழுநமதுபோலியிழுக்கோடொருங்குவைத்து ஆசிரியர் பரிமேலழகனார் ஆசிரியரிளம்பூரணனார் ஆசிரியர் சேனாவரையனார் ஆசிரியர் நச்சினார்க்கினியனார் முதலிய தொல்லாசிரியருரையெல்லா மிழுக்கெனப்போலிமுறையானெடுத்தோதப்பட்டன வாகலானெமதாசிரியர்ப்பழித்துரையொழிந்தவற்றையு மீண்டேயுளப்படுத்துவைத்துக்கொண்டு ஸ்தாலிபுலாக நியாயம்பற்றி அவற்றுளெமதாசிரியருரையோத்தியல்புபற்றி யோதிய விழுக்கு இழுக்கல்ல இழுக்குப் போலியேயென்பது சாதிக்குமுறையாற் சாதிக்குதும் அவ்

னஞ்சாதிக்கு முகத்தானெழிந்தனவெல்லாம் போலியேயாதல் தாமேபெறப்படும்படவே ஆசிரியரேனையருரைபற்றி யோதியவி ழுக்குமிழுக்கல்ல வென்பதூஉங் கைமுதிக நியாயத்தானினிதுவி ளங்குமாகலினிஃதிங்ஙனமே நுதலிப்போந்தாமென்பது.

அஃதேலஃதஃதாக நுமதாசிரிய ரொழித்தொழிந்தவேனை யருரையுளொன்றனை யெடுத்துக்கொண்டு அங்ஙனஞ்சாதிப்பி னு மஃதங்ஙனமேயாம் அங்ஙனமாகவு நீயிரஃதிங்ஙனங்கோடற் கியைபென்னையெனின் அஃதொக்குமாயினும் ஒருவற்கு நற்றாய் முதலியதாயரை வருமவரன்னர்பிறரும் பொதுமையில் தாயரெ னப்படுவராயினுமவருள் நற்றாயே சிறப்புடையள் அஃதொப்ப பொதுமையில் தொல்லாசிரியன் மாரெல்லாருமாசிரியரா யினுமவரு ளெமகமதாசிரியர் சிறப்புடையாசிரிய ரென் னுமம்முறைபற்றி யஃதிங்ஙனமே கோடற் பாலதென்பது அஃதேல் அஃதஃதாக நுமதாசிரியர் தாமே ஓரோவோருழி மறுக்துடம்படாதுபோந்தவவ்வுரையுடையரை நீயிரேன்றுகோ டல்நும்மியல்போடு சாலாதுபோலுமெனின் அற்றன்று எமதா சிரியராண்டு மறுத்தருளிய திருக்கருத்துநந்திரி கருத்தொப்ப தன்று வேறென்பதூஉமதுவேதாகம வழக்கேயென்பதூஉம் அ ன்னபிறவுமுன்னரோதுமாறுபற்றி யாண்டாண்டுய்த்துக்கொண் டுணர்க அது நிற்க.

199 பக்கம் 1ம் கூறு வடவேங்கடந் தென்குமரியென்பன மேற்செவ்வெண் ணென்றோதியது பொருந்தாது அன்மொ ழித்தொகையென்றோதுதலானென இவ்வாறேதுப்போலியெடுத் தோதி அதுகூடாது என்பது மறுதலைக்கடா என்னை, யென்றெ ழுந்துஅவ்வேதுப்போலியையும் வேறேதுப்போலிகளாற்சாதித் தீர் அவற்றையெல்லா முறையானே முன்னர்த்தந்து கண்டித் தொழிக்குதும். அதுநிற்க என்றமையாற் பொருந்ாதென

ணவே என்னுக்காற் பொருந்துமென்பது பெறப்பட்டதுபடவே அது செவ்வெண்ணுமெனிற் பொருந்துமென்பதுகருத்தாயிற்று ஆகவே அஃததுவோ அன்றேவென வொருசிறிதாயுமுறையானுக்குதும் அஃதாமாறு "பெயர்க்குரிமரபிற் செவ்வெணிறுதியும் யாவயின்வரினுந் தொகையின்றியலா" வென்பதோத்தாகலின் "ஆவகைநான்கே" யென்றித் தொடக்கத்தனவொப்ப அஃதாண்டிரண்டென்னுந் தொகைபெற்றே நிற்பதன்றி அது பெறாது நிற்றல் செல்லாமையினது செவ்வெண்ணுமாறியாங்ஙனமென்றொழிக. இருந்தவாற்றானிதுதானெடுத்துக்கொண்டமேற்கோளைச்சாதிக்கமாட்டாததற்குக் கேடுளதாமாறேத லென்னுந் தோல்வித்தானத்தின்பாற்படுமாறறிக.

யாவயின்வரினுந்தொகையின்றியலாவெனவெதிர்மறைமுகத்தான்யாப்புறுத்தருளிஅந்தொகைப்பேறியாண்டுமெஞ்சாமைதேற்றியுபதேசித்தருளவும்அவ்வுண்மையறியுமறிவறைபோகி யிங்ஙனம்பொருந்தாமைகாட்டியநும்பொருந்தாமைபொருந்தாமையுட்பொருந்தாமையேயாய்வெறும்போலியாயொழிந்தவாறு காண்க.

அற்றேலச்செவ்வெண்டொகைவிகாரத்தாற் றொக்கதெனக் கோடுநுமதாசிரியரு மஃதங்ஙனங்கோடன்மேலுஞ்சேனாவரையரும் "அவற்றை" யெனவிரித்தனராலெனின் அற்றன்றுவிகுதிமுதலியனமுழுதுங்கெடுதலாயவிகாரம்பெறின் ஆண்டுகெட்டதிதுவென்றறிதலரிதெனநீயிரோதுதலின் ஆண்டுக்கெட்டதொகையிரண்டேமூன்றுமுதலியன அல்லவென்றறிதலாகாமையானும் இனிஅஃதிதுவென்றுணர்தற்குரிய தோரிலச்சினையாண்டின்மையானுஞ் சேனாவரையர்தமிழியல்பறியாதோது மிழுக்குடையரென நீயிரோதுதலானும் அவ்விழுக்கையிழுக்கென்றறியாதோதுமோத்துடையரேமதாசிரியரென்றீராகலானும்அவரோதுமமைதிநுமக் கணமைதியாகாமையானும் அல்லதூஉ நீயிரஃதிஃதென்றெடுத்தோ

தாமையானுமுறையிற்கோடலென்பதூஉ மீண்டைக்கேலாமையா
னுமன்னபிறவாற்றானு அல்லதூஉமாசிரியர் தாமுபதேசித் தருளிய
வாறே "ஆவறுமூன்றுமுளப்பட" வென்றித்தொடக்கத்தானிங்ங
னஞ்செவ்வெண்ணெனப்படுவனயாவையாவையாண்டியாண்டுவரு
வன அவையவையாண்டாண்டு அவ்வத்தொகைப்பேறமையுமா ற
மைத்துவைத்துபதேசித்தருளுமவ்வோத்துக்கள் பற்றியுமஃதினி
தறியப்பட்டுக்கிடத்தலானுமன்னபிறவாற்றானுமதுபோலியே யா
மென்றொழிக.

அற்றேலற்றற்றாகயாமீண்டவ்வென்பதேயத்தொகையெனக்
கொண்டனம். அதுபற்றியேயவ்விரண்டனையுமெனவெடுத்தோதி
னமாகலினஃதாண்டுப் பெறுமையாங்ஙனமாலெனின் நீயிரீண்டி
யாதுமறியாதோதினீர் அவ்வென்பதிரண்டுமுதலியவெண்ணுப்
பெயர்களுளொன்றன்மையினஃதத்தொகையன்றென்பது இயனூ
ல்கற்குஞ்சிறுமகார்யார்க்குமினிதுவிளங்குமாகலான் ஆண்டவ்வெ
ன்பதுதொகையாமாறியாங்ஙனமென்றொழிக இதனானுமதுபோலி
யேயாதலறிக.

அற்றேல்நுமதாசிரியர் ஆண்டவற்றையென்றெடுத்தோதிய
தெற்றுக்கெனின் அஃதாண்டவ்வென்பதுதொகையாதல்பற்றியெ
டுத்துக்கொண்டதன்றாகலானுமதனானாசிரியர்கருத்ததுவன்
றுவேறாகலானுமல்லதூஉமது செவ்வெண்ணென்பதுசாதித்தற்கெ
ழுந்ததன்றாகலானுமன்னபிறவாற்றானுமதுபற்றியுநுங்கருத்துநிர
ம்பாமையறிக.

"அவையிவையுவையெனவரூஉம்பெயருமவைமுதலாகிய வ
கரப்பெயரு"மென்றெடுத்தோதுதலின் அதுதொகுதியெனக்கோ
டல்தகுதியேயாகலானஃதங்ஙனமென்றாற்படுமிழுக்கென்னை யெ
னின் அற்றன்று "தொகையின்றியலா" வென்புழிப்படுந்தொகையு
ம்அவ்வென்னும்வகரவீற்றுச்சுட்டுப்பெயராகியதொகுதியென்னு

நுமதுதொகுதியுந்தம்முளொன்றன்மையானும் அதனால் நுமது தொகுதிச்சொல் அத்தொகைச்சொற்பொருள்படாமையானுமன்னபிறவாற்றானும்அல்லதூஉம் ஆண்டிரண்டுமுதலியதொகையாண்டுமெஞ்சாமைதேற்றியருளுதற் பொருட்டுயாவயின்வரினுமென உம்மைபெய்துகோடன்மேலுமதனைவலியுறுத்தற்பொருட்டுத்தொகையின்றியலாவெனவெதிர்மறைமுகத்தானுபதேசித் தருளிய வாசிரியர்திருவுள்ளத்தோடுமுரணுமாகலி னவ்வென்பதுதொகையாமாறியாண்டையதென்றொழிக.

அஃதிங்ஙனமாகவும்நீயிராசிரியராணைவழியாதும்வழுவாது சூத்திரநெறிமுறையொழுகுவான்றொடங்கி"பழி:......ல்காண்டிகையாமெனவும்"விட்டகல்வின்றிஅதுவேயெனவும்வருவனவற்றிற்குஅவ்வுரையுடையரிரண்டாயோதியவற்றைநீயிர் மூன்றாக்கொண்டொழுகிஅப்பால்"சூத்திரத்துப்பொருளன்றியும்.....உரையெனப்படுமே"என்னுந் துணையும்போந்துநோக்கிப்பின்னரவ்வுரையுடையர்க்கிரண்டாய் நுமக்குமூன்றாயவுரைவகைமூன்று முடித்தற்பொருட்டு மறுதலைக்கடாவொன்றையெடுத்துக்கொண்டனிர், தாமெடுத்துக் கொண்டருளியவற்றுளெவையெவைதொகையுள அவையவை இவையிவையெனக்கிளந்துயாண்டுந்தொகையின்றியலாவாய்வைத்துஉபதேசித்தருளும்பரமா சாரியர்காண்டிகையிருதிறப்படுமுத்திறப்படுமென்றுதல்உரையுமத்திறப்படுமென்றுதல் யாதுந்தொகைகிளந்துபதேசித்தருளாதொழியவும்அவ்வுரையுடையர்தம்முறைமுகமாணுக்கர்க்குஅறிவுமேம்படுமாறுரைத்துப் போந்தவவ்வுரையே ஆசிரியர்திருவுள்ளமெனத்திரியக்கொண்டு அவரோதியதேநோக்கிபோதியதனை அதுநோக்கியோதியதெனவதுநோக்கிபோருணராது கரத்தற்பொருட்டு அதனையவரோதியவாறேயோதாதுமூன்றுமெனவபிநயித்துக்காட்டிஅத்துணையினொழியாதுகட்டகுடீசப்பிரபாதநியாயமாய்அதுவுநான்கனுளடங்குமெனவடக்கஞ்செப்துநடிக்குமிந்நடிப்பெல்லாமெமதாசிரியராணைகா

ணுமாறுகாட்டுநெடிப்பா? அன்றி அதுபிறர்காணுமாறு காட்டுநெடிப்
பா? அஃததற்கேயாயின் அதற்கியாதும் யாதுங்கரவுபடாது.
பிறர்க்காயினுமது பிறர்க்குயாதும் யாதுங்கரக்க வொட்டாது.
அதுகிடக்க.

இனியவ்விருதிறத்துமூன்றுமிருதிறத்திரண்டும்பற்றி ஆறு
நான்குமாதல்யாரோத்தாயினுமாக அவ்வோத்துப் போலியாத
வொரு சிறிதுகாட்டுமுகத்தால்நும்விருத்தியியல்புஅந்நாற்சூத்தி
ரமுறையுட்படு மியல்பு ளியாதுமின்மை சிறிதுகாட்டுதும் அது
வருமாறு.

ஆசிரியர்மேலேநூற்றிறப்பாட்டு முறையெடுத்துபதேசித்த
ருளி, அதன்பின் "ஒத்தசூத்திர" மெனவதனியல்புபொதுவகையா
ற்றொகுத்துவைத்துபதேசித்தருளி அதன்பினதனியல்புசிறப்பு வ
கையானெடுத்துக்கொண்டுவகுத்துவைத்துபதேசித்தருளி அதன்
பின்அவ்வாறே "மேற்கிளந்தன்ன" வென்னச்சூத்திரவியல்பிருவகை
யானுமுபதேசித்தொழிந்தருளி உடலின் வேறாகாதவுறுப்பின்
வினையுமவ்வுடலதேயாய் முடியுமாறுபோல நூலின் வேறாகாத
சூத்திரப்பொருளு நூலதேயாமென்னுந் திருவுளம்பற்றி நூலியு
ல்புபொதுவகையாற்றொகுத்துவைத்துபதேசித்தருளுங்கால், ஆ
ண்டே புரையியல்பு மொருங்குவைத்துபதேசித்தருளின் அது
பொதுவியல்பாகாதென்றொழிந்தருளி "ஒத்தசூத்திரமுரைப்பிற்
காண்டிகைமெய்ப்படக்கிளந்தவகைபதாகி" யெனக்காண்டிகைப்
பொருளை ஆண்டுப்புரோவாதமாத்திரையாற்படுத்துவைத் தருளி
அதன்பின் "புரைதவவுடம்படக்காண்டிகைப்புணர்ப்பினும்" என
ப்பொருளிரண்டனையு மொருங்குவைத்துபதேசித்தருளுதற் பய
னோக்கி, மறித்ததனையனுவாதஞ்செய்தெடுத்துக்கொண்டு "உரை
யெடுத்ததன்முன்யாப்பினு" மெனக்காண்டிகை யுரை யென்னும்
பொருளிரண்டனையுமங்ஙனமொருதலைப்படுத்தியைத்தருளி, மே
லங்ஙனநூலியல்புசிறப்புவகையான் வகுத்துக்கொண்டுபதேசித்து

ருளுங்கால் தோற்றுவாயாந்துணையைவைத்தருளிய பொருட்டிற மிரண்டனையுமுறையா னெடுத்துக்கொண்டுபதேசித்தருளுவான் றொடங்கியருளினர். தொடங்கியருளியுறுப்பின் வினையுடற்கேபா யினுங்கட்பிணிகாற்புண்ணென்றாற்போலப் பொருட்டிறமெல்லா ஞ்சூத்திரம்பற்றியேநிகழுமென்னுமத்திருவுளம்பற்றிநிறுத்த மு றையானே "பழிப்பில்சூத்திர" மென்றெடுத்துக்கொண்டருளிக் காண்டிகையியல்புபொதுவகையாற்றொகுத்துவைத்துபதேசித்த ருளியவாசிரியர், அற்றேல் "பட்டபண்பிற்காப்பின்றிமுடியு" மாறி யாங்ஙனம் அல்லதூஉமக்காண்டிகையியல்பித்துணையேதானோ இ யல்புவேறுமுளதோவென நான்முகமாணுக்கர்க்கு நிகழுமைய ம றுத்தருளுதற்பொருட்டுப்பட்டபண்பிற்காப்பின்றிமுடியுமாறிஃ திஃதேயதன்சிறப்பியல்பென வவ்விருவேறியல்புந்தம்முள் விர வாதுவேறுவேறுவரைந்துவைத்துணர்த்தியருளுதற் பொருட்டு "விட்டகல்வின்றி........யதுவே" எனப்பிரிநிலையேகாரத்தோ டி யைந்துநின்றசூட்டானெடுத்துக்கொண்டருளி அஃதிரண்டன்மை காட்டியருளிச்சிறப்புவகையான்வகுத்துவைத்துபதேசித் தருளி அற்றேலினியேனையுரையியல்பாவதியாங்ஙனமென்னுங்கடாவை யாசங்கித்தருளி "சூத்திரத்துட்பொருள்.........உரையெனப்படு மே" எனவுரையியல்புபொதுவகையாற்றொகுத்துவைத்துபதேசி த்தருளியவாசிரியர் அற்றேல் பொருளன்றியும்யாப்புறவின்றி ய மையாதியைபவையெல்லாமொன்றவுரைக்குமாறியாங்ஙன மென் னுங்கடாவையாசங்கித்தருளி, மறுதலை........என்மனார் புலவரென அவ்வுரையின்சிறப்பியல்பு வகுத்துவைத்துபதேசித் தருளினர். இங்ஙனமாகவாசிரியர்பொருட்டிறமிரண்டனையுந்தனித்தனி மே ன்மேற்பொதுவகையானுங்கீழ்க்கீழ்ச்சிறப்பு வகையானுந்தொகு த்தும்வகுத்தும்வைத்துபதேசித்தருளிய வியல்பிஃதிஃதெனப்பு டைபடவொற்றிநுணுகியாராயுநுண்ணறிவியாதுமின்றி அஃதிரு திறத்துமூன்றெனத்திரியக்கோடன்மேலும் அஃதவரோதிய வவ்

விருத்திறத்திரண்டேயாயடங்குமெனவடக்கியஃதடங்கு மாறறியு மறியொருசிறிதுமின்றி யடக்கற்கியை பிஃதென்றெடுத்தோதா தொழிந்தனிர் ஆசிரியர்திருவுள்ளமதுவேயாயின்யாண்டுந்தொகை கொடுத்தருளுமவ்வாசிரியர் அவ்வாறேயீண்டுந்தொகைகொடுத்த ருளுவரன்றேகொடுத்தருளாமையினிஃதஃதன்று வேறெனவிங்ங னமுய்த்துணர்ந்துகொண்டுரையாமை நும்பிராந்தியேயன்றி வே றியாதுமின்மையறிக. நீயிரங்ஙனந்திரியக்கொண்டவப் பிராந்தி யாயவவ்விருளையாமெமதாசிரியராணைக்காட்டாற்கண்டு காட்டிய தீபக்காட்டாயஇக்கருத்தோத்துமுகத்தானெழித்துக்கொள்ளுக

இனியீண்டோதியவுரைவகையாறும்ஆசிரியரோதியவுரைவ கைநான்கனுளடங்குமென்றீர் அதுபோலியேயாம்அன்றியஃதங்ங னங்கோடுமேனும்ஆசிரியரோதியவுரைவகைநான்கேயாம் நான் கொழித்தொழிந்தவுரைவகையிரண்டும் ஆசிரியரோதிய வுரை கையல்ல. யாமோதியவுரைவகையே யாமென்பதுபெறப்பட்டது படவே இங்ஙனமாசிரியரோத்திரண்டற்கு மூன்றும் நான்கற் காலும் ஆறற்கொன்பதுமென்றித் தொடக்கத்தாற் படைத்துக் கொண்டோதியது நீயிர் பாவனைவல்லீராகலின் பாவனைபற்றியே யோ அல்லதெடுத்தோத்துப் பற்றியேயோ ஈண்டோதிய வுரை வகையாறென்பதனான் அவையீண்டேயுள்ளனவென்பது நுங்கருத் துப்போலும்அற்றன்று. ஆசிரியர் நக்கீரனார் "உரையுரைப்புழிக்க ருத்துக்கண்ணழிவுபொழிப்பு அகலமென நான்குவகையானுரைக் கப்படுமென்றமையின் ஆசிரியரோதியவுரைவகை நான்கேயாலெ னின் அற்றன்று ஆசிரியர்நக்கீரனார் நான்குவகையானுரை யுரைக்க ப்படுமென்றனரேயன்றி ஆண்டே இவ்வாசிரியருபதேசித்தருளிய இச்சூத்திரநுதலுமுரைவகை நான்கென்றோதினரல்ல ராகலின். அற்றேலவ்வகைநான்கின்றோலோவெனின் அற்றன்று அஃதீண்டுண் டென்பதேயெடுத்துக்கொண்டபொருளாகலானும் அஃதீண்டின் றென்பதேமறுத்துக்கொண்டபொருளாகலானும்அதுபற்றி யாது

ம்வினாவிடையின்மையறிக. பாடங்கண்ணழிவுதாரணமகல நுட்ப மெச்சமென அவ்வுரைவகையாறுளவாலோவெனின் அற்றன்று அவற்றுள்முன்னையமூன்றுமுன்னையதாகலானும்பின்னைய மூன்றும் பின்னையதாகலானும்.

அஃதேலஃதஃகாக, பழிப்பிலென்பதற்குகாண்டிகையாமாறுணர்த்தலெனவும் ஏனையதற்கு புறனடை அல்லது மேலதனோடிதுவுமுளப்படக் காண்டிகையிருவகைத் தாகலானெய்திபதன் மேற்சிறப்புவிதியெனவும் சூத்திரமென்பதற்குகாண்டிகைவிளங்காதவழியதனைவிளக்குமுரைவேறுபாடெனவும்ஏனையதற்குமேற் காண்டிகை யிருவகைத்தாமாறுபோல ஏனையுரையுமிருவகைத்தென்பது அல்லதெய்திபதன்மேற் சிறப்பு விதியெனவும் இங்ஙனமெடுத்தோதியவற்றோடு முரணும்போலுமெனின் முரணாது நூற்பொருளெல்லா மெஞ்சாதாண்டுரைக்கு முறைவாய்ப்படுத்து வைத்தெளிதினுணருமாறுதாமே யுரைத்தொழியின் உரைமுகமாணாக்கரதனையேநோக்கிஏனைநுண்பொருளெல்லா நுணுகிநோக்காதொழிவாராகலின் அதனாற் பாப்பற்றியரிதினுணரு மவ்விசேடவுணர்வு அவர்க்கு நிகழ்ந்து மேம்படாமையின் அதுமேம்படுமாறு ஆழமுடைமையுப்த்துணர்ச்சியுடைமை முதலியன படுமாறுரைத்தல் உரைஉரைத்துப் போந்ததொல்லாசிரிய ரெல்லார்க்குமுரியதோர்பேரியல்பாகலானும் இதுவுமதுவாகலானும் இன்னுமிவ்வாறேநீயிர் ஆசிரியர்நச்சினார்க்கினியனாரோத்துப்பற்றி அவற்றுளொன்றொழித்து ஒருசார்மொழிதோன்று மஞ்ஞான்றினிஃதறத்தைநுதலிற்று என்றற்றொடக்கத்தான் வழங்குவதேவழக்கென்றின் னோரன்னவாயோதுமோத்தெல்லா மிழுக்கென்பது நீயிர் வேதநித்தமெனச் சாதிப்புழிக்காட்டுதும் அது நிற்க. இனி நுமது மரபாவதுமேற்றொட்டு வழங்கிவருமொரு வழக்காமென்றீர், அற்றேல்நுமது வழக்குமரபென்னுமவ்விரண்டற்குந்

தம்முள்வேற்றுமையின்மை பெறப்படுகின்றதன்றே. இவையெல்லாமடிப்பட்டுப் போந்தவான்றோராசாரமன்மை அவர்தந்நூல் பற்றியுணர்ந்துகொள்க. அது கிடக்க.

இத்துணையுநீயிர்பொருந்துமென்பதுபொருந்தாதெனவொருசிறிதுகாட்டியொழிந்தாம் இனி நீயிர் பொருந்தாதென்பதூஉம்பொருந்துமென்பதொருசிறிதுகாட்டுதும். அதுவருமாறு

ஆண்டவையன்மொழித்தொகையாய்நின்றுநிலத்தையுணர்த்தினவென்றதனோடு ஈண்டுச்செவ்வெண்ணென்றோதியதுபொருந்துவதேயன்றிப்பொருந்தாததூஉமன்று அதுகூர்ந்தவுணர்வு மொருபாற்சாயாமையுமுடையராயழுக்காறின்றிநோக்குவார்யார்க்குமினிதுவிளங்கும் அங்ஙனமன்றிமறுதலையான்நோக்குவாரோதும் போலியெல்லாமெமக்கொருபொருளல்லவாகலின் அவர்பழித்துரையெல்லாமெமதணிகலமேயாமென்பது அற்றேலவை தம்முட்பொருந்துமாறியாங்ஙனமெனினஃதாமாறு.

ஆண்டுவடக்கண்வேங்கடமுந்தெற்கட்குமரியுமெல்லையாகவுடையவவ்விடமாகியவுலகமென்பதூஉமீண்டுவடக்கின்கண் வேங்கடமலையுந் தெற்கின்கட்குமரிமலையுமாகியவவ்விரண்டனையு மெல்லையாகவுடையநிலமென்பதூஉந் தம்முட்பொருத்தமுடையன வே அன்றி அவைதம்முள்விருத்தமுடையனவல்லவென்க. என்னை

ஆண்டுவடக்கண்தெற்கணென்பனவீண்டுவடக்கின்கண்தெற்கின்கண்ணெனவும் ஆண்டுவேங்கடமுங்குமரியுமென்பன ஈண்டுவேங்கடமலையுங்குமரிமலையுமெனவும் ஆண்டெல்லையாகவுடையவென்பதூஉமீண்டிரண்டனையுமெல்லையாகவுடையவெனவும் ஆண்டிடமென்பதூஉமீண்டுநிலமெனவுமோதப்பட்டன ஆகலான் இனியவ்வடக்கண்தெற்கணென்பன வடக்கின்கண்தெற்கின்கண்ணெனவோதவும்படுமாகலானும்வேங்கடமுங்குமரியுமெல்லையாகவுடையவெ

ன்பதூஉமுன்னரவற்றையெல்லையாகவுடையவென்பதுபற்றி அவ்விரண்டனையு மெல்லையாகவுடையவென்பதே பொருளாகலானும் முற்பிறப்பட்டனவேயன்றியிடமவ்வென்பனவிரண்டு மீருழியுமுண்மையானுமங்ஙனமவை தம்முள்யாதும்விருத்தமுறாதுபொருத்தமுற்றுநின்றவாறுகாண்க.

அற்றேலீண்டு விரிந்துநின்றஆகியவென்பதுஆண்டுவிரிந்து நிற்றல் இன்மையின் அஃதொன்றுமாத்திரையே பொருந்தாது போலுமெனின் அற்றன்று அஃதாண்டுஅவற்றை யெல்லையாகவுடையநிலத்தை யுணர்த்தினவென்புழி அவற்றையென்றோதுதலின்ஆகியவவற்றையென்பதேகருத்தாகலானதுவும் பொருந்தாமையாண்டையதென்றொழிக.

அற்றேலற்றற்றாகஇரண்டனையுமெனவீண்டோதுமாறெப்ப ஆண்டெடுத்தோதாதொழிந்ததென்னையெனினதுவுமவற்றையென்பதனாற்பெறப்பட்டுக் கிடத்தலினஃதோதாமை யாங்ஙனமென்றொழிக. இதனானும்நம்விருத்தியெல்லாம்போலியாதல் தெற்றெனவறியப்படுமாகலான் அப்போலியியல்போதலித்துணையினமையுமாயினுஞ்சிகழுந்தடைவிடைபற்றியின்னுமொருசிறிதுகாட்டுதும்

அற்றேலஃதொக்குமாயினும் ஆண்டுச்செவ்வெண்ணெனக் கொள்ளாமையுமீண்டுக்கோடலுமமையுமாறியாங்ஙனமெனின் அவையுமாண்டுச்செவ்வெண்ணுதல்அவ்வுரையியல்பானினிதுவிளங்குமென்பது. அற்றேலஃதாண்டோதாமையென்னையெனின் அவ்வுரைமுக மாணக்கர்க்கினிது விளங்குழியெல்லா மங்ஙனமுரையாமையவ்வுரையியல்பெனக்கொள்க.

இருந்தவாற்றானீபிரோதியன வொருவாறொக்குமாயினும் யாமேலவைசெவ்வெண்ணென்றற்கெடுத்தோத்தின்றென மறுத்தோதுநீயிரவைசெவ்வெண்ணெனமறித்தோதல்துணியும் பொருட்கொருமருங்கிடனாகாதாய பக்கப்போலியின்பாற்படும் போலு

மெனின் அற்றன்றுஅது நம்மோத்துப்போலாததோர் குறிப்போத்தாய் நின்றுமேலேதுமுகத்தாற்சாதித்துப்போந்த பொருளை வலியுறுத்தற்பபத்ததாகலானென்பது.

அஃதிங்ஙனமாகவே ஒருகாற்பொருந்தாமையு மொருகாற்பொருந்தலுமாய போலிமாத்திரையேயாமீண்டோதினும் இனிபொருந்தல் பொருந்தாமையாய போலியுட்போலி இது பற்றியுணர்ந்துகோடலெளிதாகலான் அஃதியாமோதா தொழிந்தனமென்பது. முன்வருவனவெல்லாமிவ்வாறேயென்பதூஉமிதனானுய்த்துணர்ந்துகோடற்பாற்றுக.

அஃதேலஃதஃதாக இங்ஙனஞ்சொற்பெய்துரைக்குமுறை பற்றியவைதம்முட்பொருந்துவனவாயினும் பொருள்கோண்முறை பற்றிப்பொருந்தாபோலுமெனின்குமரியென்பதூஉருழியும்ஆறுமலையுமெனவேறுவேறுகோடன்மாத்திரையேபொருந்தாதாயினுங் குமரியெனனும்பெயருமவ்வெல்லையுந்தம்முட்பொருந்துமாகலான் அதுபற்றியும் பொருந்தாமையாங்ஙனமென்றொழிக. இனிக்குமரி யென்பதீண்டோதியவாறேமலையன்று ஆண்டோதியவாறேஆறே யென்பதூஉம் இலிங்கம் கூர்மங்காந்தமுதலியபுராணமுடையார் எனையுரையுடையாராயவெல்லார்கருத்து மதுவேயென்பதூஉச்சிலப்பதிகாரத்துள் குமரிஆறென்றெடுத்தோதப்பட்டதெனவதனை யீண்டெடுத்துக்காட்டிய நுமக்குமஃதுடம்பாடாவதல்லதுமறுக்கப்படுவதொன்றன்றென்பதூஉமன்னபிறவும் 201பக்கம்2ம்கூற்றினுள்202 பக்கம் 2ம்கூற்றினுங் காட்டுதும் அது நிற்க.

இனிமறுதலைக்கடாவெனவோருரையிலக்கண மின்மையினப்போலிவாக்கியம்பற்றி நிகழும்பொருளும்போலியாமாற்றிக. அற்றன்று "மறுதலைக்கடாமாற்றமுடைத்தாயென்பதோத்தாகலான் அதுபோலியாதல சாலாதாலெனின் அற்றன்று "மறுதலைகடா மாற்றமென்பதேபாடமாகலானும் அல்லதூஉங்கடாவா யெழுவன

வெல்லாமறுதலையேயல்லதுடம்பாடன்மையானும் அன்றிமறுதலை
க்கடாவெனவொன்றுளதேல் உடம்பாட்டுக் கடாவுமொன்றுளதா
தல்வேண்டும் அஃதன்னதுளதாதல்யாண்டுமின்மையானும் இனி
அஃதன்னமாயின் அவ்வாறேமறுதலைவிடை உடம்பாட்டுவிடை
யென்பனவுமுளவாதல்வேண்டுமன்றே அதனையனுமப்பாட்டம்போலி
யாதலினிதுவிளங்குமாகலானும் ஆசிரியர் திருக்கருத்தஃதன்றிஃ
தேயென்பது "தன்னூன்மருங்கினும்பிறநூன்மருங்கினுந் துன்
னியகடா "என அவ்வடைகொடாதுவைத்தருளி முதனூலாசிரிய
ரோதுமோத்தானறியப்படுதலானுந்தொல்லாசிரியரெல்லாங்கடா
விடை, வினாவிடை, தடைவிடை, சங்கோத்தர மென்றித்தொட
க்கத்தான்வைத்துவழங்கு மவ்வழக் குடையரல்லது மறுதலைக்
கடா மறுதலைவினா மறுதலைச்சங்கை மறுதலைக்கேள்வி யென்றித்
தொடக்கத்தான்வைத்துவழங்கு மிவ்வழக்குடையரல்லராகலா
னும்நீலகண்டபாடிய முதலியவற்றுள்ளு மன்னனமே யன்றி இன்
னமாதல் காணப்படாமையானுமன்னபிறவாற்றானும் அதுசாலா
மையானன்மெயொழிக இனிகடாவென்பதேயுண்மை மறுதலைக்
கடாவென்பதுபோலியாதல்நமக்குமுடம்பாடென்பது

187 188 ]பக்கங்களுள் ஐந்திர நிறைந்தமைகூறல்வேண்
டாவென்பதுகடா....... செயப்படுபொருளாக்கியுங்கூறினுமென்ப
துவிடை,என்னுநமதுகடாவிடைபற்றியுமறிக.198ல்வருவதுமது
அஃதாகவே மறுதலைக்கடா வெனப்பாடங்கோடல்நமக்குமுடம்
பாடன்மைபெற்றும்பெறவே அஃதுரையிபல்பன்மை நமக்குமுட
ம்பாடாதல் பெறப்பட்டது டடவே அவ்வியல்புபற்றி யெழுந்த
நும்விருத்திபோலியாதல் நமக்குமுடம்பாடேயாம் அல்லாக்கா
ல் அதனைஒருவயின் அடைகொடுத்தோதலும் ஒருவயின் அ
கொடாதோதலும்விபரீதமாதலறிக

அற்றேலாண்டுக்காணப்படுமுறையுள் மறுதலைக்கடா மாற்றம் என்றுளதாகவும் அதனோடு மூரணி மறுதலைகடா மாற்றம் எனப்பாடங்கோடற் கேதுவென்னை யெனின்? அஃதேல் அம்முறையுட்டானேமாற்றமுமுடைத்தாயென்றுளதாகவும்அதனோடுமூரணிநீயிர் மாற்றமுடைத்தாயெனப்பாடங்கோடற்கேதுவென்னையெனாஈண்டு நுமதுமறுதலைக்கடா நிகழுமா கலான்எமதாசிரியராணையோடிகலும் வழக்குப்பரிகாரம்யாதும் மின்மையறிக.

அஃதேலஃதஃதாககடாவென்பதுடம் பாட்டுக்கடாவெனக்கோடுங்கொண்டுமறுதலைக்கடாவென்பததனின்வேறெனக்கொண்டாமெனின் அற்றன்று, ஆசிரியர் நக்கீரனார் தமதுரையுள்யாண்டாயினு மங்ஙனம் உரையாமையானு நுமக்கதுவேசிறப்புரையாகலானும் அன்றி நூல்களுள் யாண்டு மவ்வழக்கின்மையானும் விடுக்குமாறு வேறின்மையானு மதுபோலியாதலொருதலையெனத் துணிந்துகொள்க.

இனி அதனுண்மைபொருள்வருமாறு கடாமறுதலைமாற்றமென்னுமூன்றுமுறைமேஐயப்பாடுபிறர்கூறும்பக்கம்அதனை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு எனவிங்ஙனமெடுத்தோதப்படுமம்மூன்றுமே யாகலான், ஒருவனோதப்படும்பொருள்பொருந்துமோபொருந்தாதோவென நிகழுமையப்பாடுபற்றிநிகழுங்கடாவும் அதுபொருந்தாதெனப் பிறர் கூறும் பக்கமாய மறுதலையும் மேலதுபொருந்துமென வதனை மறுத்துரைக்குஞ்சித்தாந்ததுணிபாய மாற்றமுமே யுரையினுண்மை யிலக்கணமாகலான் மறுதலைக்கடாவெனப்பாடங்கோடலுமதனை யுரையிலக்கணமாக்கலும் போலியாதலறிக. கடாநிகழ்தற்கேதுவாய அவ்வையப்பாட்டைக் கடாவெனக்காரணத்தைக்காரியமாகவுபசரித்தருளிச்செய்யுளாக விற்பிறழவைத்தளினரென்பது. அற்றேலவ்வையப்பாடு திரிபுதுணிபுகளானு நிகழுமாகலான் ஆண்டதிவியாத்தியாலோவெனின்

அவைவயும் வலியுறுத்தற் பொருட்டாகலான் அவையெல்லாமுறை யிபல்பேயாமெனக் கொள்க.

அஃதேலஃதஃதாமாயினும் கடாவையப்பாடென்பன வொருபொருட்கிளவியாலோவெனின் ஐபப்பாட்டானிகழ்வது கடாவெனக்கொள்க. அற்றேலற்றற்றாகதம்முளோரினமாவைத்துஎண்ணப்படுமவைதம்முளெஞ்சிநின்ற இயைபீண்டெடுத்தோதாமை யென்னையெனின் நன்றேயோதினீர் அவ்வியைபுஞ் சித்தாந்தத் துணிபுஞ்வேற்றுமைநயத்தான்வேறெனப்படுமாயினுமொற்றுமை நயத்தானொன்றெனவும்படுமாகலான் அஃதுபற்றியாசிரியர் ஒழிந்தருளினரென்பது அதுநியாயநூலு ளுறுப்புகளைந்தெனப்படுமாயினுமவைமூன்றனுள டங்குமென்பதுபற் றிமேற்கோளேது எடுத்துக்காட்டென்னு மம்மூன்றும் பற்றியுரைத்தருளியவெமது பரமாசாரியருரையியல்புபோலுமெனக்கொள்க. ஐந்தொழில்முத் தொழிலுளடங்குமாறுமது,பிறவுமன்ன.

அற்றேலீண்டோதப்பட்டது, அதிகரணமுறையேயாம் ஆசிரியருபதேசித்தருளியதஃதன்றுபோலுமெனின், அற்றன்று அங்ஙனமாய வவ்வதிகரணமுறை வடமொழியுளியனூலோதிய வாறே தமிழ்மொழியினுமியனூலோதும் அஃதிஃதென்பதுணர்த்தியருளினராகலான் இஃதஃதன்றுதல் யாங்ஙனமென்றொழிக.

இனி அறமுதலியவுறுதிப்பொருள் நான்கனுள் முன்னைய மூன்றுமே தமிழ்நூலானோதப்படுவன இறுதிக்கணின்றவீடு அதனானோதப் படுவதொன்றன்றுபடுமாயினுங் கரந்தோதப்படுமெனச்சிவாகமங்களோதுதலான் இதுவுமஃதன்னதெனக் கோடலு மொன்று. இது நோக்கியன்றே சிவாகமங்களெல்லா முள்ளவாறு ணர்ந்தஆசிரியர் பரிமேலழகனார் நூலுள் வீட்டியல்பு காரணமுக த்தானன்றி யிலக்கணமுகத்தானோதப்படுவதன்றென்றோதி யொழிந்ததூஉமென்பது. அது நிற்க.

இனிநிலத்தையுணர்த்தினவென்றமையாற்செவ்வெணணென்றோ
தியது பொருந்தாதென்பது "மறுதலைக்கடா அது கூடா" தென்
றீர் எனவே இஃதொன்று மாத்திரையே பொருந்தாது. ஒழிந்த
னவெல்லாமீருழியும் பொருந்துமென்றவாறாயிற்று ஆகவே யாம
துபோலியாதல் சாதித்தற்கோதியவேதுமுதலியவெல்லா நுமக்கு
முடம்பாடாதல்பெறப்பட்டது.படவே பொருந்தாதென்பதுபோ
லியென யாமேலோதிப்போந்த பொருளு நுமக்குடம்பாடாதல்
பெற்றாம். இதனானே யானுமறியே னவளும் பொய்சொல்லாளெ
ன்னும் பழமொழிப்பொருளை நும்பாற்கண்டொழிந்தாமென்பது

அற்றற்றன்றுயாமேலுழியெல்லாமெங்கோணிறீ இப்போந்து
பின்முறையானே பிறர் கோண்மறுக்குமாறு புகுந்தாம் புகுந்து
தனித்தனி அகப்பாகுபாடு பலவேறுடையவாய்ப் பலவேறாயபிறர்
கோளுளொன்றுப்பொருந்தாப் பொருள் பலவேறுடையவிதனு
ள்முதற்கணுள்ளதனையே முதற்கணெடுத்துக்கொண்டனம்

இஃதொழித்தொழிந்தன வெல்லாம்பொருந்தாமைமுறையா
னேமுன்னெடுத்தோதுதுமாகலான், அதுபற்றி அது போலியாத
லெங்கருத்தென்பது செல்லாதாலெனின், அற்றேல் நும்மை யீண்
டொன்று வினவுதும் அதுவருமாறு.—

ஆசிரியரேனையர் கோள்கள் பின்னும்இதுமுன்னுமாய்வை
த்திம்முறையானெடுத்துக்கோடற்கியைபென்னை; அஃதெமதாசி
ரியர் காலம் ஆசிரியரேனையர் காலமெவற்றிற்கும் பின்னதாகலாற்
காலம்பற்றியமுறை யென்பதேலாமையறிக. அஃதன்றுயாமறு
க்குமாறெடுத்துக்கொண்ட பிறர் கோளேனையபற்றி நிகழுமிழுக்
கெண்ணுமுறைபற்றி அருகியு நமதாசிரியர் கோள் பற்றிநிகழு
மிழுக்கெண்ணு முறைப்பற்றிப் பெருகியு முண்மையின் அவ்
வெண்ணின் சுருக்கம் பெருக்கம் பற்றியம்முறைகொண்டாமெ
னின் அற்றேல் சூசிகடாக முறையே யன்றோ ஆண்டுக்கோடல்

வேண்டும். இனி அஃதங்ஙனங் கோடுமேனும் ஏனையவற்றிற்கு மங்ஙனங் கோடல்வேண்டுமேயன்றோ, அவற்றுளங்ஙன மின்றிப் பிறழ்ந்தொழிதலின் அவ்வைப்பு முறையென்பதூஉம் போலியேயாம் ஆகலின் முறையானேயெங்கொண்மேலோதிப்பின் பிறர்கோளோதப்புகுந்தனமென்பதூஉம்போலியாயொழிந்தவாறுகாண்க. இனி அது சங்காரமுறை யென்பதூஉம் போலியாதல தனானுய்த்துணர்ந்துகொள்க.

அற்றன்று, முறையானே ஒன்றன்பின்னொன்று இதனுளெழுந்த பலவேறு பொருள்களுள் முதற்கணெம்மானோதப் படும் பொருள் இயைபுபற்றி ஈண்டுமுன்னோது மாறுநின்ற பிறன்கோளதுவேயாகலான் அதனானதனை முதற்கட்கொண்டனம் ஏனைக் கோள்களுமவ்வாறே ஆண்டாண்டவ்வப் பொருளியைபு பற்றிமுறையானே யெடுத்துக்கோடு மாகலான் இங்ஙன மப்பொருளியைபு பற்றிய முறையென்றுற்படுமிழுக்கென்னையெனின் அற்றேலாசிரியரனைவரு நீயிரோதியவாறே அவற்றைச்செவ்வெண்ணென் றெடுத்தோதாமையின் அவ்வோத்தும் போலியாயொழிந்தவாறு காண்க.

அல்லதூஉ நூலாசிரியரானோதப்படும்பொருள்பற்றி நிகழுங்கடாமறுதலைகளை முறையானே ஆண்டாண்டெடுத்தோதிமறுத்தியைபு காட்டி யொழிவ தேயுரையிலக்கணமுந் தொல்லாசிரியர் முறையுமேயாக நீயிரீண்டவ்வியல்பியாது மின்றிப் பிறழவைத்து நம்பொருளோருழியும் பிறபிறிதோருழியு மாகஇவ்வாறவைதம் முளொன்றற் கொன்றியாதுமியைபின்றி வேறுவேறோதலுரை யியல்பன்மையின் அதுபோலியாதலறிக

இனியாமோதிய முறையேதொல்லாசிரியரெல்லார்க்கு முடம்பாடென்பதூஉம் நீயிரோதிய முறை அவர்க்

குடம்பாடன்றென்பதூஉம் அன்னபிறவும் ஆசிரியர் நக்
கீரனார் முதலியதொல்லாசிரியருரைத்து வைத்த தொல்லுரைக
ளுள் நும்மோத் தொப்பவவை தம்முளியைபின்றி வேறுவேறு
வைத்துரையாமை பற்றியுமுணர்ந்துகொள்க.

அஃதன்று பூருவபக்கஞ்சித்தாந்த மென்னு முறையுண்மை
யின் அஃதம்முறை யென்றாற் படுமிழுக்கென்னையெனின், அற்ற
ன்று. அது நூன் முறையாவதன்றியுரை முறையாவதொன்றன்மை
யானென்பது இனி அஃதங்ஙனங் கோடேமேனு நுமது மறுதலைக்
கடாவென்ப தெழுவாயாண் டிறுவாய்த்துணையும் பூருவபக்கமு
மொழிந்தனவொழிந்ததுமாமாகலான் முன்னிற்றற் குரியதுபின்
னும் பின்னிற்றற்குரியது முன்னுமாகவிங்ஙனம் பிறழக் காண்ட
லான் அவ்வோத்தும் போலியாதலறிக.

அற்றேல் வடநூலொருசாருள் அம்முறையுமுறையாதல் கா
ணப்படுமாலோவெனின், அதுவுநூன் முறையேயல்லதுரைமுறை
யன்மையின் அதுபற்றியு நுங்கருத்து நிரம்பாமை அறிக. அல்
லதூஉ மவ்விருவேறு மொழிகளுந் தம்முள் விரவி வழங்குமவ்வ
ழக்கு வேண்டாத நுமக்கம்மொழி வழக்கிற்கே யுரியவம்முறை
கோடல் நெடுஞ்சேய்த்தென்றொழிக.

இனி மறுதலைக்கடாவெனப் போலிப்பாடங்கொண்டு அம்மு
றையே முறையாக முன்னையதனை முன் னெடுத்துக்கொண்டநீயிர்
அதற்கேற்ப மாற்றமெனப்பின்னையதனையும் அதன்பின்னெடுத்து
கோடல் வேண்டுமன்றே. அம்முறை காணப்படாமையின் அதனா
னும் அதுபோலியாதலறிக அஃதன்று அதுகூடாது என்னையென்
பதே மாற்றமென்னும் பொருட்டாலோ வெனின் அற்றன்று அ
ஃதப்பொருட்டாகாமையானென்பது இம்மறுதலைக்கடா வென்ப
து யாம்படைத்து மொழி கிளவியன்று ஆசிரியரோத்தென்பது

போல் நடித்துக்காட்டி அதனை அங்ஙன மெடுத்துக்கொண்டீர்க்கு
அவ்வாறே பேனைமாற்றமென்பதனையு மெடுத்தோதா தொழிதல்
போலிபாதல் அங்ஙனம் மிரண்டு மெடுத்தோதுமாற்றானும
றிக அற்றன்று அஃதாசிரிய ரோத்தென்பது பற்றி யெடுத்துக்
கொண்டனமல்லம் நடைவடிவாய்நின்றவிவ்வுரை வாயொழுகும்
வாய்க்கியமாய்த் தலைப்பெய்துகொண்டன மாலெனின்,

அற்றன்று நுமது மறுதலைக்கடாவுடைய வச்சூத்திரத் துள்
ஆசிரியரோதியவாறேஇந்நூலுண் பொருளெல்லா மெவர்க்குங்
கரக்காது வெளிப்படையான் விளங்க விரித்தோதலைக் கருதிற்
றிவ்வுரை யென்றீ ராகலானும் அவ்வாறே முன்னர் இருவயின்
அவ்விரண்டி மிபைத்து வைத்தாடல் சாலாமையானும்ஆகலானீ
யிரஃ தாசிரியரோத்தென்பதுபற்றியேயெடுத்துக் கொண்டாட
லொருதலையே யாமென்க அதுநிற்க

இனி நீயிரோதியவாறே மறுதலைக்கடாவென வொன்றுள
தெனக்கோடுக்கொண்டு நுமதம் மறுதலைக்கடா இயல்பொடுப
டுமோபடாதோவென ஒருசிறிதாயுமுறையானுய்த்துதும்அதுவரு
மாறு.

கடாவாவது ஒருவன்ஒருவனைநோக்கியொன்றுபற்றி வினவு
மொருவினாவேயாம் ஆகவே மறுதலைக்கடா வென்பது எதிர்
மறைமுகத்தான் வினவு மொருவினாவெனவே படும்படவே அ
து நும்வாக்கியத்துட்படுதல் படாமைபற்றிச் சிறிதுநோக்குமு
றைபான் நோக்குதும் அஃதாமாறு அன்மொழித்தொகை யென்
றலாமென்னு நுமதேதுப்போலிபற்றிச்செவ்வெண்ணுதல் பொ
ருந்தாதென்பதே நுமதுமறுதலைக்கடா எனப்படும் யா.யாது.யா
வை. யாங்ஙனம் யாண்டையது யாண்டையனவென்றின்னோரன்
னமொழிதலைப்பெய்து ஒருவன் தனக்குத் துணிவுபிறவாததொ
ன்றனைத் துணிந்தபிறன் மாட்டுக்கேட்டுத் துணியுமாறு அவனை

யெதிர் முகப்படுத்து வைத்துக்கொண்டோத லொப்பன வன்றே
வினா வெனப்படும் நீயிரீண்டு அன்மொழித் தொகை என்பதனா
ற்செவ்வெண்ணென்பது பொருந்தாதென்பதனுள் அங்ஙனமொரு
வனொருவனையெதிர் முகப்படுத்துமாறியாது மின்றாதன் மேலும்
பொருந்தாதென்பது நீயிர்மேற்செவ்வெண்ணென் றோதியதுபொ
ருந்துமெனத் துணிந்து போந்ததனையே பொருந்தாதென மறித்
துப்பூருவபக்க முகத்தானுஞ் சாதித்தற்பொருட்டு அன்மொழி
த்தொகை என்றமையானென்னு மவ்வேதுப் போலிபற்றிச்செவ்
வெண்ணென் றோதியது பொருந்தா தென்னு மப்போலிமேற்
கோள்தலைப்பெய்தோதப்பட்ட தன்றி ஆண்டுத் துணியாத தொ
ன்று துணிந்தான் மாட்டுக்கேட்டுத் துணிதற் பொருட்டோதிய
தொன்றன் றென்பதொருதலையேயாம் உலகமுத்தொழிலுடைத்
தென்னு மொருவனை யொருவனெதிர்முகப் படுத்துவைத்து அற்
றே லஃதங்ஙன முத்தொழிலுடைத்தா மாறியாங்ஙனம் அதனி
யல்பிஃதெனவோதுக வெனத்துணியாத தொன்று துணியுமா
றோதுமாயின் அஃதாண்டு வினாவெனவேபடும் அங்ஙனமன்றிஎ
ன்றமையாற் பொருந்தாதென விங்ஙனநீயிரோது மாறெப்ப உல
கமியற்கையென்றமையின் அதுமுத்தொழிலுடைத்தென்றல்பொ
ருந்தாதென வோதின் அஃதேது முகத்தாற் றுணிந்ததனைச்சா
தித்தற்பொருட்டெழுந்த தொருபிறன் மேற்கோளாவ தல்லது
அஃதாண்டுத்துணியாத தொன்று துணிந்தான்மாட்டுக் கேட்டு
த் துணிதற் பொருட்டொரு வனொருவனை யெதிர்முகப்படுத்தோ
துமோத்தாய வினாவன்றென்க அஃதிங்ஙனமாகலா என்றமையா
ற்பொருந்தாதென்பதூஉ மவ்வாறே மேலது முகத்தாற்
சாதிக்கப்பட்டுத் துணிந்தெடுத்தோதிய தொருபிறன்மேற்கோ
ளாவதல்லது வினாப்பொருள்பயக்கு மொருவினா வன்றெ
ன்க ஆகவே அதுமேற்கோள் வினாவிரண்டற்கும் வேற்றுமை அறி
யார் கூற்றேயாமென்றொழிக

அற்றேல், யாமோதியவாறே ஆசிரியர் நக்கீரனாரோதுதலின் அஃதிழுக்கன்றாம் போலுமெனின்,—அற்றன்று. ஆண்டு மேல்பொருளிடைபறவுபடாது இயைவுபடவைத்துக்கொண்டு" அவ்வியல்புடையானுலகவழக்கோடியாதுமியைபிலனென்றோதவே அற்றேலிந்நூன்முதனூலாகலான்வழங்குகவென விதிமுகத்தானோதலேமுறையாம். அங்ஙனமன்றி வழக்கமென்மனாரெனவதனைப்பிறரோத்தான்வைத்தோதன்முறையன்று அது முதனூற்கின்றிவழிநூற்கேயுரியவோத்தாகலானென்ன, , ஒருபொருடுணிந்தானொருவன் தான்றுணியாதானெப்பநின்று அதுதுணியாதாற் குணர்த்தற்பொருட்டு துணியாததனைத் துணிந்ததாக வைத்துக் கடாவுமக்கடா முகத்தான்விடுத்துவிரித்துணர்த்துவான்றொடங்கிஅற்றேலென வொருவனை யெதிர்முகப் படுத்து அவனோதியதனை அனுவாதஞ்செய்து கொண்டதாக வைத்து அஃதேல்அதுநீயிரோதியவாறே யாமெனின், அஃதிவ்வாறன்றோவோதல் வேண்டும். அன்றி அஃதவ்வாறோதல் சாலாதென அவ்வழி நூலியல் புணராதான் அஃதுணர்ந்தானெப்ப வைத்தோதிய தொன்றன்றி வேறன்மையானும், அஃதேகவெனின் எனஎதிர்முகப்படுத்தோதப்படுதலானும், அன்னபிறவாற்றானும், அதனோடிதனிடை வேற்றுமை பெரிதாகலானுமென்பது. அல்லதூஉம் நும்மொப்பஆண்டு மறுதலைக்கடாவெனவெடுத்தோதாது கடாவிடையென்றெடுத்தோதன் மேலுமாற்றமென்றெடுத்தோதாமையானும்இனிஅங்ஙனங்கோடுமேனு நீயிரவரோதியவாறேஅஃதேகவெனின்என வங்ஙனமியைத்தோதாமை யானும், அன்ன பிறவாற்றானு நுமது மறுதலைக்கடாவென்பது துணிந்தபொருட்கொரு மருங்கிடனாவதென்னும் பக்கப்போலியாதன் மேலும்பொருளின்மை யென்னுந்தோல்வித் தானத்தின் பாற்படுமாறறிக.

" அற்றேலோதுகவோதற்கவழிநூல்வாய்பாடாகலா,, னெ

ன்பது கடாவென்றேதுதலின் அதுதுணியாதான் கடாவாதல் செல்லாமையின் துணிந்தான் கடாவேயாலேஃவெனின், நன்றே யோதினீர். அதுதுணிந்தா னொருவன் அதுதுணியாதாற் கறிவு றுத்தற்பொருட்டுத்துணியாதானைத் துணிந்தானெப்பவைத்தோ துமோருரையியல்பேயாகலான் அதனை யுடம்பட்டோர்க்கு அந்நய ம்பற்றி "என்பது கடா அதற்குவிடை,,யென்னுங்கடாவிடையுமு டம்பாடாவதல்லது மறுக்கப்படுவதொன்றன்றும். ஆகவேமறுத லைக்கடா வென்பது அவற்குடம் பாடன்மையின் நுமக்குமுடம் பாடன்மை பெறப்பட்டது.படவே அப்போலியியல்புபற்றியெ ழுந்த பொருளும் போலியென்பது மேலுமோதினுங் கடைப்பி டிக்க இத்துணையுமொதிய வாற்றானீயிரீண்டுத் தலைப்பெய்தோ தியசொற்பொருளெல்லாமொருதலையாற் போலியாயொழிந்தன. ஆகலான்அவற்றின் கூட்டத்தானுப நும்விருத்தியும் இலக்கணம ஃகியும் (ஒருபுடை யொத்துண்மை விருத்தி யொப்பத்தோன்று மொரு) போலிவிருத்தியேயாதல் தெற்றெனவறிக இருந்த வாற் றான் அஃதுண்மையியல்பனைத்துமொருங்குடையவவ்வுண்மை (வி ருத்தியின்முன்) ஒளிமுன்னிருளொப்ப வொருசிறுவரையேயனு நின்றுற்ற மாட்டாதோடி யொதுங்கு நீரதேயாமெனமொழிக. இ ன்னுமீண்டா சங்கித்தோதற் பாலனபலவேறள அவையெல்லா ஞ்சிவஞானப்பரமாசிரியர் பெருபதேசப்பெரும்பரப் பென்னுமந் நூலுட்கண்டுகொள்க யாமீண்டுரைப்பிற் பெருகும். அதுநிற்க.

இனிநீயிர், எல்லாமறிந்தோதுவோ ரொப்பவெழுந்து அன் மொழித்தொகையை விரித்தலென்றேதவறியாது அன்மொ ழியைவிரித்தவிடத்தென்றீர். ஈண்டு விரித்தற்குச்செயப்படுபொ ருள் அவ்வன்மொழியேயாம். அப்பெற்றித்தாப வவ்விரி, யேல் தொக்க அம்மொழிக்கேயல்லது தொகாமொழிக்குமாமென்பதூ உ நுமதனுவாத முகத்தானீண்டேபெற்றும். அல்லதூஉம் அன்

மொழித்தொகையை விரித்த லென்பதனை அன்மொழியை விரித்தலென விவ்வாறோதவும்படுமாயின் அவ்வாறே ஏனை வினைத்தொகை முதலியவற்றை விரித்தலையும் வினையைவிரித்தலென்றீத்தொடக்கத்தானோதவும்படும். படுமாயினியனூலுட் டொகையெனவொன்றெடுத்தோதலு மிழுக்கேயாம். ஆகவே இனி இவ்வியலாலுமோதப் படுமொருசாரன விழுக்கென்றோதவுந் தலைப்படுவீரேயன்றி யொழிவீராகலான் நீயிராசிரியர்தொல்காப்பியனாரோத்தினு மிழுக்கோதற்கே போலும்அவர்பேரியல்லைச் சிற்றியல்பு படவெடுத்தோதியதூஉ மென்பது. அதுநிற்க.

இனிநுமது அன்மொழியை விரித்தலாவது தொகாதல்லாத மொழியை விரித்தலேயாம். இங்ஙனந் தொகாதல்லாத மொழியை விரித்தலாவதொன்றுளதென்பது இதுகாறும்யாங்கண்டாதல் கேட்டாதலறிந்திலம் " உலகின்புற ,, வென்பதுபற்றிமிக்காராய நும்மோடு தலைப்பெய்து இவ்வாறறியாத வெல்லாமறியப் பெற்றாமென்பது. அதுகிடக்க, அன்மொழித்தொகை யெனவொன்று மேல் நிற்பினன்றே அதன்பின்னர் நும்விரிவிரிக்கப்படும் அஃதிஃதென்றறியுமுறையா னறிந்தோதுமுறையா னோதாது வறிதே அன்மொழியை விரித்தவிடத்தென்றீர். நீயிரிவ்வாறு நும் அன்மொழியை விரிக்குமிப் போலியியல்பும். நும்போலிவிருத்திக்கே யுரியதொன்றாமென்றொழிக. ஆகலான் அன்மொழித்தொகையை விரித்த விடத்தென்றோத வறியாது எதேதோ தெரிந்தாரொப்ப இங்ஙனமோதிய இவ்விரி விசேட மிக்கபெருவிசேடமேயாமென்பது

அற்றேல்-அன்மொழி விரியெனவொன்றுளதாலோவெனின் அஃ தன்மொழித்தொகையொன்று மேல்நிற்குமாயின் அதனையொட்டி பின் அன்மொழித்தொகை விரியெனவைத்தோதற்குரிய தல்ல

துமேலஃதின்றித் தனித்துவைத்து அன்மொழியை விரித்த
லென்னு மவ்வழக்கி யாதும் யாண்டுமின்மையறிக.

அஃதிங்ஙனமாகலின் நீயிரிங்ஙனம் (அன்மொழியை) விரித்த
லென்னுநும்விருத்தியாக்கி முற்றிய வியல்பு யாமின்னும் விரிப்
பிற் பெருகும். ஆகலான், யாமிங்ஙனம் (சுருங்கவோதியவாறு) பற்றி
அதுபோலியாதலினிது விளங்கும். இருந்தவாற்றானிது பொரு
ளின்மை யென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக. நும
துமுன்வருமோத்திற்கு மிஃதொக்கும். அதுநிற்க. இனியீண்டு அ
ன்மொழிப்பொருளென்றீர். இதுவுமிங்ஙன மொன்றுளதாக
வெடுத்தோதியாரையிதுகாறும்யாம்நோக்கிற்றிலம். இனி அஃதங்
ஙனமாயின் அவ்வாறே அஃதொழித்தொழிந்த வேனைவினைத்தொ
கை(முதலியபிறதொகைதம்மினும்) வினைப்பொருள்பண்புப்பொ
ருள் உவமைப்பொருள் உம்மைப்பொருளென நும்பொருட்ப
குபாட்டுவழக்குளதாதல் வேண்டும். அவ்வழக்கியாதுமின்மை
யின் அதுவுமின்றாதல் கைமுதிக நியாயத்தானினிதுவிளங்கும்.
ஆகலினிங்ஙன மாய நும்மன்மொழிப் பொருளோதுமியனூல்யா
தோ வென்றையுற்று அதுவுமேலதே யாமென்றொழிந்தனம். அ
ல்லதூஉம் நீயிர் இவ்வுரை இந்நூனுண்பொருளெல்லாம் எவர்க்
குங் கரக்காது வெளிப்படையான் விளங்குமாறு விரித்தோதல்
நுதலிற்றென் றீராகலானும் இதன்முதனூலிறந் தொழிந்தமை
யினிவ்வுரை அந்நூல்பற்றி யாக்காது பிறவுரையெல்லாம் பெறு
மென் றீராகலானும் அஃதப்பிறவுரையுமேயாகும்போலும். அது
கிடக்க. அற்றேல், வேற்றுமைப் பொருள் விரிக்குங்காலை யென்
பதுபற்றி அன்மொழிப்பொருளெனவும்படுமாலோவெனின், அற்
றன்று. ஆண்டுப் பொருளென்றது நுமது அன் மொழிப்
பொருளென்னும் பொருளன்றென்பது மெய்கண்டபாடியத்துட
காட்டினமாண்டுக் காண்க. இனிநிலத்தை விரித்துவட வேங்கட
ந்தென் குமரிநில மென்றோதி னென்றீர். என்றநீயிர்விரித்துவை

த்த நுமது நிலத்தையுமிவ்வாறே யெடுத்துக்கொண்டு அங்ஙனம் அதுபற்றி யெதிரோத்தோதுவாருமுளராவ ரென்பதறியா தோதினீர். தருக்கநூல் கிடந்தமூலையின் மூலையிஃதெனக் கண்டாதல் கேட்டாதலுமுள்ளீராயின் அவ்வாறோதுவீரல்லீர். ஐயகோ! நீயிர் யாதுசெய்குவீர். அதுநிற்க, இனியாமும் அவ்வாறேநுமது நிலத்தைவிரித்து வடவேங்கடமலை தென்குமரிமலைநிலத்தென வைத்து நோக்குமுறையானோக்குதும். அந்நோக்கியதனை நீயிரு நோக்குவீரன்றே? அஃதாமாறு முன்னர்க்காட்டுதும். அதுநிற்க. எமதாசிரிய ருரையோத்தின் திருமொழிகளை அம்முறையான் வைத்தோதி நோக்குவதல்லது நீயிர் புதுவது படைக்குநம்பயிற்சிபற்றிப் படைத்துக் கொண்டவப்படைத்துமொழி முறையான் வைத்தோதி நோக்குதல் நும்மியல் பொன்றற்கேயுரித்தாமென்றொழிக. அதுநிற்க.

இனி, ஆண்டுவடவேங்கடந்தென்குமரி நிலமெனவுரைத்துவைத்ததோருரைபோத்துளதா? முன்னும்பின்னும்நோக்குமிருநோக்குமொருநோக்காவுடைய நீயிரோதியவாறே முன்பின்னோக்குமந்நோக்கின்றி யொருநோக்குடையர் திருமொழிகளைநீயிர்ஆண்டோதியமுறையான் வைத்தோதியு மொருசிறிதுநோக்குமுறையான் நோக்குதிர். நுமக்கந்நோக்குப்பிறண்டுளதல்லது ஆண்டுளதாதல் செல்லாமையின் யாமேஅத்திருமொழியின் திருமுறையாதும்பிறழாது வைத்துக்காட்டுதும். பின்னர்நீயிரதனை நோக்குதிர் அஃதாமாறு. வடக்கண்வேங்கடமுந்தெற்கட்குமரியு மெல்லையாகவுடைய வவ்விடமாகிய தமிழ்மொழியைக்கூறு நல்லஉலகின்கண் எ-ம். இனிகுமரியுமாய அவற்றைஎன்னினும், என்னுமவைதம்மைபென்னினும், அமைந்து போந்து முன்வருமெல்லையோடியைந்து நிற்குமாறுங்காண்க. இங்ஙனமாக எமதாசிரியர் வேங்கடங்குமரியென்பவற்றிற்கு உம்மை விரித்துபதேசித்தருளவும் நீயிர்

அவைசெவ்வெண்ணென்றோதிப துபற்றி நமதுமறு தலைக்கடாவொன்றுபடைத்தற் பொருட்டு அங்ஙனம் முறைப்படுத்து வைத்தோதின் அஃததற்கோருரைக்கூற்றாய் முடியுமென்றஞ்சி அத்திருமொழியெல்லாம் வெளிப்படையாக்காது கரந்தோதி நீயிரு மதனுட்கரந்தொழிந்தீரன்றோ, அகமறைப்புக்கெல்லா மொருபெருஞ்சீரிய ஞாயிறேயாய வெமதாசிரியராணைக்கு இப்புறமறைப்பெல்லா மொருபொருளல்லவென்பதனைநீயிர் யாதுமறியகில்லீர். அஃதுகிடக்க. இதனானே வேங்கடமுங் குமரியுமெல்லையாகவுடையநிலமென்னுந் தொல்லோத்து நமக்கெழுவாயாய் வாய்ந்ததா? அன்றி இடைவாயாய் வாய்ந்ததா? அல்லதிறுவாயாய் வாய்ந்ததா? அன்றி வடவேங்கடந்தென் குமரிநில மென்னு நும்புத்தோத்தே அங்ஙனம் வாய்ந்ததா? அன்றி அல்லவாய் வாய்ந்ததா? எவருமெளிதுணரற்பாற்றாய உரையோத்துணரு முணர்வொருசிறிது மின்றிய நீயிர் எவருமரிதினுணரற்பாற்றாய நூலெலவற்றினுஞ் சிறந்த இப்பரமநூற்பொருளுள்ளவா றுணர்ந்திங்ஙனம் விருத்திசெய்து விருத்தமாக்கற்கேயன்றோ யாமாசிரிய ரவதாரமா யவதரித்தனமென்பது போதுமாறு மேலோதியொழிந்தீரென்பது. அதுகிடக்க. வடவேங்கடந் தென்குமரி நிலமென்னு நமது புதுவிரி வேங்கடத்தையுங் குமரியையு மெல்லையாக உடையநிலமென்னும் நும் புதுப்பொருள்படாமையின் ஆண்டொரு மொழியாயொழுகு மொழுக்கின்று மென்றீர்.

அங்ஙன மிருமொழியா யொழுகுமீரொழுக்காயினும் அன்றிவேறெவ் வொழுக்காயினுமாக. வடவேங்கடமுந் தென்குமரியு நிலமுமாய் மூன்று மென வதனைவைத்து நோக்குதிர், நோக்கின் அது நமது செவ்வெண்ணாதற் கிழுக்கியாது மின்றன்றே? நீயிரொருநோக்கேயுடையவெமதாசிரியர் போலாது இருநோக்குடையீரன்றோ? அஃதங்ஙனமாகவுமீண்டு நமக்கவ்வெழுவாய்தொட

ருநோக்கொன்றேயன்றி இங்ஙனம்செவ் வெண்ணாவைத்து நோக்குமங்நோக்கு யாண்டொழிந்து போயதென்பதறிகிலம். அது பிறுண்டுளதாயினு மீண்டுநிகழ்தற் கியாது மியைபின்றென்பதுமேலோதி யொழிந்தாம். இனி அஃதிடைவாயிறுவாயாதன்மேலுமெழுவாயாகலுங்காண்க. இருந்தவாற்றா னிதுபிறனோதிய பொருளை அனுவதிக்கமாட்டாமை யென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

இனிஎமதாசிரியருரையோத்து வாக்கியங்களை அவ்வுரைத்தருளியவாறே நோக்காதிங்ஙனம்புதுவதுபடைத்துக்கொண்டுநோக்கினீர். அதனால் யாமும் அவ்வாறேநம்மோத்து வாக்கியங்களைநீயிரண்டை வாக்கியங்களொருசார வொழித் தெடுத்துக் கொண்டு நோக்கியமுறையே வைத்து நோக்குதும். அதனைநீயிருநோக்கி நும் மியல்பையு நோக்குதிர். அதுவருமாறு,நீயிர் வடக்கின்கண் வேங்கடமலையுந் தெற்கின்கட் குமரிமலையும் ஆகிய வவ்விரண்டனையுமெல்லையாக வுடையநிலத்து என்றீர்! "நீயிர்வடக்கண்வேங்கடமுந் தெற்கட் குமரியுமெல்லையாகஉடைய நில,,மென்பதனைவடவேங்கடந் தென்குமரிநிலமெனவெடுத்துக் கொண்டீரன்றோ, அஃதொப்ப யாமுமீண்டெடுத்துக் கோடும் அதுவருமாறு. வேங்கடமலை தென்குமரிமலை நிலத்தென்றெடுத்துக் கொண்டன மென்றவாறு, இதனை நீயிருமொருசிறிது நோக்குதிர். நோக்குவீர்க்கதுநுமதிறுவாயிடைவாயெழுவா யென்னு மூன்றனுள் மூன்றுமோ? அன்றோ? வடவேங்கடமலையானதுதென்குமரிமலையுளதாய வந்நிலத்ததா மெனவும், வடவேங்கடமலையும் தென்குமரிமலையுந்நிலத்தவே வானத்தவல்ல எனவும்,வடவேங்கடமலையுந் தென்குமரிமலையு நிலமுமாய மூன்று மெனவும்,வடவேங்கடமு மல்லை தென்குமரியுமல்லை நிலமேநீஎனவும், நீவடவேங்கடச்சாதியுடையையல்லைதென் குமரியே ஆகலான்அஃதாமோவன்றோ வென்னு

மைபப் பாடொழிக எனவு மின்னு மின்றோ ரன்னபலவாற்றான் விரித்துநோக்கவும் படுமென்பது நுண்ணுணர் வாற்கண்டுகொள்க. ஈண்டையிறுவாய்ப்பொருள்பற்றி நும்போத்துள் வடவேங்கடம் மலையாகும்தென்குமரிமலைவாகுமெனவுமொரு பொருடோன்றி நின்று நீயிர்குமரி யென்பது ஆறன்று மலையேயென்பது துணிவாகாது மலைவாமென்னும் பொருடந்தவாறும் பிறவுங்காண்க. இங்ஙனமாக வடவேவங்கடந்தென்குமரியிலமென்னு நுமதெழுவாய் தொடர்ந்து வடக்கின்கண் வேங்கடமலையுந் தெற்கின்கட் குமரிமலையுமாயஅவ்விரண்டனையு மெல்லைபாகவுடைய நிலத்து என்னுநும்பொருள்பயவாமையின் அஃதிநுமொழி பொழுக்கேயாமென்ற திழுக்காயவாறு காண்க. இதனானே ஒருவன் காலெதிருமிழும் வாய்நேரொப்பநும்மோத்தே இழுக்காயொழிந்தவாறு காண்க. இதற்கு நீயிர் யாதுபரிகாரமோதுவீர்! இயனூல் பற்றிய தலைவிதி யெல்லாநும்மைப் பற்றிய தலைவிதி யானுப வாகலானெமதாசிரியர்க்கு அத்தலைவிதியாவதின்றென்றெண்ணிநீயிரிங்ஙனம் விதித்த விதியே நுந்தலைவிதி யாய்முடிதலானும் எமதாசிரியர்க்கு நும்மொப்ப அத்தலைவிதியாதுமின்மையானும் தலைவிதி வயப்பட்ட சிவஞானமுனிவராக்கியநூல் பொய்நூல் அவ்விதி வயப்படாத யாமாக்கியநூலே மெய் நூலென்பது படுமாறு நீயி ரோதிப்போந்த நும்விதிநுந்தலை விதியாயொழிந்தவாறு காண்க. இருந்தவாற்றானிதுவும் பிறனோதிய பொருளை அனுவதிக்க மாட்டாமை யென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

நவின்றுறு நவின்றுறு மேன்மேல் விரியுநயவியல் பெல்லாமொருங்குடையவதனை யொருகாலிருகால் நவின்று அத்துணையே யதனயமாகலானஃதித்துணையே போலுமென்றொழிதலிழுக்கினி ழுக்கென்பதறியு மறிவியாது மின்றி யவ்வுரை

யொத்தியல்பித்துணையேயென விரித்துவிரித்துக்காட்டி நீயிர் மேற் கழிந் தொழிந்த தீண்டென்றாயிற்று" பிறர்க்கின்னா முற்பகற்செய்யிற்றமக்கின்னா பிற்பகற்றாமேவரு,,மென்றவாறே பிறரோத்தினை யாமிங்ஙனம்வாளா இழுக்குரைத்துமெனின்! அங்ஙனமேயாமோ நுமோத்தினு மிழுக்குரைப்பாருளராத லொருதலை யென்ப தறிபு மறிவியாது மின்றி இங்ஙனமாக நீயிர் செய்த விவ்வறச்சிறியதோர் செயல்,,பிறன்பழி கூறுவான் றன்பழியுள்ளுந்திறன் றெரிந்து கூறப்படு,,மென்பதற் கிலக்கியமாய வாறுகாண்க.

இனியீண்டு நுமதன்மொழியை விரித்தலன்மொழிப் பொருளாய நிலத்தைத விரித்தலெனவோதியனபற்றி யொருசிறிதாயு முறையானுப்குதும். அதுவருமாறு: இயனூலுள் அன்மொழிவிரி அன்மொழிப் பொருளென யாண்டுமெடுத்தாளப் படாமையானும், அன்மொழித்தொகை விரியெனவே ஆண்டாளப்படுதலானும் அன்னபிறவாற்றானுமவைபோலி போத்தாதல்காண்க. எமதாசிரியர் இயனூலுளெடுத்தாளப்பட்டவாறே அவ்வன்மொழித்தொகையை விரித்துபதேசித்தருளினரல்லது ஆண்டும்பிறாண்டுமெடுத்தாளப்படாத அன்மொழிவிரி அன்மொழிப்பொருளென்பவற்றை யெடுத்தாண்டருளினாரல்லர். ஆகலின் அன்மொழிவிரி அன்மொழிப்பொருளெனவிங்ஙனம்போலிவாக்கியம்படைத்துக்காட்டுதல்கூத்தாடிச் சிலம்பமொப்பச் சொற்சம்பிரமமேயா மென்றொழிக.

அற்றேலஃதற்றாக. ஆண்டு " வேங்கடங் குமரியென்பன, அன்மொழித்தொகையாய் அவற்றை யெல்லையாகவுடைய நிலத்தை யுணர்த்தின,, வென்புழி அத்தொகையை விரித்தோதிய வாறியாங்ஙன மெனின், ஓதுதும். வேங்கடங்குமரியென் னுமவ்வன்மொழித்தொகையை வேங்கடமுங் குமரியுமாகிய வெல்லையெ

னவிரித்தோதியருளின ரெனக்கொள்க. அற்றேலீண்டோதிய வாற்றாற்றொக்குவிரிந்தவன் மொழியெல்லையும் அவற்றை யெல்லையாகவுடைய நிலத்தை யுணர்த்தினவென்னு மாண்டுத்தொக்குவிரிந்தவவ்வன்மொழி நிலமுமாய்த் தம்முள் வேறுபடுதலின் இஃதஃதன்றுபோலுமெனின்! அறியாதுகடாயினீர். சீகாழியின் வடக்குச் சிதம்பரமெனின் ஆண்டெல்லைப் பொருளாய சீகாழியொரு நிலமேயாய் முடிந்தவாறேப்ப வெமதாசிரியர்மேற்பதப்பொருளுள் எல்லையென்ற தாண்டு எல்லைப் பொருளாய் நின்றவவ்வாறு,மலையுமென்னு மத்துணைபேபோலு மென மயங்குவார்க்கு மயங்காமைப் பொருட்டு அதனையே மறித்தெடுத்துக்கொண்டருளி யாமேயெல்லையெனப் புதப்பொருளுணரைத்துப்போந்தது அவ்விருபொருண் மாத்திரையேயல்ல, அம்மலை, யாறுஎன்னு மவற்றைச்சூழ்ந்து எல்லையாய்க்கிடந்த நிலமேயிறிதன்றென்பது தேற்றியருளுவார் " வடவேங்கடந் தென்குமரியென்பன அன்மொழித் தொகையாய் அவற்றைஎல்லையாகவுடைய நிலத்தை யுணர்த்தின,, வெனவுபதேசித்தருளின ரென்பது. அதுசிதம்பரமென்னு மச்சிவபரம்பொருளாண்டேஎன்றுந்தோன்றி நின்றருளுதலின் அதுபற்றி அதுசூழ்ந்து கிடந்தநிலமுஞ் சிதம்பரமென்னு மப்பெயர்த்தாயவாறு போலெனக்கொள்க, இதனுமது நிலமே யென்றற்கியாது மிழுக்கின்மையறிக.

அற்றேல் மேற்பதப்பொருளினுட்சொற்பல்காமைப் பொருட்டு வடவேங்கடமுந் தென்குமரியுமாகிய வவற்றை யெல்லையாகவுடைய நிலமென்றேதப்படுக, அற்றாதலே யதற் கமையும் ஆகலானதனை மறுவலுமெடுத்தோதலாண்டைக்கு வேண்டாபோலு மெனின், அற்றன்று, அற்றாக ஆண்டவற்றை யொருங்கியைத்து வைத்தோதின் அதுபற்றி ஆண்டுத்தொக்கு விரித்தவவ்வன்மொழித்தொகையின்விரி இது அதனைவிளக்குமாறெழுந்

தவ்வேவணைமொழிபிறவயென்னுமவ்வேறுபாடு ஆண்டுத் தோன்றாமையின் அவ்வேற்றுமை தோற்றுவித்தற்பொருட்டு வேறுவேறோத லொருதலையானின்றியமையாதுவேண்டப்படுமாகலான்

அற்றேலஃது தொக்குமாயினு மாண்டெல்லை யென்றதுநீயிரோதியவாறே நிலமாவதன்று அஃததனின்வேறாம்போலுமெனின்! அற்றேல் அஃதங்ஙனமாமோ வன்றா எனவதனை யிண்டொருசிறிதாயுமுறையானுய்க்குதும். அதுவருமாறு. எல்லை முதலியனவாகயாங்காணப்பட்டவிவ்வுலகப்பொருளெல்லாம் நிலமுதல்வானீறு ஐம்பெரும்பூதங்களுளோரோவொன்றாவனவன்றியவற்றின் வேறாவனவல்ல. ஆகலான் அவ்வெல்லையாவது நீர்,தீயென்பனவல்லவென்பது காட்சியளவை பற்றியெல்லார்க்குமொக்குமன்றே.

இனி, அதுவாயுவு மன்று, அது நிலைபெறலின்றி யிடையறாது நெடிதோடுமொருபொருளாகலானும், அல்லதூஉமங்ஙனமாயகுமரியாறெல்லைப் பொருளாதல் செல்லாதெனநீயிருடம்படாமையானும் இனியஃதாகாய மெனக்கோடுமெனின்! அஃதஃதாவதுமன்று. அஃதியாண்டும் வியாபகப் பொருளென்னுமுறையளவை நமக்குமுடம்பாடல்லது மறுக்கப்படாதாகலானும் நிலைபெற்றவோரிடைப்பொருளே யெல்லைப்பொருளென நீயிரோதுமாற்றானுமென்பது. இருந்தவாற்றான் அவ்வெல்லைப்பொருளிப்பூதநான்கனுள் வைத்தொன்று மாகாமையின் இனி யெஞ்சி நிற்பது நிலமொன்றேயன்றி வேறுபொருளின்மையானும், வேறுவிடுக்குமாறின்மையானும்பாரிசேடவளவைபற்றி அவ்வெல்லையாவது நிலமே பிறிதன்றென்பதுவச்சிரகவசம்போல்நாட்டப்பட்டவாறுகாண்க.

அற்றன்று எல்லைப்பொருளாவது ஆண்டுக்கிளந்தெடுத்தோதப் பட்டவவ்வப் பொருண்மாத்திரையே யாகலான் ஆசிரி

ய் பனம்பாரனார் வேங்கடங்குமரியென்றோதியது ஆறாமலையுமெ ன்னு மவ்வத்துணையே யாமெனின்! அற்றன்று. தமிழ்மொழி வழக்கிற்குரிய அவ்வேங்கடமலைக்கிப்பாலொழித்தொழிக்க அப் பாலெல்லாம் வழங்கப்படுவன வேனைப்பாடை மொழியேயாகலா ன் அவையீண்டோதப்படு மித்தமிழ்ப்பாடைவழக்குடையன வல் ல வென்பதே யவ்வாசிரியர் கருத்தாகலானும், அதனானவ் வேனை ப்பாடை மொழியெடுத் தோதற்குரிய மாந்தர் வைகற்குரியது மலையாகாது நிலமேயாகலானு மவ்வெல்லையாவ தாறுமலையு மெ ன்னுமவ்வத்துணையேயாதல் செல்லுமாறியாண்டையதென்றொ ழிக. இனி அஃதங்ஙனம் கோடுமேனு நீயிர் குமரி, யாறன்று மலையெனக்கோடலானு மம்மலையு மொருநிலவிகாரமேயன்றி அத னின் வேறன்மையானும், அன்னபிறவாற்றானும், அவ்வெல்லையெ ன்பது நிலமேயாதல் பசுமரத்தாணிபோல் நாட்டப் பட்டவாறு காண்க

அற்றேல் கடலை யெல்லையாக வைத்தோதப்பட்டுழி அஃ தமையாது போலு மெனின்! அது பற்றியு மஃதமையு மென்பதி துபற்றியுய்த்துணர்ந்து கொள்க.

அற்றேலஃதங்ஙனமாக நீயிரித்துணையு மோதிய வாற்றா ன் பதப்பொருளினுள் எல்லை என்றோதியதனையே முன்னர் நிலமெ ன்றோதப்பட்ட தென்பது பெறப்பட்டு எல்லை வேறு நிலம் வேறெ ன்பது பெறப்படாதாயினு மெல்லையாகவுடைய நிலமென்புழியெல் லை நிலமென்பன விரண்டுமோரிடைப் பட்டுத்தம்முள் வேறாய்ப் பிளவுபட்டு நிற்றலான் அவ்வெல்லை வேறு நிலம் வேறென்பது போதரலான் நீயி ரோதியவாறே அஃதப்பொருளாமோவன்றோ வெனத்தெளிவு பிறவாமையின் இன்னும் அதனியல் பிஃதென இனிது விளங்குமாறு தேற்றுகவெனின் நன்றே யோதினீர்! அங்

ஙன மதனையோருவமைமையொடுபடுத்துத் தேற்றுதும். அதுவரு மாறு. ஸ்ரீகாளத்தி கோதாவரியென்னுந் தானிப்பெயர்ப்பொருளி ரண்டு மவ்விரண்டற்குந்தான மெனப்படு மவ்விருவேறு நிலங்களை யுமுணர்த்தி நின்றனவேயன்றோ. அஃதொப்ப ஈண்டும் வைத்து க்கண்டு கொள்க. ஸ்ரீகாளத்தி கோதாவரியென்னுமப்பெயர்ப் பொருள்கள் ஆண்டவ்வாறு மலையென்னு மவ்வப்பொருண் மாத் திரையினில்லாதாண்டுத் தம்மைச் சூழ்ந்தியைந்து கிடத்தலின் அவ்வப்பெயர்த்தாய காளத்திதேசம் கோதாவரிதேசமாயநில ங்களுமாய் நின்றன வன்றே. பொருளினு மிவ்வாறே யொட்டிக் கண்டு கொள்க. இங்ஙன மாகலானுண்டெல்லை நிலமென்பன விரண்டுமொரு பொருளையாய் வேங்கடநாடு குமரி நாடென்னு மிருவேறு நிலமேயாமென்பது நுண்ணுணர்வானுணர்ந்து நோக்கித் தெரிந்துணர்ந்து கொள்க.

அஃதஃதேனும் எல்லைபாகவுடைய நிலமென்பது வட வேங்கடத்தையுந் தென்குமரியையு மெல்லைபாகவுடைய நிலமெ ன்னும் பொருட்டே போலுமெனின்! அற்றன்று. வேங்கடங்கும ரிகளை யெல்லைப்பெரும் பொருளாகவே தம்மாட்டுப் பெற்றுக் கோடலின் அவ்வியைபு பற்றித்தாமு மப்பெயரவாய நிலமென்ப தே கருத்தாகக் கோடற்பாற்றுகலான். அது பற்றியன்றே ஆண்டு "பிறவெல்லைகளுளவாகவு மென," வெமதாசிரிய ருபதேசித்தரு ளியதூஉமென்பது. அஃதொருவ னொருவனை நோக்கி ஆண்டுத் தோன்று மதுவே யெமதில்ல மெனின். அதுகேட்டாற்காண்டில் லமாய் முன்னர்விளங்கித் தோன்றுவது அவ்வில்லத்தி லெல்லைப் பெரும் பொருளாய பித்தியே யாகலானவ்வெல்லைப் பெரும்பொ ருளாய வப்பித்திவேறு ஆண்டைநிலம்வேறெனத் தம்முளியா தும் வேற்றுமையின்றி யவ்வெல்லைப்பெரும்பொருளாய பித்தி யும் அதனைத் தன்மாட்டுடைய வந்நிலமுமாய வவ்விரண்டுமொ

ன்றற் கொன்றின்றியமையாவாய்த் தம்முளியைந்து கொண்ட வவ்வியைபே போரில்லமாய் முடிந்தவாறு போல ஈண்டும்வேங் கடங்குமரி யென்னு மவ்விருவே றெல்லையு மவற்றோ டியைந்து கிடந்த அவ்விருவேறு நிலமாய வவ்விருவேறுபொருளுந் தம்மு ளொன்றனை யொன்றின்றி யமையாவாய்த் தம்முளியையு மவ்வி யைபே வேங்கடநிலமுங் குமரிநிலமுமெனக்கொள்க இவ்வனமறி யுமறிவியாதுமின்றியுலக மென்பது நிலம்,நிலமென்பது நிலமாத லான் நிலமாகிய நிலமெனப்பட்டஃதிழுக்காமெனப் பிதற்றினீர். பொதுச்சொல்லாகலினவ்வுலக மென்பது சிறப்படை பெறுது நிலப் பொருட்டாகாமை யறிக. இவ்வரிய பெரிய சீரியநுண்பொ ருளிஃதெனக்காணுங்கண்யாதுமின்றி யெமதாசிரிய ருரைபோ த்தினை யுள்ளவா றுணர்ந் தோதுவார்போலபிநயித்துக் காட்டிநி லத்தை விரித்து வடவேங்கடந் தென்குமரி நிலமென வோதின் வடவேங்கட மென்பது தென்குமரி நிலமாமென வெழுவாய்த் தொடர்ப்பொருள்படுமல்லது வடவேங்கடத்தையுந் தென் குமரி யையு மெல்லையாக வுடைய நிலமென்னும் பொருள் பயவாமையி னஃதன் மொழித்தொகையாமாறியாங்ஙன மென்றீர். வடவேங் கடத்தையுந் தென்குமரியையு மெல்லையாகவுடைய நிலமென்னுந ம்போலிப்பொருளே யெமதாசிரியர் திருவுள்ளமென நுமக்கெ மதாசிரியர் திருநெறியுள்ளவா றுணர்ந்துடைய ரோதினர்கொ ல்லோ! அன்றி நீயிர்தாமே யுணர்ந்துடையீர் கொல்லோ! யாபத னுண்மைப்பொருளிஃதென மேலோதியவாற்றான் நும்மோத்து அத்திருநெறி யுணர்ந்தாரோத்தன் றென்பதினிது விள ங்கு மாகலினிது நுந்திரிபுணர்ச்சியே யென்ப தினிதறியப்ப ட்டது. இவ்வாறே நீயிரெமதாசிரியர் திருவோத்துள் யாண்டு மெமதாசிரியர் திருவுள்ளமிவையென்ப துள்ளவாறுணராது நும் மனம்போயவாறெல்லாம் போந்து திரிவுபட வோதுதல் நுமக்கில க்கணமென்பது யாவீண்டோது மோத்தானறியப்படும். அஃதிஃ

தாகவும் இந்நுண்பொருளியல்பறியுமறிவியாதுமின்றிநீயிரிங்ஙனந்திரிவுபடவோதுமோத்தே யுண்மைபோலுமென மயங்கியமதாசிரியருரை யோத்துப்பற்றி ஐயவிபரீத முற்ற மெய்த்தவமிலரொரு சாரருமுளர். இன்னுமஃதித்துணையேதாமோஅன்றன்று' நூலாசிரியர் திருவுள்ள முள்ளவாறுணர்ந்து உணர்ந்தவாறுணர்த்தியருளுமெமதாசிரியர் திருவோத்து இழுக்கெனவும் ஆசிரியர் திருக்கருத்தியல்பியாதுமறியாதுரைக்கு நும்மொக்கு மொருசாரருரையே யுண்மையெனவுமோ துமின்னோரன்ன நும்மியல்புபல வேறுகலான் அவையெல்லாம்போலியென்பதிதனை னினிதுணர்ந்து கொள்க.

இத்துணையுமோதிய வாற்றானெமதாசிரியராண்டு அவற்றையெல்லைபாகவுடைய நிலமெனவைத்துப்தேசித்தருளிய வந்நிலமாவது எல்லைப்பொருட்டாயநிலமேபிறிதன்றெனவும், தமிழ்கூறு நல்லுலகமென்னு மவ்வுலகமவ்வெல்லைப் பெரும் பொருளாய வவ்விருவேறு நிலங்கட்கு மிடைவாய்ப்பட்டுநின்ற தமிழுலகமேவேறன்றெனவும்அவற்றின்வேறுபாடுதெரிந்துணர்ந்து கொள்ளப்படும். ஆகலான், நீயிரிந்நுண்பொருளுணராமை மேலும்உலக மென்பது பொதுச்சொல்லென்ப தறியாது அதுநிலமென்னும் பொருட்டெனக்கொண்டு நிலமாகிய நிலமெனக்குழறுங் குழறு படையெல்லாம் ஆகாயத்தினெழுதிய சித்திரமொப்ப வெறும் பொய்யாயொழிந்தவாறு காண்க.

அஃதே லஃதாக. எல்லை என்றது ஈண்டுநிலத்தை யென்றுதல், அன்றி யெல்லை யென்றது ஈண்டுநிலமென்னுந் துணையாய் நின்றதென்றுத லெடுத் தோதுவதே அவ்வுரை யோத்து வழுக்கெனப்படும். ஆண்டோதும் பொருளுமதுவே யாகலான் இங்ஙனமிடர்ப்பட்டோத்துமயங்கவைத்தலெற்றுக்கெனின், அற்றன்று

அவ்வாறே யுரையோத்துப் பொருளை மறித்தெடுத்துக் கொண்
டோதல் ஆசிரியர் பரிமேலழகருரை வழக்கேயாகலானும் அஃ
தெமதாசிரியருரை வழக்கன்மையானும் இனி ஆங்ஙனங் கோடு
மேனின் எல்லை யென்ற தீண்டு நிலத்தை யென்றோதின், அஃத
த்துணையி னமையாமை யானும் மறித்து வேங்கடங் குமரியென்ப
து அன்மொழித்தொகை யென்றெடுத்தோதின் சொற்பல்கு மாக
லானும் கண்ணழிவுட் போந்தவெல்லை யென்பதாண்டு நிலப்பொ
ருட்டென்ப தறிவுறுத்தற்பொருட்டு மறுவலு முபதேசித்த நூ
லின ராகலானும் அதுபற்றி மயங்கவைத்த விடர்ப்பா டென்ப
வற்றுள் யாது மாண்டின்மையின் நுமதிடர்ப்பாடு மயக்கமென்ப
னநிகழுமாறி யாண்டைய தென்றொழிக, ஆகலானவற்றை யெல்
லையாகவுடைய நிலமென்பது அவ்விரண்டனையு மெல்லைப்பெறும்
பொருளாகவுடைய நிலமெனக் கோடற்பாற்று ஆகலின் வேங்க
டங்குமரி யென்பவற்றைத் தம்மாட்டுப் பெற்றுடைய நிலமாவன
வேங்கடநாடு குமரிநாடுகளா கலான் அஃதப்பொருட்டே யாதல்
தெற்றெனவறிக இலகித்தோன்று மியல்புடைத்தியா தஃதவ்விய
ல்பானெல்லையெனப்படுமென்பதாம்.

அற்றே லாண்டுப் படுமவ்வேனைப் பொருளெல்லாம் அங்ங
னமிலகித் தோன்றுவன வன்றி அவைபிலகித் தோன்றுதன வ
ன்மையின் அதுசாலாது போலுமெனின் அற்றன்று ஊரெனப்
படுவ துறையூராமெனின் அஃதொழித்தொழிந்த வேனையூருமூ
ரெனப்படுமாயினு மவைதாமூர்க்குரிய வியல்பெல்லா மொருங்கு
டையன வன்றியவற்று ளொருசாரன மாத்திரையே யுடைமை
யின் அதனனைவசிறந்து தோன்றுமையின் அவைபொதுமையினூ
ரெனப் படுவன வன்றி யுறையூ ரொப்பவுயர்த் தோதப்படுவனவ
ல்ல அங்ஙனமன்றி யூர்க்குரிய வியல்பெல்லா மொருங்குடைமை
யினூரென்றுயர்த் தோதப்படுவதுறையூ ரொன்றேயாய்ஈண்டும்

அஃதொப்ப ஆண்டைப்பொருளெல்லாமிலகுமியல்புடையனவாயினும், அவை யீவைபோடச் சிறந்திலகாப்பொருளாகலான் இலகுதற் சிறப்புநோக்கி அவற்றுளிவையே யெல்லையாயின வெனக்கொள்க. அஃதிவ்வுலகின்கண் வேறு வேறு வழங்கப்படு நிலமோரொவொன்றற்குந் தத்தபக்கியல்பி னமைந்துபோந்தவவ்வவ்வளவையெல்லையுள்வழியும்அஃதினிது விளங்காதாக. இனிதுவிளங்குமாறு: வரம்பு, பித்தி, நடுகன் முதலாய்ச் சிறந்திலகும் பொருளுள்வழி அஃதினிது விளங்கி நிகழு மவ்வுலகவழக்குப் பற்றியும் அஃதப் பெற்றித்தாதல்தெற்றெனவறிக. நடுகன்முதலிய அவ்வவ்வெல்லைப்பெரும் பொருள் தத்தமக்குநிலைக்களமாய்த்தத்தம்மினீங்காவாய்க்கிடந்தவவ்வக்கீழ்க்கீழ்நிலங்கட்குமாமாறு பற்றியும் அவ்வெல்லையென்பது நிலமேயாதலொருதலையானினிதுணர்ந்துகொள்க. இன்னுமீண்டுத் தடைவிடைபற்றி யெடுத்தோதற் பாலனவெல்லாமெய்கண்டபாடியத்துளியைபுபற்றியெடுத்துச்சொண்டினிது விளங்குமாறு விரித்தோதினும். அவைபெல்லா மீண்டுவிரிவஞ்சிவிடுத்தாமென்பது.

அஃதிங்ஙனமாகலா னெமதாசிரிய ருபதேசித் தருளிய அவ்வெல்லையாவது வேங்கடங் குமரிகளை யெல்லைப் பெரும்பொருளாகவுடைய வவ்விருவேறு நிலமென்னுமதுவே உண்மைப்பொருளென வவ்வாசிரியர்திருவடியுளடங்கி நின்றுணரு முணர்வியாது மின்றி நும்போலியுணர்ச்சிபற்றி யெல்லைவேறு நிலம்வேறு போலுமென மயங்கித் திரிவுபட வுணர்ந்து கோடன்மேலுமெல்லையாகவுடைய நிலமாகிய நிலமென்பதே யவருரையாகலான் அதனுள் முன்பின்வாக்கியங்களை பயனுடைபடவிடைவாய்ப்பட்டனபயனுடைபடாவென பயனுடை படாத நீர்நீக்கிப்பாலேன்று கொள்ளு மஞ்சமொப்ப நீயிராண்டுக் கொண்ட பயன்யாதும் பயனின்றாய் வெறும்போலியா யொழிந்தவாறு காண்க.

அஃதிங்ஙனமாக அவ்வுண்மையுணருமுண்மையுணர்வொரு சிறிதுமின்றி யவ்வுண்மை யுணர்ந்துரைத்தநூலும் பேருணர்வுடையாரை முன்பின் னோக்காது வாளாதிமுக்கோதினரென வாய்கூசாது புறன்பழித்த நீரிரண்டு முன்னும் பின்னும் நோக்காதுநோக்கி யுணராதுணர்ந்து வாளாது ஆகாமைமேலுமிழுக்கின்றிப் பயனொடு படுமாறெங்ஙனமெல்லாம்பயனொடு படுவன வாதல்யாமீண்டோதிய வாற்றானினி துணர்ந்து கொள்க. அது கிடக்க.

இனிஎமதாசிரியர் அன்மொழித்தொகையென்றருளினமாகலானும் அன்மொழித்தொகையேயன்றி அன்மொழிப்பொருளினவொன்றின்மையானும் அன்மொழிவிரி அன்மொழிப்பொருளென்பனவெல்லாம் போலியாதலறிக. நிலத்தை விரித்தென்றதூஉமது. வேற்றுமைத்தொகை முதலியவற்றின்பின் புறமொழி தொகுவது அன்மொழித்தொகையாகலான் அவவேற்றுமைத்தொகைமுதலியன தொகுங்கால் அதுவுந்தொகும். அவை விரியுங்காலதுவும்விரியுமல்லது அவைதொக்கு நிற்ப அது விரிவதொன்றன்று. மேலோதியவாற்றானெமதாசிரியர் தொகையைவிரித்து நிலைக்களங்காட்டியருளவும் அஃதின்னதென்றுமுறையாலுய்த்தறியு மறிவியாது மின்றி நிலத்தை விரித்து அன்மொழியை விரித்து எனவொருபுதுவிரி விரித்து அன்மொழிப்பொருளென வொருபுதுப்பொருள்படைத்தல் வெறும்போலி யாமென்றறிக. ஆண்டு வேங்கடமுங்குமரியுமாயவெல்லையென்பதே அவ்வன்மொழித்தொகையின் விரியென்பதினியாயினுமறிந்து கொள்ளுக, இதனானே அவ்வுரைபோத்தி னெழுவாயிடைவர் சிறுவாயியல்பியாது முணராது வடவேங்கடந் தென்குமரி நிலமெனப்புதுவது படைத்துக்கொண்டு அஃதெழுவாய்த்தொடரெனக் கழித்தோது மோதலெல்லாம் இழுவாய்ப்போலிபர்

யொழிந்த வாறுகாண்க. இருந்தவாற்றானிது பொருளினிதுவிளங்காத மொழியெடுத்தோத லென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

இதனானே எமதாசிரியருபதேசித்தருளிய மெய்ப்பொருளொருகாற் கண்டுங் காணாமையின் "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்று." லென்னுமிலக்கணத்துக் கிலக்கிய முண்மையுமீண்டே கண்டாம். அதா நிற்க, இனி வெள்ளாடையான் பொற்றொடியாள் தகரஞாழலா ளெனவிரித்துரைத்தீர். இங்ஙனம் விரிக்குமொரு விரியின்மை மேலோதிய வாறுபற்றி யுணர்ந்துகொள்க. இனி அங்ஙனமவற்றை விரித்தீர்க்கு வெள்ளாடை யென்பதனை வெள்ளாடையான், வெள்ளாடையார், வெள்ளாடையது, வெள்ளாடையன வெனவிங்ஙனம் விரித்து ஏனையவற்றையுந் தனித்தனியிவ்வாறே விரிக்கலாம். நீயிரிங்ஙன மவற்றை விரியாதொழிந்து போந்தது அறியாமைபற்றியோ? அலுப்புப் பற்றியோ? உபலக்கணம் பற்றி யுணரப்படுமென்பது பற்றியோ? அன்றி இவற்றின் வேறுபற்றியோ? அஃதியாதென்றறிய கிலேம். அஃதெஃதாயினும் நும் விருத்திமுறைக்கிஃதஃதன்முறையேயாமென்பது; இனி வெள்ளாடையானென்றற்றொடக்கத்தான் விரிவன நிலைக்களமின்மையிற் போலியாதலறிக. இருந்தவாற்றானிவை மேற்றோட்கு மறுதலைப்படவோத லென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக. அல்லதூஉம் வடகிழக்கென்னு மவ்வன்மொழித்தொகையுள் வடக்கிழக்கென மிகுதல் காணாமையானும்; அன்றி அகம் புறமென்பது வாயிலையுணர்த்தும்வழி, உம்மைத்தொகைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகையாயாண்டீறுதிரியாமையானும், அன்மொழித்தொகை யாண்டு மீறு திரிதல் நியதமன்றெனக் கொள்க. அஃதகப்புறமென்றுமோவெனின்! என்னும். என்னை? அங்ஙனமாயின் அஃதாண்டு அன்மொழித்தொகையாக தா

கலானென்பது. இன்னு மீண்டுரைத்தவாறுபற்றி அக்கூற்றுளிங் ஙனமோது மேனைப்பொருளுமிவ்வாறே போலியாத லோர்ந்து ணர்ந்துகொள்க. அவையெல்லா மெய்கண்டபாடியத்துள் விரித் துரைத்தாமீண்டுரைப்பிற் பெருகுமென்றஞ்சிவிடுத்தாமென்பது.

இனி நீயிராண்டம்மூன்றுங்கூற்றைத் தீண்டாதொழிந்த தென்னை கொல்லோ? நுமக்காண்டைக்கேற்கும் போலியாதும்வந் து வாய்த்திலதுபோலும். அஃதஃதன்று, அஃதிபாமீண்டெடுத் துக்கொண்டபொருளோதுமுகத்தானிழுக்காதல்பெறப்படுமென் பதுபற்றியொழிந்தனமாலெனின்! அஃதேல் அஃதவ்வேனையவ ற்றிற்குமொக்குமன்றே. அஃதஃதாகவுமவற்றைத் தனித் தனி யெடுத்தாடல் சாலாமையின் அது போலியாதலறிக. அஃதேல், நீயிருமெம்மொப்ப எம்மோத்துள்யாதும்வரையறையின்றிஒரோ வொன்றொழித்தெடுத்தாடலென்னையெனின்? அற்றன்று. யாமேல்நுதலிப்புகுந்தவாறே யோதினமாகலானும், அங்ஙன மோதுங்காலாண்டைக் கின்றியமையாது வேண்டப்படுவன வொ ருசாரவாண்டாண்டியைபுபற்றி யெடுத்துக்கொண்டோதினமாக லானும், அன்னபிறவாற்றானும் அதுபற்றி யாதுமிழுக்கின்மை யறிக. இருந்தவாற்றானிது விடையோதவறியாது வேறுகருத்து டையனெப்பவைகலென்னுந் தோல்வித்தானத்தின்பாற் படு மாறறிக.

இனியிது தானெடுத்துக்கொண்ட மேற்கோளைக் கைவி ட்டொழிதலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமென்னினு மமையும். அஃதஃதன்று நீயிரோதியவாறே அவ்வியல்பாண்டி ன்மையானெனின்! அற்றன்று. நீயிரெமதாசிரியருரை யோத்து முதலியன நும்மரபுத்திரிபுடையவாகலான் அத்திரி பொழித்து நும்மறுதலைக்கடா மரபே மரபாக்கொண்டுரைத்துமென மேற்

கொண்டனிராகலானும், நீயிரிடை யிட்டொழியு மாண்டாண்டு அத்திரிபொழித்தல் காணப்படாமையானுமென்பது.

164-பக்கம் 3-கூறு இதனுளேனைத் திசைகளிருதன்மைபவாதற்கும் வடக்குத்தன்னொ டேனைத்திசை புணர்தற்கேதுவாதற்கு முரியவேது எடுத்தோதாமையானும் வடக்கொருதன்மைத்தாதற்கும் அஃதோதாமையானும் அதுபோலியாதலறிக. இனி அது மங்கலதிசையாதற்கும் ஏனையவஃதாகாமைக்குந்தெற்குணர்ந்து வடக்குணராகாமைக்கு மின்னுமின்னோரன்ன பிறவற்றிற்கு மிஃதொக்கும். இனியீண்டுப்பாயிர முநூலு மென்று நின்று நிலைபெறுடைத்தாய் நிலவுதற்பொருட்டு மங்கலதிசை முன்னோதப்பட்டதென்றீர். அஃதேல் அஃதோதுவதெற்றுக் கெனக்கடாயினார்க்கு அதுநின்று நிலவுதற்பொருட்டென விடுப்பின் நன்றேயோதினீர். அப்பெற்றித்தாய வம்மங்கலம் நூற்கின்றியமையாது வேண்டப்படுவ தொன்றாகலான் அஃதந்நூலிடையூறு தீர்ந்[illegible]னிது முடிதற்பொருட்டும் அந்நூல்நின்று நிலவுதற்பொருட்டுமாக வந்நூலாக்குவோனாற் செயற்பாலதொன்றேயாம் அஃதிஃதாக ஒருவனாக்கப்படுமந்நூல் நின்று நிலவுதற்பொருட் டோதப்படுமம்மங்கலம்அந்நூலாக்குவோனோதாது பாயிரமாக்குவோ னோதற்குப் பிரமாணமென்னை யொன்னுங்காண்கிலம். நுமக்கு நும்வாய் மொழியும்பிரமாணமாகலான் அஃதஃதாயினுமாகும் போலும். அதுநிற்க.

இனி அம்மங்கலமெழுவாய்க் கண்ணோதல்சிட்டாசாரமென்றீர். அற்றேல் அது நூலாக்குவோ னோதாமைமேலுமந்நூலாக்கி அவ்விருவாய் நிகழ்ந்தபின்னர் அதற்கு நுமதெழுவாயுளதாவதூஉ மொருசிட்டாசாரமேகொல்லோ! அல்லதூஉம் நூலாக்குவோன் எழுவாயொழித்தொழிந்த விடைவாயிறுவாய்கண்மாத்

திரையே யாக்கியொழிப்பப்பின்பாயிரமாக்கு வோன் அதனெழு
வாயாக்கி நிரப்பு மிம்முறையு மொன்றுமே நம்முறைபா யுளது
போலும். அதுகிடக்க. இனி இந்நூல் நுண்பொருளெல்லாமெ
வர்க்குங் கரக்காது வெளிப்படைபற்றி வெளிதின் விளக்கியுப
கரித்தற்பொருட்டு அவதரித்து நின்ற நீயிர், நூலாசிரியர்தாமே
முதற்கணேதற்குரியவம்மங்கலமங்ஙனமோதாதொழித்தருளுத
ற்கேது இஃதென்றறியுமறிவியாது மின்மைமேலும் அஃதோத
வறியீரென்பதனை நும்மாணிந்நூற்பொருளெல்லா மெளிதினுண
ருமாறவாவுமவரெல்லாமுணராதவாறு ஒருநூற்குரிய மங்கலம்
பாயிரத்துள் பாயிரமாக்குவோனேதல் சிட்டாசாரமென்னுமிக்
குழறுபாட்டான் மறைத்தல் நீயிரிந்நூல் நுண்பொருளெல்லாமெ
வர்க்குங்கரக்காது வெளிப்படைபற்றி விளங்குதற்கெழுந்ததிவ்
வுரையென்பதற்கு மாறுகொளக்கூறலாமாறறிக. நீயிரோதிப்போ
ந்தனவெல்லாருமென்னுஞ்சத்தத்துளடங்கி நின்றபானே நீயிர்யாது
மறியாத நுண்பொருளெல்லாமெடுத்துக்கொண் டெல்லார்க்குமெ
ளிதின் விளக்கிக்காட்டினமாகலான் நும்மோத்துசம்பவமாத
லறிக. அதுநிற்க இனியீண்டு நும்முரையோத்துள் நுமது நு
ண்பொருள் பிறவெல்லாமோதாதொழியினுமொழிக. ஆசிரியர்
தாமே ஒருதலைபானேதியருளுதற்குரிய அம்மங்கலமோதாதொ
ழிந்தருளுதற்குரிய நுண்ணிய ஏது இஃதென ஒருதலைபானேத
ற்குரித்தாகவு மஃதோதாதொழித லொருதலைபானிழுக்காதலறி
க. அற்றேலெம்மொப்ப நுமதாசிரியருமஃதோதாதொழிந்தனரா
ன்றே யெனின்! அதுபற்றி யெமக்கியாதுமிழுக்கின்மையறிக,
என்னை! அவர்தா நூலாசிரியர்கருத்தறியாமைமேலுமஃதறிந்தோ
துவாரை யறியாதோதினரெனவும், அறியாதோதினரை யறிந்
தோதினரெனவும் திரியக்கொண்டு முன்னும்பின்னும் நோக்கா
து முறையே அவ்விருசாரரையுமிகழ்ந்தும் புகழ்ந்தும் யாதுமுண்
மையுறியாதுழிதருவோராகலான் இனிமங்கலமொழியுமொன்று

யிவ்வெழுத்துக்களெழுத்தெனப்படுப எனமுதற்கணெடுத்தோதலானு ம்எமக்கு அஃதஃதெனக்கொடுத்தருளுதலானும்ஆசிரியரிருவரும் அஃதுபதேசித்தருளாமையாங்ஙனமென்க. இருந்தவாற்றானிது தனக்குவருந்தோல்வியைப் பிறிதொன்றேதி மறைத்தலென்னுந்தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக. இனி பயனெடுபடாதன வோதலென்னுந் தோல்வித்தானமெனினும மையும். இவையெல்லாம் நமது அறிவாற்றல்பற்றியெடுத்துரை ப்பினன்றே அவையாசங்கைக்கு அவகாசமாகாவாகும். நமது நச்சினார்க்கினியருரை வாக்கியங்களையேயெடுத்து விரித்துக்காட் டீர். அது கிடக்க. இனி பிரகிருதத்துட் போதும்.

200-ம்பக்கம் 2-ம்கூறு இதனுள் வேங்கடமெடுத்தோதி யது செந்தமிழ்ப்பரமாசாரியர் வரைப்பென்னுமவ்விசைபற்றி யென்பதேதலாது. அஃதஃதேதல், அவ்வறுமுகனகத்தியனிரு வர்க்கு முறையே தந்தையுமாசிரியனுமாயவவ்விசைபற்றி அச் சிவபிரான் வரைப்பொன்றெடுத்தோதல் வேண்டுமாகலானென்றீ ர். அற்றேலீண்டொன்று வினவுதும். அதுவருமாறு. நீயிர்தாம் வடதிசையென்றுமோரியல்பிற்றாய்த் தானே தானுமுள்ளிட்ட திசையெல்லா மறிதற்கேதுவாய் நிற்குமொரு பெருமங்கலதிசை யாகலான் இப்பாயிரமும் நூலும் என்றுநின்று நிலவுதற்பொருட்டு அஃதீண்டுமுதற்கணெடுத்தோதப்பட்டதென்றீர். அற்றேல் நீயி ரோதியவாறே அவ்வடதிசையையாக்கிய வாக்கியோனாகலானு மத்திசையை முதற்கண்டு போந்த பிரியவிரதன் தந்தை தந் தையாகலானு மன்னபிறவாற்றானு மாண்டு அப்பக்கடவுளையே யன்றே முதற்கணெடுத்தோதல்வேண்டும்.

அல்லதூஉம் அவன்றந்தை தந்தையையு மங்ஙனமெடு த்தோதலுமாகும். அன்றி அத்தந்தை யாசிரியனையு மாண்டெடுத்

தோதல்வேண்டுமென்றோ? இதற்கு நீயிர் யாது பரிகாரமோது வீர். அதுகிடக்க. தென்றிசையினு மறுமுகக்கடவுள் வரைப்பொன்றோதப்படுமாயின் வடதிசைக்கண் அவ்வேங்கடமவ்வறுமுகக் கடவுள் வரைப்பென்றோதல் பொருந்தும். அங்ஙனமோதப்படாமைபற்றி யதுபொருந்தாமையின் வடக்கண்மலை பல்லவெடுத்தோதின் தெற்கின்கண்ணுமவ்வாறே பொருமலை யெல்லையெடுத்தோதன் முறையாமென்றீர். அற்றேல் ஈண்டு மொன்றுவினவுதும். அதுவருமாறு. வேங்கடந்திருமால் வரைப்பும் குமரிமலைபுமெனக்கொண்டு அவ்வடதிசைமலை நுந்திருமால்வரைப்பாக வெடுத்தோதினீர்க்கு அவ்வாறே தென்றிசைக்கட்பட்ட நுங்குமாரிமலையு மத்திருமால்வரைப்பாக வைத்தோதலை நும்முறையாம். அன்றித்தெற்கட் குமரிபொப்பவடக் கண்ணு மத்திருமால்வரைப்பன்றுப மலையொன்றெடுத்தோதலுமாகும். நும்முறையிதுவேயாம். அற்றிற்றிற்றென்றறியுமறிவொரு சிறிதுமின்றியநீயிர் பிறர் தம்பெருமுறைபறியும் பேரறிவுடையீராமாறி யாங்ஙனம். இங்ஙனமாக நுமது மறுதலைக்கடாக்கள்பற்றி நிகழுமுடம்பாட்டுக்கடாக்களெண்ணிறந்தன. அவையெல்லாமிதுபற்றி இவ்வாறே யாண்டாண்டுய்த்துணர்ந்துகொள்க. அதுகிடக்க,

இனி ஆசிரியரருணகிரியனார் ஆண்டெழுந்தருளிவைகுமறுமுகக்கடவுள் மேலருளிச்செய்ததிருப்பா வென்றுநின்று நிலவுதலானுந் திருத்தணிமான்மிய முதலிய மான்மியங்களுள் அதனை அவன் வரைப்பெனவைத்தோதுதலானும் அல்லதூஉமஃதஃதேயென்றற்கு ஆண்டுக் குகனேரிஎன்னுந்திருவேரியுண்மையே யமையுஞ்சான்றாகலானும் அன்னபிறவாற்றானும் அஃதவன் வரைப்பன்றென்றல் வெறும் போலியாதலறிக.

அற்றேலங்ஙனமவ்வறுமுகக்கடவுளாண்டெழுந்தருளிவைகல் காணாமையின் அஃதவன் வரைப்பென்றல்சாலாதுபோலுமெனின். அற்றேலங்ஙனமே பழமுதிர்சோலைக்கண்ணுமவனெ

ழுந்தருளியவைகல் காணுமையின் அஃதவன் வரைப்பன்றெனக் கோடல்வேண்டும். கோடுமெனின் ஆசிரியர் நக்கீரனார் "பழமுதிர்சோலைமலைகிழவோனே ,, என்றோதலின் அஃதவ்வாசிரியர்க்குடம்பாடன்றாகலான், அது நுமக்குமுடம்பாடன்றாயவாறுபோல இதுவுமாசிரியரருணகிரியாரோதியருளுதலான் அஃதவர்க்குடம்பாடன்மையின் அஃதெமக்கு முடம்பாடன்றென்றொழிக. இன்னும் ஸ்ரீ குற்றாலமுதலிய பிறண்டுமுன்னெழுந்தருளியவைகியோரவ்வைகியவாறேவைகாது பிறழ்ந்தொழிதல் காணப்படுதலானும் அன்னபிறவாற்றானும்அஃதவன் வரைப்பன்றென்றல்போலியாதலறிக. இனி அது பின்னேஞான்றுடையர் பிறழ்ந்தோதினரெனப் பிடித்ததையே பிடித்துமெனின், அற்றேலிங்ஙனமெடுத்தோது நீயிருமப்முன்னேஞான்றுவைகியோதாதிப் பின்னேஞான்று வைகியோதினீராகலினிதுவுமதுவேயாகலானு மன்னபிறவாற்றானும் அது நுமக்கேயிழுக்காய் முடியுமென்றொழிக.

இன்னு மீண்டஃதறுமுகக்கடவுள்வரைப்பாயின் அவ்வாறேயேனையது மவன்வரைப்பாகுக வெனவிங்ஙன நீயிரோதற்கியாது நியதியின்மையானு மதுபற்றி யஃதெல்லார்க்கு மொப்பமுடியாதென்பது பெறப்படாமையானும் யாமீண்டோதியவாற்றானு மன்னபிறவாற்றானும் அஃதவன்வரைப்பென்பதெல்லார்க்கு மொப்பமுடிந்தவாறறிக. இன்னு நீயிர் திருமுருகாற்றுப்படையுள் ஆசிரியர் நக்கீரனார் அவ்வேங்கடமலையை யறுமுகக்கடவுள் வரைப்பெனவைத்தோதாமையின், அஃதவன்வரைப்பென்பதெல்லார்க்கு மொப்பமுடியாதென்றீர். அற்றேலீண்டொன்று நும்மைவினவுதும். அதுவுமிதுவே. திருத்தணி, ஸ்ரீமயிலம், திருச்செங்கோடு, ஸ்ரீமயூரகிரி, ஸ்ரீகழுகுமலை, திருமலைமுதலிய பிறவும் அவ்வாசிரியரானுமெடுத்தோதாமையின் அதுபற்றியவையெல்லாமவன்வரைப்பல்லவாதல்வேண்டும். அவைப

ன்னவாதல் செல்லாமையின் இதனுனுமது திருமுருகாற்றுப்படை யுளோதாமையின் அவன்வரைப்பன்றென்றல் பேசலியாதலறிக. அன்றியும் "வேங்கடகிரி....பன்னிருபுயனெனவும்," "பண்டுதான்வருவேங்கடகிரியையும்பார்த்தா "னெனவும் வருதலின் அவ்வேங்கடமவன் வரைப்பேயாமென்பது, வச்சிரத்தம்பமொப்பநாட்டப்பட்டவாறுகாண்க. அல்லதூஉம் வடக்கின்கண் அறுமுகக்கடவுள் வரைப்பெடுத்தோதினர்க்கவ்வாறேதெற்கின்கண்ணுமவன்வரைப்பொன்றோதல்வேண்டுமென்றீர். அற்றேலதற்குப் பிரமாணமென்னை? ஒன்றுங்காண்கிலம்.

அஃதஃதன்று தமிழியனூற்குப்பாயிரமாக்குவான் புகுந்தார்க்கு அவ்வியைபுபற்றி அத்தமிழியன் முதனூலாசிரியராய அகத்தியனார்க்கதனை யுபதேசித்தருளுமவன் வரைப்பெனவிங்ஙனமோரியைபுகாட்டி யங்ஙனமோதினர்க்குத் தெற்கெல்லையுமவ்வாறே யவ்வியைபுபடவோதல் வேண்டுமென்னு மருத்தாபத்தியே பிரமாணமாலெனின், அற்றேலஃதவ்வாறே யேனைத்திசையிரண்டன்கண்ணு மவன் வரைப்பிரண்டெடுத்துக் கொண்டு அந்நாற்றிசையினு மவ்வியைபு படுமாறோதுகவெனவுமிங்ஙனமிவ்வினுநிகழுமன்றே? அஃதங்ஙனநீயிர்நிகழ்த்தாத தென்னை கொல்லோ அவ்வேனைத்திசை யிரண்டனெல்லையு மீண்டெடுத்தோதப்படாமையானெனின், அற்றேல் "வடதிசைவரம்பின் வடுகுவரம் பாகத்தென்றிசையுள்ளிட்டெஞ்சிய மூன்றும் வரைமருள் புணரியொடுபொருது கிடந்தநா,டென் புழி நான்கெல்லையுமெடுத்தோதப்படுதலின் ஆண்டைக்கு நீயிரோது மமைதியாதூஉம் அல்லதூஉ மவற்றுள் மூன்றோரினமும் ஒன்றுபிறிதோரினமுமாக ஆண்டெடுத்தோதப்படுதலின் ஒருதிசைக்கண்மலை முதலியவற்றுளொன்றெடுத்தோதப்படுமாயின் அதனெதிர்த்திசைக் கண்ணுமவ்வாறே யவ்வினப்பொருளெடுத்தோதல்வேண்டு மென்றீ

ர்க்கு, வடதிசைமருங்கின் வடுகுவரம்பாமா றொப்பவத்தென்றி
சை மருங்கினும் அவ்வடுகுவரம்பென நம்பொருளெடுத்தோதா
தாண்டுப் புணரியெடுத்தோதல் நம்முறையோடுசாலாதன்றே?
அதுபற்றி ஆசிரியர்காக்கைபாடினியர், நம்வெதுண்மொழிப்ப
டாமை அவர்தமதவம்பற்றியோ நமதவம் பற்றியோ அஃதறிகி
லம். அதுகிடக்க, துறக்கமுதலிய வுலகமூன்றன் பொதுமையை
யுணர்த்து முலகசத்தம் நிலமொன்றற்கேயுரியபெயர். அஃதேதனை
யிரண்டற்கும்பெயராகாதென்றோதிய நீயிர்காமாலைக்கண்ணினை
ப்ப எமதாசிரியர்உலகத்து என்பதற்குஉலகத்தின்கண்ணெனவுப
தேசித்தருளிய வதுவும் நீயிரோதிய தொப்ப நிலமெனக்கண்டு
கொண்டீரன்றே. ஆகலானஃதோதற் கேதுவாய வவ்வகநோ
யையுலகத்தென்பதுஉலகத்தின்கண்ணென யாமோதுமிவ்வோத்
துமருந்தானொழித்துக்கொள்ளுக.

அல்லதூஉநீயிர்டையென்பதேழாவதெனமறித்தோதிய
வாறே மேலுரைத்தொழி யாதுநிலத்தெனவதனை நமதுபாவனை
யின்வைத்துக்கொண்டவாறொப்ப எமதாசிரியரு முலகமென்பது
நிலமெனத் தம்முட்பாவித்துக்கொண்டவாறே யொழியாது உல
கத்தின் கண்ணெனவைத்துரைத்தருளினர்போலும். அது பாவ
னைவல்ல நுமக்கேபுலனுமல்லது அதுமாட்டாத வெமக்குப்புலனு
மாறியாங்ஙனம், அல்லதூஉமுயர்ந்தோருயிரல்லரென் றேதுநும
க்குச் சங்கேதமென்பதியாதுமின்மையுமறிக.
அற்றேலஃதொக்குமாயினுந்தம்முளொன்றனையொன்றெதிர்நோ
க்குந் திசையிரண்டனுள் ஒன்றற்கோதியதொப்ப வனையதற்கு
மோதல் வேண்டுமாலெனின் அற்றேலீண்டு நும்மைவினவு
தும். அதுவருமாறு. திசைநான்குந்தம்முளொப்பவெடுத்தோதல்
வேண்டுமன்றே. பிறண்டெல்லாமங்ஙனமோதாமையின் அது
போலியாதலறிக. அஃதேதலஃதஃதாதற்கு நியாமகமென்னையெ

னின்? அஃதேதலஃதிஃதாதற்கு நியாமகமென்னை? யாதுங்காண்கி
லமாகலான் அஃதாசங்கையன்றென்றொழிக.

இன்னும் நும்மோத்துப்போலியாக மேலொருவமையொடு
படுத்துக்காட்டுதும், அஃதாமாறு. ஸ்ரீ சிதம்பரவெல்லை நான்க
னுள் முறையே வடக்கினுங் கிழக்கினும் ஆறுகடலிரண்டுமெல்
லையாகவும் அவ்வாறே அவற்றினெதிர்த்திசையாயதெற்கினுமேற்
கினும் ஆறுகடலென்பன விலவாதல்காண்டுமன்றே அஃதொப்
ப ஈண்டும் அஃதியாது நியதமன்றெனக்கொள்க. அஃதேல் ஸ்ரீசி
தம்பர்திசை தெற்கின்கண்ணுமாறுள்தாகலான் அந்நியதிபிழா
தாலெனின் அற்றன்று அத்திசையெல்லை நீயிரோதியவாறன்று
கலாலென்பது. இனி அஃதங்ஙனங்கோடுமேனு மேனை மேற்றி
சையின்கண் அந்நியதியின்றாப்ப் பிறழ்ந்தொழிதலின் அதுவும்
போலியாதலறிக.

அற்றேலஃதங்ஙனமாயினும் யாமீண்டெடுத்துக்கொண்
டது ஒருபாடைவழக்கிற்குரியதோரெல்லையாகலான் அதற்கிங்ங
னமொருநகரெல்லையெடுத்துக்காட்டுதல்செல்லாதாலெனின் அற்
றன்று. எல்லைப்பொருளென்பதியாண்டு மொருநிகரவாகலான்
செல்லாமையாங்ஙனமென்றொழிக. இனி அவைதம்முள்வே
றெனக்கோடுமேனு மேனைத்தெலுங்குமுதலிய பாடை வழங்கு
மெல்லைகட்கு அந்நியதி யாதுங்காணப்படாமையின் அதனானும்
அதுபோலியாதலறிக. அஃதேலவை சிறுபாடைமொழியாகலா
ன் அவற்றெல்லையிப்பெரும் பாடை வழக்கெல்லையோடொவ்வாது
போலுமெனின்? அற்றேல் அங்ஙனம்பெருமைசிறுமைபற்றியோ
தின் மேலுமங்ஙனம் வரம்பின்றியோடுமாகலானும் ஒருபுடை
யொப்புக்கொள்ளாக்கால் பொருளுவமையென்பனவிலவாய்முடி
யுமாகலானும் அல்லதூஉம் பெரும்பாடையிரண்டனுளொன்றாய

ள மொழியின்றெற்குவடக்கெல்லை வேங்கடமிமயமென்றேதட்டாமையானுமினி அஃதங்ஙனமாயினுமதன் கிழக்குமேற்கெல்லையங்ஙனமாகாமையானு மன்னபிறவாற்றானு மஃதெல்லார்க்குமொவ்வாதென்பது போலியாமொழிந்தவாறுகாண்க.
இருந்தவாற்றானிதுவுங்காலெனடுத்துக்கொண்டமேற் கோளைச்சாதிக்கமாட்டாததற்குக்கேடுளதாமாறேதலெலன்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

202-ம்பக்கம் 2-வது கூறு இதனால் "ஆசிரியரும்பிறரும் அகவெல்லையெனயாண்டு மெடுத்தோதாமையின் அங்ஙனமீரெல்லை கோடல் சாலாதென," நீயிர் தாமேமேலைக் கூற்றினுளோதிப்போந்ததனைமறந்து மறித்தும் "தென்மதுரை அகவெல்லையாகவும் அதனையங்ஙனமகவெல்லையுட்படுத்தாது புறவெல்லையுட் படுத்தல் சாலாதென.," அதனை யுடம்பட்டோதல் போலியாதலறிக. இன்னுமீண்டிரண்டாங் கூற்றுள்ளும் மேலைப்பாவிரண்டாங் கூற்றுள்ளும் மேனுழியெல்லாங்குமரி,மலையே, ஆறன்று. என்றே தன் மேனுமீண்டை மூன்றாங்கூற்றுள்ளு முன் வரும்பலவேறு கூறுகளினும் அதுமலையேயென்றென் றேதலைமறந்து" குமரியாற்றுக்குமிடையே," யெனவும் "குமரியாற்றின் வடபாலெனவு மிங்ஙனமோது முகத்தாற் குமரி,மலை யன்று ஆறேயென," நீயிருமுடம்பட்டோதினீரன்றே. அதனானீயிர் ஞானிகளொப்பீரெனவேகோடும்.என்னே? கொன் புனை, பித்தர், பாலர், பிசாசர் தங்கொள்கைபுடையீராகலானென்பது.

அஃதேதலன்றெனக்குமரியினுமக்குமரியாற்றின்றென்றிசையினு மொரு சார்த்தேசந் தமிழ்வழக்குடைய வாயுள வாதல் நூல்களுட் கேட்கப்படுதலின் ஆண்டவ்வியாத்தியாலோவெனின்! அற்றேல அவ்வாறே வேங்கடமலையின் வடதிசையினு மொருசார்த்தேசஞ்செந்தமிழ்வழக்குடைய வாதல் ஆண்டுக்கேட்கப்படுதலின் அதுவுமாண்டவ்வியாத்தியாமன்றே; நீயிரஃதிங்ஙனமாமெனவினவாதொழிந்ததென்னைகொல்லோ? அதுநீயிரறியகில்லீர். அன்றி

அறிந்தீராயின் ஆண்டுமிவ்வாறே வினவாது விடுவிராகவே யென் றொழிக. இருந்தவாற்றானிது படுமென்றுபடாதன வேதுகொலென் னுந் தொல்வித்தானத்தின்பாற்படுமாறறிக. அற்றேல் அவற்றிற்கமை தி யாமாறென்னையெனின்? அதுவழிபடுமாற்றான் வழிப்[illegible] னினிதுவிளங்குமென்பது. இனிப்பொன்முகலியாற்றின்காறுந்த மிழ்வழக்குடைமை அத்தமிழியல் புள்ளவாறுணர்ந்தார்வாய்க் கேட்டுணர்ந்துகொள்க. தென்றிருமலையாண்டுண்மையானுமன்ன பிறவாற்றானு மஃதற்றேயாதல் தெற்றெனவறிக. அற்றேலவை செந்தமிழ்வழக்குடைப வல்லவென்றுமோவெனின்? என்னும். கா ன்னே! நீயிரோதுமந்நாடேழுமன்னவெனப்பட்டு அருநுபக்கேயிழு க்காய்முடிபுமாகலானென்பது. இனிப்பேரிதிகாசப்பெரு நூலுள் ,,தென்றிருமலைகுகப்பிரதிஷ்டிதமாய சேஷாசலத்திலுந்தரதிசை வாயுளதென்றோதுமோத்தானும் ''சேஷாசலங் குமாரனையுடை த்து,, என்றோதுமாற்றானும் அன்னபிறவாற்றானும் அவ்வேங்கட ம் அவன்வரைப் பேயாமென்பது தெற்றெனவறிக. பிறவுமன்ன.

3-வது சூ. இதனுள் குமரி, யாறன்று, மலையே யென்பது காட்டுதற்பொருட் டெடுத்துக்காட்டிய நுமதெடுத்துக்காட்டுள் அதனை மலையெனக் கிளந்தோதாமையானும் ஆசிரியரெல்லார்க்கு மதுமலையன்று ஆறேயென்பதுடம்பாடாகலானும் யாமேற்காட் டியவாறு பற்றிநுமக்குமதுவேயுடம்பாடாகலானும் இன்னுமது மலையன்றாறேயாதல் நுமக்குமுடம்பாடென்பது முன்னருங்காட் டப்படுமாகலானும் அன்னபிறவாற்றானும் அது போலியென்ப தினிதுணர்ந்து கொள்க. ஆசிரியர் இளங்கோவடிகட்கஃதாறன் றுமலையென்பது கருத்தாயின் ''குமரிப்பொருப்புங்கொடுங் கடல் கொள்ள,, என இங்ஙனங்கிளந்தெடுத்தோதுவர் அங்ஙனமோதா மையே அவர்கருத்து அஃதன்மைக்கமையுஞ் சான்றாகலானும் யாண்டும்பயின்றுவரு மப்பியாசலிங்கத்தினை யபலாவனஞ்செய்தி ங்ஙனம்வழிமேதயீர்த்தோதலாற் போதும்பயன்யாது மின்மையா னும் அதுபோலியாதலொருதலையா மென்றொழிக. குமரிக்கோ டென்புழிக்கோடு, மலை. மலைமுடிசால்ல; கரையென்பதேபொருளா

கக்கொள்க. கடலாற்றலின் மிக்கபெருமை இஃதெனத் தேற்று ளார் பன்மலைபடுக்கத்தான் வலிபக்கோடுலவாய வாறேனைய மேல லாது பலவேறுபன்மலையடுக்கத்தான் வலிபகுமரியாற்றின் கரையை யுமுதுகைக்கொண்ட தென்னாடுகருத்தாற்பன்மலையடுக்கத்துக்கும ரிக்கோடுங்கொடுங்கடல்கொள்ள,, வென்றாரென்பது இதனானும் அஃதாறேமலையன்றென்பதினிது விளங்கும். இதனானே விருத் திரன்வாய்மொழி யொப்பதும்வாய்மொழியேநும்மொழிமுரணா றுக்கும் பெரும்படையாயவாறுகாண்க. அற்றேலற்றாக, குமரி மலையுங் குமரியாறுந்தம்முள் வேறென்றோமோவெனின்! என்னும் சன்னே? "அருப்பின மலைமேன் குரும்பைகள் காட்டவணியெயி றலர் கதிர்முத்தந் திருந்திடக்காட்ட வொல்குபு நடக்குங்குமரி யாந்தீம்புனலிதியும்,,என்றற்றொடக்கத்துள் அஃதாறெனக்கிளந் தோதப்படுதலானு மஃதொப்பயாண்டுமதுமலையெனக்கிளந்தோ தப்படாமையானும் ஆசிரியர் எல்லார்க்குமதுவே கருத்தாகலானு ம் அதனல்வேறு விடுக்குமாறின்மையானுமென்பது. இன்னுமது மலையன்று. ஆறேயெனப்புறநானூற்றுள் "குமரியம்பெருந்துறை யயிரைமாந்தி,, யென்றோதப்படுதன்மேலும்மணிமேகலையுள் "மா தவமுனிவன் மலைவலங்கொண்டு குமரியம் பெருந்துறைகொள் கையிற்படிந்து;,எனவும் "குமரித்துறை,; யெனவும்ஆண்டாண்டு வருதலானுங்காந்தத்துள் "குமரியாடப்போந்தன,,மென்றோதுமா ற்றானும் அன்னபிறவாற்றானும் அதுமலையன்று ஆறேயென்பது தெற்றெனவறிக. பிறவுமன்ன.

இருந்தவாற்றானிது மேற்கோளை விட்டொழிதலென்னுந்தோல்வி த்தானத்தின் பாற்படுமாறறிக.

204 பக்கம் 2-கூறு இதனுளாசிரிய ரிளம்பூரணரும் ஆசிரியர் நச்சினார்க்கினியருமிடர்ப்படாதுரைத்து வைத்த வவ்வுரைகளை பெமதாசிரியர் மன்பின்னோக்கி புணராதுவாளா இழுக்கோதினரென இவ்வா றுத வறியாது" வாளாதிழுக்கோதி னரென வாய்கூசாது புறன்பழித்தீர். அற்றேலீண்டு வினவுதும். அதுவருமாறு: இதனானே பவுருரை பெல்லாமொருநிகராகவே

யிடர்ப்படாதுரைத்தனவே யாமென்பது நுங்கருக்காதல் பெறப்பட்டது. படவே அவற்றுள் எமதாசிரியர் நமதுவாளாதாய விழுக்கோதுமொருசார் மாத்திரையே யிடர்ப்படாதுரைத்தனவாக, நீயிரவருரைபற்றி யிழுக்கோதுமாண்டாண் டெல்லாமவ ரிடர்ப்பட்டுரைத்தனவாமா றென்னைகொல்லோ? இருந்தவாற்றானிது தன்னுணுக்கிற்கோதுமிழுக்கைப்பரிகரிப்பா தாம்பட்டுப்பிறரோத் திற்கிழுக்கோதலென்னுந்தொல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

அஃதேல் அவருரைத்தன வெல்லாமெஞ்சாதிடர்ப் படாதுரைத்தனவென்பது எங்கருத்தன்றாலெனின்? அற்றன்று, நீயிர், அவை, இவை, யிவையெனவேறு வேறெடுத்தோதாமையானென்பது. அதுநிற்க! இனிநீயிரிடர்ப்படாதுரைத்தனவெல்லாமறியுமறிவுடையீராதன்மேலு மவ்வாறுரைத்தற்கு வல்லீரென்பதூஉ மூன்றொடு பின்னுக்கு மடங்கோக்குடையீரென்பதூஉ முறையே வடவேங்கடந்தென்குமரியென்பதற் கெமதாசிரியருரைத்தருளியவுரையோத்துணர்ந்தாதுமோத்தானுங்குமரி 'யாறன்று மலை, மலையன்று, ஆறென', ஆண்டாண்டோதுமோத்தானுங் கண்டுகொண்டு அவையெல்லாம் போலியாதல் சாதித்தாம். அஃதீண்டு மொருசிறிதுசாதிக்குதும். அஃதாமாறு எமதாசிரியர் ஆண்டுத் 'தனித்துநின்று சுட்டுப்பொருளுணர்த்தலாற்றுதவகரச் சுட்டென அருளிச்செய்தது அச்சிதம்பரம் அவ்விபானையென்றித் தொடக்கத்தான்மொழிகளோடியைந்து நின்று தன்சுட்டுப்பொருளுணர்த்தலாற்று மல்லது அங்ஙனமவற்றோடியையாது அ; அவ், எனத்தனித்துநின்று சுட்டுப்பொருளுணர்த்தலாற்றாது அவ்வகரச்சுட்டென்றவாறு. இவ்வுண்மைப்பொருளுணருமுணர்வியாது மின்றி ஆண்டுத்தனித்துநின்று பொருளுணர்த்தலாற்றுதவகரச் சுட்டென்னு மச்சுட்டாவது, அவ்வெனப் பிறவெழுத்துக்களோ டியையுமதுபோலாது, அ, வெனத்தனித்துநின்ற வவ்வகரச் சுட்டேயாம். அங்ஙனமன்றி ஈண்டவ்வென்பதுவகரமெய்யோடியைந்து தனியாதுஈரெழுத்தாய் நிற்றலின் அங்ஙனமாய அவ்வகரஞ் சுட்டுப்பொருளுணர்த்தலாற்றும் போதுமெனத் திரியத்தொண்டு

ர், இங்ஙனமெளிதினுணருமாறு கத்தியவடிவுபற்றியெழுந்துநின் றவுரையோத்தியல் பிஃதென அவ்வுண்மையுணரமாட்டாத நீயிர் தாமோபத்திய வடிவு பற்றி அரிதினுணருமாறெழுந்து நின்றநூற்பொருளெல்லா முள்ளவாறுணரவல்லீர் என்றொழிக. அஃதிங்ஙனமாக வெமதாசிரியர் ஆண்டாயி டை யென்பதற்கிடர்ப்படா துரைத்தருளிய அவ்வுரை யோத்தியல்பு முன்னொடுபின்மலைவற நோக்குமங்நோக்கியாது மின்றுதன்மேலும் வாக்கியம் பற்றியாதுமிடர்ப்படா துரைத்த ற்குரித்தாய்க் கிடந்தஅவ்வெல்லையையாக்கிக்கோடற்பொருட்டுநீ யி "ராயிடை,, "யாயிருமுத,,லெனத்தம்முளொப்பநின்றவவ்விர ண்டனுள் ஆயிரு முதலென்பதனை அ, இருமுதலெனக் கண்ணழி த்தலொப்ப ஆயிடையென்பதனையும் அ, இடையெனக்கண்ண ழிவு செய்யாது அம்முறைமாறி அவ் இடையெனக் கண்ணழித் துக்கொண்டு மொழிமுதற்கணின்றன்றித்தன்பொருளுணர்த்த லாற்றாதசுட்டெழுத்தை மேன்மொழி யிறுவாயோடொட்டிவை த்து அஃதம்மொழி யிறுதியினு நின்று தஞ்சுட்டுப்பொருளுண ர்த்துமெனத்திரியக்கோடன் மேலும் அஃதாகு பெயருமாமென மயங்கிமேனின்றவற்றைச் செவ்வெண்ணாக்கற்பொருட்டு அவை அவ்வென்னுங்கொகுகிப்பேறு பெறுமாறமைத்து வைத்துஅவ் வுரையுடையார் தனைச் சுட்டெனக்கொண்டிலர்; அவ்அவ்வென்ப தனைப்பெயரெனக்கொண்டனர்;ஆகலான் அஃதாகுபெய ராதற்கி யாதுமிழுக்கின்றெனப்பரிகாரமுமெடுத்தோதியபின்னுமின்னோர ன்ன பலவேறடைகள் கூட்டி அவ்வுரை யுடையர் ஆண்டுப் பட் டவிடர்ப்பாட்டினும் பேரிடர்ப்பாடுற்று இங்ஙனமுனைத்துக்கோ டற்குவல்லநீயிர், அஃதெமதாசிரியர் வாளாதிழுக்கோதினரென விங்ஙனம் வாளாவிழுக்குரைத்தற்கு வல்லீர் தாமென்றொழிக. இடர்ப்படாதுரைத்தவற்றை யிடர்ப்பட்டுரைத்ததென்றார். முன் னொடுபின் மலைவறநோக்கிலர். வாளாதிழுக்குரைத்தாரென விங் ஙனமெளிதினோதி போதியவாறுற்றுமையிற் "சொல்லுதல்யார்க் குமெளிய வரியவாஞ் சொல்லிய வண்ணஞ்செயல்,,என்னுஞ்சுரு திக்கிலக்காய நும்மியல்பு சாலவிபக்கற்பாலதேயாம். இருந்தவா

ருனிது தோல்வித்தானமெய்தியானை யஃதெய்தாதா யெனவும் தோல்வித்தானமெய்தாதானை யஃதெய்தினனெனவும் ஓதலென்னுந்தோல்வித்தானங்களின் பாற்படுமாறறிக.

இனி, நீயிரஃதியாதும் பயன்படாதென்றீர். அற்றேலஃதங்ஙனம் பயன்படாதொழிய நீயிர் பயன்படுமாறிடர்ப் படாதுரைத்ததியாங்ஙனமென வொருசிறிதாயு முறையானுய்த்துதும். நுமது கண்ணழிவு,காண்டிகைவிரி, யென்றவுரைத்தலென்னு மூன்றினு முன்னெடுபின் மலைவறுமாறு நோக்குமு றையானேக்குதும். அஃதாமாறு: முன்னர் நீயிரேழன்றுரைகை யென்னுமத்தொகையை மேலேகண்ணழிவுள் விரிக்குங்கால் வடக்கண்வேங்கடந் தெற்கட் குமரியென விரித்தல்வேண்டுமல்லது வடக்கின்கண் தெற்கின்கண்ணென இன்னிசைத் தோதல் போலியாதன் மேலுநுமதுகாண்டிகைவிரியுள் அவ், இன்விரியியல் பிஃதெனவோதாமையும் அதற்கினியோதுமமைதியும் போலியாதல் தெற்றென வறிக.

வடக்கண்தெற்கண்ணென இங்ஙனம்எடுத்தலோசைபட வைத்துவிடர்ப்படாதோதுவனவுளவாகவும்அங்ஙனமோதாதுவடக்கின்கண் தெற்கின் கண்ணென நலிதலோசை படுமாறுவைத்திடர்ப்பட்டோதன்மேலும், மேலின்விரித்தோதியதனைநோக்கி முன்னர்இன்சாரியை யென்றுதலோதுநோக்கின்மையினிவை நமக்குப் பயனெடுபடுவனவேதாமோ?''ஆகிய,,வென்பதுமாது.நீயிரினியாதல்முன்னெடுபின்மலைவறநோக்கி யாமேலோதியவாற்றான் முன்பின்மலைவற நோக்கு நோக்குடையாரை அந்நோக்கியாதுமின்றி அவர்வாளா திழுக்கோதினரென வாளாவிழுக்கோதும் போலியோத்தொழிந்துய்க.

இன்னு நீயிர் வேங்கடங்குமரி யிரண்டு மிருவாய்க்கண் அவ்வென்னுந்தொகுதி பெற்று நின்றனவென்றீர்! அற்றேல்அவையெழுவாயுட்பெற்று நின்றதென்னை கொல்லோ? அது நியத

மண்றெனின்! இது நியதமாமாறியாங்ஙனம்? பிறிதோரடியாய்ப் பிரிந்து தனித்துநிற்கும் ஆயிடையென்பதனுள் இடையென்பதனோடியைந்துபிரியாததன் முன்னிற்பின்னன்றித் தன்பொருளுணர்த்தலாற்றாத அகரச்சுட்டுப் பிரிந்து தனித்து மேல்வாக்கியத்திறுவாய்க்கண்ணியைந்து நின்றுசுட்டுப்பொருளுணர்த்துமாறெவ்வாறுஞ் இனி அவ்வாறே பிறிதோரடியாய்ப் பிரிந்துவேறுநின்றமேலவைகாமிகனை யிறுதிக்கட் பெறுமாறியாங்ஙனம்? குமரியிறுதி பெறுமாயினும் வேங்கட மிறுதி பெறுமாறியாண்டையது? அல்லதூஉஞ்சுட்டெழுத்துமொழி முதற்கண்ணியைந்துநின்றுதன்பொருளுணர்த்துவதல்லது மொழியிறுதிக்கண்ணியைந்து நின்றுதன்பொருளுணர்த்து மென்பதற்கெடுத்தோத்தென்னை? இனி அஃதங்ஙன மிறுவாயுளியைந்து நின்றுசுட்டுப் பொருளுணர்த்துமாயின் அவ்வாறே யிடைவாயினு மியைந்து நின்றுசுட்டுப் பொருளுணர்த்தல்வேண்டும். அற்றேலதற்கெடுத்தோத்தென்னை? ஒன்றுங்காண்கிலம். இங்ஙனமாகலான் அவையதனைப் பெறுமாறும்மொழியிறுதியுட் சுட்டெழுத்தியைந்து நின்று சுட்டுப்பொருளுணர்த்துமாறும் வெறும்போலியாதலறிக. இங்ஙனமாகச்சுட்டெழுத்து மொழியிறுவாய்ப்பட்டு நின்றுபொருளுணர்த்துமெனக்கொண்ட நுஞ்சூழ்ச்சி யிருந்தவாறழகிதேயாம்! அஃதிங்ஙனமாகலான் நீயிரிடர்ப்பாட்டினு மிடர்ப்பாடுற்று இங்ஙன முரைத்தலாற்போதும் பயன்யாது மின்மையறிக. இனி நீயிர் செவ்வெண்ணுதல்படைத்துக்கோடற் பொருட்டு இடுக்குறப்புகுத்தி யிடர்ப்பட்டுரைத்துவைத்த அவ்வென்னுந்தொகுதி வேறு, செவ்வெண்ணேற்குமத்தொகைவேறென்பது இயனூல்கற்குஞ்சிறுமகார்வாய்க்கேட்டுத்தெளிந்துகொள்க. இங்ஙனஞ் சுட்டெழுத்துமொழியிறுதியினு நின்று சுட்டுப்பொருளுணர்த்துமென நீயிரோதுமதுவே நீயிராண்டோதுவனவெல்லாம் போலியாதற்கமையுஞ் சான்றாதலறிக. அதுகிடக்க.

இனி, அவ்வென்பது ஆவ் என நீண்டு யகரமெய்பெற்று இடையென்பதனோடியைந்து நிற்குமென்றீர், அங்ஙனமாயின்

அஃதாண்டு ஆவ்யிடைட்,, டென நிற்ப தல்லது ஆயிடையெனநிற்
குமாறியாங்ஙனம் "புணர்நிலையுமுணராத சிவஞானமுனிவருண
ராமையுணர்ந்தநமக்கிப்புணர்நிலைமை,யாமுணர்நிலைமையா? ஆக
லான் அதுவும் வெறும்போலியாதல் தெற்றெனவறிக. இனி
இச்செய்கையில்லையஃதென்பது இந் நூல்கற்குஞ் சிறுவர்வாய்க்
கேட்டுத்தெளிந்துகொள்ளுக. ஆண்டுவகரங்கெட்டதென்றுதலெ
டுத்தோதாது "முதல் நீண்டு,,என்றோதியொழிதலின் அதுகெ
டாதுநிற்ப முதல் நீண்டதென்பதூஉம் வகரமெய்ப்பின்பின் யகர
மெய்பெறுமென்பதூஉம் நம்கருத்தாதல் பெறப்பட்டது. இனி
அஃதோதாமை மறவியாமென்றித்தொடக்கத்தானிங்ஙனமிடர்ப்
பட்டு அமைதிபோதலியாதுஞ்சாலாமையின்நீயிரிங்ஙனமிடர்ப்ப
ட்டுரைப்பனவிவை யிவையெனவவைகளையெல்லாமெஞ்சாதெடு
த்தோதலெமக்காகாமையின் அனைத்து மதுவேயாமென்றொழிக.
அதுநிற்க.

இனி, ஆயிடையென்புழிப் படுஞ்செய்கை "நீடவருக,,
லென்புழிக் "கிளந்தவல்ல,, என்பதன்பாற்படுமென்றீர். அற்றே
லஃதாண்டுக்கிளந்தவன்மையாமாறி யாங்ஙனம்? நீடவருதல் என்
பதனுட்கிளவாமை நுமதுநீடலா? அன்றி நுமதுவகரமேயா? அஃ
தஃதன்று. ஆண்டு நீடவருதலென்றது உயிர் மயங்கியலுள் அக
ரவுயிர்க்கு மாத்திரையே நீட்டமெடுத்தோதுதலானும் இது வ
கரவீறுதலானும் அச்செய்கைபெறுவதென்றுமேலோவெனின்? அற்
றன்று. புள்ளிமயங்கியலுள் "சுட்டுமுதலாகிய வகரவிறுதி முற்
பட்டக்கிளந்த வுருபியல் நிலையு,, மெனவும் "வேற்றுமைப்பவழி
யாய்தமாகும்மெல்லெழுத்தியையினவ்வெழுத்தாகும் "எனவை,,
புணரியல்பெனமொழிப,, எனவும் வரையறுத்துவைத்து அத
ற்குரியசெய்கையெல்லாமெஞ்சாது காட்டியருளுதலின் அதுகிள
ந்தொழிந்ததுவேயன்றி கிளந்தவல்லவாமாறியாங்ஙனம்? உயிர்ம
யங்கியலுட் சுட்டுநீட்சி யுபதேசித்தருளியவாசிரியர் புள்ளிமயங்
கியலுட் "சுட்டுமுதலாகிய வகரவிறுதிச்,, செய்கையெல்லாமே
லுபதேசித்துப்போந்த சூத்திரங்களா லுபதேசித்தருளுங்கால்

வகரவிறுதிச்சுட்டு நீளுமாயின் அதுவுமாண்டுஒருங்குவைத்துப
தேசித்தருளுவரல்லது ஒழிந்தருளுவாரல்லர். "உயிர்முன்வரினு
மாயியறிரியா,, எனவுபதேசித்தருளியொழிதலின் அது "கிளந்த
தே,, யல்லதுகிளவாததன்றென்றொழிக. அஃதேல்வகரவிறுதியெ
ன்பதனுள் வகரங்கிளந்தவல்லவாலோவெனின்? அற்றன்று. நுமது
அவ்வென்னுமம்மொழியுள் நீண்டது அகரச்சுட்டேயல்லதுவே
றன்மையின் அவ்வகரச்சுட்டுநீட்சி "நீடவருதல் செய்யுளுளுரி
த்தே,, யெனவைத்து மேலுபதேசித் தொழிந்தனராகலானும்,
அங்ஙனமுபதேசித்தொழிந்ததனை மறித்தெடுத்தோதல் புனரு
த்தியாகலானும்" எனவைவரினு மவ்வியறிரியா,, வென்புழி அவ்
வியல் பென்பதனை ஆயியறிரியா வென்றாற்போல ஆண்டுமவ்வி
டையென்பதே ஆயிடையென்றுபதாகலானும் கோவில் கோயிலெ
ன்றாற்போலஆண்டு நீண்டுநின்றஆவிடையென்பதே ஆயிடையெ
ன அங்ஙன மொத்துநின்றதாகலானும், அவ்வாறே "அவ்வறு
மூன்றுமென்பது ஆவறுமூன்றுமுளப்பட,, வென்றித் தொட
க்கத்தான் வருதல்காணப்படுதலானும், இன்னுமது கிளந்தவல்ல
வாயின் "அன்றியனைத்துந்தொழிற்பெயர் "என்றாற்போல ஒ
ரோவழிச் சிறுவரவிற்றாய் நிகழுமல்லது" ஆயிருகிளவி,, யென்றித்
தொடக்கத்தான் யாண்டும் பெருவரவிற்றாகாதாகலானும், தொ
ல்லாசிரியரெல்லாரும் அங்ஙனங்கோடல் காணப்படாமையானும்,
அவரிங்ஙனங்கோடலே காணப்படுதலானும், அன்ன பிறவாற்
றானும் அது கிளந்தவல்லவென்றல் வெறும்போலி யாதலறிக.
இனிஅரி அரோகம் பாவனை யுடைமையின் அவ்வரியோடியையு
மியைபுடைய வவ்வரற்காய் நிற்பின் ஆகுபெயராதலேமுறை.
அஃதொப்ப ஆண்டவ்வென்பது ஆகுபெயராயின் அத
னோடு நிலத்துக்குரிய தோரியைபென்னை? இனி யிங்ஙனமாக
வோரியைபின்றியும் அஃதாகுபெயராயின் அற்றேல் அங்ஙன
மோடியைபில்லாத அந்நிலத்தையுணர்த்துமாறொப்ப நீர்முதலி
யபிறவற்றையுமுணர்த்தல்வேண்டும். ஆகலான் இங்ஙனமியைபி
ன்றி ஆகுபெயர் கோடற்கு நீயிரோர்வழிகாட்டி யாயினீர். அஃ
தஃதன்று" ஒப்பில் வழியாற்பிறிது பொருள்சுட்டலுமப்பண்பி

னவே,, யென்பதோத்தாகலான் அங்ஙனமியை பின்றியு மாமா லெனின்? அற்றன்று. ஆகுபெயர் தம்பொருள் வரிற் றம்மொடு சிவணலாய வவ்வொற்றுமை யியைபின்றியமையாது இனியஃதி ல்வழிவேற்றுமை யியைபாதல் வேண்டும். அஃதெவ்வாற்றானும் இயைபின்றி யமையாது வேண்டப்படுவ தொருதலை யென்பது தேற்றியருளுவார் ' லப்பில் வழியாற் பிறிதுபொருள்சுட்டலு., மெனவைத்துப்பதேசித்தருளின ராகலானென்பது. இனிஅதுமே ல்வாக்கியத்தோடொட்டி நின்றாகுபெய ராமெனின்? மொழி யிறுதிக்கட் சுட்டியைந்து நின்று தம்பொருளுணர்த்தற்கெடுத் தோத்தின்மைமேற்காட்டின மாகலானும், இனி அங்ஙனமெனக் கோடுமேனும் அஃதன்மொழித்தொகை யெனப்படுமல்லதுஆ குபெயராகாமையின் நீயிர்சிறிது சிறிதாயெமதாசிரியர் நெறியே நெறியாப் புக்குநின்றீராகலின் நுமதுமதம் போலியாய்க்கை விடப்படுதலும் எமதுமதமே உண்மையாய் நிலைபேறுடைத்தா தலுங்காண்க. இனி அடையடுத்த வாகுபெயரென்னுமித் தொ டக்கத்துப் போலிகளீண்டைக்கியாது மேலாமை மெய்கண்டபா டிபத்துட் காட்டினா மாண்டுக்காண்க.

இனிநீயிர் கொண்டமுறைபற்றியும் அஃதாகுபெயரெனக் கொண்டு அஃதேனை யாகுபெயரியல் புடைத்தோ? அன்றோ?வெ னவொருசிறிதாயு முறையானுய்க்குதும். அதுவருமாறு. முதல்வ னுக்குரிய பெயராய் சிதம்பரம் இயைவுபற்றி யவ்வூர்க்காயின் அஃதாண்டுத்தன்பொருளிற் றீர்ந்து அதுவா யொழிந்துநிற்கும ன்றே? நிற்குமாறு போலஈண்டதுவும் அவ்வியற்பெயர்ப்பொரு ளொழிந்து நிற்றல் வேண்டுமன்றோ? அங்ஙனமாயின் வேங்க டமலையுங் குமரிமலையுமெல்லையாகவுடைய நிலமெனப்பட்டு அச்சு ட்டுப்பொருள் விட்டு யாமோதியவாறே அன்மொழித் தொகை யாய் முடியுமல்லது ஆகுபெயரா மென்பது போலியாதலறிக. அல்லதூஉமாகுபெயராவது பிறமொழியோடியையாது தனித்து நின்று அங்நின்றுங்கே பிறிதொன்றற்காவதல்லது தனித்துநிற் றலாற்றாது மேல்வாய்க்கியத்திறுவாயைச் சார்ந்து நின்று ஆகிய

வவ்விரண்டனையு மெல்லையாகவுடைய நிலமென்றாதலும்போலி
யாதலறிக. இன்னுமஃதாகு பெயராயின் அவ்வென்னு மம்
மொழியே யன்றோ ஆண்டாதலை நின்றாற்றல் வேண்டும்? அங்ங
னமன்றி அஃதாகிய வென்பதனை யின்றியமையாதாமாறும் பிற
வும் போலியாதலறிக நீயிராண்டெல்லை யென்பதேநிலமென்ப
தறியுமறிவியாதுமின்றி யெல்லை வேறு, நிலம் வேறெனத் திரிய
க்கோடன் மேலுநுமதாகுபெயருள் எல்லையாக்வுடையநிலமெ
னக்காணப்படுதலான் அவற்றுளஃதாகுபெயரா னுணர்த்தியது
யாதனை? இரண்டனையு முணர்த்திற் றெனின்நீயிர் நிலத்தை யு
ணர்த்தி நின்ற தென்றமைபற்றி அஃதாண்டு நுமதெல்லையையு
ணர்த்திய தன்மையினுண்டு நுமதவ்வெல்லையை யுணர்த்திநின்
றது வேறியாது? நுமதெல்லை வேறு, நிலம்வேறு ஆகலான் அஃ
தவ்விரண்டனையு முணர்த்துமாறி யாங்ஙனம்? இனி அஃதிரும
டியாகு பெயராமெனின்? அங்ஙன மெடுத்தோதாமையானுமி
னியெடுத்தோதலேலாமையானு மல்லதூஉ மஃதாகுபெயராதற்
கேலாதென்றோதின மாகலானும் அதுவும் போலியாதலறிக. இ
ங்ஙனமாய விடர்ப்பாடு பலவேறாய்த் தொல்லுரை யெல்லாம்போ
லியாதல் நோக்கியன்றே யெமதாசிரியர் அத்தொல்லுரை யுடை
யரெல்லாரு மிங்ஙனம் இடர்ப்பட்டொழிதல் பற்றியெல்லையெடு
த்தோதுமாறெழுந்துங் கிளந்தோதப்படாதாய் ஆண்டின்றி ய
மையாது வேண்டப்பட்டதாய வதனை அம்மேல் வாக்கியம் பற்
றியாதுமிடர்ப்படா துரைத்தருளியதூஉ மென்பது. இனி ஆண்
டெமதாசிரியரெல்லைவேறு நிலம்வேறெனக்கொண்டருளின ரெ
னின்! கண்ணழிவுள்ளும் எல்லையாகவுடைய நிலமெனவெடுத்து
பதேசித்தருளுவர். அங்ஙனமன்றி ஆண்டெல்லை யொன்றனையே
யெடுத்துபதேசித்தருளியவாறே மறித்தெடுத்துக்கொண்டினிது
விளக்கியருளுவாராய் எல்லையாகவுடைய நிலத்தை யுணர்த்தின
வென்னு மப்புனருபதேசத் திருமொழியுள் இங்ஙனம் அம்மொ
ழிதலைப் பெய்தோதியருளிய தெற்றுக்கென யாதுநோக்காது நீயி
ராண்டவ்வெல்லையு நிலமுந்தம்முளொன்றனை யொன்றின்றியமை
யாது போலுமென மயங்கி ஈண்டுந்தொல்லுரையுடையர் போலா

துநும்போலிவேறுரைக்குங்கருத் துடையீராயினும், வேறுவிடுக்குமாறியாது மின்றி'' யெல்லையாகவுடைய நிலமென,, இங்ஙனமோதிக்கெட்டீர். இவ்வாறு நீயிரண்டோதும் போலிக ளெண்ணிறந்தன. ''சீவர்கள் துயரங்களைத் துயரென்றேதெரிகிலர்மிகுசுகமென்றே பாவனைசெய்து கொள்கின்றாரவர்தம்பழமல வலிமையென்சொல்கே,, னென்பது பற்றி யிடர்ப்படாமை யிடர்ப்பாடும் இடர்ப்படுதலிடர்ப்பாடின்மையு நுமக்கியல்பே யெனக்கொள்க.

இனிநீயிர் வகரமெய்யோடியை யாதுநின்ற சுட்டுவேறு அதனோடியைந்து நின்றசுட்டுவேறென்பது போலி யாதலும் ஒருசிறிது காட்டுதும். அது வருமாறு.

'' சுட்டின்முன்னர் ஞநமத்தோன்றி னொட்டிய வொற்றிடை மிகுதல்வேண்டும்,, '' யவமுன்வரினேவகரமொற்றும்,. ,,உயிர்முன் வரினுமாயியறிரியாது'' நீடவருதல் செய்யுளுள்ளரித்தேஎன்புழி,, சுடடின்முன்னா ஞநமத்தோன்றின் ஒட்டிய ஓற்றிடைமிகும். என்றருளிய தெவ்வாறு! அவ்வாறே சுட்டின் முன்னர் யவமுன்வரின் என்பதூஉமாம், அஃதஃதாகவும் வகரவீற்றுச்சுட்டு அகரச்சுட்டின்வேறுமெனின்? அற்றேல்அவ்வாறேஞநம வீற்றுச்சுட்டும் அதனின் வேறெனவேபடும். என்னை? யவமுன்வரினே வகரமொற்றும் என்றருளிய தெவ்வாறு அவ்வாறேசுட்டின் முன்னர்ஞநமத்தோன்றின் ஒட்டிய ஒற்றிடைமிகுதல் வேண்டுமென்றருளியதூஉமாகலான். ஆகவே அகரச் சுட்டுஞநம முன்வருதல் பற்றி அஞ், அந், அம்என நிற்குமாறுபோல அதுயவமுன் வரின் அவ்வெனநிற்கு மென்பதூஉம் பெறப்பட்டது. படவே அஞ், அந், அம், அவ்வென்னும் நான்கும் அகரச்சுட்டே பிறவல்லவென்பதூஉம் பெற்றும்.பெறவேவகரமெய்யோடியையுஞ் சுட்டுவேறு; அதனோடியையாச்சுட்டு வேறென்பது வெறும் போலியாயொழிந்தவாறு காண்க. அஃதிஃ தென்றறியுமறிவுறைபோதன் மேலும் அவர் அகரச்சுட்டினை ஆகுபெயரெனக்கொண்டிலரென்றோதிக்கெட்டீர். அஃதத்துணையேதா

மோ ஆயிடை யிருபேராண்மை செய்தலென்புழி ஆயிடை யென பது உருபாகலின் நீடவருத லென்றதனான் முடியாது கிளந்த வல்ல வென்றதனான் நீண்டு வகரவொற்று வேறுபட முடிந்தது என அவ்வுரையுடையர் முடித்துவைத்த முடிபே முடிந்த முடிபெனத்தி ரியக்கொண்டார். இன்னும் அவராண்டு வகரவொற்று வேறுபட என்ற தனை எடுத்தோதாது கரந்து நம்பொருள்போல் அபிநயித்துக் காட் டுதற்பொருட்டு யகரம் பெற்று எனப் புதிதொன்று படைத்துங் கெட்டார்.

அஃதேல் யவ முன்வரின் ஒற்றும் வகரவீற்றுச் சுட்டும் அவ்வா றொற்றுத வகரவீற்றுச்சுட்டும் தம்முள் வேறென்னோ வெனின்? என்னும். என்னை? அவ்வா றொறுதாமையானும் இவ்வாறொறுதலா னும் அன்னபிறவாற்றானு மென்பது.

“இனிச்சுட்டு முதல்வகர” மெனவும் “அவைமுதலாகியவக ரப்பெயர்” எனவும் “சுட்டின் முன்யவவரினொற்றும் வகரமெனவும் சுட்டு முதலாகிய வகரவிறுதி, எனவும் வருமின்னோன்ன வெல்லா மதுவே” என்பது மெய்கண்ட பாடியத்துட்காண்க. இதனானேநீயிர் யவ முன்வரினே வகரமொற்றும் நீடவருதல் செய்யுளுளரித்தே யெனயவமுன்வரின் வகரமொற்றுதலாய அவ்வென்பதனை யொட்டி வைத்து உபதேசித்தருளும் நீட்டம் வகரவீற்றுச் சுட்டின் நீட்டம ன்று அந்நீட்டம் கிளந்தவல்ல வென்பதன் பாற்படுநீட்டமே என்றோ துமிப்பேய்க் கோட்பாட்டை யாமீண்டு மாமந்திரவாதமாய் நிலை யிட்ட இம்மந்திரவோத்துப்பற்றி யொழித்துக்கொள்ளுக.

அஃதஃதன்று ஆயிருமுதல் என்பதுபோலாது ஆயிடையென் பது உருபாகலான் கிளந்தவல்லவா மெனின்? அற்றேல் “ஆயிடை நின்ற கிரீடியை முக்கண னங்கொருபொய்கையிலே போயிடை மூழ் கென” என்புழி வருமாயிடையும் நுமது உருபேயாங் கொல்லோ வடவேங்கடந் தென் குமரியாயிடை யென்பதூஉம் ஆயிடைநின்ற கிரீடி யென்புழிப்படும் ஆயிடை யென்பதூஉம் தம்முளொருநிகர வே யாகலான் அது வெறும் போலியாதலறிக. சேனாவரையர் தமிழியல்பறியாதோதியதனை எமதாசிரியர் அவர்அஃதறிந்தோதினா

ரெனத்திரியக் கொண்டாரென வாய்கூசாது புறன்பழித்த நீயிர்வட வேங்கடம் தென்குமரியாயிடை யென்பதற்கு வடநூ லியல்பறியாத நுமது நச்சினார்க்கினியர் ஓதியதனை நீயிரெடுத்தோதியது அவரறிந் தோதியதனை நீயிர் அறிந்தோதியதோ? அன்றே? இன்னு மிவ் வாறே அவரறிந்தோதியதனை நீயிரறிந்தோதுதல் இத்துணையே காமோ? அன்றன்று "மங்கலமரபிற் காரியஞ் செய்வார் வடக்குங் கிழக்கும் நோக்கியுஞ் சிந்தித்தும் நற்கருமம் செய்வராதலின் மங்க லமாகிய வடதிசை முற்கூறினார் இந்நூல்நின்று நிலவுதல் வேண்டி என்றதனை அவ்வாறோதாது ஒருசார் புதுவது படைத்து வடக்கென் றும் ஓரியல்பிற்றாய் தன்னோடு பிறதிசையு மறிதற் கேதுவாய மங்கல திசையாகலின் இப்பாயிரமுநூலும் என்றும் நின்று நிலவுதல் வே ண்டி முற்கூறப்பட்டது மங்கலம்முற்கூறல் ஆன்றோர்மரபாகலின் என்றாற் போல்வவும் நான்குகூறுமாய் மறைந்தபொருளுமுடை மையின் நான்மறை என்றாற்போல்வவும் "வழக்காவது சில சொல் பிறந்தகாலத்து இவை அறம்பொருள் இன்பங்களை யுணர்த்தின என்றாற்போல்வவும் முந்துநூல்அகத்தியம்மாபுராணம் இசைநுணுக் கம்என்றாற்போல்வவும் வடவேங்கடந்தென்குமரிகட்டுரைவகையான் எண்ணோடுபுணர்ந்தசொற்சீரடி, ஆயிடையென்பது வழியசை புண ர்ந்த சொற்சீரடி, தமிழ்நல்லுலகத்தென்பதுமுட்டின்றிக்குறைவுசீர்த் தாயசொற்சீரடி, என்றாற்போல்பவும் இன்னுமின்னோ ரன்னபிறவு மாம். இங்ஙன மவரோது மவற்றையே யெடுத்துக்கொண்டோதி யோதி அவை அவரோத்தாதல்கரத்தற்பொருட்டு அவற்று ளொரோ வொன்று, இடைவிட்டாடிக்கெட்டீரன்றே அஃதேலஃதஃதாம் ஆ யினும் புள்ளிமயங்கியலுள் சுட்டு முதலாகியவ் காவிறுதிமுற்படக் கிளந்த வுருபியல் நிலையும்வேற்றுமையல் வழியாய்த மாகும் என வை புணரியல்பென மொழிப. என்னுமாறுபற்றி அதுவேவெ ன்பது பெறப்படுமா லெனின்? அற்றன்று. மேல்உயிர் மயங்கி யலுள் சுட்டின்முன் யவவரின் ஒற்றுமென்ற அவ்வகரம் பின் புள்ளிமயங்கியலுட்படும் செய்கையியல்பே அஃதாகலான் என்பது இனி வகரத்தோடியையாதசுட்டின்முன்னுதோன்றின் ஒற்றிடை

மிகுதல் சுட்டுமுதலாகிய வகரவிறுதி மெல்லெழுத்தியையின் அவ்வெழுத்தாதலாய இரண்டற்கும் அவ்வுரையுடைய ரெடுத்துக் காட்டிய எடுத்துக்காட்டு அஞ்ஞாண் என்பதொன்றேயாம். அதனை நீயிரறிந்தோதாத தென்னை கொல்லோ இவையெல்லா மெய்கண்ட பாடியத்துள் விரித்துக்காட்டிக் கண்டித்தாம் ஆண்டுக்காண்க.

ஈண்டோதிய வாற்றான் அஇருமுதல் அஇடையென்பன விரண்டுந் தம்முளொரு நிகரவே யாகலான் அவைதம்முள் வேறுவேறு செய்கையுடையன வென்பது நமக்கு மடுக்கா தெமக்குமடுக்காது. வேறியார்க்கு மடுக்காது. அங்ஙனமாகஅவற்றுள் முன்னையதனை அஇடையெனவும் பின்னையதனை அஇருமுதலெனவும் இங்ஙனமாக நீயிர் வேறு வேறுகண்ணழித்துக் கோடற்கு கருவியென்னை? அவ்வென்பது ஆகுபெயரெனக் கொண்டுரைத்தல் எடுத்தோத்திற்கியாது மேலாதென ஆண்டோதியதனையா மெவ்வாற்றானு மிழுக்கோதினன்றி யெம்மை யுலகுமீக்கூறுதென்னு மந்நோக்கோன்றே யல்லது அதற்கு விடுக்குமமைதி வேறியாது மின்றென்றொழிக. செய்கை முதலிய வெல்லா வியல்புந் தம்முளொப்பனவாய வவ்விரண்டனுள் பின்னையதனை அ, இருமுதலெனக் கண்ணழித்தாற் போல முன்னையதனையும் அ, இடையெனக்கண்ணழித்துரைப்பின் எங்கருத்து ஒருசிறிதுநிரம்பாது இனி அஃதாண்டோதிய நமது முனிவருமிஞ்ஞான்றிலராயினர் அல்லதூஉமவரோதியதற்கமைதியோதுவாராய் எம்மினுயர்ந்தார் யாரு மிவ்வுலகின்க ணிலரென்றின்னோ ரன்ன வாய்க்கரந்துபாந்ததொரு செருக்கறிவே யல்லதுவேறியாதுமின்றென்பதே தேற்றம். இக்கரவறிவு பரவியுடைய நீயிர் தாமோயா மேலோதிபவாற்றானும்முன்னோது மாற்றானுமெல்லாவறிவு முதன்மை யனுக்கிரகமெல்லா மியல்பானமைந்தருளிநம் மனோர்போல் வினைவயப்படாதவெமதாசிரியர்க்குப்புறவேடமே யல்லது அகவொழுக்கின்று தன்மேலும் வினைவயப்பட்டு நிற்றலின் அவராக்குநூல்களிழுக்குப்படுமாதலின் அவைகைக்கோடற்குரியவல்லவென வாய்கூசாது வாளாபுறன் பழிக்கவல்லீர். நீயிர் ஆண்டுத்தரவேதமுடையர் புறவேடமிலராயினும் அகவொழுக் குடையராய்வினை வயப்

படாதுநின்றுக்கியநூல்யாதுமிழுக்கின்றென்றோது மதனுனே வினை வயப்படாதுள்ளொழுக்குடையராய வவ்வுத்தரவேதமுடையரொப்ப எமக்குப்புறவேடமின்றுயினுமகவொழுக்கு நிறைந்துடையமாய் வினையினீங்கி விளங்கிய வறிவுடைய மாகலான்யாமாக்கிய இந்நூலொன்றே பொன்னேபோற் போற்றற்குரித்தாயுத்தரவேத நூலினுயர்ந்ததென்னுநம்மியல்பிஃதெனயாமினிதுணர்ந்தொழிந்தா மென்பது. அதனுலினிநம்மனேரனைவரு நுமது முனிவர்நூல் முதலியவற்றைக் கைவிட்டு நுமது நூலொன்றே கைக்கோடு மென்பது. அதுநிற்க.

இனி ஆயிடைஆயிருமுதலென்பனவிரண்டுந் தம்முளொப்பனவே யாமென்பதறிந்து வைத்தும்அவ்விருவேறு வாக்கியங்களையு மொருநிகராய்க் கண்ணழியா திங்ஙனம் வேறுவேறு கண்ணழித்துக் கோடலே விருத்திரன் வாய்மொழி யொப்பநும்மக முரணறுக்கும் பெருமபடையாயவாறு காண்க. அதுகிடக்க.

இனி தனித்து நின்றியற் பெயராதன் மேலும் ஆகுபெயருமாயிவ் விரண்டும் வல்ல வேனைய போலாது ஒருமொழியோடாயினும் அல்லதோரிறுதி நிலையோடாயினு மியைந்துநின்றேசுட்டுப் பொருளுணர்த்தலாற்றவற்றல்லது ,அவற்றோடியையாது தனித்துநின்று சுட்டுப் பொருளுணர்த்தலாற்று தவச்சுட்டெழுத்து அதன் மேலுமாகு பெயராமென்றல், ஒருவனைச் சார்ந்தியங்குவதல்லது தன்னியல் பிற்றனித்தியங்கலாற்றுமை மேலும் தன்னைச் சார்ந்தார்க்கு மஃதாற்ற மாட்டாத தோரந்தகன் பிறரிற் கட்டான் றனித்தியங்கன் மேலும் பிறர்க்குமது செய்தானென்றோது மோத்தொப்பதோர் வெறும் போலியாய வாறு காண்க. இதனுனே நூன் முறையாதும் வழுவாதுணர்ந்துரைத்தருளியவுரையோத்தியல் பிஃதென அறியுமறிவொரு சிறிதுமின்றிப் பிறரிழுக்குரை நோக்கி அஃதிழுக்குரை யென்றறியாததனைக் குணமெனக்கொண்டு மயங்கிச் சிவஞான முனிவருரைத்தாரென யெமதாசிரியர்ப்பழித்த பழித்துரைநும்மை நீயிரேபழிததுவைத்ததொருபழித்துரையாயவாறு காண்க.

இனிச்சுட்டை அவரோரெழுத்தாகுய தெனக்கொண்டிலர். ஈரெழுத் தானுயதொரு பெபரெனக்கொண்டார். எனக்கோடுமேனும் அதுவு நீயிரோதியவாறு பற்றித் தனித்து நில்லாது மேன்மொழியை யொட் டியே நிற்றலின் அதனானுமஃதெமதாசிரியருப தேசித்தருளியவாறே வகரமெய்யை யிறுதிக்கட் பெற்று நின்றமேதார் அகரச் சுட்டேயாக லான் அஃதெவ்வாற்றானும் தனித்துநின்று பொருளுணர்த்தல'ற்றுத அகரச் சுட்டேயாதற்கு யாது மிழுக்கின்மையானும் அஃததனுனீட வருத லுடைத்தாகலானும் அதனுன் அதுகிளந்த வல்லவாகலானும் அது பற்றியும்நுங்கருத்து யாதும் நிரம்பாமை யறிக. இருந்தவாற்று னிது தோல்வித்தான மெய்தா தாணே யஃதெய்தினு யெனவும் அஃதெ யதினுனே யஃதெய்தாதாயெனவு வருந்தோல்வித்தானங்களின் பாற் படுமாறறிக.

204ம் பக்கம் 3ம் கூறு, இதனுளிழுக்கில் வழியுமொருசாரருரை யை மறுத்து அவரைப்பழித்தும் அஃதுள் வழியும் அவ்வொரு சார ருரையைக் கைக்கொண்டு அவரைப்புகழ்ந்து மிவ்வாறேமுறைபிற ழக்கோடன்மேலும் முன்னும் பின்னுமலேவற நோக்குமாறு நோக் காது நோக்கிய தொன்றனையே நோக்கி ஆண்டாண்டுத் தம்மனம் போ யவாறெல்லாம் போந்து அவரோதுவன பலவேறென விங்ஙனம் உ ரைக்குங் கருத்துடையீர். அங்ஙனமெண்ணிய வெண்ணியாங்கே செய்யுந் திண்மையாது மின்றிநுங்கருத்து வேறுசெயல் வேறுயது. இன்னுமிவ்வாறே பிறண்டு நீயிர் குழறுங் குழறுபடைகளெண்ணி றந்தன, அவையெல்லா மிவையிவை யெனத்தனித் தனிகாட்டப் புகின் விரியுமென்றஞ்சி விடுத்தனம். யாமேலோதியவாறு பற்றி உ ணர்ந்தாங் குணரு முணர்ச்சி யுடைமையின் எம்மனேரொப்ப முன் னிது பின்னிது வென வொன்றனை யேகதேசமாய்ச் சுட்டியறியுஞ் சுட்டறிவுடையரல்ல ரெமதாசிரியர். ஆகலான் ஏகதேசப் பயிற்சியு டைய யாங் காமாலைக்கண்ணனெப்ப வெமதாசிரியரையும் எம்மனே ருளொருவரென வைத்தெண்ணிக்கோடல் பேரிழுக்காகலான் முன்னு ம் பின்னு நோக்குஞ் சுட்டறிவின்றி அறிந்தாங்கறியும் பேரறிவுடை யரென நீயிரோதியன வெல்லாம் எமதாசிரியருண்மை யியல்பேயா

மென்றறிக. இருந்தவாற்றானிது பொருளினிது விளங்காத மொழி யெடுத்தோதலென்னுந்தோல் வித்தானத்தின் பாற்படு மாறறிக.

204. பக்கம். 5-ம் கூறு, இதனுள் முறையேஇடையென்பதியை வது அதற்கண்மை அயன்மையாய மொழிபிரண்டனுள்அவ்விரண்ட னேடுமேயோ?அன்றி அவற்றுளொன் றனேடேயோ? அவற்றின்வே றுமொழியோடேயோ? அல்லதூஉமஃதியைதற் கண்ணின்றுங்குநின் றியைமோ? அன்றிச் சென்றியையுமோ வென்றிவ்வாறு அவ்வியைபு பற்றியுரைமுக மாணுக்கர்க்கு நிகழுமையமறுத்தருளுவாராய் அஃத வ்விரண்டனேடு மியைவதன்று. இயைவதிதனேடுஅதனையியை விப்ப திவ்வாறென்பது கேற்றியருளுவார்''ஆபிடையாகிய உலகத்தென்க,, எனவுபதேசித் தருளினரென்பது. அஃதிஃதாமல்லது அஃதேழனுரு பாதல் அன்றி அஃதிடமாதல் பற்றி நிகழுமையமறுத்தற்பொருட்டுப தேசித்தருளின ரல்லரென்க. ஆகலா னிங்ஙன நீயிரோதியது போலி யும். ஆண்டுபதேசித்தருளியதே யுண்மையுமென விதனைச்சாதித் தற்பொருட்டியா மீண்டேதுமுதலியவற்றுள் யாது மெடுத்தோ துவமல்லோம். நீபிராண்டெழுவாயுள் எமதாசிரியர் மறித்துரை யிஃதென்றோதல் போலியாத லெங்ஙனம். இதுவுமங்ஙனமே யாத லெல்லார்க்கு மினிது துணியக்கிடக்குமாகலான். அஃதேலிஃதேனை யவற்றிற்கு மொக்குமாகலான், ஆண்டதி வியாத்தியாலோ வெனின் அற்றன்று, நீயிரெமதாசிரியர் தமதுரையை அவ்வுரைத்தருளியவா றிஃதிஃதென்றறியு மறிவியாது மின்றித் திரியக்கோடலிவ்வீருழி யுந் தம்முளொக்குமாகலானு மேனையவன்னவல்ல வாகலானு மென் பது. இதனானஃதேழனுருபன்று. இடப்பெயரென்னுமையமறுத்தற் பொருட்டே ஆபிடையாகியவுலகத்தென்க வென்றாரென நீயிரதன் தி ருக்கருத்துரைத்தது நுந்திரிகருத்தாய வாறாயிற்று. ஆகவே நீயிர் பி றருரையிபல்புணருமுணர்வுடையீரென்பதூஉம்யாமிதனானினிதறிந் து கொண்டனமென்பது. அவரஃதேழனுருபன்று இடப்பெயரென் றார் யாமிடப்பெயரன்றெனச் சாதித்து மென்றோது மிதனானே இ டப்பொருட்டன்றென்பது நுங்கருத்தாதல் பெறப்பட்டது. அஃதஃ தன்று, இடையென்பதிடப் பொருட்டாவதன்று என்றனமேயன்றி

எழுனுருபு இடப்பொருட்டாவதன்று,என்றனமல்லமாலெனின்! அற்றேல் இடமென்னும் பெயரெனவைத்து நீயிரோது மவ்வாக்கியப்பொருள்தானென்னை! அவ்விடமென்னும் பெயர்,பிறப்பென்னும்பேதமையொப்ப இடமாகியபெயரா? அல்லது இடத்திற்கு முதற்காரணமாகியபெயரா? அன்றியவற்றின் வேறு பெயரா? உபசார வழக்கு வடமொழிக்குரித்தர்கலான் அது நமக் குடம்பாடன்மையின் நுமதிடமென்னும் பெயரென்னு மவ்வாக்கியம் விரியுமாறியாங்ஙனம் ? இடத்தின் பெயராமெனின் ! அற்றேலஃதிடப் பெயரெனவேயமையுமாகலின் அதன்பொருட்டு இடமென்னும் பெயரெனவோதல்சாலாது. ஆகலானிடமென்னும் பெயரென்பது நும்படைத்து மொழிகிளவியெனவே யாங்கோடும். அஃதி ஃதாமென்றறியு மெய்யறி வொருசிறிதுமின்றிப் பொருளைய மறுத்தற் பொருட்டெனத் திரியக்கொண்டு நீயிரப்பொருள் சாதித்தற் கோதியவற்றையாமீண்டாய்தல்சமண் முனிவர் சாம்பராயுமா றொப்பதொன்றாயினும் அப்போலி நும்மனோர்க்கினிதுணர்த்தற் பொருட்டொரு சிறிதாயு முறைபற்றி யாய்குதும். அதுவருமாறு

"கடலிடை மலைகடம்மாலடைத்துமால் கருமமுற்றித் திடரிடைச் செய்த கோவிற்றிருவி ராமேச்சுரத்தை" என்புழிக்கடலிடையென்பதனு ளிடையென்பது மலையாலடைத்தற் கிடமாய் நின்று இடப்பொருள் பயந்தவாறுகாண்க. ஈண்டுப்படுமிடையு நும தேழனுருபேயாங்கொல்லோ ? அல்லது நீயிர் முன்னோது மேகதேசமாய வழியேயாங்கொல்லோ ?

ஏகேதோ தெரிந்தாரொப்ப முகரோமமுறுக்கி முழங்கி முன்னும் பின்னும் புடையுநோக்கி யெழுந்தீர். ஐபகோ! துர்ச்சகுன நேர்ந்தவாறொப்ப நுமக்கிஃதொன்றீண்டு வந்து நேர்ந்ததன்றோ. அல்லதூஉம் "இடைகெழுமாடத்திஞ்சி சூழ்தஞ்சைசரா சராசேச்சரத்திவர்க்கே" எனவும் "இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக", எனவுமிங்ஙன மப்பொருள் பற்றி வருமிடைதாமின்னு மெண்ணிறந்த பலவேறுள. அவையெல்லாம் விரிப்பிற் பெருகுமென்றஞ்சி விடுத்தனம். இதனானே ஆப்பீர்க்கப்போயவானரமொப்பீராயினீர். இதற்கு

நீயிரமைதியாதோதுவீர் ? இங்ஙனம் யாண்டும் பயின்று வருமிவ்வப் பியாசலிங்கத்தினையபலாபனஞ்செய்து இடையென்பதுருபே என விடுக்குறப்புகுத்திடர்ப்பட்டுரைக்கு நும்போலியுரையினியாயினு மொழிந்துய்க. இருந்தவாற்றான் யாமீண்டெடுத்துக்காட்டு மிவ்வெ டுத்துக்காட்டாய் கருங்கன்மலையிடைப் போந்து நமக்கிடப்பொரு ளேபடாதேழனுருபேயாய இடையென்பது வழியென்னுமேகதேசப் பொருளை பயக்குமென நீயிரோது மோத்தாயமரக்கலமொரு சிறிது ந்தாக்காது. தாக்குமாயினுமத்தாக்கியாங்கே யதன்பெயரும் விரை யக்கெட்டொழியுமென்பதறிந்துகொள்ளுக. அஃதிஃதாகலான் ஆகி யெனவிரித்தல்பற்றி யாதுமிழுக்கின்மையறிக. அஃதஃதன்று அஃ தாண்டும்யாமோதுமாறே ஏகதேசப்பொருளே பயந்ததாலெனின் அற்றன்று ; நீயிரீண்டெடுத்துக் கொண்டதேழனுருபேகதேசப்பொ ருட்டு. வியாபகப்பொருட்டென்பது பற்றியன்று. இடையென்ப து எழனுருபேயன்றி இடப்பெயரன்றென்பது பற்றியே யாகலான்; இன்னும் நீயிரதனை எழனுருபென்றுங்கே நிலத்துக்கண்ணெனக் கண் ணுருபு விரித்து வைத்துரைக்க வறியாது நிலத்தெனவைத்தோதி யொழிந்தவதுவே ஆண்டிடையென்ப தேழனுருபன்று; இடப்பொரு ட்டாமென்றற் கமைபுஞ் சான்றுதலறிக.

“இதனானே சொல்லுதல்யார்க்கு மெளியவரிய வாஞ்சொல்லிய வண்ணஞ்செயல்” என்னுமிலக்கணத்திற் கிலக்கியமுண்மையுமீண்டே பெற்றும். இனி நீயிரஃதேழனுருபன் றென்றுரென்றீர். எமதாசிரியர் அஃதாண்டியாண்டு மெடுத்துபதேசித் தருளினரல்லர். ஆகலானது போலியுட் போலியாமென்பது.

அஃதஃதன்று, உருபு விரித்து மிடர்ப்படுபவென்றுராலெனின்: நன்றே யோதினீர். அதனானஃதேழனுருபன்றென்று ரென்பது பெறப்படுமாறி யாங்ஙனம்? உருபு விரித்து மிடர்ப்படுப என்ற தனான் இடர்ப்படாதுரைக்கு மாறுவேறுளவாகவும், அவ்வாறுரை யாது ஒரு காற்றெருகையாக்கோடற்கு மமைவதாய் மேற்றெருக்கவவ் வுருபு விரித்திடர்ப் பட்டனரென்பது பெறப்படுமல்லது, அதனானஃ தேழனுருபன்றென்றுர் என்பதெற்றுற்பெற்றீர்? உருபு விரித்திடர்ப்

பட்டாரென்பதனான் அது விரித்தல்பற்றி இடர்ப்பாடுளதாமென்பது பெறப்படுமல்லது அஃதேழனுருபன்றென்றாரென்பதுபெறப்படுமாறியாங்ஙனம்? அதுகிடக்க.

இனி "ஆயிடையென்பது ஆயிடையாரனுருற்றனகண்ணென்புழிப்போலவேகதேசவழியாகிய விடப்பொருளா மெனின்; அஃதேழனுருபின் பொருள் படநிற்பினல்லது பண்புத்தொகையின்பாற்படல் பொருந்தாதென நீயிரோதியது செப்புவழுவாதல் காண்க. நீயிர் முன்னரைங்குறுநூற்றின் இடைக்கோதும் இடத்தினேகதேசவழியொப்ப ஈண்டைக்கோதும்வழி நுமக்கியாதும்வந்துவாய்த்திலதுபோலும் இனி யீண்டுயாமெடுத்துக்காட்டிய வவ்வெடுத்துக்காட்டுக்கள் நீயிர்கண்டிலீர் கண்டீராயின் ஆண்டுமிவ்வாறே வழியென்றுதல் குழியென்றுதல் யாதானுமொன் றேதாதொழியீரென்பதே தேற்றம். அதுநிற்க.

இனி, நீயிரீண்டாசிரியர் பரிமேலழகனார், ஆயிடையெனச்சுட்டு நீண்டதென வோதியதனை முதல் நீண்டதென்றீர். எனவே நுமக்குச்சுட்டு, முதலென்பனவிரண்டு மொருபொருண் மொழியேபோலும் அஃதஃதன்று ஆண்டு நீண்டது அம்முதலேயாகலான் அங்ஙனமோதினமாலெனின் அற்றேல் நும்மொப்ப அவ்வுரையோத்துடையரும் ஓதவறியாரேகொல்லோ? அஃதஃதன்று ஆண்டிடைச்சொல் இரண்டிபைந்து தம்முளொருமொழியாய்நிற்றல் பற்றி அங்ஙனமோதின மாலெனின்; அற்றேலஃதாண்டுச் சுட்டிடைச்சொல்லா? அன்று? அன்றாயின் அங்ஙனமோதாமைஇழுக்கேயா மென்றொழிக. இனி அதனை அங்ஙனமோதலுமாமெனின்; நீடன்முதலது செய்யுளுளுரித்தே, எனச்சூத்திரம், யாத்தருளல்வேண்டும். அங்ஙனம் யாத்தருளாமையின், அதுபோலியாதலறிக. இருந்தவாற்றானிது, தானேது, மேதுவுக்கிழுக்குவந்துழிப், பிறிதோராற்றானேது வோதலென்னு தோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக.

அஃதினி நீயிரோதியவாறே முதனீண்டதெனக்கோடுமேனும் அதுபற்றியுமது நுமக்கேயிழுக்காய் முடிவதல்லது எமக்காகுமிழுக்கியாது மின்மையுமொரு சிறிதுகாட்டுதும். அதுவருமாறு நீயிர்

ஆண்டாசிரியர் பரிமேலழகனா ரோதியவாறே சுட்டுநீண்டதெனின்: ஆயிடையாரனாருற்றனகண் என்புழி ஆயிடையென்பதூங், தம்முளொப்பனவே யாகலான், யாம், ஆண்டதனை அவ் இடை எனக்கண்ணழித்ததனோடுமுரணி நீடவருத லென்னுமியல்புடைத்தன்று, கிளந்தவல்லவெனு மியல்புடைத்தென்றோதியது இழுக்காய் முடியுமென்றஞ்சி அதனை அவரோதியவாறே சுட்டுநீண்டதென்றோதாது முதனீண்ட தென்றோதின் மேலோதிய கிளந்தவல்ல வென்பதன் பாற்படு மெனத் தடுமாறிக்கொண்டு, முதனீண்ட தென்றீரன்றோ? முதனீண்டதெனவே நீடவருதலென்பதூஉமொரு மொழியின் முன்னின்ற சுட்டாய அம்முதனீட்டமென்பதேகருத்தாகலான் இது தேளுக்கஞ்சிப்பாந்தள் வாய்ப்பட்டானொப்பச்சுட்டு நீண்டதென வோதற்கஞ்சி நீடவருதலென்பதனை யுடம்பட்டோதியவா றாயிற்று. ஆகவே அதுகிளந்தவல்ல என்பதன்பாற்படு மென்பது நமக்கு முடம்பாடன்றாயிற்று இன்னோரன்ன வெல்லாம் நுமதுநச்சினார்க்கினியரோதுமாறு கண்டு ஓதிக்கெட்டீரென்பது மேலுமோதினும் முன்னருமோதுதும். இருந்தவாற்றானிது தடுமாற்றமென்னுந்தோல்வித் தானத்தின் பாற்படுமாறறிக.

206. ப. 2. கூறு. இதனுள் தமிழ் கூறு நல்லுலகத்தென இடத்து நிகழ் பொருளின்றொழிலும் பண்புமிடத்தின்மேல் நின்றனவென்பது பொருந்தாது. அற்றாயின் அவையொப்ப வழக்குச்செய்யுளென்பவற்றின்வினையும், அவ்வுலகின்மேல் நிற்றல்வேண்டும் ஆகலானும். அற்றாகவும் இங்ஙனமவைதம்முள் வேறுபட்டு நிற்றலமையாமையானும், அன்னபிறவாற்றானுமென்றீர். அவை யெல்லாமுன்னர்த்தந்து கண்டித்தொழிக்குதும் அவைகிடக்க இடத்து நிகழ்தொழிலும் பண்பும் இடத்தின்மேனிற்றற்கெடுத்தோத்துளதா? இலதா? உளதாயின் அவை யெமதாசிரியருபதேசித் தருளியவாறே நின்றனவா? அன்றாவென ஆயுமுறையானாய்ந்து நின்றனவல்லவாயின் நில்லாதவற்றை நிலையினவென்றார். என்றோதலன்றோ முறை. அஃதன்றி அவையங்ஙனமாயின் இதுவுமங்ஙனமாக. இஃதங்ஙனமாகாக்கால் அவையுமங்ஙனமாகாவா யொழிகவென அவ்வாறோதப்படாத

ஒருசாரபிறவும் அங்ஙனமேயோதாமைக்கு அஃதேதுவாமென்றீர். அவ்வோதாமையீண்டைக்கியாது மேதுவாகாது. ஏதுவாமாயின் யாமீண்டு நும்மைவினவுதும். அதுவருமாறு: அற்றேல் நும்மோத்து ப்பற்றி அவ்வென்பது அவ்விரண்டனையுமேல்லையாக உடையநிலமும் சிவணியவென்னு மெச்சப்பெயர் கொண்டது ஆண்டுள்ள நிலமென் னும் இயற்பெயரன்றுநீயிராக்கிக்கொண்ட உயர்ந்தோருமாமெனக் கோடும். கோடுமெனின் உயர்ந்தோரை அந்நிலமெனச் சுட்டாது அவர்க்கு நிலைக்களமாய்க் கிடந்த நிலத்தை அவ்வெனச்சுட்டிய தென்னைகொல்லோ. அஃதஃதன்று சூத்திரத்துட் சுட்டாதொ ழிதலின் யாமுமவ்வாறே சுட்டாதொழிந்தன மாமெனின்; நன்றே போதினீர், இதுவு மதுவேயாகலான், அன்றேல் நீயிரங்ஙனஞ் சுட் டாமைக்கமைதியெடுத்தோதாமையானும், விடுக்குமாறு வேறின் மையானும், வேறுளவேனும் அவை இவையெனநீயிர் விடுத்தொழி யாமையானும், அன்னபிறவாற்றானுமது நுமக்கே யிழுக்காய் முடியு மாகலான் அஃதாசங்கையன்றென்றொழிக. இனி அடைகூட்டல், அதுகூட்டாமை சுட்டாமை யென்னுமின்னோரன்ன நுமதாசங்கை கட்கு மிஃதொக்கும் இருந்தவாற்றானிஃதா சங்கித்தற்குரியதல்ல தனை ஆசங்கித்தலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

206. ப-4. கூறு இதனுள் நல்லுலகமென்பதற்கு நல்லாசிரிய ரென்றோதல் மிகையாமென மறுக்கவென்றதேலாது. அல்லர் வழக் குஞ் செய்யுளுமிழுக்குடையவன்றி அவையில வென்பதேலா மையானென்றீர். என்றன்மேலும் ஆகலான் நல்லுகமென்றடைகூட் டல் இன்றியமையாது வெண்டப்படுவதேயாம். போக்கறுபனுவல் என்றாற்போலவென்றீர்; அற்றேலீண்டொன்று நும்மை வினவுதும். அதுவருமாறு. பனுவலெனவே போக்கறு பனுவலென்பதோதாதே யமையுமெனின்; நன்றேயோதினீர். நீயிர் குற்றமில்வழக்கெனவே குற்றமுள்வழக்குமென்பதொன்றுளதாதல் பெறப்படுமென்றோதிய தொப்ப மல்கு நீர்வரைப்பென்பதற்கு கடலாற்சூழப்பட்டநிலவுலக மென்றீர். அதனாற்கடலாற் சூழப்படாதநில வுலகமுமொன்றுளதாவ தன்றி அஃதின்றென்பது நுமக்குப்பெறப்படாதன்றே அஃதஃதாக

வும் அதுபெறப்பட்டு நின்றதறியுமறிவியாதுமின்றிக் குற்றமுள்வழக் கெடுக்கோதுமாறொருப்பக் கடலாற் சூழப்படாத நிலவுலகமொன்று ளதென நீயிர் ஆண்டெடுத்தோதாதாமையின் நுமக்கு மதுகருத்தன்று ஆகலானு நீயிரிவ்வினாவிற்கு விடுக்குமமைதியாது? அதுவே அவ்வி னாவிற்கு மமைதியாய் முடியுமாகலானுமீண்டதுபற்றி வேறுவிடுத் தனமல்லமென்க. அஃதிஃதாகலான் நீயிரோதியது வெறும் போ லியாமென்றறிக அவ்வழக்கிரண்டேயல்லது நீயிரோதியவாறே மூன் றல்லவென்பதூஉம், அவற்றியல்பு நீயிரோதியவாறன்றி வேறென் பதூஉம்மெய்கண்ட பாடியத்துட் காட்டினாமாண்டுக்காண்க. இரு ந்தவாற்றானிது தன்சித்தாந்தத்திற்கியைபாதனவெடுத்தோதிச் சிந் தாந்தஞ்சாதித்தலென்னுந்தோல்வித்தானத்தின்பாற்படுமாறறிக.

207. ப-2. கூறு இதனுள் ஆயிருமுதலென்பது வினைத்தொகை யன்மைக்கு ஆயிருகிளவியென்றித் தொடக்கத்தான் அஃதன்னவற் றைஅத்தொகைபடுமாறாசிரியருபதேசித்தருளாமையேதுவென்றீர் நீயிரோதியவாறே அஃததுவன்மைக்கு இஃதேதுவாகாது. எதுவா யின் நும்மையிஃதொன்றீண்டு வினவுதும்; அஃதாமாறு; அற்றேல் அவ்வாறே ஆயிடை யென்பதனுள் நின்றநுமதாகு பெயராயசுட் டோடியைந்துகிடந்து ஆயிருகிளவியென்றித்தொடக்கத்தானெழுந் தஅஃதன்ன வாக்கியங்களுட்பட்டுநின்றவவ்வகாரச் சுட்டெல்லா நீயி ரோதியவாறே நுமதாசிரியன் ஆகுபெயரான் வைத்துபதேசித் தரு ளாமையின் ஆசிரியரங்ஙனமாகுபெபரெனக் கொண்டருளாதவவ்வ கரச் சுட்டைநீயிரங்ஙனமாகுபெபரெனக்கோடலென்னைகொல்லோ? பிறர்க்கது சாலாதாகநுமக்கு மாத்திரையேயது சாலுமாறியாங்ஙன மெனயா முழங்குவோம். அஃதறி வின்மையுடை மீரதழுக்கறுதற் பொருட்டு. ஆகலானது சாலாமைநுந் துணையே யமையுமாயின் அது நுந்தெய்வத்தானுந் துடைத்தொழித்தலரிதாகலான் யாமொழிக்கு மாறியாங்ஙனம். அல்லதூஉம் ‘‘அறிவிலார்க் குரைப்பவரவரிற் பே தை,, எனவும் ‘‘உய்த்தனர் தேன் மழையுதவிப் போற்றினுங் கைத்தி டற விருமோகாஞ்சிரங்கனியத்தகவல்லவோவறிவிலாதவர் சித்தமது ணர்வகை தெருட்டுகின்றதே,, யெனவும் வருதலானும் உணர்ச்சி

வாயிலுணர்வோர் வலித்தே என்பவாகலானும் அஃதிபாமொழிந்தா
மென்பது. இதனாற்பிறன்பழிகூறுவான்றன் பழியுள்ளுந்திறன்றெரிந்
துகூறப்படும்என்னும்பொருளும்போந்து கிடந்தவாறறிக. அதுநிற்க.

இனியாசிரியர் அதனையே அத்தொகை படவைத்துபதேசித்த
ருளினரென்னினும், அஃதன்னவற்றையுமவ்வாறே வைத்துபதேசித்
தருளினரென்னினும், அஃதெமதாசிரியருபதேசித்தருளியவாறே
வினைத்தொகையாதற்கியாது மிழுக்கின்றென்பதூஉம், அது நூலா
சிரியர்க்கு முடம்பாடென்பதூஉம் அதனானது நமக்குமுடம் பாடெ
ன்பதூமொருசிறிதிது காட்டுதும் அதுவருமாறு அஃததுவேபாம்.
என்னை? ஆசிரியர் சூத்திரம் யாத்தருளுங்கால் ஆண்டாண்டவ்வப்
பொருள்கட்குரிய அவ்வவ்வாக்கியங்கண்மாத்திரையே யாத்தருளு
வரலலது ஆண்டே எல்லாவியல்பும் படும் அவ்வெல்லா வாக்கியங்க
ளும்யாத்தருளுமாறு புகுந்தருளினரல்லராகலானும் அஃதங்ஙன
மாங்கால் இவைபு பற்றியாண்டாண்டாவனவாகும் அல்லன வொழி
யுமல்லது எல்லாமாண்டியைந்தேகோவைப்படாவாகலானும், அது
பற்றி நீயிரோதியவாறேயாசிரிபர் அஃதன்னவற்றையங்ஙனமுபதேசி
த்தருளாமையின் அஃதஃதன்மைக்கேது என்றோதல் யாது மேலா
மையானுமென்பது. இருந்தவாற்றானாசிரியரஃதன்னவற்றை அத்தொ
கைபடுத்தருளாது பிறதொகைபடுத்துபதேசித்தளிருனும் யாமீண்
டோதியவாற்றாற்சூத்திரத்துள் அவையத்தொகைபடுமாறு வைத்
துபதேசித்தருளுதற்குரிய பொருளெடுத்துக்கொண்டருளாமையி
னொழிந்தருளினாராகலின் அதுபற்றி அஃதியாண்டு மத்தொகைபட
வாராதென வரையறைப்படுத் துபதேசித்தருளாமையானும் இன்னு
மதனையே அத்தொகைபடுத்தாது பிறதொகைபடுத்து வைத்துபதே
சித்தருளினரென்னினும் வாக்கியங்களுட் பஃறொகைபடுவவு முள
வாகலான் அஃததுபற்றிப்பிறண்டு அவ்வினைத்தொகைப் பொருள்
பட்டு நிற்றற்கு முரித்தாகலான் அஃதங்ஙனங்கோடலாற் படுமிழுக்
கியாது மின்மையானும் அன்ன பிறவாற்றானும் அஃதத்தொகையா
தல் சாலாதென்பதியாது மேலாதென்றறிக. அல்லதூஉமாசிரியாத
னையெடுத்து வைத்தருளி’ யாவயின்வரினுந் தொகையின்றியலா என்

றருளிய தொப்ப இஃதியாண்டு மித்தொகையே படும் பிறதொகை படாதெனக் கிளந்துபதேசித் தருளாமையானும் அன்றி யாசிரியர் ஆபிநமுக லென்ப தொப்பனவெல்லாம் அத்தொகைபடு மெனவுப தேசித்தருளின ராகலானும அன்னபிற்றானுமது வினைத்தொகையா தலாசிரியர் திருக்கருத்தேயாமென்பது உருக்காக்கிளை கற்போற் பெறப்பட்டது. படவே நங் கருத்துமதுவேயன்றி வேறன்றென்பதூ உம்பெற்றும். ஆகலானும் அன்ன பிறவாற்றானும் அஃதெல்லார்க்கு முடம்பாடாகலான் நீயிர ஃதஃதன்றென்பது அவர்க்கெல்லாம் போலியாய் முடியுமாறுங் காண்க.

இன்னுமோராற்றானுமது போலியாதல் தேற்றுதும் அஃதாமாறு இன்னுமஃதங்ஙனமன்றேல் ‘வண்புகழ்மூவர்மல்குநீர் வரைப்பின், என்றருளியவாறே உபதேசித்தருளாதுபிறிதோருழி’ தண்பொழில் வரைப்பென்றருளுதலான், மல்குநீர் வரைப்பென ஆண்டியாத்தோதல்பாது மேலாமையின் அதற்கமைதியோதல் நுந்தலைப்பாரமாய் முடியுமாகலான் அஃதஃதேயாமென்பது தெற்றெனவறிக. அதுநிற்க

இனி யீண்டெஞ்சிய வற்றையுமொரு சிறிதாயு முறையானுய்குதும் அதுவருமாறு ஆண்டு நீயி ரெடுத்துக்கொண்டபொருளிரண்டனுள் ஒன்றனையொழிந்து ஒன்றனையே மறித்தெடுத்தோதினீர். ஒழிந்ததற்கோதும் போலியாதும் வந்துவாய்த்திலது போலும் அது கிடக்க. யாமொன்றீண்டு நுமக்கோதுதும். ஓதுமம் மொழிகளை முன்னர் நீயிர் மனம்பற்றியவ்வுளங்கொளப் பயிலுகபயின்று கொள்ளின்யாம்பின்னோதுமிய னூற்பொருளியல் பிஃதென்பதினிது விளங்குமென்க அதுவருமாறு. இந்நிலவுலகின்கண் கற்க வேண்டுவனகற்குஞ்சிறுமகாரெல்லாமக்கல்வி கற்குமாறு புகுந்தவஞ்ஞான்றே இயனூல் கற்றல் யாதுமாகாதென்பது நமக்கு மொக்குமன்றே ஆகலான் அவர்தாம் புகுதமஞ்ஞான்று தொட்டுநெடுங்கணக்கெழுவாய் நிகண்டிறுவாய்த்துணையுங்கற்று முற்றுங்கால் “வித்தின்றியங் குரந்தோன்றாது” என்னுமித் தொடக்கத்துலக மொழியும் ‘மாயையின்றியுலகந்தோன்றாது’ என்னுமித்தொடக்கத்து வேதமொழியுமாயவவ்விருவேறு மொழிகளானாக்கப்பட்டு நின்ற நீதிநூல் நிக

ண்டு நூல்முதலியவற்றுள் அமைந்து கிடந்த அவ்விருவேறு மொழி களேயுங் கற்குமுறையானின்றுகற்பவே அவையாவர்தம் மனம்பற்றி விடாதழுந்திக்கிடத்தலின் அங்ஙனங் கல்லாத மேனுள் அவர்மாட்டு அஃகிக்கிடந்தவவ்வியற்கையுணர்வு அங்ஙனஞ் சிறிது கற்றதுணை யேதானுஞ் சிறிது வளரப்பெற்று அங்ஙனங்கற்றற்கு மேனுளெல் லாம் பெற்ருர் முதலியோர் இம்மொழிப் பொருளிஃதிம் மொழிப் பொளிஃதென வுணர்த்தும் வழியிங்ஙனமாய செயற்கையுணர்வு அம் மேனுளொரு சிறிதுமின்மையின் அதனுன் ஐயப்பாடின்றி அவருணர் த்திப்போந்த வவ்வவற்றை யவ்வத்துணையே யுணர்ந்தமையப்பட்டு நின்றனவாய வம்மொழிகள் இங்ஙனஞ்செயற்கை யுணர்வொரு சிறி துநிகழ்ந்து நிற்றலான் அதுபற்றி மேற்கற்ருெழிந்து போந்த நூல்க ளுட் பட்டுக்கிடந்தவவ்விரு வேறுமொழியும் பற்றி அவர்க்கையப் பாடுநிகழும் அதுநிகழுமாறு, மேலவற்றியல்பு அவ்வத்துணையா மெனவமைந்து போந்தவச் சிற்றுணர்வுதிரிந்து மேனிகழ்தற் பாற்ருய பேருணர் வோடியைதற்குரித்தாயினும் அப்பேருணர்வு நிகழ்தற் குரியமேனுல்கல்லாதொழிதலின் ஆண்டு நிகழுமவ்வுணர்வு அச்சிற் றுணர்வுபேருணர்விரண்டற்கு மிடைநிலைப்பட்டுநிற்றலான் மேலமை ந்து போந்தன அத்துணையி னமையாது இழுக்கின்மையோ இழுக் கோ இழுக்கியையுமோ எடுத்தோத்தின்ருேவென விங்ஙனம் பலவாற் ருன் ஆண்டையப்பாடுநிகழு மாகலானும் அதுதானே யொழிவதன் மையானும் அதனுனதனையொழித்தற்குரிய இயனூல் கற்கப்பெ றின் அதுபற்றி அவற்றியல்புணரப்படுமெனக் கொள்க. அஃதிஃ தாகவேயா மீண்டோதிய வாற்ருன் அவ்விருவேறு மொழியுங் கற்று நீதிநூல் நிகண்டு நான்முதலியசெய்யுளுங் கற்று அவற்றை மனம்பற்றிப்பயின்ருர்க்கு அதனுன் ஏனைப்பரிபாடன்முதலிய நூல் கற்பினன்றித் தமிழ்மொழியுண்மையியல் புணரப்படாமையானும் அந்நின்ருங்கேநின்று அவைகற்றலாகாமையானும் அவைகற்றல். இந்நூல் கற்றலேயின்றி யமையாமையானும் இந்நூல்கற்றே அவ் விருவேறு மொழியும்பற்றி நிகழுமையப்பாடொழிந்து அதன்பின் பரிபாடன் முதலியனகற்று அதுபற்றி அப்பாடையியல் பெல்லாமுள் ளவா றுணர்ந்துகொள்ளப்படுமாகலானும் அன்னபிறவாற்ருனும்

அவைகற் பார்க்கு ஒருதலையான் இந்நூலின்றியமையாச் சிறப்பிற் றாய்வேண்டற் பாற்றென்றறிக அஃதிங்ஙனமென்ப தெமதாசிரியரெடுத்துக் கொண்டினிது விக்கிபருளி ஆய்தல் நாடலிரண்டு மொரு பொருண்மொழியோவென ஐயமுறுவார்க்கு அவ்வையமகற்றி அவற்றியல் பீண்டிஃதிஃதென்பதுதேற்றியருளுவார் ‘‘மொழிகளைப்பயின்று முறையானே யெழுத்து முதன் மூன்றனையுமாராய்ந்து உண்மை யெய்திபுத்திகைகூடற்கென உபதேசித்தருளினரென்பது, இன்னுமஃதத்துணையினமையாது ஈண்டு நாடலென்பது ஆய்தற்பொருட்டன்று ‘அவ்விருவேறு மொழிகளையுங் கற்றுளங்கொளப்பயிறல், எனவுபதேசித்தொழிந்தருளினரென்க. இவ்வுண்மையுணரமாட்டாத நீயிர் துரபிமானங் கொண்டு இதனையாராய்தற்குச் செய்யுளாராய்ச்சி கருவியன்று அதற்கிதுவேகருவி அஃதங்ஙனமே யவருமோதினர் ஆராய்ச்சியாவது தெளிவு ஏனையையம் அதன்பின்னன்றி முன்னிகழ்வதொன்றன்று என்றென்று ஏதேதோதெரிந்தார்போலிங்ஙனம் வறிதேகுழறினீர் அற்றேலீண்டு நும்மைவினவுதும் அஃதாமாறு நீயிர்செய்யு ளாராய்ச்சியெனவோதியதனுள் செய்யுளென்பதென்னை, அசைமுதலிய வுறுப்பிவையிவையென்பதூஉம் அவற்றதியையும் பிறவுமே அச்செய்யு ளாராய்ச்சி யெனின் நன்றேயோதினீர் அவ்வாராய்ச்சிக்குரிய உறுப்பியல்பும் அவற்றதியையும் பிறவுமேசெய்யுளாராய்ச்சி யெனின் நன்றே யோதினீர் அவ்வாராய்ச்சிக்குரிய அவ்வுறுப்பியல்ப்பும், அவற்றதியையும் அவற்றின் பன்மையுமென்றின்னோரன்ன வியல்பிங்ஙனமென வாராயுமவ்வாராய்ச்சியே நுந்தெளிவாகலானும் அவற்றியல்புதெரிதல் இங்ஙனமாகலானும் இம்முறையானே நுஞ்செய்யுளாராய்ச்சி யித்துணையினொழியுமே யன்றோ ஒழியவே ஆண்டுப்படும் வேந்தர் மாந்தர் முதலியமொழிகள் முறையே அரசர் மனிதர் முதலியபொருளென உணரும் அவ்வுணர்ச்சிபற்றி நிழும் நுமது தெளிவு இந்நூல்பற்றி நிகழப்பெறுதென்பது நுமக்கு மொக்குமன்றே அற்றேல் நுமதாராய்ச்சியென்னும் அம்மொழிபற்றி நிகழும் ஐயப்பாடொழிந்து தெளியுமாறுவேறின்மையானும் வேறுவிடுவிக்குமாறின்மையானும் எமதாசிரியர் உபதேசித்தருளியவாறே வழக்குஞ் செய்யுளுமாயவவ்விருவேறுமொழி

யுங்கற்று அவற்றை யுளங்கொளப்பயிறல் ஒருதலையான் வேண்டுமெ னக் கொள்க. அற்றிற்றிறெனப் புடைபடவொற்றி நுணுகி யாரா யும் நுண்ணுணர்வி யாதுமின்றுதன்மேலும் வற்றிய வோலை கலகலக் குமாறெப்ப ஆய்தலீண்டு அவ்விரு மொழிகளையுங் கற்று உளங் கொளப் பயிறல் என்னுமவ் வுபதேசமொழிப் பொருள் காணுங்கண் யாதுமின்றி ஆய்தல் தெளிதற் பொருட்டு எனவோத வறியாது ஆ ராய்ச்சியென்பது தெளிதற்கே பெயராகலான், ஆய்தற்கு முன்னர் ஆசங்கை நிகழுமல்லது அஃததன் பின்னர் நிகழ்வதொன்றன்று. ஆகலான் வழக்குஞ் செய்யுளுமாய்ந்தபின்னர் அவ்வாசங்கை யொ ழித்தற் பொருட்டு இந்நூல் கேட்கற்பாற்றென்பது ஏலாதென இவ் வாறின்னோன்ன குழறி யொழிந்தீரென்பது.

இனி யாமேலோதிப் போந்தவாறு பற்றி நீதிநூல் நிகண்டு நூன் முதலிபகற்று அவ்வச்சொற் பொருளிஃதிஃதென உணர்ந்தொ ழிந்த பின்னர் இந்நூலாயப்புகுந்து அவ்வச்சொல்லியல்பு பற்றி நிக ழும் செய்கை கருவிகளின் ஐயமறுத்தன் மேலும் பரிபாடன் முதலி யவற்றுட்படும் பலவேறு மொழிகளுள்வைத்து இம்மொழியுலகி யற்பொருளினுள் அகப்பொருட்டு இம்மொழி புறப் பொருட்டென் னும் அம்மொழித் திறம் பற்றி நிகழுமுட்ட றுக்கப்படும். அஃதிஃதா கலான் செய்யுளோடியைந்து கிடந்த மொழிகளுளுயர்ந்தோர் உல கநிகழ்ச்சிக் குரிமையுடைமைபற்றி வேறெடுத்துக்கொண்டு மொழியு மவ்வொருசார் மொழிபயிலும் பயிற்சியாப வழக்காய்தல்வெறு. இந் நூல்பற்றி யாயுமொழியியல்பு வேறு செய்யுள் மொழித்திறம் வே றெனக் கொள்க. அது திரிபை யமின்றி யினிது துணியுமாறு எம்தாசிரியர் ஆய்தல் ஈண்டு மொழிப் பயிற்சியென உபதேசித்தரு ளினரென்பது 'அது கிடக்க இனி அவ்வுரையுமது பற்றி யோதும் பிறவும் பொருந்தா தென்றீர். உரையாவது நூற்பொருள். நீயிரீண் டுரையென்றது, "ஆராய்ந்த பெரிய காரண" மென்பதனை: பிறவுமெ ன்றது "அது வினைத்தொகை, வழக்குஞ் செய்யுளுமாராய்ந்த பின்னர் இந்நூல் கேட்கற் பாற்றென்பது பெறப்பட்டது" என்பவற்றையே போலும் இவற்றுள் மேனின்ற தொன்றே யுரையா மேனையவிரண்டு

முறையாவன வல்ல வென்பது நுங்கருத்தாதல் நுமதவ்வோத்
தாற் பெறப்பட்டது. அஃதேல் அவை வேறென்னை கொல்லோ நூ
ற்பொருள் நூலினது பொருள் பிறவென்றது நூலின் புறப்பொருளெ
னப்படைத்துமொழிவீர் போலும். அது "உரையை யுரைப்பது முறை
யெனப்படுமே" என்றற்றொடக்கத்தனகற்று வல்லார்மாட்டுக்கேட்
டுத் தெளிந்து கொள்க, இன்னும் நும்மோத்திழுக்கிலவயிவை யெ
னத் தனித்தனியெற்றெற் றென்றெடுத்தோதுவோம். அஃதாயிரநா
வுள்ள வனந்தற்கு மரிதென்பதே தேற்றம். இருந்தவாற்றானிதுவுந்
தானேது மேதுவுக் கிழுக்கெய்திய வழிப் பிறிதோராற்றானேது
வோதலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

207 பக்கம் 3 கூறு. இதனுள் இருமுதலென்பது இறுவாயுள்
இன்னிசைபு பெறுதலின் தொகையாயிற்றென்றீர் எனவே அஃதவ்
வின்னிசையுப்பேறில்லாக்கால் தொகையன்றென்பது நுங்கருத்தா
தல் பெற்றாம். அற்றேலஃதாண்டுச் சென்றியையாக்கால் அஃதஃ
தாகாதென்றற் கெடுத்தோத்தென்னை யாதுங்காண்கிலம் தொகையி
யல்பெல்லாமுணர்ந்துணர்த்து நமக்கு மாத்திரையே அஃதஃதாகா
தாயினு நும்மொழித்தொழிந்தாரெல்லார்க்குமாகுமாகலான் நீயிரீண்
டத் தொகையியல்புணர்ந்து போதித்தலமையும் அது நிற்க.

இனி நீயிரோதியவாறே அஃதிங்ஙனந் தொகையாய் நிற்றலின்
அவரோதியவாறுபற்றியுமதுபக்கிசைத்தல் இசையாமைகளின் வே
றுபாடெல்லா மினிதுணர்ந்துடையீரென்பதூ உம்யா மினிதுணர்ந்
தொழிந்தாமென்பது அது நிற்க நீயிர்தொகையாய் நிற்றல் பக்கிசை
யாமைக்கேதுவென்பது வெறும்போலியாதலறிக. அஃதேலஃதே
துவின்றிப் போலியாதல் செல்லாதாலெனின் அற்றன்று "பக்கிசைத்
தலானென அஃதவ்வுரையோத்துட் பெறப்பட்டுக்கிடத்தலிற் செல்
லாமையாங்ஙனமென்றொழிக. இருந்தவாற்றானிஃதறியாமை யெ
ன்னுந்தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

208 பக்கம் 2 கூறு இதனுள் முதலாகக் கோடலானெனக்
கோடலானென்னு மேதுப்போலியாதல் மேலோத்தானுணர்க. இன்
னுமவருரையுரைப்புழி முதலுகையினானெனக்கோடலான் அது பக்

கிசையாமையா மென்றேதினீர ஓதுமிதனானே மேலோதியவாறே
முதலாகக் கோடலானெனக்கோடலான் அது பக்கிசைத்தலெனப்
பட்டுக்கட்ட குடீசப்பிரபாதநியாமாய் முடியுமாறு காண்க. முடிய
வே பக்கிசைத்தல் தொகைச்சொற்கியல் பன்மையும் பக்கிசையாமை
யதற்கியல் பென்பதூஉ நீயிருமுடம் பட்டோதியவாறாயிற்று ஆ
கவே நீயிரோதியது நமக்கு முடம்பாடன்றென்பதூஉமிதனானே
போதருமென்க அது நிற்க.

இனி இருமுதலென்னுந்தொகையினுள் இறுதிக்கண்நிற்பது
முதனிலைவினையெனப்படுமாயின் அது தனித்து நின்றங்ஙனமாவத
ன்றிப் பிறிதொன்றனோடியைந்து நின்றங்ஙனமாகாது. ஆகுமாயின்
அஃதவ்வியை பொழிந்து தனிமொழியெனவேபடும் படுமாயிற்றொ
கையாதல் பெறப்படா தென்பது தேற்றியருளுவார் "முதலென்
பது முதனிலை வினைப்பெயரெனப்படுமாயின் இருமுதலென்னுந்தொ
கைச்சொல் அங்ஙனம் பக்கிசைத்தல் பொருந்தாமையறிக" வென
உபதேசித்தருளினாரென்பது. இதனானே நமது இன்னியைபு பக்கி
சையாமை யிசைத்தல் களெல்லாம் போலியாயொழிந்த வாறுங்கா
ண்க. விரிப்பிற் பெருகும் அது நிற்க.

இனி அவ்வுரையுடையர் அடியாக்கோடலானென மேலுரைத்
துப்போந்ததூஉம் முன்னர் முதலினென்றது முதலுகையினானென்
றவாறென்றதூஉம் தம்முளொரு முடிபினவல்ல அவைவேறாமென்
றீர், அஃதேலஃதாமோ வன்றேவென வொருசிறிதாயு முறையானா
ய்குதும், அஃதாமாறு முதலுகை யென்னும் வினைப்பெயர் கையென
னும் இறுதிநிலையும் உகரச்சாரியையுங்கெட்டு முதலென முதனிலை
வினைப்பெயராய் நின்று ஏதுப்பொட்டாய வின்னுருபேற்று முதலின்
எனநின்றதென்பது பற்றியே யன்றே அடியாக்கோடலான் என மே
லுரைத்துப் போந்தவவ் வுரையுடையர் அற்றேல் முதலினென்பதற்கு
முதலானென்றுரைப்பதன்றி முதலாகலானென இங்ஙனமுரைத்தல்
யாங்ஙனம் என அவ்வுரைமுகமாணாக்கர்க்கு நிகழுமையமறுத்து
அங்ஙனமாயது இங்ஙனமாகலான் என்பது தேற்றுவார் "முன்ன
ரதனை மறித்தெடுத்துக் கொண்டு முதலினென்பது முதலுகையினா

னென்றவாறென்றோதினாரென்பது. முதனுகை முதலாதல் அடியாத லென்பன ஒரு பொருண் மொழியெனக் கொண்ட அவ்வுரையுடையார் கருத்து இஃதென்பது யாதுமறியாது, அவ்விரண்டுந் தம்முள்வே றெனத் திரியக் கொண்டீர் அஃதிஃதே பிறிதன்றென்பது அவ்வுரை யுணர்ந்தார் வாய்க் கேட்டுணர்ந்து கொள்க. இருந்தவாற்றானிது தோ ல்வித்தான மெய்தினீர் அஃதெப்தினெனென் றுணர்ந்தோதாதது வை கலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக.

208. 3 - கூறு இதனுள் சிவணுதற்கு வினைமுதல் மேற்போந்த வவ்விரண்டையும் பயின்றுவென்றீர் வினைக்கு வினைமுதல் ஓரேது வானன்றித்தானே படைத்துக் கொண்டோதலுமாமென்பது ஈண்டு நீயிரோதவே கேட்டனமல்லது யாமஃதித்துணையுங் கண்டுங் கேட் டுமறிந்திலம் அஃதிஃதொன்றோ, சிவணிய வென்னுமெச்சப்பெயர் ஆண்டு நிற்கு மியற்பெயரோடு முடிபாது ஆண்டாகுநமது புலவ ரென்னும் பெயரோடு முடிதலும் இன்னுமித்தொடக்கத்தெண் ணிறந்த பிறவுநும்மாற் கேளாத கேட்டனம். அதுகிடக்க.

இனி சிவணிய வென்னும் பெயரெச்சம் முடிதற்குரிய பெயர் ஆண்டு நின்ற வவ்வியற்பெயராகாது ஆண்டின்றியாயபுலவராமென் றீர். அற்றேல் நுமக்காசிரியரோத்தே வேண்டுமாகலான் ஆசிரியரிங் ஙனமுடித்தருளிய பெயரெச்சம் யாதேனும் யாண்டானு முளதா தல்வேண்டுமன்றே அஃதியாதுமின்றுதன்மேலும் அதற்கெடுத்தோ த்துமின்றேயன்றோ அஃதஃதாகவும் ஆட்சியெடுத்தோத்தென்பதி யாதுமின்றி நீயிர்தாமே போலிமுறையாற் புதுவது படைத்துக்கொ ண்டோதல் நுமக்கு மாத்திரைபேசாலுமாறும் எமதாசிரியருண்மை யானெடுத் தோதுமோத்து நுமக்குச் சாலாதவாறும்யாங்ஙனம் ஆ கலான் அது நும்மளவே யாமென்றொழிக அது கிடக்க.

இனி அதிகாரவேது எனவோரேது வெடுத்தோதினீர் அஃ தஃதாயின் நூலேது ஒத்தேது சூத்திரவேது முதலியவேதுக்க ளுமுளவாதல் வேண்டும் அற்றேலதற் கெடுத்தோத்தென்னை யொ ன்றுங்காண்கிலம். ஆகலானீயிர் தாமே படைத்தோது மோ த்தே அவ்வெடுத்தோத்தாமென்றொழிந்தனம் அது கிடக்க இனி

வழிநூலாசிரியன் சிவஞுதல் முதனூலேதுப்பற்றியென்ருே தலின் றியமையாதாகலானும்பயின்ருர்க்கெனின் அவ்வோத்தோ தாமை யாய்முடியுமாகலானும் அஃதிழுக்காமென்றீர் அற்றேல் நாலாசிரியன் நூல்கற்றவாறு பாயிரத்து ளெடுத்தோதல் வேண்டுமென்பதற் கெடுத்தேதன்னை யொன்றுங் காண்கிலம் இனி அஃதங்ஙனங்கோடு மேனுமாக்கியோன்பெயரே யென்னுது ஆக்கியோன்கற்பே யென் றெடுத்தோதல்வேண்டுமன்றே அஃதவ்வாருேதாமை யானும் அன் னபிறவாற்ருனும் மோத்துப்போலிபாதலறிக. இங்ஙனமாகவே நீயிரிந்நூலாக்கியோனை யிவ்வாறே யெம்மனே ரோடாப்புறத்துக் கோடல் கொடியதோர் பாதகத்தினும் பாதகமாய் முடியுமென்ப தி யைபுபற்றி மேலுமோதினு முன்னருமோதுதும் அல்லதூ உம்நீயி ரோதியவாறே யாசிரியன் சிவஞுதற்கு முந்துநூலே துவாமென அஃ தொன்றே கொண்டுரைப்பின் நீயிரிந்நூலாசிரியன் ஆசிரியர் அகத்திய ஞரிடைக்கற்றுப் புலவர் பிறரொடும் பயின்று ஐய விபரீதமின்றிமு ந்து நூலுணர்ந்து பின்புலநிறைந்தனனென்பது தோன்ற‘‘நிலத்தோடு கண்டு’’ என்ருேதப்பட்டதென்பதனுள் அவன் புலநிறைதற்குக் கா ண்டலேயன்றி நுமதாகுபெயராய நிலத்தோடு பயிறல் இன்றியமை யாது வேண்டப்படுவதொன்றென்பதுபோலியாதலறிக. அல்லதூஉம் நும தவ்வொன்ற வுரைக்குமுரையுள் அகத்தியன் பாற்கற்று அக்கற் றனபற்றி ஐய விபரீதமுற்றுப் புலவர் பிறரொடும் பயின்று அதுபற்றி ஐய விபரீதமுற்றுப் புலநிறைந்தன னெனவிங்ஙனம் ஆசிரியர் ஐய விபரீதமறுமாறுநாடி நீயிராண்டோதிய வோத்துமேல் நுமது காண் டிகையுள் முந்துநூல் கண்டென்பதற்கு அகத்திய முதலிய முந்து நூலை ஐய விபரீதமறுமாறு அவர் மாட்டுக்கற்றறிந்து என்பதனேடு முரணி நிகழுமையப் பாட்டிற்கேது நுமது விபரீதவுணர்வே யா மென்றறிக என்னை ஈண்டு அவன் ஆசிரியனகத்திய னெருவன் மாட் டேகற்று அக்கற்ற நூல் பற்றித் தமக்கு நிகழும் ஐய விபரீத மறு மாறு பின்புலவரொடு பயின்றனனென்ருேதப் படுதலானும். ஆண்டு அவ்வகத்தியன் முதலிய வாசிரியர் பலர்பாலும் ஐய விபரீதம் பின் னிகழாது அப்பொழுதே அறுமாறு கற்றனனென்ருேதப் படுதலா

னும் அன்ன பிறவாற்றானுமென்பது. ஆகலான் ஒருழி ஒருவன் பாற்
கற்றனனெனவும் பிறிதோருழிப்பலர் பாற்கற்றனனெனவும் ஓது
தல் விபரீதமாதலறிக. அஃதிஃதாகவும் அற்றிற்றெனப் புடைபட
வொற்றி நுணுகி நோக்கு மந்நுண்ணுணர் வின்றி யிங்ஙனமோ
தினீர். அதுகிடக்க இனி எமதாசிரியராண்டேதுவின்றி யுபதேசி
த்தருளிற்றிலர். அஃதேலங்ஙனமாயவவ்வேது என்னை யெனின்
நீயிரீண்டது சாதித்தற்கோதிய நுமதேது, எதுவோ, அன்றோ
வென ஆயுமுறையானுய்த்தொழிந்த பின்னர் அஃதோதுதும் அஃ
தாமாறு இந்நிலவுலகின் கட்புகழெய்தற்குரிய வேதுக்களனைப்பல
வேறுள அவற்றுளொன்று பற்றி ஒருவனதனைப் பெறுமாயின் அஃ
தியாங்ஙனமென முன்னரொருசிறி தாயுமுறையானுய்குதும். அஃதா
மாறு ஒருவனீகை பற்றி அப்புகழெய்துமாயின் இன்னநாடு இன்னந
கர் இன்னகுடியிற் பிறந்த வின்னன் எவற்றையு மீயுமுறையானிறப்ப
வீகின்றனன் என்னு மவனியல் பெல்லா மறிந்தானொருவன் அவனை
மீக்கூறலும் இனி அவனியல் பறியானொருவன் மீக்கூறாமையு நமக்
கு மொக்குமன்றே. அங்ஙனமாதற்கேது அவனியல் பறிதலுமறியா
மையுமே வேறல்லவென்பதெல்லார்க்கு மொப்பமுடிந்தவாறொப்ப ஈ
ண்டிந்நீர் வரைப்பிற் பல்புகழ் நிறுத்தலாவது யாங்ஙனமென வாயுமு
றையானுயுங்கால் இந்நூலையோது முறையானோதியுள்ளவாறுணர்ந்து
அவ்வுணர்ச்சிபற்றித் தமக்கிந்நூல் கல்லாத வழியெல்லாம் தம்மறி
வஃகிப் போய்ச்சொல்லியல்பு முதலிய வெல்லா முள்ளவாறறியாமை
யுமிது கற்றல்பற்றி மொழித்திறங்களின் முட்டற்று நூலெல வற்றினு
நுண்ணி தாய்நுழையு மறிவாற்றல் கைவரப்பெற்று அது பற்றி அவ்
வியல் பெல்லாமொருங் குடைப வாசிரியரது அரியபெரிய சீரியமெய்
யறிவாவது.

இப்பேரியல்புடைத்தென வதனியல்புள்ளவாறுணர்ந்துமீக் கூ
றலும் இந்நூல்கல்லாமையான் அவற்றியல்புணருமறிவாற்றல் கை
வரப்பெறாதார்க்கு அப்பேரியல்புணரப்படாமையின் அவர் ஆசிரிய
ரைமீக்கூறாமையுமெல்லார்க்கு மொப்பமுடியுமாறுங்காண்க. ஆகலா
ன் இந்நூல்கற்று அதுபற்றி ஆசிரியர்பேரியல்புணர்ந்துடையர்தாமே

ஆசிரியரை மேன்மேலுமீக்கூறுவரல்லது அவ்வழிப்படாதார் ஆசிரிய ரை மீக்கூறலாகாமையின் அவ்வழிப்படுபவரே ஆசிரியரைமீக்கூறற் குரியராமாறுகாண்க காட்டித்தோற்றியென்பன குறிப்பேதுவாய்நி ன்று அதனைச் சாதித்தவாறு பற்றியுமஃதற்றேயாதல் தெற்றென விளங்கும் இனி அங்ஙனங்காட்டித்தோற்றுவியாக்கால் அஃதோரே துவின்றியுமாமெனப்பட்டு வழுவாதலறிக. இருந்தவாற்றானாசிரியர் பேரியல்பிஃதென அவர் தம்மையுயர்த்தோதுவாராய் நீர்வரைப்பென வெடுத்தோதப்பட்டு முன் வந்தோரையே எமதாசிரியர் பயின்றாரெ ன மேலெடுத்தூக்கொண்டுபதேசித்தருளின ரென்பது. அற்றிற்றிற் றென விங்ஙனமாயுமுறையானுயு நுண்ணறிவேயன்றியாதும் பெண் ணறிவுமின்றிமனம்போயவாறே போந்து குழறுநீயிர்தாமோவெமதா சாரியருபதேசித்தருளியவிதுவுமதுபற்றியோதிய பிறவுமியையாவெ ன்றோதற்கு வல்லுநர்தாமென்றொழிக இங்ஙனமாகவே நீயிர் விளை யாட்டு மக்களும் நகையாடுமாற்றானிப்போலிகளைப் பலவாற்றானு மேலும் மேலும் விரித்து விரித்திங்ஙனம் போலிவிருத்திசெய்து களி ப்பது சிறுமியர் சிறுசோறட்டுண்டுதேக்கித்தம்முட் களிக்குமாறொக் குமென்றொழிக. இனி ஆசிரியர் நுமது செந்தமிழியற்கை சிவணு தற்கு நுமது முந்து நூல் யாது மேதுவன்றென்பது மேலோதினும் அல்லதூஉம் இன்னும் அதுபற்றி நிகழுந்தடைவிடையெல்லாம் விரி த்தெடுத்துக்கொண்டு மெய் கண்டபாடியத்துள்ளுமோதினும் இயைபு பற்றி முன்னருமோதுதும் இருந்தவாற்றானிது தோல்வித்தான மெ ய்தாதானை அஃதெய்தினுயெனவோதலென்னுந்தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

209. 2. கூறு இதனுன் நமதுவமையேது முதலிய வேதுக்க ளுள் யாதுமின்றி பொருகருத்தாவின் செயப்படுபொருள் பிறிதொரு மொருளோடியைதல் யாது மேலாமையிற் செந்தமிழெனபதனை நில மென்பதனோடு கூட்டுகவென்றல் இழுக்காமென்றீர் நீயிரீண்டோதிய வாறே யதனை நிலமென்பதனோடு கூட்டுகவென வெமதாசிரியருபதே சித்தருளுமாறுண்டியாண்டு மின்மையறிக. இவ்வாறு நீயிர் புதுவது படைத்தோதல் புதுவதொன்றன்று ஆகலின் யாமுமீண்டு புதுவது மொழிதலொழிவமாயினுமென்க.

இனி மேலோதும் போலியேதுக்களே யன்றி ஈண்டுவமையே து முதலிய வேதுக்களென்றீர் நீயிரிவ்வாறோதுமேதுக்களெல்லாம் போலியாதல்மேலோது மாற்றானறிக. அதுகிடக்க. இனியெமதா சிரியர் செந்தமிழோடுங்கூட்டுக வென்றருளினரல்லது செந்தமிழோடு கூட்டுக வென்றருளாமையான் அங்ஙனமாயவோத்து யாண்டும் பிறு ண்டுமின்மை தெற்றெனவறிக ஆகலான் அஃதாகாசத்தாமரை மண முடைத்தென்ப தொப்பதோர் வெறும் போலியாயொழிந்த வாறு காண்க. இருந்தவாறறானிது பிறனேதிய பொருளை அனுவதிக்கமாட் டாமையென்னுந் தோவித்தானத்தின் பாற்படு மாறறிக.

இனி ஆபிருமுதலில் செந்தமிழியற்கை சிவணியவெனக்கொண் டு கூட்டியுரைத்தாரையிழுக்கோதி அங்ஙனமேதாமது செய்தல் மேற் கோள்மலைவாமென்றீர் "பொய்யர்க்குப்பொய்யாய்ப்பொய்யாயினன்" என்பதொப்ப நீயிர் செந்தமிழோடு கூட்டுக வென்னும் நுமதில் பொ ருளைச் சாதிக்குமாறு இதுவுமோரில் பொருளெடுத்துக்கொண்டனீர் நுமது மேற்கோண் மலைவென வொன்றுளதாகல் யாந்தருக்க நூல்மு லியவற்றுள் யாண்டுங் காணமைமேலும் அது கேட்டு மறிந்திலோம், சொல்லுதல் யார்க்கு மெளிய' வென்பதனால் நீயிரிதனை யிங்ஙனமெ ளிதிற் படைற்றோதினீர் அது நிற்க.

இனியிஃதீண்டு எழுத்திழப் பெனக்கொண்டு செந்தமிழோடுங் கூட்டுக வென்பதே நுமது மேற்கோளெனக் கோடும் கொண்டு இனி நுமது மலைவாவதி யாதென ஈண்டொரு சிறிதாய்ு முறையானுய் கு தும். அதுவருமாறு மலைவாவது ஒரு நிகரவாயுள்ள பல்லவற்றுள் ஒன்றிற்றுணிவு பிறவாமை யானிகழும் ஐயப்பாடு ஈண்டு அங்ஙனம் பலவேறுவனயாது மின்மையின் நுமது மேற்கோண்மலைவாவதியாங் ஙனம், மேற்கோள் பலவேறுகலான் அற்றுட்டுணியப்படுவதியாதோ வென்றன்றோ மலைவுளதாதல் வேண்டும் எமதாசிரியர் நிலமென்பத னைச் செந்தமிழோடுங் கூட்டுகவெனவுபதேசித்தருளியதே நுமது மே ற்கோளாயினும் அஃதொன்றேயன்றி அன்னபிறவு முளவாயாண்டுப் பல்வேறின்மையின் நுமதம் மேற்கோண் மலைவாமாறி யாண்டைய தென்றுழிக. அஃதஃதன்று கொண்டு கூட்டியிடர்ப்படுபவென்றோதி

யொழிந்து செந்தமிழோடுங் கூட்டுகவென்றோதல் மலைவன்றோவெனின் அற்றேல் ஒருழிக்குமரியையாறென்றோதியொழிந்து பிறிதோருழிஅது மலையெனவும் நமதொன்றுதவுரையாகிய காண்டிகையுள் ஆசிரியர் பலர்பாற் கற்றாரென்றோதி யொழிந்து மறித்து நமதொன்றவுரைக்கு முறையுள் அவர். ஒருவர் பாற் கற்றாரெனவு மலையுமாறு வருமின்னோரன்ன வெல்லாம் மலைவாகாத நமக்கு மலைவின்றுமாறோதியது மலைவாதல் எமக்கோர் வியப்பன்றென்றொழி.

அஃதன்று அது கூட்டப்படுமோபடாதோவென ஒருதலைப்படாது பலதலைப்படுதலே ஆண்டு மலைவாலெனின் நல்லதே சொல்லினீர் அதற்கெடுத் தோத்துண்மையானும் அன்றிச்சிட்டாசாரமுண்மையானும் அஃதியாது மாண்டு நிகழாமையின் அது பற்றியு நுங்கருத்து நிரம்பு மாறின்மையறிக. இன்னு நுமது ஒரு வினைமுதல் வினை நுமது உவமையேது முதலியவேதுக்களுள் யாதுமின்றிப்பிறிதொரு பொருளோடியையுமென்றலேலாமையின் அது கூட்டுதல் பொருந்தாதென நிகழுமொரு பிறர் கூறும்பக்கமாயினுமாவதல்லது ஆண்டு மலைவாமாறியாண்டையதொன்றொழிக, அது நமது போலிமேற்கோண் மலைவுபற்றி சித்தசாதனமாமாறு அவ்வியல் புணர்ந்தார் மாட்டுக் கேட்டுணர்ந்து கொள்க. அகக்கருவிபற்றி அறிதினுணரப்படும் ஒலிவடிவாய எழுத்துப்போலாது புறப்பொறி பற்றி யெளிதினுணருமாறு கண்கூடாய்த் தோன்றும் வரிவடிவாய வவ்வெழுத்து மொழியின் எழுத்தொழியாதோ தவறியு மறிவியாது மின்றி யிங்ஙனமெழுத்திழுந்தோதிய நீயிர் அகக்கருவி பற்றி யரிதினுணரப்படு மொழிப் பொருளுணருமுணர்ச்சி வாயிலுடையீர் தாமென்றொழிக. இன்னும் நீயிரிவ்வாறு குழறுங் குழறுபடைகளெண்ணிறந்தன வென்பது மேலாண்டாண் டோதினும். முன்னருமோதுதும். இருந்த வாற்றானிது பயனொடுபடா தவோதலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

இனி ஒரு கருத்தாவின் வினையின் செயப்படுபொருள் யாதுமேதுவின்றிப்பிறிதொருபொருளோடியையாதென்றீர் எனவே நுமதவவேதுக்களுள் யாதானுமொன்றுள் வழியொருகருத்தாவின் வினையின்

செயப்படுபொருள் பிறிதுபொருளோடியையுமென்பது பெற்றும் நும துவமை யேது முதலிய வேதுக்களெல்லாம் போலியாயினும் நும் போலி முறைக்கேற்குமாறு அவ்வேது உளதாதலுமீண்டெடுத்துக்காட்டுதும். அது வருமாறு இப்பின்னூலுரூன்றற்கு மூலமாய் நின்றவம் முன் னூருன் பிறநிலங்களுட்டோன்ருது இச்செந்தமிழ்நிலத்துட் டோன்றலான் என்பதாம், அஃதேல் முந்துநூலெனவே செந்தமிழ் நிலத்து முந்துநூலென்பது தானேபெறப்படுமாகலான் செந்தமிழ் நிலமெனவங்ஙனங்கிளதோதாது நிலத்து முந்துநூலெனப்பொதுமையின் வைத்தோதின் நிலம் பொதுமொழியாகலான் செந்தமிழென்னு மவ்வடையாண்டைக்கு வேண்டா போலுமெனின் அற்றன்று அது பற்றி பாடைநிலம்பலவேருகலானும் அவ்வப்பாடைநிலத்து அவ்வப் பாடையுட்டோன்றிநின்ற முந்துநூல்பலவேருகலானும்இஃது அவற்றுள் யாதோவென ஐயப்பாடு நிகழுமாகலான் அவ்வையப்பாடொழித்தற் பொருட்டுச் செந்தமிழ் நிலமெனவடைகொடுத்தல் ஒருதலையானின்றி யமையாது வேண்டப்படுமாகலானும் அங்ஙனமொருதலையானிகழுமையப் பாடொழித்தற்குரித்தாய் ஆண்டுப்படுவன வேறின்மையானும் அன்னபிறவாற்ருனுமென்பது, ஆகலான் நும தொரு கருத்தாவின் வினையின்செயப்படுபொருள்? பிறிதொருபொருளோடியைந்து கோடற்கு நுமதுவமையேது முதலிய வேதுக்கள் யாதுமின்றென்றல் போலியாயொழிந்தவாறு காண்க. இனியிஃதிவ்வாருேதிய நீயிர் ஒரு கருத்தாவின் செயப்படுபொருளும் வினையும் பாண்டியன் முதலிய பிறகருத்தாக்கள் பலவற்ருேடுந்தனித்தனி சென்றியையுமெனக்கொண்டோதற்கு நுமதுவமையேது முதலிய வேதுக்கள்யாவை இந்நூல் நுண்பொருளெல்லாம் எவர்க்குமெளிதின் விளங்குமாறு விரித்தோது நுப்போலிவிருத்தி ஆண்டவ்வுவமையேது முதலிய நும்போலியேதுக்கள் யாதுமின்றியமைதலும்எமதாசிரியரருளியவவ்வுண்மையோத்துஅவ்வேதுவின்றியமையாமையுமாயவிவற்றிற்கு நுமதுவமையேது முதலியவேதுக்கள் யாவைகொல்லோ. அஃகஃதன்று இந்நூல்புலவர்க்கசேற்பித்து அரங்கேறும்வழி பாண்டியனேனைப்புலரோடு தானுமொரு புலவனுய் வைகற்குரியவேது, இன்றியமையாமையானும் இனிஅரங்குபலவேரு

கலான் அவற்றுள் அக்கவியேறு மாங்குயாதோவென அஃதொருத லைப்படாது பலதலைப்படுமாகலானும் இஃதொழித்தொழிந்த திருவி ற்கு மஃதொக்குமாகலானும் ஆண்டேட துவின்றென்பது செல்லாதாலெ னின், அற்றன்று இவைதாம் உவமையேது பொருளேதுமுதலிய நும தேதுக்களுள் யாதுமல்லவாயினும் அவையும் போலியாதலொருசிறி துகாட்டுதும் அஃதீது, பாண்டியன் அப்புலவருளொருவனெனப்படா னென்னினு மிழுக்கென்னை, யொன்றுங்காண்கிலம் அஃதஃதன்று இரு வேறு புலவர்க்கிடையேயொருபாற்சாபாது நின்றுகொண்டு அவர் அந் நூலது போக்கின்மையுண்மைகள் நோக்கியொரோவழிமாறிக்கூறின் அற்றன்று இற்றேயென வவற்றதிபல்புணர்ந்தோதி அவரை நடாத் து முரிமையுடைய அவ்வரசற்கு அப்புலமைத்திறமின்றி யமையாது வேண்டப்படுமாகலான் அஃதாண்டுச்சென்றியையாக்கால் அவனொ ருபுலவனல்லனுப் முடியும், அற்றாகலினன்றேயெனின் அற்றற்றன்று அற்றற்றேல் நுமது புலவரைநடாத்து மவ்வரசர் பெரியோரைத்துணை க்கோடல்வேண்டாவாகலானும் அஃதாயின் அஃதொருதலையான்வே ண்டப்படுமென்றெழுந்து நின்றவவ்வதிகாரம் போலியாய் முடியுமா கலானும் தன்னுலகுயிரெல்லா நன்னெறிப்படுமாறு நடாத்து மவ்வர சன் அது நடாத்தற்கேதுஅந்நெறி யெல்லாமுழு தொருங்குணர்ந்து அவ்வுணர்ந்தவாறு அவற்றைஅவ்வரசற்குபதேசிததருளும் பரமதேசி கராய ஆதிசைவருபதேசமொழிபற்றியே யாம் அதுபற்றியன்றே அ வர்தமக்கு "லோகாசாரியர்" என்னுமப்பெயர்வழக்கு நிகழுமெனச்சி வாகமங்களோதுதலானும் அங்ஙனமன்றியவர்தாமே சுதந்தர வறி வாற்றலுடையராய் நடாத்தற்குரிய ரெனின் அவ்வோத்துப் போலி யாயொழியுமாகலானும் அன்னபிறவாற்றானும் மது போலியாதலறிக. அல்லதூ உம் ஒருநூலாக்குமந்நூலாசிரியர் அதனையோ ரரசனரங் கின்கண் ஓரறிஞனேன்று கொள்ளுமாறுபுரியின் அதுபற்றியே யந் நூல் விசேடநூலெனப்படுமாகலானும் மீண்டிந்நூலாசிரியர் இந்நூ லாக்கியருளுமஞ்ஞான்றின் அரசொருவரன்றி மூவருளராகலானும் அம்மூவரங்கினுள்வைத்து இந்நூலேறுமங்கு எவரரங்குகொல்லோ வெனவும் அவ்வாறேயஃதேன்று கொள்ளுமறிஞரும் ஒருவரன்றிப்

பலருளர், ஆகலான் அவருள் இந்நூலையேன்று கொண்டவறிஞ
னெவன் சொல்லைலாவெனவும் இவ்வாற்றான் இந்நூலாய் வார்க்கு
ஐயப்பாடு நிகழுமன்றே யவற்றை நிகழாதொழித்து அவர்தம்முள்
அரசனிவன் அறிஞனுமிவன் எனவினிது கிளந்தெடுத்துக்கொண்டு
தேற்றுவார் முறையே பாண்டியனவையத்து அதங்கோட்டாசா
ற்கு எனஇவ்வாறு விதந்தெடுத்தோதினரென்பது. இப்பொருள்
காணுங்கண் பாது மின்றி, பேணைப் புலவரோடு அரசனுமொரு புலவனு
தல்வேண்டும் புலவரும் பலருளராதல் வேண்டும் எனவிவ்வாறு நீயிர்
புலம்பின்யாமே லோதிய பொருளஃகி யொழிதலின் ஒருதலைபா
ஞெதற்குரியன வோதப்படாமையும் ஓதவேண்டாதன வோதப்படு
தலுமாயிவ்வாறு இழுக்குப் பலவேறுதல் காண்க. அதுகிடக்க
இன்னும் அங்ஙனமன்றி அது வேண்டு மாலெனின் அற்றேல்ஈண்டு
நும்மை வினவுதும் அதுவருமாறு ஈண்டெல்லை நான்குமெடுத்
தோதா தொழிதலும் யாப்பணிகாடலோதாமையும் அன்ன பிறவு
மன்னவாகலான் அவையீண்டோதாமை குன்றக் கூறலாமன்றோ நீயி
ரோது மவற்றினும் இவை இன்றியமைபாது வேண்டப்படுவன வாக
லான் இன்றியமையாதன இன்றியமைதலும் இன்றியமைவன இன்றி
யமையாது வேண்டப்படுதலும் போலியாகலான் அவற்றைவிடுக்
குறப்புகுத்தியிடர்ப்பட்டுரைத்தலாற் போதும் பயன்பாது மின்மை
யறிக. ஆகலான் அவர்பிறருரை செய்தவாறேப்பத் தாமுமுரைசெய்
தொழிந்து அஃதறியாது அவ்வுரை செய்தாரையு மிழுக்கோதின
ரெனவிவ்வாறு நீயிரோதல் நுமக்கே இழுக்காய் முடிந்து கிடத்த
லான் அதுபோலியென்பது இனியாயினுமறிந்து கொள்ளுக. இத
னுண்நீயிர்கொண்டுகூட்டியல்பு அதுகூட்டாவியல்பு மேற்கோண்டலைவு
அதுமலையாமை யென்பவற்றியல் பெல்லாமுழுதொருங்குணர்ந்தோ
தினீரென்பது யாமுழுதொருங்குணர்ந்தோதினுமென்பது. அதுநிற்க,
நாடி கண்டு எண்ணி தொகுத்தானெனக்கூட்டி யொருவினைமுதல் வி
னையாக்கியுரைபபார் அதுதொகுத்தற்கு நாடலொன்றேயமையும், இன்
னுமாயிருமுதலில் நாடிச்சிவணுதற்கென வாற்றெழுக்குப் படவை
த்து அப்பேரேதுவால் நாடிச்சிவணுதற்கென விங்ஙனம்யாது மிடர்ப்

181106.

பாடின்றியுரைப்பதுளதாகவும் ஆயிருமுதலிற் செந்தமிழியற்கைசிவ ணியநிலமெனக் கொண்டு கூட்டிச்செந்தமிழ் நாட்டிற்கியைந்த வழக் கிற்கு அச்செந்தமிழியல்பாதலும் அதற்குத் தமிழ்கூறுநல்லுலகமும் என இங்ஙனமொன்றற் கொன்று ஏது எடுத்துக்காட்டு மிடர்ப்பாடு ண்மைபானும் இனிநூன்முகமாணுக்கர்க்கு நாடிச்சிவணுதற்பொரு ட்டு நூலாசிரியர் கண்டு எண்ணி தொகுத்தருளினரென வ்வாறு இருவினைமுதல் வினையாக்காது அவ்வாறு ஒருவினைமுதல் வினையாக் கியிடர்ப்பட்டன ரென்பது தேற்றி யருளவும் அல்லதூ உம் கூட்டியு ரைத்தலுங் கொண்டு கூட்டலுமெடுத்தோத்தாயினும் அங்ஙனங் கோடல் மேலுரைத்தாங்குரைத்தற்கியைபில்வழியேயாம் அஃதுள் வழி அஃதாவதன் றென்பது தேற்றியவளவும் இடர்ப்படுப வென வுபதேசித்தருளினரென்பது அஃதிஃதென விந்நுண்பொருளறியும றிவின்மை மேலும் ஆண்டுச்செந்தமிழென்பதியற்கை யென்பதனோ டியல்பானியைந்து நின்று அந்நின்றாங்குநின்று பொருள்பயந்தவ்வி யைபொழியாமை மேலும் செந்தமிழ்நிலமென முன்னருஞ் சென்று செயற்கைபானியைத்துக் கொண்டுரைத்தருளிய வுண்மையுரையோ த்தியல் பறியுமறிவியாது மின்றி அது முன்மொழியோடு சென்றி யைந்து நின்றுபொருள் பயக்குமேனும் அஃதத்துணையின் அமையா து மேலியைந்துநின்ற அவ்வியைபு மொழியாது ஆண்டுமியைந்தாங் கியைந்துநின்று பொருள்பயக்குமதுவும் பிறமொழியோடு சென் றியைந்து பொருள்பயக்குங்கால் அத்துணையேயாய் மேலே இயைபு ஆண்டின்றி விண்டொழியுமதுவும் தம்முளொன்றெனத் திரியக்கொ ண்டு நியாயநூன் முறை முற்றும் முற்றுணர்ந்தாரொப்ப அபிநயித் துக்காட்டி மேற்கோள் மலேவாய் அஃதிழுக்காயிற்றென நீயிரோதி யது சாலவியக்கற்பாலதா மென்றொழிக. இருந்தவற்றான் இது நாணுதலென்னுந்தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

209-3. ங்கூறு இதனுள்நிலமென்பது செந்தமிழ்நிலத்துமொழி அஃதாகுபெயர் முந்துநூலென்பது அதனோடு முற்பட்டுத் தோ ன்று நூல் அஃதகத்திய மென்றாரென்றீர் அஞதியே விதைபி னுள் இலேமுதலிய வனைத்து மடங்கியுளவாயினும் அவைபின்னர் வரு

முறைபற்றி அம்முனை முதலியவனைத்தும் ஒன்றன் பின்னொன்றாயுள வாய்அதன் பின் கனியுளவாவன வன்றி அவையெல்லாம் ஒருஞான் றின் ஒருங்கேவுளவாவனவல்ல. அஃதொப்ப எல்லாச்சொல்லும் அவை வழங்கு மவ்வழக்கும் நூலும் அனாதியேயுளவாம் ஆயினு மவை தோன்றுங்கால் முறையானே மொழிமுதலியமூன்றும் ஒன் றன்பின்னொன்றா யுளவாதல் எல்லார்க்கு மொப்ப முடிந்தது அங் ஙனமன்றி மொழியுநூலு மொருங்குளவாயினவென அவரோதலே லாது மொழியெல்லா மனாதியேயுளவாகலான் அவ்வாறுவழங்கு நூலு மனாதியாமென்னு நீயிரீண்டு வேதசிவாகமங்களனாதின்றீர்; அவையவ்வாறனாதியாமென அவ்வேதாகமங்களுளோதப் படாமை யானும் அல்லதூஉம் அவற்றியல் புள்ளவாணர்ந்து, அவ்வுணர்ந் தவா றுணர்த்தியருளிய ஆசிரியர் அாதத்தனர் முதலிய அடிப்பட் டுப்போந்த ஆன்றோர்க்கும் அவையவ்வாறுதல் உடம்பாடன்மையா னும் அன்றியு மவ்வாசிரியன் மார் தாமாக்கு நூல்களுள் ஓரோவழி அ வை யவ்வாறோதப்படுவதூஉம் உபசாரமேயன்றி யுண்மையன்றென் றோது தலானும் அன்னோரன்ன பிறவாற்றானு நுமதோத்துப் போலி யாமென்றொழிக அது நிற்க.

இனி உடல் ஒழிந்ததாலோவெனின் அதனோடு முற்பிற்பா ன்றித்தோன்றிய உறுப்பொழியுமாறு வேறோதவேண்டா அஃதொ ப்பமேலோதிப வாற்றான் நுமது நூல் அனாதியன்றென்று முடிந்தது முடியவே அந்நூலுறுப்பு மங்ஙனமேயாகலானும் விடுக்குமாறு வேறின்மையானும் நும்மோத்தேனையவும் போலியாதல்தெற்றென வறிக.

இனித்தோன்று மென்றல் எல்லார்க்குமொவ்வாமையின் அஃ தேலாதென்றீர்; நீயிர் இயல் நூன்மூலையொருகாற் கண்டுடையீராயி னும் இதன் மூலையின் மூலையுங் கண்டாதல் கேட்டாதலறியாது அஃ தறிந்தார்போல் அதனியல் பெடுத்தோதல் நும்மோகமூலமாமென் றொழிக,ஈண்டைச்சொல்லெல்லாம் இனிதுவிளங்காமைமேலு நுமது மேற்கோள் மலைவு முதலிய வடங்கற்கு உவமைக்கண் வித்துளதா மாறொப்பது பொருளின் கட்காணப்படாமையின் அதுபோலியா

மென்றொழிக; இஃதறியு மறிவுயாதுமின்றி "கூட்டுக வென்றோதி பொழிந்து கொண்டு கூட்டியிடர்ப்படுப என்றோதல் மலைவெனக் கொண்டநும்மலைவாவது ஈருழியுங்கூட்டல் என்னுமச்சத்த வொப்புமை பெறப்படுதலின் கூட்டிபோதி யொழிந்து அதுகூட்டலாகாதென்பதே போலும் இதனானே (கற்றதூஉமின்றிக் கணக்காயர் பாடத் தாற்பெற்றதாம் பேதையோர் சூத்திரம்--) என்னுமிலக்கணத்துக்கு நீயிர் இலக்கியமாயினீரென்பது, இன்னு நீயிரிவ்வாறே ஆசிரியர் நச்சினார்க்கினியனார் ஓதியகருத்து இஃதென்றறியு மறிவுயாதுமின்றி நுந்தூலபுத்திபற்றி வழக்காவது ஒருசார் மொழிகள் தோன்றிய ஞான்றே இஃதறத்தை நுதலிற்று, இன்பத்தை நுதலிற்று பொருளை நுதலிற்றுஎன்றாற்போல அறியவருவதே யாமென்றீர் அவ்வாறு தோன்றுமஞ்ஞான்றே அறிபவருமாயின் "வழக்கெனப்படுவதே"ன்னுஞ் சூத்திரம் போலியாயொழியுமாறு காண்க; அதுகிடக்க. இனி நூல் வேறு வேதாகமம் வேறெனக்கோடும் ஆகலான் அஃதீண்டைக் கேலாதாலெனின் அற்றன்று முதல்நூல் வேதாகமமேயல்லது வேறல்ல ஆகலானும் அந்நூலங்ஙனமேயாயின் நுமது நூல் அங்ஙனமாமென்பதோதவேண்டா ஆகலானும் அன்ன பிறவாற்றானும் அதுவும் போலியாதலறிக. அதுகிடக்க

இனிமொழியு நூலுமொருங்கு தோன்றின என்றார் என்றீர் அவ்வாறு எமதாசிரியர் யாண்டும் யாது முபதேசித்தருளினரல்லர் இனி உடன்றோன்றின வெனவே உபதேசித்தருளினர் ஆகலான் அஃதுடன் ஒருங்குஎன்பவற்றின் வேற்றுமையுணராதார் கூற்றேயாமென்றொழிக அதுகிடக்க. இனிப் போலிமுறைபான் எஞ்சாதெமதாசிரியர் பொருளெல்லாம் இழுக்கோது வான்புகுந்த நீயிர் ஆண்டாண்டு அவற்றுள் ஒருசார இடையறவு படுமாறு எடுத்துக் கோடவிழுக்காமென்பதறிக நீயிரீண்டு இடையிட்டொழிந்தவற்றின் மூலையின் மூலையுமறியகில்லீர் அறிந்தீராயின் ஆண்டும் யாதானுமோர் குழறுபடை குழறியொழியாதொழியீரெனக. நீயிர் பொருளியல்பிஃதென்றறியு மறிவுடையீராயினன்றோ பொருளுவமைகளெடுத்தோது மறிவுடையீராவீரென்பது, ஆகலான் நுமதுவமை போலி

யாயொழிந்த வாறொப்ப நும்பொருளும் போலியாயொழிந்தவாறு காண்க. இருந்தவாற்றானிது பிறன் மதத்தினை யுடம் பட்டுக் கோட லென்னுந்தோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக.

260-2-ங்கூறு இதனுள் சிவணிப மொழியோடென்னினும் சூத்திரம் அமையுமாகலான் நிலமென்பது ஆகுபெயரென்பது இழுக்காமென்றீர் அற்றேல் ஈண்டு நும்மை வினவுதும் அதுவருமாறு செந்தமிழியற்கை சிவண் புலவரோடு என்னின் நுமது சூத்திரமமையாது கொல்லோ அவ்வாறு அமைவதாகவும் நீயிர் நிலமென்பதனை இடர்ப்பட்டு ஆகுபெயரெனக்கோடலெற்றுக்கு, நுமக்கு இஃதமையாதாயின் எமக்கு மஃதமையாதென்றொழிக. அல்லதூஉம் அதனை சிவண் புலவரொடும் எனவும் சிவண் புலவருடன் எனவும் இன்னுமித்தொடக்கத்தாற் பலவாற்றானும் யாத்தோதினும் அமையுமாறறிக. இன்னு நுமது அவ்வாகிய பெபரையுந் தென்குமரியாயெல்லை தென்குமரியாநிலம் தென்குமரி பெல்லைநிலம் தென்குமரி நிலவெல்லை எனவும் இன்னுமிவ்வாற்றாற் பலவாற்றானும் யாத்தோதவும் படும். இங்ஙனமாக்குமறிவாற்றலெல்லாம் இயல்பான் ஒருங்கமைந்துடைய எமதாசிரியர் ஆணையோடுநீயிர் எதிர்த்தோதல் யாதுமாற்றுதென்றொழிக. இனி நீயிர் "தெரித்தெ"ன்னினும் சூத்திரமமையுமென முன்னோதுமதற்கு மிஃதொக்கும். அதுகிடக்க. இதனான் எமதாசிரியர் நும்மொப்பச்சொற்பல்குமாறுபதோசித்தருளாமையுமறிக. இன்னு மிதனானேபொருண்மைகாட்டுதல் சிறப்புடைமை தொன்மையமைதல் பாயிரத்தியல் பன்மைஎன்னு நமது போலிப்பொருள் கட்கு நீயிரோதும் அமைதியெல்லாம் வெறும்போலியாதல் கைமுதிக நியாயத்தானினிது விளங்கும். இருந்தவாற்றான் இது தன் பொருட்கோது மிழுக்கினைப் பரிகரியாதுடம் பட்டுப்பிறன் பொருட்கிழுக்கோதலென்றுந் தோல்வித்தானத்தின் பாற்படுமறிக

210-3. ங்கூறு இதனுள் "நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறே" என்றித் தொடக்கத்தான் வைத்துப்பன்மை வாசகத்தானோதுதலான் இந்நூற்கு முன்னூல் ஒன்றென்றல் எலாதென்றீர் அற்றேல் அவ்வாறேமுதனூலாய சிவஞானபோத மொன்றனெறியே தோன்றி

நின்ற சிவஞானசித்தி முதலியவற்றுள் "மாமாயையென்பர் நல்லோர்" எனவருமித்தொடக்கத் தானுபதேசித்தருளுதல் இழுக்காகலான் மாமாயை யென்பன் நல்லோன் என்று இத்தொடக்கத்தானன்றோ உபதேசித்தருளுதல் வேண்டும் அஃதிற்றிற்றெனப் புடைபடவொற்றி நுணுகியாயு நுண்ணறிவுயாதுமின்றி ஆசிரியர்நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறே என்றித்தொடக்கத்தான் வைத்துபதேசித்தருளுதலான் இந்நூற்குமுன்னூல் பன்னூலென்றல்போலியாதலறிக. அல்லதூஉம் நீயிர்தாமே 174-1ங்கூற்றுள் நிலத்தொடுமுந்துநூல்கண்டென்பதுபற்றி ஆசிரியன் ஆசிரியர்அகத்தியனாரிடைக்கற்றுஏனைப்புலரொடும் பயின்று முந்துநூல்பற்றி நிகழுமையமருட்கையற்றுப்புலநிரம்பினன் என்பதுபுலனாயிற்று என்னு நும்மோத்துள் நீயிர் முந்துநூல் ஒன்றென்பது போதுமான்றேதிமொழிதலின் நுமக்கம் முந்துநூல் பலவேறென்ப திடம்பாடன்மை யறியப்படுதலானும் அன்னபிறவாற்றானும் அதுவெறும்போலியாதலறிக. அற்றேல் எமதொன்றுதுரைக்குமுறையுள் முந்துநூல்கண்டென்பதற்கு முந்துநூல் அவர்பாற்கற்று எனப் பன்மைவாசகத்தா னோதினமாகவின் யாமஃதொன்றென்றோதின மல்லமாலோவெனின் அற்றன்று ஆசிரியரகத்தினாரிடைக்கற்று எனவோதியதனுள் அக்கற்றற்குச்செய்ப்படுபொருள் முந்துநூலாகலானும் தாமவன்பாற்கற்ற அம்முந்துநூல்பற்றிநிகழுமைய மருட்கைகளாற் புலமைத்திறமெல்லா நிரம்பாது ஏனைப்புலவரொடும் பயிறலான் அவைபொழிந்து புலமைநிரம்பினனென்பது ஆண்டைவாக்கியங்களாற் பெறப்படுதலின் அவ்வாசிரியர் கற்றது அவ்வகத்தியனொருவரிடை மாத்திரையேயன்றிப்பிறர்பாலுங் கற்றனரென்பது அதுபற்றி யாதும் பெறப்படாமையானுமென்பது.

இனி பிறர் முந்துநூலையும் அவன் பாலேகற்றானெனின் அது நீயிர் தனித்தனி அவ்வந்நூலுடையர் பாற்கற்றார் என்பதனோடு முரணுதலானும் அன்னபிறவாற்றானும் முதல் நூல் ஒன்றென்பதே நுமக்குடம் பாடாதல் பெறப்படுதலான் அஃதியாது மறுக்கப்படாமையறிக. அல்லதூஉம் 211. 4. ங்கூற்றுள் முந்து நூலெல்லாம் அவரவர் பாற்கற்று என்றோதியதனை மறந்து பிறமுந்து நூலை அவரவர்

பாற்சென்று கல்லாது தாமே பயின்றார் என்றோதுதலின் யாம் நும
து பலவேறு முந்துநூலைப் பலவேறாசிரியர் பாற்கற்றனரென்பமோ
அன்றித்தாமே பயின்றனரென்பமோ அன்றி ஒரு முந்துநூலை
ஒருவர் பாற்கற்றனரென்பமோ ஈண்டோது மாறியாது மறியகில்
லேம். ஆகலான் நீயிரீண்டோது மோத்துப்போலியாதலறிக. ஈண்டே
னையவு மிவ்வாறே போலியாதலிதனானுய்த்துணர்ந்து கொள்க. இனி
மூவகையேற்றி மொழிநருமுளரே என்பதன்றாற்பரிய மதுவன்று வே
றென்பது மெய்கண்டபாடியத்துட்காண்க. இனி அஃதகத்தியமொன்
றேயெனின் அங்ஙனங்கிளந்தோதாமை யென்னை யென்றீர் அற்றே
லிஃதொன்றீண்டு வினவுதும் அதுவருமாறு "குமரிமலையே யாயின்
அஃதங்ஙனங்கிளந்தோதாமை யென்னை. என்றித்தொடக்கத்தானி
கழும் நுமது மறுதலைக்கடாக்கள் எண்ணிறந்து மேன்மேல் விரியு
மாகலான் தருக்கநூல்கிடந்த மூலையுமறியாத நீயிர் எல்லாநூலுமே
யொருதிருவுருவாய எமதாசிரிய ராணையின் மேற்பட்டோதுது மென்
னு நுமதுளப்பாடு இனி யொழிகுதிர் ஒழியாக்கால் நும்மை அஃதி
யாதும். வாய்திறக்கவோட்டாமை முன் வருமாற்றானறிக. இருந்த
வாற்றானிது மாறுகோளோதலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்ப
டுமாறறிக.

2.1-2. ஙகூறு இதனுள் செயற்கை முதனூல் என்றெடுத்துக்
கோடலானும் நூலெல்லாமநாதியென நீயிர் மேலோதுதலானும் அன்
னபிறவாற்றானும் முதனூலியற்கை செயற்கையென இங்ஙனமிரு
வேறு திறப்படுமென்பது நுங்கருத்தாதல் பெறப்படன்மேலும் அ
வையிரண்டுந் தனித்தனி பலவேறு கூறெனவுமெடுத்தோதினீர்.
இயற்கையாவது அநாதியாகலான் அப்பெற்றித்தாய வவ்வியல்புயா
துமங்நூற்கின்றென்பது மேற்சாதித்துப்போந்தாம் ஆகலான் அர்த்
தப்பிரபஞ்சமொப்ப ஏனைசத்தப் பிரபஞ்சமுமனித்தமே யென்
பது அந்நூலுணர்ந்தார் பாற்கேட்டுணர்ந்துகொள்க. அதுகிடக்க
இனி முதற்கடவுளொருவனேயன்றி பலராகாதவாறொப்ப முதனூ
லுமொன்றேயன்றிப் பலவேறன்று, ஆகலான் நீயிர் தாமேயாக்கியநு
மது முதனூற்குரிய செயற்கை இயற்கைகள் யாமாக்காதாக்கி யோதா

தோதியவாற்றான் அதன்நாமமுமின்றிக் கெட்டொழிதலின் நுமதோ த்திற்கு மூலமாய நுமது அகநோயுங்கூடக் கெட்டொழியுமாறறிக. அஃதேல் நீயிரும் முதனூலிரண்டெனத் கோடலின் முதனூலொ ன்றென்பது நுமக் கிழுக்காம் போலுமெனின் அற்றன்று அவை வேற்றுமை நயத்தான் வேறெனப்படுமாயினு மொற்றுமை நயத்தா னொன்றேயென்பதூஉம் இன்னோரன்ன பிறவும் "சிவஞானப்பரமா சாரியர் பேருபதேசப்பெரும் பரப்பு" என்னுமந்நூன் முதலியவற் றுட்காண்க. இதனானே நீயிர் முதனூலியற்கை செயற்கை பற்றி இரு வேறு திறப்படுமென்பது இழுக்காதல் பெறப்பட்டது படவே அவை தனித்தனி பலவேறென்பதூஉமிழுக்காதல் கைமுதிக நியாயத்தானி னிது விளங்கும். அதுகிடக்க.

இனி யொருவன் அந்நூலெல்லாங் கற்றூர் மேம்பாடோதுங் கால் அவையெல்லாங் கற்றுடைய ரிவரெனவோதாது அவற்றுட்சி றந்ததொன்றனைக் கிளந்துகொண்டு இவரிது மாத்திரையே கற்று ரென்றோதுமாயின் அஃதவையெல்லாங்கற்றூர்க்கு மேம்பாடென நீயிரோதியதூஉம் அஃதேயாம் ஆயினும் ஆண்டு மொருசிறிதாயுமு றையானுய்குதும் அதுவருமாறு. பலவேறு நூல்களைப்பலவேறாசிரி யர் பாற் பலவேறுநாள்களிற் பலவேறாற்றாற் கற்று ஐயந்திரிபற்று ரென்றோதப்படுமதுவே கற்றோர்க்குரியதோர் பெற்றியாயவரிய பெரி யசிரியமேம்பாடு, இனி அவரை இவரொன்றே கற்றூரென்பதே அவர்க்குமேம் பாடென்றல் வெறும் போலியாகலானும் அல்லதூஉம் வழிநூலெல்லாந் தனித்தனியொரோவோர் நூல் வழியவாவன வன்றி அவைபலவேறு நூல்வழியவென்றோதல் தோன்றுங்குழ விகளொரோவொன்றனையும் பெற்றதந்தை அல்லது தாயர் தனித் தனி யொவ்வொருவரேயன்றி அஃதொரோவொனறற்குப் பல்லோ ரென்பதனேடொக்கும் ஆகலானும் அன்னபிறவாற்றானும் இந்நூல் பன்னூல் வழித்தென்பதற்கு நீயிர்படைத்தோதுவ வெல்லாம் வெறும் போலியாதலறிக. இருந்தவாற்றான் இது பயனொடுபடாத வோதலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக.

213-2ங்-கூறு இதனுள் வழிநூலாய விந்நூற்கு முதனூல்கார ணமாவதன்றி மொழியாயினும் வழக்காயினுங் காரணமாகாமையின்

நிலத்துமொழியோ டென்றன்மேலு நிலத்துவழக்கோடென்னினும்
ஆண்டொருவினையொடுச் சொல்லுயர் பின்வழித்தாகாமையின் அது
நுமது விதியொடு முரணுமென்றீர் இந்நூற்குக்காரணம் மொழிவழ
க்கென்பாரீண்டி யாருமிலர் அவ்வாறு நீயிர் கொள்ளுவீர்போலும்.
இனிஒருவினையொடுச் சொல்லுயர்பின்வழித் தாதற்கியாது மிழுக்
கின்றென்பது முன்னரோதுதும் அதுநிற்க.

இனி நிலத்துமொழியொடு முற்பட்டுத் தோன்றுமென்றோதல்
நுமதுவிதியொடு முரணுமென நீயிரீண்டோதிய விதியொடு முரணு
மென்பனுள் விதியொடு என்புழிநின்ற நுமதுஅவ்வொருவினையொடு
ச்சொல்லுயர் பின்வழித்தோ அன்றி இழிபின்வழித்தோ அன்றி
வேறுவழித்தோ நுமது இம்மறுத்தலைக்கடாவிற்கு நீயிரிறுக்குமிறை
யேயா மிறுக்குமிறையுமாம் அதுநிற்க.

இனி அஃதாண்டுயர்பின் வழித்தாதலுமீண்டுக் காட்டுதும்
அதுவருமாறு நிலத்துமொழியொடு முற்பட்டுத்தானே தனித்தமுத
லாய்த் தொன்றுமதுபோலாது அம்மொழியின் பிற்பட்டுத் தனிமுத
லன்றிப் பலவேறாய்த்தோன்றும் பின்னைநூலெல்லாம் அம்முன்னை
நூல்கண்டு அதன்வழியவாய்த் தோன்றலானும் இஃதவையொப்ப
ஒருமுந்துநூல்கண்டு தோன்றியதாகாது முதற்கண் தானே தனி
முதலாய்த் தோன்றலானும் அதனான் அவையிஃதொப்ப உயர்வுடை
யவாகாமையானும் அதனான் இஃத்வற்றினுயர்புடைத் தாகலானும்·
அன்னபிறவாற்றானுமென்பது· அதுபற்றியு நுங்கருத்து நிரம்பாமை
அறிக. அதுநிற்க

இனி மொழியுநூலு மொருங்குதோன்றினவென்றவ ரோதின
ரென்றீர் எமதாசிரியர் அவ்வாறுபதேசித்தருளுமாறியாதும் யாண்
டுமின்று. அஃதொருங்கு ஒடுவென்பவற்றின் வேற்றுமை அறியாத
நும்படைத்து மொழியாமென்றொழிக. நும்மோத்துப்போலியா
தற்கு இதுவுமோரமையுஞ்சான்றாதலறிக. மொழியொடு முற்பட்டுத்
தோன்று நூலென்பதூஉம் மொழியுநூலுமொருங்கு தோன்றின
வென்பதூஉந் தம்முள் ஒருபொருளவோ பிறபொருளவோ அது
நுமதொருங்கு மொழியினை ஒருசிறிதொருங்கி யாய்தலொடுதோ

னறுமாகலான் ஈண்டுநமது ஆராய்ச்சிப்பொருளாய தெளிதலைச் சிறிது கற்றுளங்கொள்ளுக. அதுநிற்க

இனி இந்நூல் ஆக்கற்குக் காரணமுதநூலாமென்றீர் காலங்களனே காரணமென்பதனுள் அக்காரணமுதனூலன்று வேறெனவே நீயிருங்கோடலான் அஃதிழுக்காதல் சாதித்தற்கெமக்கேது வேறு வேண்டா. அதுவே அமைபுமாகலான். அஃதன்று அதுநூலாக்கற் காரணம் இதுநூலாதற் காரணமாயிவ்வாறு அவை தம்முள் வேறுபாடுடைய வாலோவெனின். அற்றேல் இந்நூலியாதுகாரணத்தா னுக்கப்பட்டதென நிகழுங்கடாவிற்கு விடை இரக்கங் காரணத்தானென்றாற்போல இந்நூலியாதுகாரணத்தா னுக்கப்பட்டதென நிகழுங்கடாவிற்கு விடை முதனூல்காரணத்தானென விறுத்தல் சாத்தன்யாது காரணத்தானுக்கப்பட்டான் என்பார்க்கு தந்தைகாரணத்தா னுக்கப்பட்டானென்ப தொப்பதோர் வெறும்பொலியாதலறிக.

இனி இந்நூலைப்பொருளாக்கின் அதனாற் பாண்டியன் அவையுடையரு ளொருவனாகவைத் தெண்ணப்படான் அதுபடாமையிழுக்காமென்றீர் அஃதியாதுமிழுக்கின்மை மேற்காட்டினுங் கடைப்பிடிக்க. அல்லதூஉம் அஃதங்ஙனங்கோடுமேனும் அதங்கோட்டாசாற்குக்காட்டி என்னுமோத்தானே காட்டப்பட்டாரிவரெனக் கிளந்தெடுத்தோதுதலான் அவரொழித்தொழிந்தாருங் காட்டப்பட்டாராதல் சொல்லாதேயறிக. அஃதஃதன்று பாண்டியனவையென்ற துணையானே பாண்டியனுங் கேட்கப்பட்டானுதல் பெறப்படுமாலெனின் அற்றன்று. அஃதற்றாயின் இவ்வாறே நல்லுலகமென்ற நமதுபுலவர்க்கு நமதுகாட்டியென்பதூஉம் பெறப்படல்வேண்டும் அஃதிற்றாமென நீயிரோதாமையானும் அதுவு மிவ்வோத்தொப்ப தொன்றாகலானு மன்னபிறவாற்றானும் அஃதியாதும் பொருந்தாமையிற் போலியாதல் தெற்றெனவறிக. இன்னுநீயிர் பனுவலவையென இவ்வாறியைத்தோதுவதூஉம் யாதுமேலாது, அஃதற்றாயின் அவையறிதலென்னு மவ்வதிகாரமு மவ்வாறே யெழுதல்வேணடும் அஃதவ்வாறு 'பனுவலவையறித' லென்றெழாது 'அவையறித' லென்றே எழுதலானும் அன்னபிறவாற்றானும் அதுபோலியாதலறிக. இன்னு மீண்

டுப்பனுவலவையெனக் கூட்டி பிறிதினியைபு நீக்கிய நீயிர் அவை யறிதல் அவைபஞ்சாமையென் புழி யாதனைக் கூட்டி அவ்வியை பின்மை நீக்குவீர், இதனுனுமதுபோலியாதல் தெற்றெனவறிக. அஃ தன்று அவ்வவைதாம் பல்வேறுகலான் அவற்றுள் இஃதியாதோ வென்றெென்றிற்றுணிவுபிறவாதுஐயப்பாடுநிகழுமாகலான் அவ்வடை கூட்டலின்றியமையாதென்றீர். அற்றேல் ஈண்டுவினவுதும் அதுவரு மாறு நீயிர் தமிழ்கூறுமென்பதற்குத் தமிழ்மொழியைக் கூறுமென் றீர் அத்தமிழ்தான் முத்திறப்படுமாகலான் அவற்றுள் இஃதெஃதெ னத்துணியுமாறு ஆண்டடைந்துநின்ற நுமதடையாது கொல்லோ அல்லதூஉம் நீயிரடைவித்த நுமதடைதான்யாது, யாதுங்காண் கிலம் ஆண்டுநுமக்குத் தொல்லாசிரியரோத்தின் வேறுயதோர் போலிபோத்தொன்றுவந்து வாய்த்தவாறெப்ப ஈண்டுநுமக்கு அஃ தியாதும்வந்து வாய்த்திலதுபோலும் வாய்க்குமாயின்யாதானுமோர் போலியோத்தோதாதொழியீரென்க. இனி நன்மைபுலம் முதலிய வற்றிற்கு மிஃதொக்கும் அல்லதூஉம் மொழியியல்பெல்லா மெஞ்சா தோது நீயிர் தமிழென்பது தமிழ்மொழி யென்றேருதி அவ்வோதிய தற்கு நுமது இலக்கணமியாது மோதாதொழிந்தனிர் அஃதட் பொருட்டாதல் நுந்தலையிலக்கணமேபோலும்; அதுகிடக்க.

இனி இயனூலெல்லாமுழுதொருங்குணர்ந்தும் அது நும் மொப்பவுணராதுரைத்தாரை யெல்லாநுமது மறுதலைக்கடாவானு டம் படைசெய்து அப்பொருளெல்லாம் எல்லார்க்கும் வெளிப்ப டையானுரைத்துப் "பிறவுரையியல்பெல்லாம் பெறு" மாறுக்கும் இவ்விருத்த விருத்தியுடைய நீயிர் பலவேறு வகைப்பட்டபரிபாடை கள் எழுந்து நிற்றல் யாதுமறியுமறிவு யாதுமின்மையின் இவ்வாறெல் லாம் புலம்பினீரென்பது; இருந்தவாற்றன் இது தன் சித்தாந்தத்திற் கேலாதனவோதி அதுசாதித்தலென்னுந் தோல்வித்தானத்தின் பாற் படு மாறறிக.

**215-3** ங்கூறு இதனுள் போக்கறுபனுவலென்பதற்கு எல்லா ருமிந்நூலையே பொருளாக்கினரென்றீர் எனவேயாம் பிறநூலையே பொருளாக்கினமென்பது பெறப்பட்டது. அற்றேல் ஈண்டு அதுபட்

டாங்குளதாதல் யாங்கண்டிலம். அஃதறியாமையோ அறிவோபிற வோ அஃதிஃதெனயாமறிய கில்லேம். அது நிற்க.

இனி 62-2. ங்கூற்றுள் போக்கறு பாண்டியன் போக்கறுமவை யென இயைத்தொழிந்து ஈண்டுப்பனுவற் பாண்டியன் பனுவலவை யெனவு மியைத்தலிழுக்காதன் மேலும் 178-2 ங்கூற்றினுள் போக் கறுபனுவலாவது நூற்காகாவென்றகுற்றம் பத்து மற்றநூலென்றீர் போக்கு பனுவலென்னும் அவ்விரண்டினுள் முன்னையது பிரிந்து திரு வோடுசென்றுகூடபின்னையதுபாண்டியன்அவையென்னுமிரண்டனோ டுஞ் சென்று கூடுங்கால் இவற்றுட்போக்கு முன்னரும் பனுவல் பின் னருமாய்ச்சென்று கூடுமென நீயிரோதியவாறே அவைமேற் பிரிந்து நிற்றலொழிந்து மாறிக்கூடிப் பனுவற் போக்கறு பாண்டியன் பனு வற்போக்கறுமவை என்றன்றோ வாதல் வேண்டும். அல்லதூஉமித னுனே திருமுதலிய நான்கன் போக்குந்தம்முள் வேறாகலின் அதுவு மேலாமையறிக. இன்னும் பாண்டியன் அவையென்னும் அவ்விரண் டனோடுஞ் சென்றுகூடும் போக்குகட்கு மேல் நிற்றலின் ஆண்டைப் பனுவன் மாத்திரம்நுமது நூற்காகாவென்றகுற்றம் பத்துமறாதபனு வலேபோலும், பிறரோதும் பொருள்கோளைப்பழித்தோதும் பொ ருள்கோளாசிரியராயநுமதிப்பொருள்கோள் யாதன்பாற்படுமோ அறி யகில்லேம். அல்லதூஉம் நூற்காகாவென்றகுற்றம் பத்துமற்றதென் றீர் எனவே நூற்காகுமென்றதுற்றமு முளவென்பதூஉம் அனு வாத முகத்தானீண்டே பெற்றாம். பெற்றும் பெறாமையென்னையோ, அதுகிடக்க.

இனி "பல்பொருட்கேற்பின் நல்லது கோடல்" என்பது பற்றி அஃதறிஞரவையாதற்கியாது மிழுக்கின்மையின் பநுவலவையென நீயிரஃதங்ஙனமிடுக்குறப்பு குத்தியிடர்ப்பட்டுக் கோடல் போலி யாகலின் போக்கறுபனுவலென்பதற்கு இந்நூலைப்பொருளாக்கல் பற்றியாதுமிழுக்கின்மையுமறிக; இனி இந்நூலைப்பொருளாக்கினு ரென்பது இழுக்காதலுங்காண்க. இன்னுநீயிர் அவ்வவைகொடாக் கால் பலவேறுதிறப்பட்ட அவைகளுள் வைத்து அவ்வவையிஃதெ னத்துணிவுபிறவாதென்றீர் அற்றேல் வேற்றவைகளை விலக்குமாற

டைந்தநுமதடைப் பனுவலென்பதூஉம் அவ்வாறேபொதுமையினிற் றலான் தனித்தனி பலவேறுதிறத்தட்டபதினெண் பனுவலுள் வைத்து இஃதியாதோவென ஒருதலைப்படாது பலதலைப்பட்டு அப்பனுவலுடையாவை பலவற்றிற்கும் பொதுவாய்நிற்றலான் ஒன்றிற்றுணிபிறவாமையின் ஆண்டுமையப்பாட்டிற்கேதுவாமன்றே. இன்னும் பனுவலெனப்பொதுமையினிற்றலான் இழிவழக்கேன்று கொள்ளுநுமக்கு கற்றற்குரியவல்லாப்பனுவலுடையாவை யெனவும் படுமன்றே அவ்வையப்பாட்டைப் போக்கறுதிவிலக்குமெனின் அப்போக்கறுதியும் அவ்வெல்லாப்பனுவற்கும் பொதுவாகலான் அதுவிலக்குமாறியாங்ஙனம். அல்லதூஉம் அப்போக்கும் பலவேறாகலான் அவற்றுளிப்போக்கு இஃதெனக்கிளந்ததோதாமையின் அதுவுமவ்வாறையப்பாடாய்முடியுமன்றே, கிளந்தோதாமையின் போக்கெல்லாமெடுத்துக்கோடல மைபுமாலெனின் அற்றேல் அவ்வாறே நுமது அவையெல்லாமெடுத்துக் கோடலுமமையுமன்றே. ஐயகோ இதற்கு நீயிர் யாது பரிகாரமோதுவீர் அஃதன்று பனுவலென்னுமக்குறிப்புப்பற்றி அதற்குரிய போக்காமெனின் அற்றேல் அப்பனுவலும் பலவேறாகாலானும்அவ்வப்பனுவற்குரிய அவ்வவ்வவ்வையும் பலவேறாகலானும் அதுபற்றியும் அஃதிஃதெனத்துணிவுபிறவாமையறிக. இனிக்குறிப்புப்பற்றித்துணிதலமையுமெனக்கோடு மேனும் ஆண்டுமக்குறிப்புப்பற்றி அவ்வவை இதுவே பிறிதன்றெனக்கோடல் சாலாதுகொல்லோ அஃதிஃதாகலான் பொருட்சிறப்பு முதலிய உளவாகவும், அஃதறியாது வறிதே வாக்கியங்களை யிவ்வாறீர்த்திடர்ப்பட்டோதல் எற்றுக்கென்றொழிக. இங்ஙனமாகநீயிர் அறிந்தறியாதொன்றனை விலக்கப் புகுங்கால் அதனையெமதாசிரியராணை அறியாதறிந்து விலக்கும் விலக்கு ஒன்பது புகுந்துநிற்குமாகலான் நீயிரினியிவை யொக்குமிழுக்கோதாதொழிதலே நுமக்குச்சால் பென்றொழிக. இருந்தவாற்றானிஃதொன்றற்குமேற்கோள்பலவேறேதலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

215-ப-4-கூறு இதனுள் பனுவலை ஆசாற்குத் தெரிவித்தென்பதூஉம எழுத்தை உலகிற்குக்காட்டியென்பதூ உந்தம்முள்வேறுதல்

பெறப்படுதலின் அதனாற் பனுவலு மெழுத்து மொன்றாதல் பெறப் படாதென்றீர் என்றீரேயன்றி என்றதற்குரிய ஏது ஓதல் ஆண்டுக் கண்டிலம் ''வல்லார்க்குப்புல்லுமாயுதமாம்'' அஃதொப்ப எல்லாம்வல் லநுமக்கு அஃதேதுவின்றியுமமையும் போலும். அஃதன்று ஆசானு முலகுந்தம்முள் வேறாகலான் அவையுந்தம்முள்வேறா மாலெனின் அற்றேல் நீயிர் இந்நூற்கு முந்நூலுடைய ரொருவரல்லர் பல்லோ ரெனக்கோடலின் அப்பலவேறாசிரியன்மார் செய்த பலவேறு நூல் பற்றி யெழுந்த இந்நூலுமொன்றாகாது பன்னூலாதல் பெறப்படு மென அது நுமக்கேயிழுக்காய்முடிதல் காண்க. அஃதேல் அம்முந்து நூல் பலவேறாயினும் அவை தம்முட்பொருளொருமையுடைய வாக லான் அஃதொன்றாதற் கிழுக்கின்றாலெனின் அவ்வாறே பல வேறு முதனூல் பற்றியெழுந்ததொரு வழிநூல்காணப்படாமையா னும் அல்லது உமவ்வாறு கிளந்தோதாமையானும் எடுத்தோத்தோ டு முரணுமாகலானும் அன்னபிறவாற்றானும் அஃதஃதாதல் போலி யாதலறிக இனி அஃதங்ஙனங்கோடுமேனுந் தெரிவித்தல் காட்ட லென்னுமிரண்டற்கும் வினைமுதல்வேறுவேறாகாது ஒன்றேயாக லான் அது பற்றியுமஃதொன்றாதற்கிழுக்கின்றாகலின் நீயிரோதியது போலியாதலறிக. இன்னு நுமது தன்புலத்தூட்டொகுத்தானென்பது உம் ஆசாற்கு எழுத்துக்காட்டி யென்பது உந்தம்முள் ஒன்றாகாது வேறாதலுமறிக. இன்னுமாண்டவ் வொற்றுமைச்குரிய விழைபெண் ணிறந்த பலவேறுள, அவையெல்லா மிதனானுய்த்துணர்ந்து கொள்க. இருந்தவாற்றானிது தன்பொருட்கோதிய விழுக்கைப் பரிகரியாது டம்பட்டுப் பிறர்பொருட்கிழுக்கோதலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக

**5**-ங்கூறு இதனுள் தேரிவித்தென்பது தெரிந்தெனநின்றதென் றலிலக்கண மாகாமையின் அதன் பொருள் பொருள் விளக்கமே யென்றீர். இடை—உளி-வழி-நிலம்-என்றித்தொடக்கத்தான் வருமி டப்பெயர் பலவற்றோடொன்றாயுடன்வைத் தெண்ணப்பட்ட இடையென்பது இடமாகாது இலக்கணமாய நுமக்கு இலக்கணமு மிலக்கணமாகாமை கூறாதேயினிது விளங்கும். அதுநிற்க இனித்

தெரிவித்தென்பது தெரிந்தெனநிற்றல் பற்றி யாதுமிழுக்கின்மைக் கமைதி மேலோதிப் போந்தாங் கடைப்பிடிக்க. பிறவினை தன் வினையாயுந்தன் வினைபிறவினையாயும் அவைதம்முள் மாறியும் வருமென்பது அவ்வியல் புணர்ந்தார் வாய்க்கேட்டுணர்க. இனியஃதன்று அது திரிபேயென்னுந்திரிபுணர்ச்சி யீண்டைக்கியாது மேலாமை மெய்கண்டபாடியத்துட்காட்டினும் ஆண்டுக்காண்க. இனி அஃதாண்டுத் தெரிவித்தென்பதே பொருளாமெனின் அவ்வாறேயோதப்படுக வெனநீயிர் மேலோதியது ஈண்டோதாமை மறவியோபிறவோ அஃதிஃதென யாமறியகிற்றிலம். அஃதெஃதாயினுமாக அதுவும் போலியாதல்மேலோதினுங்கடைப்பிடிக்க. இனிநுந்தெரிதலென்பதன் பொருளாயவிளங்கலென்பது மரபின்வினையாமென்றீர். எனவே அவ்விளங்கல்வினையை நிகழ்த்தும் வினைமுதல் மரபென்றவாறாயிற்று ஆகவேநுமது அரில்தபல்வினையை நிகழ்த்தும் வினைமுதலுமம்மரபேயாம். அற்றேல் அம்மரபு தனக்குவரு மவ்வரிலை வாராதவாறுதானேதபுத்துக் கோடல்வேண்டும். அங்ஙனமே அஃததனைத்தபுத்தலாற்றவற்றாயின் அவ்வாறே தமக்குரிய அழகைக்கோடல் வற்றாதலும்வேண்டும். இனி அவ்வாறே அம்மரனையுடைய நூலுமயங்குமரபைமாற்றி மயங்காமரபைத்தானே யாற்றவற்றாதன் மேலும் எழுத்துந் தன் முறைமையைத்தானே யாற்றவற்றாகலான் ஆண்டைக்காசிரியர் வேண்டாவெனவேமுடியும். அஃதன்று விளங்கல் என்பது பிரகாசப் பொருட்டாகலான் அது விளங்கவைத்தலென்னும் அழகின் பாற்பட்டு அழகேனையவற்றையுந் தழுவிநின்றதாலோவெனின் நன்றேயோதினீர் ஆண்டுச் சுருங்கல் விளங்கலெனத் தன்வினையானெடுத்தோதாது சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் என்றித்தொடக்கத்தாற் பிறவினையான் வைத்தோதுதலின் அதுவே அஃதஃதன்மைக்கு அமையுஞ்சான்றாதல் அறியப்படும் ஆகலான் அது போலியாதலறிக, இனித் "தெரிந்துசொல்லுதல்வல்லார் வள்ளுவ" ரென்பதே யாண்டுண்மைப் பொருளாகலான் ஆண்டுமஃதந்நூலுடையர் வினையாமல்லது நூலுறுப்பின் வினையாதலன்மையின் அவ்வெடுத்துக்காட்டுப் பற்றியு நுங்கருத்து நிரம்பாமையறிக. இன்னுமீண்டு நீயிரோதிய வற்றையெல்

லாம் ஆயுமுறையானுயப் புகிற்படும் போலிகளெண்ணிறந்தன அவை யெல்லா மிதனுனுய்த்துணர்ந்து கொள்க, இருந்தவாற்றுனிஃதறியாமைபுயென்னுந்தோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக.

216-ப-2. கூறு இதனுள் ஆயுமுறையானுப்ந்து ஓதுமுறையானேதி முடிவின்கண் எமதாசிரியருபதேசித்தருளியபொருள் சொல்லளவு பற்றியும் பயன்படாதென் றிவ்வாறோதுமுகத்தான் அது பொருளளவு பற்றி அஃதாகாமை கூறுதேயினிது விளக்கினீர். இனி ஆய்ந்ததனையாய்தல் வேண்டா ஆயினுநுமதவ்வாராய்ச்சி ஆராய்ச்சி முறையொடு படுமோபடாதோவென அவ்வாராய்ச்சிபற்றி முன்னொரு சிறிதாயுமுறையானுய்குதும் ஆயுமாறு, சொல்லளவிற்பயன் படாதென்னும் அவ்வாக்கியப்பொருள்தா னென்னை சொல்லெல்லாந்தனித்தனிச்சொற்பொருளளவும் அவைதம்முள் மாறி யொரோவோரளவுமாய்த்தத்தம் பயனெடுபடுவன. அஃதஃதாக விருதிதொகுதல் அந்தர்ப்பாவி தணிச்சு அப்பொருளவாய்நிற்றலென எடுத்தோதுமவ்வழக்கு உளதோ இலதோ உளதாயிற் பயன்படாமையாண்டையதென்றெழிக. இனி விருதிதொகுதலென்னுஞ் சொல் வழக்கின்றுலெனின் அற்றேல் மயங்காவென்பதற்குக் கலவா வென்றன்றே நீயிர் பொருளோதல் வேண்டும். அங்ஙனமன்றிக் கலவாத' வென நீயிராண்டு விருதிவிரித்தோதிய தென்னைகொல்லோ முன்னர் விரித்தல் மேற்றெருகையை யின்றியமையாமையின் ஆண்டு அவ்விருதிவிரித்தோதினீர்க்கு அத்தொகையு முடம்பாடாவதல்லது மறுக்கப்படாமையறிக. அதுநிற்க.

இனி ஆராய்ச்சி ஆராய்ச்சிமேற்று, படுவிருதி, புணர்ச்சி விகாரங்களுள் வைதகொன்றுபற்றி எய்தியதெனின் அங்ஙனமாவதன்றி இங்ஙனமாகாதென நீயிரோதுதலான் தொகையென்பதொன்றுண்மை நுமக்குமுடம்பாடாதல் பெறரும். அதுகிடக்க. இனி இங்ஙனம் அப்படுசொற்றெருகுமாயின் அஃதிந்நான்கினும் பிறவினுமாம் என் றீர் அவ்வரையறைக்கு நீயிரோது நுமதிலக்கணமென்னை யாதும் காண்கிலம்.

அல்லதூஉம் ஈண்டுப்புணர்ச்சி விகாரம்செய்யுள் விகாரமெனவிகாரம் இரண்டு கொண்டீர் அவற்றின் வேறுபாடென்னை அன்றி

அவற்றுள் முன்னையது பின்னையதன் கண்ணிகழ்தலுமாமென்றூற்
படுமிழுக்கென்னை அதுகிடக்க. இனி அஃதங்ஙனங்கோடுமேனும்
அவற்றுள், புணர்ச்சி விகாரமும் செய்யுள் விகாரமும் அது தொகு
தல் தொகையாகாமைகட்கேதுவாகாமையறிக. இனி ஏனைமரூஉமு
டிபும் அஃதன்றென்பது அச்சொல்லானே யினிதுவிளங்கும். இனி
நமது ஆசிரியன் கட்டளையென்பது இவற்றின் வேறுபின் அஃதொ
ழித்தொழிந்தன ஆசிரியன் கட்டளைபா, அல்லவா, அல்லவாயின்
அவை புறநிலைப்படாது ஆசிரியனைத்துள் ஆயவாறென்னை அஃதன்று
அவையும் ஆசிரியனைத்தாயினும் இதுவழி நூலாகலான் ஏனைய
வைமுதனூலாசிரியன் முறையல்லது இந்நூலாசிரியன் முறையன்மை
யின் பின்னோன் வேண்டும் விகற்பங்கூறற்கு முரியனாகலான் அவற்
றுள் ஒரோவொன்று இவையிங்ஙனமாகவென ஆசிரியன் தாமேயும்
விதித்தலுண்மையன் அதுவேயீண்டாசிரியின் கட்டளையென்றோகப்
பட்டதாலெனின் அற்றேல் அவற்றுள் அவையிவை ஏனையதிஃதென்
னும் அவ்வேறுபாடியாதுங் காண்கிலம் நமதாசிரியனோகாமையா
னும் நீயிரெடுத்தோகாமையானும் அது போலியாதலறிக. அல்லதூ
உம் அங்ஙனங்கோடுமேனும் நமது முதனூலாசிரியன் ஓதுமவற்
றையும் நீயிரோதுமிவற்றையும் எம்மனோர்க்கு விதித்தருளியோர்
இவ்வாசிரியராகலான் ஏனையவும் ஆசிரியன் கட்டளையாதற்கிழுக்கின்
மையின் ஆசிரியர்நூலுள் ஒருசார ஆசிரியாது ஒருசாரபிறரதென
இவ்வாறு வேற்றுமை கோடல்யாதுஞ் சாலாமையானும் அவ்வா
றோதாமையானும் இவ்வாறோதுதலானும் அதுபோலியாதலறிக.
அற்றேல் இதுவழி நூலாகலானும் அதனான் இந்நூற்பொருள் முன்
னூற்பொருளாகலானும் அதனால் இந்நூலோத்தெல்லாம் முன்னூல்
வழித்தென்பதே முறை. இனி அஃதஃதன்றெனின் இந்நூல்வழி
நூலாகாது முதனூலாய் முடியும்போலுமெனின் முடியாதுதொகுத்
தல் என்றித்தொடக்கத்தா னெழுந்து நின்ற அவ்வச்சொற்பொ
ருளே முடியாமை போதிக்குமாகலான் அஃதேதலஃதஃதாக அவற்
றுள் வழுவமைதி அஃதென்னுமோவெனின் என்னும் என்னை ஆசி
ரியர் ஆண்டு விதிக்குமாறெப்ப ஒரோவழிப்பிறண்டும் விதிக்கப்படு
மாகலான் என்பது அதுநிற்க.

இனி இவை ஒழித்தொழிந்துநின்ற நுமதுவேறென்றென்பதூஉம் நீயிர் முன்னோதுமாற்றான் நீயிரோதியவற்றுள் அடங்கும்" .அஃதடங்குமாறறிந்தடக்கிக்கொள்க அதுநிற்க இனிநீயிர் அவற்றைக் காரணமென்றீர் அற்றேல் அவையன்னவற்றையெல்லா நீயிரிலக்கணமென்றோதுதலின் நுமதிலக்கணமுங் காரணமுந் தம்முளொருபொருண்மொழியாதல்வேண்டும் ஆகலான் அதுபோலியாதலறிக. இன்னுநீயிரீண்டு ஒருமொழிதம்முளியையு மவ்வியல்பெடுத்தோதுவான் புகுந்து மகத்துக்கை தமிழக் கூத்தன் பதிற்றகல் என்றிவையொப்பன அதற்கெடுத்துக்காட்டெனவெடுத்துக்காட்டுதல் போலியாதலறிக. நுமது நச்சினார்க்கினியரோது மோத்துநோக்கியிங்ஙனமோதிக்கெட்டீர், தூலமாய்த்தோன்று முறுப்புறுப்பிபொருண்மை பன்மைகளாதியல்புணரு முணர்வியாதுமில்லாதநீயிர் நுண்ணிதாயறியுமாறெமதாசிரியரருளிய நுண்பொருளியல்பறிய வல்லுனர்தாமென்றொழிக. மகடூஉ வின்பமிஃதென அலியியைந்தறியாவாறொப்ப ஆண்டுபதேசித்தருளிய அவ்வியல்பே உண்மையியல்பென அறியுமறிவில்லாத மடவீர்க்கு "உணர்ச்சி வாயிலுணர்வோர்வலித்தே, என்பதுபற்றி யாமுணர்த்தும்வாயில் யாதுமின்மையறிக. இனி நுமக்குப்படுவிகுதியோடு அதன்முன்பின்னென்ற அவ்வீருழியுநின்ற அகரவகரங்களுள் முறையே முன்னையதுகெடப் பின்னையதுநின்றுழிப்பிறி தொன்றுவந்து நிற்குமாற்றிற்கெல்லா முரியமுறைதெரியுமுறையான் முன்னரோதுமாறு பற்றியுணர்ந்துகொள்க. அதுநிற்க

இனி ஈண்டெதிரதுபோற்றல்பற்றி ஒன்றோதுதும் அதுவருமாறு விபடுமுதலிய விகுதிமுழுதுங் கெடுசலாய விகாரம்பெறின் ஆண்டுக்கெட்டதிஃதென்றறிதலரிதென்றநீயிர் "செய்யாயென்னு முன்னிலை வினைச்சொல் செய்யென்கிளவி யாகிடனுடைத்தே" என்றுபதேசித்தருளுமாறு பற்றி ஆயென்னும் விகுதிமுழுதுங் கெடுதலாய விகாரம்பெறின் ஆண்டுக்கெட்டதிஃதென்றறிதலரிதென்றன் மேலும் அதற்கு இலச்சினையென்னை எனத்தொல்காப்பியரைத்தொல்காப்பியத் தொண்டனையநீயிர் கேட்குமாறு யாங்கண்டிலம். அதுநீயிர் கண்டிலீரென்க. ஆகலின் இன்னோன்னுழி எல்

லாம்வரும் நுமது மரபுத்திரிபு நீயிர் அறியாத்திரிபு ஆகலின் அவைக ழுவப்படும் சிவஞானமுனிவர்முதலியோர் மரபுத்திரிபு அஃதன்றி அறிந்த திரிபாகலின் அவைகழுவப்படாவென்க. இன்னும் அஃதத்து ணையேதாமோ ஆசிரியரவ்வாறே "அக்கெனிறுதி மெய்மிசையொடுங் கெடும்" என அக்குச்சாரியை யிறுதியும் அதன்மிசைமெய்யுங் கெடு மாறுபதேசித்தருளியதூஉங் கண்டிலீர். இன்னும் "குற்றியலுக ரக்கின்னே சாரியை" "வேழக்குரித்தே,, ஆசிரியக்குரிய" என உபதேசித்தருளுமாறுங்கண்டிலீர் கண்டீராயின் ஈரெழுத்துக்கெடுத லரிதென்ற நீயிர் அத்தென்னும் மூவெழுத்துங்கெடுமா றறிதல் அரிதின் அரிதென்பீரன்றே, இன்னும் "துன்பத்துக்கி யாரே துணை யாவார் தாமுடையநெஞ்சந் துணையில்வழி" "கொள்வாருங்கள் வரு நேர்" என்புழி ஆசிரியர் ஒழிக்கலென்னும் ஐயெழுத்தும் நேர்வர் என்பதன் ஈரெழுத்தும் ஒழித்துவைத்துபதேசித் தருளுமாறுங் கண்டிலீர் கண்டீராயின் மேலைத்துணையினு மமையாது ஐயெழுத் தும் ஈரெழுத்துமாய மொழிகள் முழுதுமின்மை அறிதல் அரி தின் அரிதின் அரிதென்பீரன்றோ இன்னுங்குறிப்பெச்ச இசையெச் சங்களின் இயல்பும் நீயிர் அறியகில்லீர் அறிந்தீராயின் ஆண்டுக்கெ ட்டன அறிதல் அரிதின் அரிதின் அரிதின் அரிதென்பீர். அல்லதூஉம் இன்னுஞ்சொல்லெச்சந் தலைக்குறை கடைக்குறைமுதலியவற்றினும் அவாய்நிலை முதலியவற்றினும் இவ்வாறோதுவீரன்றோ. இவ்வாற்றான் நீயிர் ஆசிரியர் தொல்காப்பியனார் ஆசிரியர் திருவள்ளுவனார்முதலி யோரையும் இழுக்கோதுமாறு தலைப்பட்டனிர் என்னை "தவத்தான் மனந்தூய்மை யுடையராகலான், நம்மனோர்போலும்" ஆகலின் இஃதித்துணை யின்மையுமென்றொழிக, இனி தவத்தான் மனந்தூய் மையிலர் நுமதூழ்வயத்தான் மயங்குவர் என்புழி "தவத்தான் மனந்தூய்மை யென்பதற்கு பிரமாணமென்னையென வினாயினார்க்கு பிறரோதல்கண்டு அவற்றுள் ஒருசார்கரந்தோதாது நீயிர் யாதுவிடுப் பீர் ஆண்டு "முக்குணங்களையுங் கடந்து இறைவனருள்பெற்று" என்பன ஒழித்தொழிந்தன ஓதினீர் அவைநான்குந் தம்முள் இன் றியமையா என்பதுயாதுமறியகில்லீர், இவ்வாறோதல் நுமக்கியல் பென்பது மேலோதினும் முன்னருமோதுதும். அதுநிற். இனி நும

துமறுதலைக் கடாவொன்றீண்டெழுமாறு மேல்நீயிர் நுமதுதெரிதல் வினைபை நிகழ்த்தும் வினைமுதல் மாபாமென்றீர் சேதனப் பொருளொப்பப் புடைபெயர்ச்சியின்றி சடமாய அம்மரபு புடைபெயர்ந்து விளங்கல் வினைபைநிகழ்த்தற்குரிய காரணமென்னை, அதுநுமதுகட்டளையாமெனின் அற்றேல் இனியாமீண்டோதற்பாலன யாவையாயினும் அது தொதுதற்கு மிவ்வாறே ஓதுதுமென்றெண்ணி அஞ்சியொழிந்தனம் அதுகிடக்க.

இனி விகுதிமுதலிய தொகுமென்றுபதேசித்தருளிய ஆசிரியர் அங்ஙனந் தொகுவது ஓரெழுத்தாறைய விகுதிகளுள் இது தொகும் இது தொகாது அல்லது அவை இம்மொழிப்படும் இம்மொழிப்படாவென இன்னோரன்னவாற்றாற் கிளந்தெடுத்துக் கொண்டு வரையறைப்படுத் துபதேசித்தருளாது பொதுமையின் விகுதி முதலிய தொகுமென்றுபதேசி த்தருளுதலான் அதுபற்றி ஓரெழுத்தாறைய விகுதியே தொகும் ஈரெழுத்து முதலியவற்றாறைய விகுதிதொகாவென்பது ஆசிரியர் திருவுள்ளமாதல் பெறப்படாமையானும் வரையறைப்படுத்தருளாமையானும் ஆசிரியர்தாமே "ஐவகைபடியுமாசிரியக்குரிய" என்னுமித் தொடக்கத்துள் சாரியைமொழியீரெழித்துந் தொகுத்துவைத் தருளுதல் காணப்படுதலானும் நாகம் அணை நாகணை பெற்றம்ஒன்று யர்த்தோன் பெற்றொன்றுயர்த்தோன் என்றற்றொடக்கத்தான் அவ்வாறு பிறண்டும் வருதல் காணப்படுதலானும் அன்னபிறவாற்றானும்தொகுத்தல் ஓரெழுத்தாறைய விகுதியேயாமன்றி ஈரெழுத்தாறையவிகுதி யன்றென்னும் மவ்வரையறை யாதுமின்மை வச்சிரகவசமொப்ப நாட்டப்பட்டவாறு காண்க, இன்னும் இல்வழி என்றித் தொடக்கத்தான் வரும் வாக்கியங்கட்கு இல்லாதவழிஎனப்பொருளுரைத்தொழிந்து மறித்தெடுத்துக்கொண்டு பெயரெச்சமறைவிகுதி தொக்குநின்றதென்றுரைத்தொழிவதே உரையாசிரியன்மாருரை யிபல்பல்லது ஆண்டுதகர வெழுத்துப்பேறு மகாஐகாரக்கேடு னகரத்திரிபு தனிக்குறின்முன்னொற்றிரட்டல் ஆகாரக்கேடு இடைநிலை விகுதிகள் முறையே லகாதகரமோடியைதல் என்றின்னோரன்ன எல்லாம் எஞ்சாதெடுத்துக்

கொண்டுரைத்தல் உரைவழக்கன்மை யறிக அஃதொப்ப ஆண்டுமின் றியமைபாதுரைத்தற்குரியததுவே யாகலான் அஃதத்துணையே உப தேசித்தொழிந்தருளினரென்பது. இனிச் சாரியைகெடுதல்முறையா கலானும் ஒருமொழியுட்படும் இடைநிலைமுதலியமெய்கள் ஆண் டை விகுதிமுதலியதொக்கு விரியுங்கால் செய்கை வேறுபடுதல் முறையாகலானும் அன்னபிறவாற்றானும் அதுபற்றி யாண்டாசங்கை யென்னையென்றொழிக இனிபஃதல்லாக்கால் நீயிர்மேல் நமது அவ் வாகுமவ்வாகு பெயரையாக்குழி நிலமாகுமவ்வாகு பெயரைபாக் குங்கால் புலவரென்னு மவ்வொன்றனை மாத்திரையே ஆக்கியவா றெப்பவாக்காது இரண்டு அன் ஐ உம் எல்லைஆக உடைய என்னு மிவ்வேழு மொழிகளையு மாக்கிவைத்தீர் இஃதிய னான்முறையோ அன்றி நமதுரை பிறவுரையியல்பெல்லாம் பெறுமென்றீர் ஆக லான் அயனூன் முறையோ அன்றிஅவற்றின் வேறு முறை யோ ஆண்டொரு மொழியொழித்தொழிந்துநின்ற அவ்வறு வேறு மொழியுமாயவாற்றிற்கு நமது காரணமென்னைகொல்லோ? ஆகலான் அதுநமங்கேபிழுக்காய் முடியுமென்றொழிக. அல்லதூ உம் இடையென்பது எழுனுருபெனக்கொண்டு கொண்டவாறே நிலக்கண்ணொன்றுதல், நிலத்தின்கண்ணொன்றுதல் அவ்வேழனுருபை இயைத்து வைத்துக்கொள்ளாதொழிதன் மேலும் செய்யுளுள்விரிந் துநின்ற இடையென்னுநமதேழனுருபு நம்முரைப்பாவுள் தொக்கு நிற்பது நமதியனூலியல்பாதன்மேலுந் தொகுதல்விரிதலும் விரிதல் தொகுதலும் அவ்வியனூலியல் பாபாயொழிந்தவாறுகாண்க. அஃதி ஃதென்றறியுமறிவியாது மின்றி "மாறுகண்ணுக்குழலைசெவ்" என் பதொப்ப அதுநமது மரபின்வினையின் பாற்பட்டு நமக்குமாத்திரை யே செம்பாற்பட்டுகின்றது சாலவியக்கற்பாலதா மென்றொழிக. இருந்தவாற்றுனிது பிறன்கோளுடம்பட்டுக்கோடலென்னுந் தோல் வித்தானத்தின் பாற்படு மாறறிக.

216-2-ம் கூறு இதனுள் இதனையாயுமிடத்து அஃதிருமொ ழியன்மையின் என்றீர் ஈண்டு இதனை அஃதுஎன்பவற்றுள் முன் னின்ற இகரஅகரமிரண்டானுஞ் சுட்டப்படும் பொருள் ஒன்றேயன்

றேதேவதத்தன் தருமதத்தனுதலமைபாது இவனையாயுமிடத்து இவன் தருமதத்தனல்லனென வருவதல்லது இவனையாயுமிடத்து அவன் தருமதத்தனல்லனென வோதலேலாமையெவ்வாறு அவ்வாறே இதனைபாராயுமிடத்து அஃதென்பதியாது மேலாமையறிக.

இயல்நூல் கற்குஞ்சிறுமகார்க்கு மிக்கநகை விளைக்குமாறு இவ்வியலறியும் அறிவறைபோய நீயிர்தாமோ அவ்வியல்புள்ளவாறறியு நிறையறிவுடையீர் ஆகலின் இவ்வாராய்ச்சிப்போலிமை ஆராய்தல்வேண்டா ஆயினும் நும தறிவின்மை தேற்றமுகத்தானெ மதாசிரியரதறிவுண்மை தோற்றுமாறொருசிறிதா யுமுறைபானுப்குதும். அஃதாமாறு விகுதி முழுதுங் கெடுதல் தமிழியற்கையாகாதென்றீர் எனவே முற்றுங்கெடுதல் அத்தமிழின் செயற்கையென்பதூஉம் நுமதிவ்வழி மொழிபற்றி ஈண்டே பெற்றாம். அற்றேல், அக்கேடுநுந்தமிழின் செயற்கைபற்றி யென்னினுமெமக் கிழுக்கின்மையின் நோயுமந்நோய்க்கு மருந்தும் நும்வாய்மொழியேயாமென்றொழிக

அல்லதூஉம் 95ம் பக்கம் 4ம் கூற்றுள் நூலென்னு முதனிலைத்தொழிற்பெயரென்றீர் என்றதனானே நூற்றலென்னும் அத்தல் விகுதி யீரெழுத்துங் கெடுமென் றுண்டுக்கொண்டொழிந்த நீயிர் ஈண்டு விகுதிமுழுதுங் கெடுதல் தமிழிபற்கையாகாதென்றல் நுந்தகுதிமுழுதுங் கெடுதற்கேதுவாகலான் அதுவெறும் போலியோத்தாமென்றறிக.

இன்னுஞ் செய்யாயென்றாற்போல் வவற்றின் ஆய்விகுதிமுழுதுங்கெடுதல் நுமக்கும் எமக்கும் பிறர்க்குமொப்ப முடிந்ததாகலானும் இன்னுமின்னோன்ன பிறவாற்றானும் விகுதிமுழுதுங்கெடுதல் தமிழியற்கையாதலுமறிக

இருந்தவாற்றானிது விளங்காதமொழியெடுத் தோதலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக

271-1-கூறு "காமஞ்செயின்" என்பது காமத்தானெம்மை அவாவியுடையர் அவ்வவாவிபவாறே அவாவி யவற்றை எம்மாட்டு நிகழ்த்துமுறையா னிகழ்துவாராயினென்பதே ஆண்டைப்பொருளா

கலானும் ஆண்டுப்பேணியாரென்பது இரண்டன்றுகையன்றி செய ப்படுபொருளைச் செய்தசொப்பவைத்துப தேசித்தருளிய தன்மை யானும் அதுபற்றி இதனுளோது நமது குழறுபடைகளெடுத்துக் காட்டாதல் செல்லாமையானும் அஃதங்ஙனந்தொகாதென்றுதல் போலியாமென்றொழிக அஃதேல் அதுபேணப்பட்டாரென வைத்து ரைத்துப்போந்த பரிமேலழகர் அஃதஃதெனத்தந்து போந்தனரா லெனின் அற்றேல் அவரஃதொப்பத்தந்து போந்தபிறுண்டொ ருசார இழுக்கென நீயி ரோதுவயாவை அஃதவற்றின் பாற்பட் டடங்காது சொல்லோ அவர் அவரொப்பாருரைபற்றி பிறரோது மிழுக்கு நமக்கிழுக்கின்மையும் இழுக்கின்மை நமக்கிழுக்காதலும் நுந்தலைநூல் விதியென்பது மேலோதியொழிந்தாமென்க. அஃ தேல்காமத்தானவாவியாரென்பது புதல்வன் பொருட்டன்றி அஃத தன்பொருட்டவாவல் இழுக்கென்னுஞ்சுருதியோடுமுரணும்போலு மெனின்முரணாது அவ்விரண்டன் செயப்படுபொருள்கள் தம்முள் வேறுவேறுகலானென்பது இனிஉரையிரண்டுமிழுக்கின்மைக் கூமை திமேலோதிப் போந்தாங்கடைப்பிடிக்க இருந்தவாற்றுனிது சொற் பொருளிரண்டனையு மிரட்டித்தோதலென்னுந் தோல்வித்தானத் தின் பாற்படு மாறறிக.

217-2-கூறு இதனுள் உரையை ஆராயாமல் தோன்றுதுந்தோன் றியும் வருமென அவர்கூறியவுரையைத் திரிவுபடக்கொண்டு சிவஞா னமுனிவர் வேறுபல கூறினரென்றீர் ஈண்டுரையை யாராயாமலென் புழிநுங்கருத்து வேறு செயல் வேறுமாறுய்த்துணர்ந்துகொள்க கூறி யவுரையைத் திரிவுபடக்கொண்டென்பதூஉம் அது. ஆகலானது பற் றியோதும் பொருளும் அவ்வா றுமென்பதோதாதே யினிது விள ங்கும் இருந்தவாற்றுனிது பிறர்மதமேற்கோடலென்னுந் தோல்வித் தானத்தினின் பாற்படு மாறறிக.

217-3-கூறும் 218-1-கூறும் இவ்விருகூற்று ளோதுவ வெல் லாம் யாதும் பயன்படாமை மேலோதினும் முன்னருமோதுதும் இருந்தவாற்றுனிது வேற்றேது வேற்றுப்பொருள்களென்னுந் தோல் வித்தானங்களின் பாற்படு மாறறிக.

218-2-கூறு இதனுள் வழுவமைதி மாத்திரையே யாசிரியன் கட்டளையாமென நீயிர் கோடல் போலியாதல் மேலோதியொழிந்தாம். ஆகலின் நுமக்கிவ்வோத்தானும் பயன்யாது மின்மையானும் இங்ஙனங்கொண்டிஃதோதின மெனநுமதாசிரியனே தாமையானும் ஆசிரியர் திருவுள்ளமஃதன் றிஃதெனக்கோடற் பாற்றென்பது இருந்தவாற்றானிது சித்தாந்தப்போலி யென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

3-ங்கூறு இதனுள் அஃதஃதாயின் ஆசிரியன் இந்திரநூலுணர்ந் தோனாகலின் அஃதிந்நூலுளோதப்படுக என்றீர் அற்றேல் அது பற்றிநும்மை யொன்றீண்டு வினவுதும் அதுவருமாறு ஆசிரியர் செய்யுளியன் முதலிய இயனூலியல்பனைத்து முழுதொருங் குணர்ந்தோராகலான் அச்செய்யுளியலுள்ளும் ஏனையியலுள்ளும் இன்றியமையாது வேண்டப்பட்டன வொழித்தொழிந்த ஒருசார ஓதாதொழிந்த தென்னையோ அவையங்ஙனமோ தாமைக்கேது அவ்வொருசார உணராமையோ அன்றிப் பிறிதேயோ அஃதன்று, தொகைநூலாகலான் அங்ஙனமாயிற்றெனின் அற்றேலிதுவு நுமதவ்வமைதியின் பாற்பட்டடங் காது கொல்லோ அல்லதூஉம் இவற்றிற் கெல்லாம் ஆசிரியரோத்தின் றியமையாத நீயிர் "சேவற்பெயர்க் கொடை சிறகொடு சிவணுமாயிருந்தூபி மயிலலங்கடையே" என்றற் றொடக்கத்தியல் பெல்லாம் ஐயந்திரிபின்றி முழுதொருங் குணர்ந்தருளிய ஸ்ரீகாந்தபுராண நூலுடையர் 'எழுந்துமூன்னுறு மஞ்ஞையஞ் சேவல்' என்றோதியருளியதற்கு அமைதியா தோதுவீர் இடையென்பதுஇடமன்றென்றாற்போல ஆண்டுமயிலென்னுது மஞ்ஞையென்றோதுதலானும் சூத்திரத்துள் மயிலலங்கடையென்றமயில் மஞ்ஞையாவதன்று அது மயிலினேரே கதேசமாய மஞ்ஞையென்பீர் போலும் அன்றி அந்நூலுடையர் முன்பின்னோக்காது "செவ்வேளூர்ந்தமயிற் சாயின் அது நேரவும்படுமென ஆசிரியர் நச்சினார்க்கினியனர் பிறழ்ந்தோதுமமைதியை அமைதியெனத்திரியக் கொண்டோதின ரென்பீர்போலும் அன்றி நீயிர் மடற்பனை யென்பதனைப்போலி முறையாற் பனையினை னைச்சாதித்தவா றெப்ப மஞ்ஞையஞ் சேவ

லென்பது அறுமுகக்கடவுட் குரியவாகன மாகலின் அஃதாட்டினு ளெனச் சாதிப்பினுஞ் சாதிப்பீர் இன்னு மிவ்வாறே நீயிர் யாதும் வரையறையின்றிச் சாதிப்பனயாது ம்வரை யறையின்மையின் அவை யனைத்து மெஞ்சாதோது மொத்தும் வரையறைப்படா வென்க. இன்னு நீயிரோது மின்னோரன்ன போலிக ளெண்ணி றந்தன. அவையெல்லாந் தனித்தனி யெடுத்தோதல மையாதென மேலோதினுங்கடைப்பிடிக்க. அஃடிப்பட்டுப்போந்த ஆன்றோரனைவரா னுமாளப்பட்டு வருதலானும் அஃதவ்வான்றோர் திருப்பாக்களான றியப்படுதலானும் அதுபற்றி அஃதெல்லார்க்கு முடம் பாடாகலா னும் பிளவு படாப் பூசினிக்காயை யாதும் பிடிசோற்றுட் கரத்தலா காமை யானும் அல்லதூஉம் வடநூலியல் தென்னூலியலுள் விரவா தென்பதற் கெடுத்தோத்தின்மையானும் அது விரவிவருதல் காணப் படுதலானும் இந்நூன் முன்னூன் முதலியவற்று ளோதப்படுதலா னும் இன்னு மின்னோரன்ன பிறவாற்றானும் அவ்வோத்து வானின் வரைந்த தொருவடி வொப்ப வெறும் போலியாயொழிந்தவாறு கா ண்க. யாமேலோதிப் போந்தவாற்றானும் முன்னோதக்கிடந்தவாற்றா னும் எமதாசிரியர் தொல்லாசிரிய ரோத்தோடியைபு மாறோதி யருளவும் அஃதறியுமறிவியாது மின்றி நீயிரோதும் போலிகள் பல வேறாகவும் ஏதிலார் குற்றம்போற்றந் குற்றம்பார்க்கும் பார்வை யாது மின்மையின் காமாலைக் கண்ணுடையன் காணு மெந்நிறமும் செந்நிறமாய்க்காணுமாறொப்ப த்தொல்லாசிரியன்மாரெல்லாரு முறை யானோதிய முறையெல்லா முறையல்லவெனவும் நும் முறையன் மையே முறையாமெனவுங் காணுங் கண்ணுடைய நீயிர் உண்மை முறையானுபதேசித்தருளிய எமதாசிரியரோத்தியல்பும் எம்மோத் தொப்பதுபோலு மெனத்திரியக்கொண்டு முன்னோர் மொழியோடு முரணுதுரைத்துழியும் பரிமேலழகரைச் சிவஞான முனிவரோது மிழுக் கெண்ணிறந்தன அதனானவற்றை மெய்யெனக்கொண்டு அவையவ்வாறே திருந்தவைத் சாருமுளரென இவ்வாறு வாய்கூ சாது புறன்பழித்தீர் அற்றேல் அவர் அவ்வாறுரைத் துழியெல்லாம் நீயி ரவரையோதாத விழுக்கென்னையெனின் அது நும்போலியு

ரையே யெல்லார்க்கு மினிது முழக்குமென்பது. அதுகிடக்க. இனி அவ்வுண்மையியல்புணர்ந்து அவ்வாறுற்றினரொப்ப நம்போலியிழுக்கையுங் கைக்கொண்டு போலி முறையாற்றிருந்தவைப்பாரு முளரேனும் அதுபற்றி நமக்கித்துணையிழுக்கு மிகப்பெரிது நிகழாவென்க. ஆயவாற்றான் நமது அகமுரணைத்து மிக்கும் பெரும் படை யெமதாசிரியாரணை யொன்றேயென் பதிதனுணர்ந்து கொள்க. இருந்தவாற்றானிது தோல்வித்தான மெய்தியானை அஃதெய்தா தானெனவும் அஃதெய்தாதானை அஃதெய்தியானெனவு மோதுந் தோல்வித்தானங்களின் பாற்படு மாறறிக.

218-5-கூறு இதனுள்வடமொழியியன்முறை தென்மொழியிய லுளோதாமைக்குரியவேதுயாதெனின் அவ்விருவேறு மொழியினு முறையேபாவனைபற்றியும் பொருட்பெற்றிப்பற்றியுஞ் சொல்லியலெடுத்தோதலானென்றீர் எனவே அவைதம்மு ளொன்றனுளொன்று விரவாமைக்கேதுவாவது அவையிரண்டுந் தம்முட்பகைப்பொருளாகலானென்றவாறாயிற்று. ஆகவே பகைப்பொருளல்லாக்கால் விரவுமென்பது பெறப்பட்டது அவ்வாறேநமது பாவனைபொருட்பெற்றியிரண்டுந் தம்முள்பகைப்பொருளென்றற்கு ப்பிரமாணமென்னை ஒன்றுங்காண்கிலம். அல்லதூஉம் வடநூலுளோதுமியல்பு பாவனைபற்றியாமெனின் அதுபோலியாய் முடியுமல்லதுண்மையாகாது ஆகவெ அவ்வியல்பெடுத்தோது நூலும்போலியாய் முடியுமென்றொழிக. பசியுடையனொருவன் தன்னையுண்டானெப்பவைத்துப் பாவனைசெய்யுமாயின் அவற்குண்ணாதே அப்பசியமைதல்வேண்டும் அல்லதூஉம் இன்னன மிவ்விழுக்கெல்லா மோதற்குரிய நீயிர் அவற்றையோதியதாவைத்துப் பாவனைசெய்தமாத்திரையே அமைந்தொழிதல் வேண்டும் அஃதமைந்தொழியாது ஓதி யொழிதல்பற்றி அஃதஃதோது நங்கட்காணாமையின் பாவனையென்ப தெவ்வாற்றானுமேலாமையின் அதுபோலியாதல் தெற்றெனவறிக. இதனானே "ஓதியுணர்ந்தும் பிறர்க் குரைத்துந் தானடங்காப்பேதையிற் பேதையாரிலென்னு மிலக்கணத்திற் கிலக்கியமுண்மையு மீண்டுக்கண்டாம் அஃதேல் நூல்களுள்சோகம் பாவனையென அப்பாவ

னைப்போதப் படுமாலோவெனின் வடமொழியியனூற்பாவனையெல்லா முழுதொருங்குணர்ந் திவ்வாறுபோலிமுறையா னுணர்த்திய நீயிர் அவ்வியனூற்கண் கொண்டுணரும் பதினூற்பாவனை யியல்புணரவல்லீர் தாமென்றொழிக. இன்னுமிதனானேவல்லதூஉ மில்லெலன்பதூஉம் உளதாமாறு காண்க. இருந்தவாற்றானிது அறியாமையென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக.

218-1-கூறு இதனுள் ஒருவிகுதியது ஈரெழுத்துங்கெடுமாயின் ஆண்டுக்கெட்டவிகுதி இஃதென்பதறிதலரிதாகலான் அது தமிழ்நூற்கியல்பன்றாமென்றீர் அதுவுமந்நூற்குரியதோ ரியல்பாமென்பது மேலோதிப்போந்தாம் முன்னருமோதுதும் அதுநிற்க எமதாசிரியர்விகுதி கெட்டொழிந்ததென் றுபதேசித்தருளுதல் யாம்யாண்டுங்கண்டிலம் அஃதீண்டு நீயிரோதக் கேட்டறிந்தனம் அதுநிற்க இனி அஃதஃதாயினும் அதுபற்றியு மாண்டிழுக்கின்மைமுன்னோதுதும் அதுகிடக்க ஈரெழுத்தானாயவிகுதியீரெழுத்து மோருழிக் கெட்டொழியின் அஃதிஃதென் றறியுமிலச்சினையாண்டின்மையின் அது வேண்டப்படாவென்றீர் அற்றேல் ஓரெழுத்தானாய விகுதியுண்டென்பதூஉம் அதுவுங் கெடுமென்பதூ உம்நுமக்குமொக்குமன்றே அவை அங்ஙனங்கெடுமாயின் அவ்வோரெழுத்து விகுதியும் அவ்வாறு பலவேறாகலின் அவற்றுளாண்டுக் கெட்டதிதுவே பிறிதன்றென வேற்றுமைகாணுமாறு ஆண்டுக்காட்டிநிற்கு நுமதிலச்சினையென்னை? அஃதன்று எழுத்தெல்லாந் தனித்தனி பொருளெனப்படு மாகலான் பலவேறுறுப்பமைந்ததே ஒருபொருளெப்படும் எழுத்து மஃதாகலான் அங்ஙனங்கெடுமவ்வெழுத்தின் பலவேறுறுப்புக்களுள் ஒரு சாரொழித்தொழிந்த வொருசாருறுப்பு ஒழியுமவற்றோடொழியாதாண்டு நின்று இலச்சினையாயிற்றென்பீர் கொல்லோ இனிவடநூற்கேயுரியது பாவனையென நீயிர்மேலோதுதலான் அஃததிவியாத்திபாமென்றஞ்சி ஆண்டெழுத்துக்கெடுமாயினும் அதுபாவனைபற்றிக்கோடுமென அஃதீண்டோது வீரல்லீர் ஆகலான் நுமதிவ்வோத்து மயில் நடமொப்ப ஒன்றோதும் வழி ஒன்றொழிகின்றதன்றே இதற்கு நீயிரோதுமமைதியாது அதுநிற்க,

எமதாசிரியர் தொக்கதென்றாரன்றி கெட்டதென்றாரல்லர் இனி தொகைகேடென்பன ஒருபொருண்மொழியாமெனின் அற்றேல் வினைத்தொகை முதலியவற்றை வினைக்கேடென்றித் தொடக்கத் தான்வழங்கல்வேண்டுமென்றேழிக. இருந்தவாற்றானிதுபொருளின் மையென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக.

210-2-கூறு இதனுள் இருமொழிக்குந் தம்முளிடையீடு பெரிதாகலான்வடமொழியியலாய அந்தர்ப்பாவிதணிச்சுமுதலிய இயலெல்லாம் ஆசிரியர் தமிழ்மொழியியலுளேன்று கொள்வாரல்லரென்றீர் நீயிர் மேலுழியெல்லாம் ஆசிரியனென வொருமையானோதிய ஆசிரியனன்றி ஈண்டவனின்வேறாயதோர் பன்மைபாசிராயினாரென்க ஆசிரியர் கொள்ளாரென ஈண்டோதமே எனை ஆசிரியனேன்றுகொள்ளுமென்பது நுங்கருத்தாயிற்று. அதுநிற்க ஆசிரியர் தமிழிற்கொள்ளாரென்றீர் அஃதேதல் ஆசிரியர் இதனுள் இதனையாம் கொண்டிலமென் றிங்ஙனம் யாண்டும் நுமது பன்மை ஆசிரியரோதாமையானும் எனைஒருமையாசிரியற்கு மதுகருத்தென்பதுமேலெய் துவித்தனமாக லானும் இன்னு மின்னோரன்ன பிறவாற்றானு நும்பொருளெல்லாம் போலியாகலான் நீயிர் யாது நும்மாத்திரை யாயினும நுண்மையின்மை பசுமரத்தாணியொப்ப நாட்டப்பட்டவாறு காண்க. அஃதிஃதாகவு நீயிர் நுமது ஆசிரியனினும் அதிநுண்ணுணர்வுடையாராக நும்மைமதித்தெமதாசிரியர் திருவுள்ளமு மங்ஙனமெனத்திரியக் கோடன்மேலும் ஆசிரியர் பரிமேலழகனார் ஆசிரியர் இளம்பூரணனார் ஆசிரியர் நச்சினார்க்கினியனார் முதலிய தொல்லாசிரியன்மார் ஆசிரியர் திருவுள்ள முள்ளவாறுணர்ந்துணர்த்திவைத்தவற்றை யெல்லாந் திரியநோக்கி அவையெல்லாந்தொன்னூன்மறைபடவோதிய வென நீயிரோதிய வெல்லாம் வெறும்போலி யாதல் யாமெமதாசிரியர் உண்மையோத் துண்மையாமாறு சாதிக்கு முகத்தாற் சாதித்தாம் இன்னும் நும்முறையெல்லா நூன்முறையன்மை மெய்கண்ட பாடியத்துள்ளுங்காண்க

இன்னு நீயிர் விகுதி ஈரெழுத்துங் கெடுதல் இழுக்காமென்ப திழுக்காமென்பது பிறிதோராற்றானுமொரு சிறிது காட்டுதும் அது

வருமாறு வேற்றுமைத் தொகை முதலிய தொகை ஆறினும் ஈரெ ழுத்து முதலிய பலவெழுத்தானுய உருபுகளுளவாகலான் அவையு மவ்வாறே எழுத்தெல்லாந் தொக்குத்தோன்றுமையின் அவை தொக் குழி அத்தொக்கன இவை தொகாதன இவையென அவ்வவ் வேற் றுமையறியுமாறு நமக்கு ஆண்டு நின்றுணர்த்துமிலச்சினை யென்னை? கண்ணுருபுதொக்குழி ஆண்டுத் தொக்கது அதுவோ யேனை இன்னு ருபு முதலிய பிறவோவென இங்ஙனமையப்பாடுளதாய் யாதுந் துணி வுபிறவாதென்றே யன்றோ வாண்டுக் கோடல் வேண்டும் இஃதொ ழித் தொழிந்த தொகைஏனைய வற்றிற்கு மிஃதொக்கும் அல்லதூ உம் நீயிர் பொற்றொடியென்பது பொற்றொடியாளென விரியுமென் றீர் அற்றேல் நும தவ்விரியிரெழுத்துந் தொக்கொழிதலின் ஆண்டுத் தொக்கது நுமதாளே பிறிதன் றென்பதறிதற்குரிய நுமதிலச்சினை யாது அஃதின்னும் பொற்றொடியதென்றித் தொடக்கத்தான் விரியு மாகலான் ஆண்டொன்றிற்றுணிவு பிறவாதன்றோ இதற்கு நீயிரோது மமைதியாது? அஃதன்ற ஆண்டு அத்தொடி இயைபு ஆண் பான் முதலியவற்றிற்கு இன்மைபானு முற்பிறப்பட்டு நின்றபொ ருளாற்றல் பற்றியும் அதிகார முதலிய பிறவியைபு பற்றியும் அஃ தேனைப்பாற் குரித்தாகாமையின் ஆண்டைக்கிலச்சினை வேறுவே ண்டா அவையே அமையுமாலெனின் அற்றேல் நுமக்கு ஈண்டைக்கி லச்சினை அன்னோரன்னவாத லமையாது வேறுவேண்டுமே கொ ல்லோ வேண்டுமாயின் ஆண்டுமதுவேறு வேண்டப்படுதலின்றிய மையாதென்றொழிக ஆயவாற்றான் இது வுமதுவாத லொருதலையாக லான் தொக்கமொழியிஃதென் றறியலாகாதென நீயிரோதியது வெ றும் போலியாதலறிக, இதனுன் அந்தர்ப்பாவி தணிச்சுமுதலிய இய லும் பிறவும் ஆசிரியர் ஈண்டேன்று கொண்டருளின ரென்பதெல் லாவற்றானுமியைந்து போந்தவாறுகாண்க. அஃதிஃதாகவும் நும்மை நீயிர் ஆசிரியரினும் மிகப் பெரிது நுண்ணுணர்வுடையராத் திரியக் கொண்டு உளதிலது இலதுளதென நூன்முறை நூலுணர்ந்தோர் முறைகட் கேலாத குழறுபடைகள் மிகப் பெரிதும் படைத்துக் கொ ண்டு பிதற்றினீர் இவ்வாறே மனம் போயபோக்கெல்லாம் போந்து புலம்பு நுமக்கு யாமுணர்த்தும் வாயில் யாது மின்றென்றொழிக

இருந்தவாற்றான் இதுவும் மேலைத் தோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக.

219-4-ங்கூறு இதனுள் இன்னுமஃதங்ஙன மாயின் அன்ன பிறவும் அங்ஙனமாமெனப்பட்டு சூததிரம் பயனோடு படாதாய் முடி மென்றீர் இன்னுமாண்டும் பிறண்டு மாசங்கித்தற் குரியவும் அவற்றிற் கோது மிறையும் பலவேறுளவாகவும் அவற்று ளொன்றாயினு மறிந்தெடுத்தாசங்கிக்கு மறிவாற்றலொரு சிறிதுமின்றி ஆசங்கித்தற்குரிய வல்லவற்றை வறிதே ஆசங்கித்தீரென்றறிக அஃதேலவை யாவை யெனின் அவையெல்லா மெய்கண்ட பாடியததுள் விரித்துக் காட்டினு மாண்டுக்காண்க. அதுநிற்க. எழுவாயிடைவாயிறுவாய்ப்படுவன யாவை படாதன யாவை யென்றித் தொடக்கத்து வேறுபாடு யாதுமறிய மாட்டாத நுமக்கு யாமமைதியாதோதுவாம் நுண்ணியை யெனினு நம்பநின் பெருமை யென்னு நுண்ணிமையுடைய பரம்பொருள் அஃதன்றாய அபரப் பொருள்மாட்டடங்குமாறெப்ப இங்ஙன மேன்மேல் விரியு நுண்ணிமை யுடைபராய நீயிரோதிய வாறேநும் மொக்கு நுண்ணிமை யொழிந்த வெமதாசிரியர் திருவடியுள்மேலோது மேதுக்களானடங்கி விடுவீரென இஃதொன்றேறயாமீண்டோதுதும் அதுநிற்க தெரிதல் பொற்றொடி தாமரை யென்றாற்போலுமொழிகள் வேறு அவற்றியலும் வேறென்பது மெய்கண்டபாடியத்துக் காட்டினும் இனியிவ்வொத்தியல் வேறென்பது முன்னரோதுதும் அஃதிஃதாகலான் எல்லாவற்றானு நும்மோத்துப்போலியாதல் தெரிந்துணர்ந்து கொள்க இருந்தவாற்றான் இதுமேற்கோட்குமறுதலைப்படவோதலென்னுந்தோல்வித்தானத்தின்பாற்படுமாறறிக.

220-2-கூறு இதனுளோதும் பொருள் போலியாதற்கேது மேலோதினும் கடைபிடிக்க ஆகலான் இதனானுநுங்கருத்து யாதுநிரம்பாமையறிக. ஈண்டைத்தோல்வித்தானமும் மேலையதென்பது.

30-கூறு இதனுள் இன்னு நீயிர் நூலாசிரியரோதியதனை அதிநுண்ணிதினுணர்ந்தா ரொப்பக்காடடிநடித்து மடியின்றிமையிபல்பு முதன்மூன்று திருப்பாவானேதி, யொன்றிடைவிட்டதிருப்பா நான் குபற்றி அதனிழுக்கோதுதலான் மடிவித்தென்பது விவ்விகுதிதொ

க்கு மடிங்கென நின்றதென் றுபதேசித்தருளிப உரையோத்து அத னையுடையர் திருவுளத்தோடு மறுதலைத்தது ஆகலான் அஃதேலா தென்றீர் அத்திருப்பாவுள் இவை இவைமடியின் றீமையுணர்த்துவன, இவையிவைமடியின் குற்றமுணர்த்துவனவென நுமக்கிவ்வாறு அப் பெயர் வழிகாட்டிவைத்த ஆசிரியர் பரிமேலழகனாரோத்தான்வைத் தோதாது காந்துகொண்டு அவற்றையிவ்வாறு நும்மோத்தானெடுத் தோதி நன்றிகூறுமியல்பின்மிக்க நீயிரீண்டது கூறாது நும்மை மிக வேயுயர்த்தி முன்னோனைப்பணித்தல் நுமக்கியல்பேயாம் அது நிற்க. ஒருவன் கூர் கூராமாறு தீட்டுமக்காட்டமாட்டே காணுமாறொப்ப, நீ யிர், இவ்வாறோதி யொழிதன் மாத்திரையி னமையாது பாயிரவி ருத்தி யென்றித்தொடக்கத்தான் வைத்துவழங்குமாறு நமக்குவழி காட்டியருளிய வெமதாசிரிய ருரையோத்தினை வரிதே இங்ஙனம் போலியிழுக்கோதினீர். அது நிற்க ஆசிரியர் பரிமேலழகனார் தீமை யோதிய திருப்பா நான்கென்றோதியொழியவும், காந்தவுள்ளத்தான் அவற்றுளொன்றொழித்தோதிய நீயிர் அத்திருப்பாவின் தாற்பரிய மெடுத்தோதாதொழிந்த தென்னை - அறியாதொழிந்தனிரா நீயிர் அறியாத யாது மின்மையின் அஃதெம்போலிக்கேலாது மறுதலை யாய் முடியுமென்றஞ்சி ஒழிந்தனிரேயாமன்றி ஏதுப்பிறவற் றானொழிந்தனிரல்லீர் அஃதன்று யாமிறுவாய்த்திருப்பா இரண் டன் பொருளெடுத் தோதாதொழியுமாறொப்ப இதுவு மொழிந் தனமாலெனின் அற்றன்று அவை, மேலவையின்மைபற்றி நிகழு நன்மையெடுத்தோதல் பற்றியொழிந்தனிரன்றி வேறன்று ஆகலா னஃதிதற்கமைதியாகாது. ஒருபொருளை நுதலிவருந்திருப்பா நான் கனுள் ஒன்றொழித்தொழிந்த வோதற்கேது வேறின்மையின் அது நும்போலிக்கூற்றுக்கோர் கூற்றுபெழுதல்நோக்கி யொழிந்தீரென் றொழிக அல்லதூ உம் அது நுதலும் பொருள் தானென்னை? இனி அது நுதலுமாறுபாது மின்றேயோ நீயிரஃதோதாமைக்கேது வோ துக பிட்டுண்டு விக்கியோரொப்ப ஒதாதொழிவீராயின் அதுவே எம தாசிரியருபதேசித்தருளிய பொருள்நுமக்குடம் பாடென்பதற்கு அமையுஞ்சான்றாதலறிக. அஃதன்று அஃதெம்பகைபினரால் தீண் டப்படுதல் பற்றித்தீண்டாதொழிந்தனமாலெனின் ஏனையவுமன்ன

வேயாகலான் அதுவு மதற்கமைதியாதல் சாலாதென் றொழிக. இனி ஆண்டு அதனைமடிவித்து என்று கொண்டு அவ்வாறேரதில், குற்றமேவினைமுதலாய்க் குடிமடிதற்கு காரணமாய் முடியுமென்றீர். உரையியல்பெல்லா முள்ளவாறுணருமுணர்வுடையருள் நீயிர் மாத்திரையே தலையாயவுணர்வுடையீரென்பது எமதாசிரிய ருரையோத்துக் கேட்குஞ்சிறுமகார்க்குமினிது விளங்கும். அது நிற்க, குடியை மடிவித்துக்குற்றம் பெருகுமென்புழி குற்றமே வினை முதலாய் பிறவினையுண்மையாய் முடியுமாயின் அவ்வாறே நீயிர் "தோன்றச்செய்து பல்புகழ்நிறுத்து" என்புழியுந் தன் பெயர்தோன்றச்செய்தற்கு, பல்புகழேவினைமுதலாய் முடியும் பிறவினையுண்மை தம்முள் இரண்டற்கு மொக்குமாகலா னென்பது. கற்றீண்டு மெய்ப்பொருள்கண்டாரென்புழி கற்குமுறையாற்கற்று அக்கற்றகாரணத் தான்மெய்ப்பொருளைக் காணுக அவ்வாறு காண்பதொப்ப மடியான் மடியாது மாண்டவுஞற்றுக அஃது ஞற்றுதலிலார்க்கு அம்மடி அவர்குடியை மடிவிக்கும் அவ்வாறுமடிவித்தலான் அவர்க்குக் குற்றமே பெருகுமென இவ்வாறு முடித்தெடுத்துக்கொண்டுரைக்கு முரையியல்பு சிறிதுமறியாதநுமக்குஆண்டு அக்குற்றம் வினைமுதலாதலொன்றோ அதன்மேலும் அது காரணமுமாமன்றோ உணர்வின்மையே யுணர்வாநிகழுநுமக்குயாமீண்டுணர்த்தும் வாயில் யாதுமின்றென் றொழிக. இன்னுமாண்டு வினைமுதலென்றொழியாது காரணமென்றீர் அதன் தாற்பரியமிஃதென யாமறியகிலோம், மடிந்தென்பது பின்னைபது மடிவித்தலான்என ஆசிரியர் பரிமேலழகரு ருரைத்துப்போந்த அவ்வுரையோத்துப்பற்றியு மஃதப்பொருட்டாதல் தெற்றெனவறிக, இருந்தவாற்றானிது நாணுதலென்னுஞ் சோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக.

121-ம்-கூறு இதனுள் நீயிர் பொன்றுவித்து நீங்குவித்தென்பவும் பொன்றி, நீங்கியெனவிவ்விகுதி தொக்குநின்ற என்றல்பொருந்தாதென்பது பொருந்தாதென்க. நீங்கல், பொன்ற லென்பனவிரண்டும் எங்ஙனந் தன்வினையாய் ஒருநிகரவாம் அங்ஙனமே நீக்கல் பொன்றச்செய்தலென்பன இரண்டும் பிறவினையாய் ஒருநிகரவேயாவ. இங்ஙனமாகலான் அவ்வுரையோத்துப்பொருளிரண்டுந் தம்முளொப்

பனவாக அவற்றுள் நூலாசிரியர் திருவுள்ளத்துக்கு நேர்மையாய தொன்றே' ஏனையது அதற்குக் கோட்டமாயது ஆகலான் ஆசிரியர் திருவுள்ளத்துக்கு நேர்மைத்தாயமாண்புடைத்தெனக்கொள்க, என உடம்படுவிக்கு முகத்தாற் கட்டளையியல் பெல்லாமுணர்ந்துடையீர் இவ்வாறு கட்டளையிட்டனீர். நும்மைக்கட்டளைக்கல்லாகநீயிர்தாமே யமைத்துளீரோ. அல்லது நூலாசிரியர் தாமே அமைத்தருளினரோ என அஃதொருதலைப்படாது பலதலைப்படுகின்றது. வற்றியவோலை கலகலக்குமாறுபோல இங்ஙனங் குழறுங்குன்ழறுபடைபற்றி ஆம்பயன் யாதுமின்மையறிக. அதுநிற்க, வெஃகுதலால் குடிதானேபொன்றுமென்பதூஉம் காட்சியர்க்கு அக்காட்சியான் இருடானே நீங்குமென்பதூஉம் என்பனவே அவ்விருவேறு திருப்பாக்கருத்துமாகலான் ஆண்டும் பரிமேலழகருரையே ஆசிரியர் கருத்துக்கு மாறுபடாதமாண்பிற்றுமென்றீர் வெஃகுதலால் குடிதானேபொன்றுமென நீயிர் ஈண்டோதியதூஉம் அவ்வெஃகுதல் அவன் குடியைக்கெடச் செய்து பலகுற்றங்களையுமப்பொழுதேயவனுக்குக் கொடுக்குமென அவ்வுரையோத்துடையரோதியதூஉம இனி அவ்வாறே காட்சியவர்க்கு அக்காட்சியான் இருடானே நீங்குமென நீயிரீண்டோதியதூஉம் அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக்கொடுக்குமென அவ்வுரையோத்துடையரோதியதூஉம் ஆயவிருதிறத்து இருவேறோத்தும் தனித்தனி ஒரு கருத்தவாமென்பது ஒறுத்தற்கஞ்சிக்கரக்குங்கருத்துடைய னொருகரப்பறியாதான் ஒறுப்பாளனில்லுட்கரந்தனனென்பதொப்ப தொருபெரும்பித்துரையாமென்றொழிக இருந்தவாற்றானிது தன் சிந்தாந்தத்திற் கியைபிலவோதிச் சித்தாந்தஞ் சாதித்தலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

இன்னுங்கற்பித் தென்புழி கற்றல் கற்பித்தலென்னுமிரு வேறு வினைகள் இருவேறு வினை முதன்மாட்டு நிகழுமாறொப்ப அவ்விருவேறு தொழிலுமிருவேறு வினை முதன்மாட்டுக் கண்டிலமென்றீர், "கண்ணிலாதவற்கு வெய்யோன் கதிரொளி காட்டலாமோ" வென்பதொப்ப நுண்ணிய கண்ணில்லாத நுமக்குயாம் அதுகாட்டுமாறும் நீயிர் அதுகாணுமாறும் யாங்ஙனம் அஃதுணருந்தவக்கண்ணுடைய

ருணர்ந்துய்குவர் அது நிற்க பொன்று வித்தற்றெழில் வெஃகல் வினைமுதன்மாட்டும் பொன்றுந்தொழில் குடிவினை முதன்மாட்டும் ஆகவும் அவ்வாறே நீக்கு வித்தற்றெழில் காட்சிவினை முதன்மாட்டும்நீக்கற்றெழில்இருள்வினைமுதன்மாட்டுமாகவும் அவ்விருதிறத்திரு வேறுவினையுமிருதிறத்து இருவேறுவினைமுதல் மாட்டுந்தனித்தனி வேறுவேறு நிகழுமாறெமதாசிரிய ருரையோது மோதுவார் மாட்டுக்கேட்பின் நுமக்கு அவர் இப்பொருளி னிதுணர்த்துவர் அஃதிற் றிற்றெனப்புடைபடவொற்றி நுனுகியாயு நுண்ணறிவின்றி வெஃகின் அவ்வெஃகாலானே குடிதானேபொன்றுமெனவும், காட்சியுடையர்க்கு அக்காட்சியானே இருள்தானேநீங்குமெனவுமோதி இதுவேகருத்து ஆகலான் ஆண்டு விவ்விகுதிப்பொருள் சிறவாதென்றுந்தீபற எனப்புலம்பி ஈண்டும் மடியே யென்னுமாண்டு மாத்திரையே பரிமேலழகருரை ஆசிரியர்கருத்தோடு மாறுபடாதமாண்பிற்றெனப் பிதற்றினீர் எனவே பிறுண்டெல்லாம் அவருரை அவர்கருத்தோடு மாறுபட்டுமாண்புடைத் தன்றென்றவாறுயிற்று அவர் தம்முரையியல்பு பற்றி யெமதாசிரியருரைப்புழி மாத்திரையே அது நும்போலிஇழுக்குகட்கு போலித்துணையாய் இழுக்கின்மையும் ஒழிந்துழியெல்லாமிழுக்காதலுமாய் அஃதிஃதாமென்பதூ உம் அதனுல் நும்மோத்தெல்லாம் வெறும் போலியாத லொருதலையாமென்பதூ உம் மேலோதினும் கடைப்பிடிக்க இனிவெஃகுதலால் குடிதானேபொன்றுமென்றீர் அவ்வாறே நீயிர் 186-1-கூறு பல்புகழாவன இயற்கை செயற்கையென்னு மிருவேறறிவான் வந்தபுகழாமென்றீர் ஆண்டுமிவ்வாறே அவ்வறிவானே தானேவந்தபுகழ் என்றேுதல் வேண்டுமன்றே நுமதுரைபற்றியே வெஃகுங்காரணத்தானேகுடி போன்றலாயகாரிய நிகழுமென்பது நும்முரைபோதுவார்க்கு மினிது விளங்கவும் அஃதவ்வுரையாசிரியராய நுமக்கு மாத்திரையே காரணமின்றித்தானேயாய் பொன்றல் பொள்ளெனப்ப புலப்பட்டுக்கிடத்தலான் அது கடிதிற் காண்டல் கண்டது மறவாமை யென்னு நுமதறிவின் மாண்பேயாமென் பதியாமெமதறிவின் மாண்பானறிந்தொழிந்தாமென்பது இனிக்காட்சியான் அவ்விருடானே நீங்கு மென்புழியும் இவ்வாறேயுய்த்துக்கொண்டுணர்க.

22-கூறு இதனுள், யாமரந்தானே யெஞ்சுதலும் கோழிதானே கூவுதலுமுடைய, ஆகலான் யானை ஒடித்துண்டெஞ்சுவித்த யாவெனவும் கோழியைக்கூவிவித்துப் பொழுது புலர்ந்ததெனவு முரைத்த லேலாதென்றீர் இதுவுமேலதாம் ஆகலான்யாமீண்டு வேறுவிடுக்கவேண்டா ஆயினும் அதுபற்றிபொரு சிறிது முன்னரோதும் அதுநிற்க நீயிர் கற்பித்தலென மேலெடுத்துக்காட்டு மவ்வெடுத்துக்காட்டே யீண்டைக்குமமையுமாயினும் பிறிதோராற்றானுமதுசாதித்தற் பொருட்டு வேறெடுத்தோதினீர்போலும் அதுகிடக்க யானையொடித்துண்டபின்னர் யாமரந்தானே எஞ்சுதலும், போது புலர்தற்கு முன்னர்க்கோழி தானே கூவுதலுமுடையவாமென்றீர் அற்றேல் நும்மை ஈண்டு வினவுதும் அது வருமாறு.

அஃதஃதேயாமெனின், அவ்வாறே நம்மனோரிறத்தற் றொழிலும் அதனை நிகழ்த்தற்குரியதொரு வினைமுதலை யின்றித்தானே நிகழுமெனக் கோடல் வேண்டு மன்றோ, அஃதன்று, யானையொடித்துண்டொழிந்து போத யாமரந்தானே யெஞ்சும், சண்டனுயிருண்டொழிந்துபோத, யாந், தாமே இறத்தும் அஃதொப்பவாமெனின் அற்றன்று நிகழுமெத்தொழிலும் அவ்வத்தொழிலை நிகழ்த்துமவ்வவ் வினை முதல் பற்றியே நிகழுமல்லது அவைதாமே நிகழ்வ அன்மையானென்பது, இனி அங்ஙனமன்றி அவைதாமே நிகழுமெனின் இவ்வுலகத்தோற்றமுதலிய தொழிலும் அவற்றை நிகழ்த்துமவ்வவ்வினை முதலையின்றி அவைதாமே நிகழுமெனப்படும் படுமாயின் அது சூனியத்தி னுலகந்தோன்றுமென்னுஞ் சூனிய வாதியோத்தா தன்மேலு முலோகாய தன் புத்தன் மீமாஞ்சகனோத்துமாய் முடியுமாறுகாண்க. நீயிர்மேல் எல்லாப்பொருளுஞ் சேதனமென மாயாவாதப்பொருள் போதித்தன் மேலும் இவ்வுலகந்தன்னியல்பிற்றானே தோன்றுமென்றிஃதொன் றீண்டோதவுந் தலைப்பட்டனிர் ஆயவாற்றான் ஆசிரியர் "பெயரினும் வினையினும் மெய்தடுமாறி" யெனவைத்துபதேசித்தருளுமாறொப்ப நீயிரிவ்வாறு பலர்கோளோதி மதமொன்றுட்படாது தடுமாறுகின்றனிர் ஆகலான் நும்மதமோரிடை நிகர்மதமாய் முடியுமாறுகாண்க. இவ்வாறு தடுமாறுதலுடைய நீயிர்தாமேயா

துந்தடுமாற்றமற்ற வெமதாசிரியர் திருவோத்தோடெதிரோத்தோ
தவல்லுனராமென்றொழிக இதனானே நீயிர் வில்லேருழவர் சொல்
லேருழவர்பகை என்னுஞ்சுருதிக்கிலக்காயினீரென்க அது கிடக்க
இனி, பலருண்டெஞ்சியசோறென்புழி உண்டல் எஞ்சல் என்னுமவ்
விருவேறு வினையினுள் ஒன்றுமுன்னிகழ்ந்தொழிய ஒன்று அதன்
பின்னிகழ்வ தொன்றன்று அவற்றுள் எஞ்சல்வினை உண்டல் வினை
யையின்றி யமைந்து அவ்வுண்டல்வினைவேறு, தான் வேறெனத்தம்
மு ளிருவேறு திறப்பட்டுத்தானதனின் வேறாய்த்தனித்து அதன்
பின் னிகழ்வதொன்றன்றாய் அவ்வுண்டல் வினை நிகழுமுகத்தான்
அதனோடொற்றித்து முற்பிற்பாடின்றி நிகழும் ஆகலான் அவ்வெஞ்
சல் வினை உண்டல் வினையின்வேறாய் அதுமுன்னிகழ்ந்தொழியத்
தான்தனித்து அதன் பின்னிகழுமொரு தனிவினையாவதொன்றன்று
இனி அவ்வாறேயேனையுண்டல்வினையும் அவ்வெஞ்சல்வினை வேறு
தான் வேறெனத்தம்முளிருவேறு திறப்பட்டுத் தான் அதனின் வே
றாத்தனித்து முன்னிகழ்வதொன்றன்றாய் அதனோடொற்றித்து
முற்பிற்பாடின்றி நிகழும் ஆகலான் அதுவும் அவ்வெஞ்சல் வினையின்
வேறாய்த் தனித்து அதன் முன்னிகழுமொரு தனிவினையாவதொன்
றன்று இருந்தவாற்றான் அவைதாம் வேற்றுமைநயத்தான் வேறெ
னப்படுமாயினும் எஞ்சல் வினை ஆண்டு உண்டற்காரணத்தான் அத
னையொட்டி அதனின் வேற்றுமையின்றிஅது நிகழுமுகத்தான் நிக
ழுமவ் வொற்றுமைநயத்தா னொன்றெனவும் படும் ஆகலானும் அன்
னபிறவாற்றானும் வினையெல்லாந்தம்மை நிகழ்த்து மவ்வவ்வினை முத
லையின்றித்தாமே நிகழ்வவன்மையானும் ஆண்டு நிகழும் அவ்விரு
வேறு வினையுள் முன்னையது மாத்திரையேதன்னை நிகழ்த்துமொரு
வினைமுதல் பற்றியும் பின்னையது தன்னை நிகழ்த்துமொரு வினை
முதலைப்பற்றாது தானேயுமாய் இவ்வாறு அவ்விருவேறு வினையுந்தம்
முள் இருவேறியல் புடையவல்ல வாயினுந்தம்முட்டாமொரு நிக
ரவாய் ஆண்டு உண்ணும் வினையை நிகழ்த்தும் அவ்வொரு வினை
முதல் பற்றியே நிகழுமாறு யாமிவ்வுலகின்கட்கண்டாமன்றே இத
னையிவ்வாறே யானையுண்டெஞ்சிய யாவென்னும்பொருளினு மொட்

டிக்கண்டு கொள்க, யாவினது எஞ்சல் வினைநிகழ்ச்சிக்கேதுவாய் ஆண்டு நிகழுமவ்வுண்டல் வினையின் வினைமுதலாய அவ்யானையே அவ்வெஞ்சல் வினையையு நிகழ்த்தும் வினைமுதலாமன்றி அவ்யானை எஞ்சல் வினையோடொன்றாய் நிகழ்வதாய அவ்வுண்டல் வினையை மாத்திரையே வேறு பிரித்து முன் னிகழ்த்தியொழிய ஏனையெஞ்சல் வினை அவ்வுண்டல் வினையின் வேறாய்ப்பிரிந்து நின்று அது முன்னிகழ்ந்தொழிய அதன்பின் தன்னை நிகழ்த்துமொருவினை முதலின்றித் தனித்துத்தானே நிகழ்வதன்றாய் அவ்வுண்டல்வினையோடொன்றாய் அதனையொட்டியுடனாய் நிகழ்வதொன்றாகலானும் இருந்தவாற்றான் ஆண்டு நிகழ்த்தல் நிகழலென்னும் வினைவேறுபாடு மாத்திரையேயன்றி எஞ்சுவித்தல் எஞ்சலென்னுமவ்வேறுபாடாண்டின்மையானும் அல்லதூஉம் அவ்விரண்டுந்தம்முளொன்றனையெ ன்றின்றியமைந்து முற்பிற்பாடுடையவன் மையானும் ஆண்டுஎஞ்சுதற்கேதுவாய அவ்வுண்டலும் ஏனையெஞ்சுதலுந் தம்முள்வேறுவேறாய் அவற்றுள் முன்னையது பின்னையதிற்பிரிந்து முன்நிகழ்ந்து முற்ற பின்னையது முன்னையதிற் பிரிந்து பின்னிகழ்வதொன்றென்பது யாதுஞ் செல்லாமையானும் இன்னுமின்னோரன்ன பிறவாற்றானும் அவைதாமே நிகழுமென்றல் வெறும்போலியென்பது நுண்ணுணர் வானுணுகிநோக்கியுணர்க.

அஃதேல், இஃதொன்றனைபொன்று பற்றுதலென்றுங் குற்றமாப் முடியுமாலெனின் முடியாது, முறையே அவைதம்முள் வியாபக வியாப்பியங்களாய்த்தம்மியல்பு, வேறுவேறுடைய ஆகலானென்பது அதுகிடக்க இனிஉண்டபின் கூவியபின் என்னும் பின்னுறுதிபெச்சவினைகள் தாமே முறையே உண்டு கூவியெனத்திரிந்து நின்றனவென்றீர் அற்றேல் விகுதி இடைநிலைசாரியை உருபு முதலிய தொகுவவாய முதனிலை வினைப்பெயர் முதலிய வெல்லாம்நீயிரோதிபவாறே திரிந்து நின்றவெனவே கோடல் வேண்டும், கோடுமாயின் அவ்வவ்விதியோத்தெல்லாம் போலியாயொழியுமாறுங்காண்க. ஆகலான் அவற்றை அவ்வாறு கோடலும் போலியாதல் ஓதாதினிதுவிளங்கும்.

அல்லதூ உம் உண்டபின் கூவியபின் என்பன உண்டு கூவியெ னத்திரிந்து நின்றன வென்பீர்க்கு ஆண்டையீறு பின்னீறேபிறிதன் றென்பதுணர்த்தற்குரிய நமதிலச்சினை யென்னை அவை உண்ணமுன் கூவமுன் என்பனவு மாமெனக்கோடற்கு மேற்புடையவன்றே ஆக லான் அவ்வீறு பின்னீறே முன்னீறன்றென்பதோர் யாப்புறவு யாது மின்மையிற் பின்னீற்றுத்திரிபெனக்கோடல் யாது மேலாமையறிக. இனிதேளுக்கஞ்சிப்பாந்தள் வாய்ப்பட்டாற்போல விகுதி முழுதுங் கெடுதல் இழுக்கென்பீர்க்கு பின்விகுதிமுழுதும் அகரச்சாரியையுந் திரிதலிழுக்காகாமை மேலும் அவ்விரண்டுமே ஆண்டுத்திரிந்தன பிற வல்லவென்ப துணர்த்தற்குரிய நமதிலச்சினை இல்லாமையும் இ ழுக்கன்றென்க. இனி கேட்டிற் கிலச்கினே வேண்டலுந்திரிதற்கிலச் சினை வேண்டாமையு நமக்கு மாத்திரையே யமையும் போலுமென்க. இங்ஙனம் படுமுதலிய விகுதிகள் தொகாதென விலக்குதற்பொ ருட்டு பின்னீற்றுத்திரிபு முதலிய மறுதலைபுபாயமெண்ணுவீர்க்கு அவ்வுபாயமே வழிபாய் வந்து முற்பட்டு நிற்கு நமதூழேவலியு டைத் தென்றொழிக. பிறவுமன்ன

அஃதேல் திரிபுவிதியென வொன்றில்லை யாலோவெனின் ஒன்ற ற்குரியதொரு சிறப்பு விதியில் வழியன்றோ ஏனைப்பொது விதியொ ட்டிக்கொண்டுப்த்துணர்ச்சிகோடற்பாற்று ஆகலான் அத்தன்மைத் தாய அத்திரிபுவிதி ஈண்டைக்கியாது மேலாதென்பதூ உம் அத னியல்பும் அன்னபிறவும் மெய்கண்டபாடியத்துட் காட்டினும் ஆண் டுக்காண்க இருந்தவாற்றானிது காலம் பெருமையென்னுந் தோல் வித்தானத்தின்பாற்படு மாறறிக

222-3-கூறு இதனுள் அரசனெடுப்பித்த ஆலயமென்பதூஉம் அது வென்றூர் அஃதஃதாயின் ஆண்டெடுப்பித்தல் வினைக்கு அர சனே நிகழ்த்தும் வினைமுதலாய் முடியுமாகலான் ஏவும் வினைமுத லென வொன்று யாண்டு மின்றாப் முடியுமென்றீர் அற்றேல் நம் மையீண்டு வினவுதும் அது வருமாறு. 278-3-கூறு இதனுள் நீயிர் அவனே இந்நூலைச் செய்வித்தா னென்புழியும் அவ்வாறே ஆண்டு நமது செய்வித்தல் வினைக்கு அவ்வரசனே நிகழ்த்தும் வினை முத

லாமன்றோ ஆகலான் ஆண்டும் நமதேவும் வினை முதலென வொன்றின்றாய் முடிந்து அது நமக்கே யிழுக்காமாறு காண்க, அல்லதூஉம் ஆண்டு பிவிகுதி விரியுமாத்திரையான் நமதேவும் வினை முதலின்றியொழிதலும் அதுவே இயற்றும் வினை முதலாதலுமாய் முடியுமாயின் அவ்வாறே ஈண்டும் விவ்விகுதி நிற்றன்மாத்திரையான் அவ்வரசனேவும் வினைமுதலாகாமையும் அவனேயிந்நூலை இயற்றும் வினை முதலாகலும் ஒருதலை ஆகலான் அஃதிழுக்கினிழுக்காய் முடியுமென்றொழிக. இந்நூலைச்செய்தல் ஆலயத்தை எடுத்தலென்பவுமவ்வாறே செய்வித்தல் எடுபித்தன்பனவும் தம்முளொரு நிகர ஆகலானென்பது ஈண்டிஃதொழித்தொழிந்தவும் இவ்வாறே போலியென்பது இதனானுய்த்துணர்ந்து கொள்க, இருந்தவாற்றான் இது சித்தாந்தப்போலி யென்னுந் தோல்வித்தானத்தின்பாற் படுமாறறிக.

282-4-ங்கூறு ஈண்டு படு-வி-முதலிய விகுதிகள் விகுதியெனக் கோடல் பொருந்தாது அவையிருதிணையைம் பாற்பொருளையுணர்த்தாது விகுதிப்பொருளையும் தன் வினை பிறவினை செய்வினை செயப்பாட்டு வினையென பகுதி விகற்பப் பொருளையு முணர்த்தலானும் அது பற்றி அவைபகுதிப் பொருள் விகுதி யெனக்கோடளலக்கணமாகலானும் செம்மைமுதலியவற்றின் விகுதியை விகுதியென்றது பகுதிப்பொருள் விகுதியெனக்கோடல் போலும் திருந்து திருத்து ஆடு ஆட்டு பாய் பாய்ச்சு உருள் உருட்டு நடநடத்து எழுஎழுப்பு என்பன முறையே மெலி வலியாதல் இடைகடைகளின் எழுத்துத்தோன்றலென்னும் விகாரத்தால் பிறவினையுணர்த்துழி சிவஞானமுனிவர் விவ்விகுதிபுணர்ந்து கெடுதல் திரிதல் ஆபவென்றது அவ்வப்பகுதிகள் அப்பொருளுணர்த்தல் இயல் பென்றாரென்றலானும் "ஆட்டுவித்தாலாரொருவராடாதாரே" உட்கப்படா அரொளியிழப்பர்" என்னும் பிறவினை செயப்பாட்டு வினைகள் பகுதி விகற்பமின்றி ஆட்டினால் உட்கார் எனப்பகுதிப் பொருளையேயுணர்த்தல் காணப்படலானும் "என்றார் இது போலியாதல் அவர் தாமே கூறுங் கூற்றையும் எமதாசிரியரோது மோத்தையும் முன்னரெடுத்துக் காட்டு மாறுபற்றித்தானே விளங்கும். அஃதாமாறு.

அவரீண்டு, விளங்கு பெருகு போமுதலியன, வலிமெலியாயும் இடைகடைகளின் எழுத்துத் தோன்றியும் விகாரமுற்றுப் பிறவினை யுணர்த்துழி விவ்விகுதிபுணர்ந்து கெடுதல் திரிதலாய தென்னுது அவரும் விபடுமுதலாயின இருதிணை யைம்பாற் பொருளையுணர்த் தாது பகுதிப்பொருளையும் தன்வினை பிறவினை செய்வினை செயப் பாட்டு வினை என்னும் பகுதி விகற்பப் பொருளையு முணர்த்தல் அவ்வப்பகுதிகளின் இயல்பென்றூர். என்றது உம் எமதாசிரியர் "போக்கு பாய்ச்சு ஊட்டு நடத்து எழுப்பு தீற்று என்புழி கு-சு-டு-து-பு-று க்கள் விபிபொருளின் வந்த விகுதிஎன்பது உந் தம்முள் ஒருபொருளென தொல்காப்பியத்தொண்டராய தொல்காப்பியச்சண் முகவிருத்தியுடையர் சாதிக்கின்றூர் சமன் செய்து சீர்தூக்குங் கோல்போலமைந்தொரு பாற்கோடாமையணிபணிந்துடைய சான் றீர்காள் 194 "சிவஞானமுனிவர் ஒருசூத்திரத்திற்கேஉரை யெழு தினராயினும் அவ்வுரையுள் அவர் மரபு நிலைதிரியுமாறுபலவே றுகூற அவர்போல் தொல்காப்பியச்சண்முக விருத்தியுடையர் மரபு நிலைதிரிய" பலவேறு கூறுது சிலவாறு கூறி மறுதலைக்கடா என்ற வாறே இந்நூல் நுண்பொருளெல்லாம் யார்க்கும் காக்காது விளங்க விரிக்கும் விருத்தியை யாமீண்டுச்சுருங்கவுரைக்குமாறு பற்றிச்சீர் தூக்கியுரைமின்கள் எமதாசிரியர்கு-சு-டு-து-பு-றுக்கள் விப்பிப் பொ ருளின் வந்த வென்பது மறுதலைக் கடாவுடையர்க்குப்பகுதிப் பொ ருள் விகுதியென்னும் பொருளாயது உம் அன்ன பிறவும் வெறும் போலியாதல் மெய்கண்டபாடியத்துட்காட்டினும் ஆண்டுக்காண்க. அவையெல்லாமீண்டு விரிப்பிற் பெருகும். இஃதிடவழுமைதியின் பாற்படுமாறறிக. பிறவுமன்ன இருந்தவாற்றுனிது பிறனேதிய பொ ருளையநுவதிக்கமாட்டாமை யென்னுந் தோல்வித்தானத்தின் பாற் படுமாறறிக.

223-3-கூறு தொடங்கி 234ம்ப 1-2-கூற்றுத்துணையும் படுவன வெல்லாமெமதாசிரியர் பாயிரவிருத்தியுட்படாது சூத்திரவிடுத்தியு ட்படுதலான் அவை ஈண்டைக்கு வேண்டப்படுவனவல்ல ஆகலான் நமது ஈண்டைத்திரை முதலியவற்றிற் கெல்லாம் எமதாசிரியருப

தேசித்தருளிய முறையே உண்மை முறையென்பதூஉம் நீயிரோது முறையெல்லாம் இன்மை முறையென்பதூம் அன்னபிறவும் மெய்கண்டபாடியம் இரண்டாவது பகுதி இரண்டாவது பாகுபாட்டினுட் காண்க. இருந்தவாற்றா னிஃதோதியதனை யொழிந்து பிறிதொன் றோதிப்போது போக்கலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக,

234-2-கூறு நீயிரீண்டும். 19-9-ஆண்டுமோயவிருழியுமாத்திரை யேமறுதலைக்கடா வென்றெடுத்துக்கோடன்மேலு மேலதனுள் மாற்றமென்றெடுத்துக்கோடலின்மையும் இதனுள் மேன்முறை மாறிக் கோடலுமாயவிவற்றான் இவற்றிடைப்பட்டவும் பிறவுமாகவோதிய போலிகள் இரண்டு மல்லவென்னுமப்போலியின்போலியின் பாற்படுதன் மேலும், மேலது மாற்றமில் மறுதலை, இதுமாற்றமுண் மறுதலையென்பதூ உநுங்கருத்தாதல் பெறப்பட்டது இஃதித்தாற் பாற்பரியமேவேறன்றென்பது கூர்ந்தவுணர்வு மொருபாற்சாயாமையு முடையராய் அழுக்காறின்றி ஆயுமுறையனுய்வார் யார்க்குமினிது விளங்கும் ஆகலான் அஃதஃதன்றென்ப தெமக்கு மேலாது நுமக்கு மேலாது வேறியார்க்கு மேலாதென்றொழிக. இதனானே அரியினியல் பெய்து மாறு முயன்ற நரியினியல்பாய் முடிந்தவாறுங்காண்க. இனிபெழுவாயுள் எம்முறையாவ திஃதெதன்றெடுத்தொழிந்து இறுவாயுள் அதுமுடித்தொழிது மாகலான் இடையொழிந்தவும் பிறவும் அஃதன்னவன்மை பெறப்படாதென்றோதலும் தம்முளியையு மிருபொருள்கள் மாறித் தனித்தனி ஒன்றன் முகத்தா னென்றுணரப் படுமாறெப்ப ஈண்டோதப்பட்டவென்றோதலும் பிறவுமாய யாவும் ஈண்டைக் கேலாமையுய்த்துணர்ந்துகொள்க. யாமீண்டோதியவாற் றால், தெரிவித்தென நிற்கற்பாலது தெரிந்தென விவ்விகுதி தொக்குநின்றதென எமதாசிரிய ருபதேசித்தருளியதேலாதென்றோதிய தூஉம் பிறவும் வெறும் போலியாதலினிது சாதிக்கப்பட்டவாறுகாண்க. அஃதேலிதற்குத் தோல்வித்தானமில்லைப் போலுமெனின் அதற்கன்றே முன்வருமொப்புநோக்கெழுந்ததென்பது.

234-3. கூறு இதனுள் முறைகாட்டி யென்பது முறையானே காட்டியென்னும் பொருட்டெனின் அது முறைக்காட்டி யெனச்செய்

கைப்பட்டு நிற்குமல்லது இயல்பாகாமையின் அங்ஙனமுரைத்தார் புணர்நிலைநோக்காமை யுடையாராமென்றீர். அதனை முன்னர்த்தந்து கண்டித்தொழிக்குதும் அதுநிற்க. நீயிர் சிவஞானமுனிவர் அன்மொழித்தொகை யென்றேதியமையால் செவ்வெண் ணென்றேதியது பொருந்தாதென்பது மறுதலைக்கடா எனமேலோதினீர் ஈண்டுச் சிவஞானமுனிவர் முறைகாட்டி யென்பதற்கு முறையானே உலகர்க்கறிவித்து என்றுராலெனின் என்பது மறுதலைக்கடா என்றேதன் மேலும் மிகைபடமாற்றமா மாறுந்தோற்றுவித்தீர், நுமது மறுதலைக்கடா ஒன்றோ பலவோ என்றுயுமுறையானுய்துமாயின் பொருந்தாதென முடிவதூஉம் எனினென முடியாததூஉம் ஆயவிரண்டுந் தம்முளொன்றேயா மாறியாங்ஙனமென்க. இனி அது பலவேறென்பது நுமக்கேலாமையறிக. இதனானும் அது போலியாதல் தெற்றெனவுணரப்படும் அதுநிற்க இனி இரண்டாவது திரிபுடைமையான் விகாரமின்றி யியல்பென்னும் இவ்வியல்புடைத் தென்றீர் யாமஃதியாண்டுங் காணுமை மேலும் யாருமோது மாறுங்கண்டிலம், அது கிடக்க, அது முறைக்காட்டி என மிகுதல்வேண்டுமென அது மிகுதற்கு விதியு மெடுத்துக்காட்டி யொழிந்தனிர் அஃதீண்டைக் கேலாதென்பதொரு சிறிதுகாட்டுதும் அது வருமாறு ஆசிரியர் "வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகுமே" எனப்பொதுமையின் வைத்துபதேசித்தருளியொழிதலின் வேற்றுமை யெவற்றினுமெஞ்சாது வல்லெழுத்து மிகுதல் வேண்டுமேயன்றே அஃதஃதாயின் "சீரைகான்றிடு" "தாரைகான்ற" என்றித்தொடக்கத்துள் நுமது மிகுதிகாணப்படாமையின் ஆசிரியர் கிளந்துபதேசித்தருளாத அப்பொதுவோத்து நுமது மூன்றுவதற்கு மாத்திரையே சிறப்போத்தாமாறியாங்ஙனம் பொதுவிதி இது சிறப்புவிதி இது என்னும் வேறுபாடியாது மறியாது வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகுமே யென்றதனையே அம்மிகுதி இதற்கு மாத்திரையேயாம் ஏனையவற்றிற்கு இன்றெனப்பிதற்றினீர் அது சிறப்போத்தன்று பொது வோத்தேயாமென்பது அஃதோது மோதுவார் வாய்க்கேட்டுத்தெளிந்து கொள்ளுக அல்லதூஉம் சிறைகாக்கும் நிறைகாக்குமெனவைத்துபதே

சித்தருளிய பரமாசாரியப்பரம் பொருளின் பேருணர்வையுங்கடந்து
போந்த நமக்கு மெமக்கு கெடுஞ்சேய்த்தென்றொழிக.

இனி "புள்ளியிறுதியு முயிரிறுகிளவியும் வல்லெழுத்து மிகுதி
சொல்லிய முறையாற்றொழிற் சொன்முன்வரின் மெய்ம்மையாகலுமு
றழத்தோன்றலு மம் முறையிரண்டு முரியவையுளவே வேற்றுமைம
ருங்கிற் போற்றல்வேண்டும்" என்றெழுந்து நின்ற இவ்வுபதேசத்திரு
மொழிபற்றி அம்முறைபே முறையாமாறும் நம்முறையாது முறையி
ன்றுமாறு மறிந்தடங்குக, அற்றாகலினன்றே "ஐகாரவிறுதியாம் பெ
யா முன்ன" ரென்றருளாது "பெயர் நிலை முன்னரென்றுபதேசித்
தொழிந்தருளியதூஉமென்பது' அதுநிற்க நீயிரீண்டு, புதியதொரு
மாற்றமெடுத்தோதிய வதனாற்புணருகிறநிலைமைகள் நோக்கன்மே
லும் அந்நிலை நோக்காதே நோக்கிய நாம் இருதலையியல்பு மொருதலை
யெய்துதலான் அது நம்போலும் புணர்நிலை நோக்குவோர் நோக்கா
ராயவெல்லார்க்கும் நோக்குந்தோறு நோக்குந்தோறும் மிக்கழிபே
ருவகைபயவாநின்றது அது கிடக்க இனி யிங்ஙனம் நீயிரிழுக்கோ
திய பொருளும் பிட்டபேடணநியாயமாமாறுகாண்க இருந்தவாற்று
னிது வேற்றேது வென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக

231-ப கூறு இதனுள் ஸ்ரீ உருத்திரசருமனார் நக்கீரனார் அசரீரி
யென்னும் அம்முத்திறத்தர் பெருமை யாது நோக்காது சங்கர நமச்
சிவாயப்புலவர் அறியாதோதிபதனை மெய்புரையென மயங்கிக்கோ
டன் மேலும் கேட்போர் யாப்பு என்பவற்றிற்கு நக்கீரர் ஓதியவாறே
திய உரையாசிரியருள்ளிட்டாரையெல்லாம் அவற்றைப்பிறழ்ந்தோதி
னரென்றேதிஅதற்குச்சான்று மொன்றுகாட்டி (வேறோதவேண்டா)
(பொருந்தாது) (உணர்த்தவேண்டும்) (அடங்கும்) (உரைக்கற்பாற்று)
(உடம்பாடு) உரையாசிரியருரைமுதலியனபோலி எனத்தம்மனஞ்
சென்றவாறெல்லாஞ் சென்றுரைத்தனரென்றிவ்வாறு நீயிர் உயிர்ப்பி
டைவிடாது மிக்கபேராவஞ்செய்தனிர்

முறையானே நமது இப்பேராரவாரமனத்தையுமுன்னரெடுத்து
க்கொண்டு நமது துன்பினுக்குதவி யொழிக்குதும் அதுநிற்க. ஒன்று
கூறுதும், கூறுமாறு, குமாரதெய்வங்கேட்டு எனவும் குமாரதெய்

வத்தின் கூறாய உருத்திரசருமனெனவும்வருமவ்விருமுழியும் பெய்தோதிய குமாரதெய்வமும் குமாரதெய்வத்தின் கூறுமாய வப்பொருளிரண்டும் ஒருபொருளென்பதே நம்மோத்தாற் பெறப்பட்டுக்கிடந்தது. பலவேறுகூறுகள் தம்முட் கூடுங் கூட்டமாய ஒரு பொருளும், அப்பொருளின் பலவேறு கூற்று ளொன்றாய அக்கூறுந், தம்முளொருபொருளாமாறியாங்ஙனம் நீயிரிவ்வாறு ஒருகூறும் அது பல வேறுதம்முளினையுமவ்வினையும் தம்முளொன்றென மயங்குதன் மாத்திரையிறெழியாது அம்மபக்கம் யாதும் யாண்டுமிலவைவறிதே பழிக்கும் பழித்துரைக்குயாமெடுத்தோதும்பரிகாரம் "சிறியாருணர்ச்சியுளில்லைப்பெரியாரைப்பேணிக்கொள்வோமென்னு நோக்கு" "சிறுமைபணியுமாந்தன்னை வியந்து" "சிறுமை பெருமிதமூர்ந்துவிடல்" "சிறுமைக்கு மேனைப்பெருமைக்குந் தத்தம் கருமமேகட்டளைக்கல்" என்பவேயாமென்பது.

அதுகிடக்க இனிக்குற்றமின்மையாய்க்தவென்றீர் அஃதாய்வதன்றி எனைக்குணமுண்மைபாய்தலின்றுபோலும் அல்லதூஉம், நமது நக்கீரனார்பெருமை உருத்திரசருமனார் பெருமைகட்கு எதுப்போலியோதி அசரீரிபெருமைக்கு அஃதோதா தொழிந்தனிர் அவற்றின் மூலைமாத்திரையே யொருசிறிதுணர்ந்தனிர்போலும் அஃதொப்ப அதன் மூலையின் மூலையொருசிறிதுணர்ந்தனிராயின் யாதேனுங் குழறுதொழீயீரென்க. அதுகிடக்க.

இனி, நீயிரொருவர் மாத்திரையே முழுதும், முழுதொருங்குணர்ந்துணர்த்துவோராகலான், சங்கரநமச்சிவாயப்புலவர் அறியாதோதினரென்னும் நமதப்போலி யோத்திற்கேதுப்போலியாதுமின்றி வறிதோதியொழிந்தனிர் அது நிற்க எமதாசிரியர் அங்ஙனமுபதேசித்தருளிய அவ்வுபதேசத்தான் ஆசிரியர் பரிமேலழகனார் ஆசிரியர் இளம்பூரணனார் ஆசிரியர் சேனாவரையனார் ஆசிரியர் நச்சினார்க்கினியனார் என்னுமிவ்வாசிரியன் மாருரையோத்தொப்பஆசிரியர் நக்கீரனாருரையோத்தையுங் கைக்கொண்டருளினரென்பது பெறப்படுமல்லது நீயிரதுபற்றிமேலோதிய போலியேதுக்கள் யாதுமாண்டுப் பெறப்படாமையறிக. அஃதேல் யாமோதுமஃதவ்வுரையிடைப்

பட்டதாலெனின் அற்றேல் "தோன்றுதோற்றி" யென நீயிரெடுத்தோதியதனோடு முரணி யுரை யுரைத்தானே புறவுரையுமுரைத்தானெனப்பட்டடு அது நமக்கே யிழுக்காய் முடியுமாறுகாண்க. அது நிற்க இனி நீயிரீண்டு ஆசிரியர் நக்கீரனார் பெருமை காட்டுதற்பொருட்டு எதுப்போலியெடுத்துக்காட்டி அவ்வாசிரியரிழுக் கிழுக்கன்றென்றித்தொடக்கத்தானோதியவும் அசரீரியோத்தும் பிறவும் எமக்கீண்டோதியுணர்த்தலொழிக. நீயிரெமக்கு இவ்வியனூலொன்றோதி யொழியின் அதுபற்றி அவ்வேனையவெல்லாம் யாமேயோதியுணர்ந்து கோடும் அது நிற்க எமதாசிரியர் உரையாசிரியருள்ளிட்டாரென்றுபதேசித்தருளியவுரையோத்தியல்பிஃதென்றோர்ந்தறியுமறிவியாதுமின்றிய நீயிர் இங்ஙன மோதுவது நமக்கியல்பேயாமென்க. அஃதிஃதென்றறியுமறி வொருசிறிதுமின்றி உரைக்குமாறுகவுரைத்தாரென்பதற்கு மூலம் நமதறியாமை மூலமாமென்பது இனி அங்ஙனமுபதேசித்தருளினும் அதுபற்றியுமாண்டிழுக்கின்மை முன்னர்க்காட்டுதும் ஆகலான் நீயிரீண்டோதுவ வெல்லாம் அவையன்மைக்கேதுவன்மையறிக. இனி யெமதாசிரியர் நும்மொப்ப ஏகதேசநோக்கியாதுமிலரென நீயிராண்டாண்டோதுமாறெல்லாமொக்குமென்பது மேலோதினுங்கடைபிடிக்க: ஆகலான் நீயிர் நோக்காமையானுக்கியவேயிழுக்காம் அல்லதூஉம் யாமேலோதியவாற்றானறிந்தோதுவவன்றேயிபல்பு அங்ஙனமன்றி அஃதியாது மறியாதோது நீயிர் அறியாதோதுவவெல்லாம் அறிந்தோதுவவெனப் பாவித்துக்கோடலும் நமக்கியல்பேயாம் எமதாசிரியர்க்கஃதியாதுமின்றென்பது மேற்கூறினும் முன்னருங்கூறுதும் அது நிற்க, இனி நீயிர் நும்மனம்போயவழிப்போகாது நின்றோதிய நூல் நூலன்றென்பது எழுவாய்க்கண்ணொரு சிறிதாயுமுறையானுய்ந்தொழிந்தனம் ஈண்டும் நீயிர் பிறர்தாம் நூலென்றெழுதியவழுவியொழிய நூலன்றென்றெழுதிய இதனையுமொரு சிறிது ஆயுமுறையானுய்ந்தோதுதும் அதுவருமாறு.

227-கூறு ஈண்டு நீயிர் கேட்போரென்பது கற்போராகிய பாடங்கேட்போர் என்பதூஉம் யாப்பென்பது இவையாய்ந்தபின் இது

கேட்கற்பாற்றென்பதூஉம் பொருந்தாவென்றீர் எனவே ஈண்டி வைமாத்திரையே பொருந்தா இவை யொழிந்தொழிந்தனவெல்லாம் பொருந்து மென்பதூஉம் பெறப்பட்டது படவே, "நல்லவை யெல்லாந்தீயவாம் தீயவுநல்லவாம்" என்பதொப்ப வினாவிடைபற்றி வினவியுணர ற்பாலவற்றை வினவியுணராமையும் அவையல்லவற்றை அன்னவாக் கோடலும் நுமக்கியல்பாதல் யாமறிந்தொழிதலின் அது நீயிரீண்டுய்த் துணர்ந்து கோடற்பாற்று அது நிற்க. கற்போன் கொள்வோன் கற்றல் கோடல் என இவ்வாறோதினரல்லது அவற்றை முறையே கேட்போன் கேட்டல் என்றோதப்படாமையின் என்னும். இவ்வேதுப் போலி யெடுத்தோதினீர். ஓதிய நும்மையாமீண்டு வினவுதும் அது வருமாறு அவற்றிற்கு அவை பெயராதலுளவோ இலவோ என ஆய்தற்குரிய நூல்பற்றி யாயுமுறையனுப்வதல்லது கூறுதலானும் கூறுமையானும் என அவ்வாராய்ச் சிக்குரிமையின்றிய பிற நூன்முறைபற்றி அங்ஙனமோதாமையானென்றல் ஏதுப்போலியாதலறிக. அஃதன்று. அஃதஃதாலெனின் அற்றேல் யாமோது நுமதிம் மறுதலைக்கடாவிற்கு நீயிருடம்பட்டு விடையோதுக. அஃதாமாறு நுமதிவ்விருத்திப் பொருளெல்லாம் எல்லாரும் போலியென்றோதுதலானும் அவர் உண்மையென்றோதாமையானும் இன்னுமின்னோரன்ன பிறவாற்றானு நுமதிவ்விருத்திப்பொருளெல்லா மெல்லாவற்றானும் போலியாதல் தெற்றென்வறிக என யாமும் இவ்வாறு நும்மோத்தொப்பவோதுதும். இதற்கு நீயிரியாது பரிகாரமோதுவீர் இங்ஙனம் எதிரோத்தெழுமென நோக்காதேதேதோ தெரிந்தாரொப்ப முகரோமமுறுக்கிமுழங்கி யெந்து ஓதாமையானும் ஓதுதலானுமென இவ்வாறு நீயிர் பிதற்றும் பிதற்றெல்லாம் இதனானே வறிதாயொழிந்து கழிந்தவன்றோ எல்லாரும்எல்லாமும் நுமதடிப்படையென்பதே நுங்கருத்தாகலான் அவையெல்லாமெமதாசிரியர் அடிப்படையினடிப்படையாதலு இதனானீயிர் காணுமாறு காட்டினமன்றே. இதனான் நீயிர் கேவாலத்து விதிகழீயுங்கேவலப்பொருட் பொருட்டாற்றிய நுங்கேவலத்தொழில் கேவலமாயிற்றோவன்றோ அதுகிடக்க. இனி "நூல் கேட்பான் புகுந்தோன் நூல்கேளாமுன் புறவுரை கேட்பதென்னை யெனின் நூற்புறனுய்வைத்தும் இன்றியமையாதாகலானென்பது ஆகலால் பாயிரங்கேட்டே நூல் கேட்

கப்படுமென்பது" இஃதாசிரியர் நக்கீரனர் ஓதிப்போந்தவோத்தென்க. இதனுள் கற்றல்கேட்டல்க ளிரண்டும் ஒரு பொருண்மொழியாமாறு வைத்தோதல் தெற்றெனவறிக. அல்லதூஉம் உடம்பாட்டுமுகத்தான் வைத்தோதியதுணையினெழியாது எதிர்மறைமுகத்தானும் வைத்தோதியவாறுபற்றியு மஃதற்றேயாதல்தெற்றென அறிக. இன்னு நீயிரோதியகேட்டலாவதன்று எமதாசிரியருபதேசித்தருளியஅக்கற்றலையேகேட்பென வைத்தோதினரென்பதற்கு "குன்று முட்டியகுரீஇ" என்றித்தொடக்கத்தானெழுந்த அவ்வேலை வாக்கியங்களே யமையுஞ் சான்றுதல் அறிக. இன்னுமொரு குறிகேட்போன் இருகாற்கேட்பின் முக்காற்கேட்பின் என்றித்தொடக்கத்தான் வருவவும்அப் பொருட்டென்பதூஉம் அவையெல்லாநீயிரோதியவாறே நுமது கற்றலினொருசாரவல்லவென்பதூஉம்முன்னரோதுதும். ஈண்டு ஆசிரியர் நக்கீரனரோதிய கேளாமுன் கேட்பினென்னு மவ்வாக்கியங்களை யொருசிறிதாயுமுறையானுய்குதும். அஃதாமாறு. நூல்கேட்பான் புகுந்தோன் நூல் கேளாமுன்புறவுரை கேட்பதென்னையோவெனின் பருப்பொருட்டாய பாயிரங்கேட்டார்க்கு நுண்பொருட்டாய நூலினிது விளங்குமாகலான் பாயிரங்கேட்டே நூல் கேட்கப்படுமென்பதனுள் நூலாருந்ததிமுறைபற்றி நுண்பொருட்டாயநூலுணர்ச்சிக்குப்,பருப்பொருட்டாயபாயிரவுணர்ச்சியொருதலையானின்றியமையாமைபெறப்பட்டது. படவே அது நீயிரோதுங் கற்றலினொருசாராயகற்றூர் கற்றவற்றைக்கேட்பதென்பதூ உம் கல்லாதார் கல்லாதவற்றைக் கேட்பதென்பதூஉம் அல்லவென்க. கற்றூர்க்காயின் அவர்தாமேமேற்பருப்பொருள் நுண்பொருளிரண்டுங்கற்றுடையராகலான் அவர்கற்றலைவலியுறுத்தற்பொருட்டு மறுவலுங் கேட்குங்கால் அவர்க்கு நுண்பொருட்டாய அந்நூலுணர்தற்குப் பருப்பொருட்டாய பாயிரமின்றியமையாது கொல்லோ? நூல் கேட்பார்க்குப் பருப்பொருட்டாய பாயிரமின்றியமையாதெனவே ஈண்டுக் கேட்போரென்பது அந்நூலைமேற்கற்றுணராதாரென்பதே பெறப்பட்டது. படவே யங்ஙனங்கற்றுணராதார் அந்நூலைக்கேட்டல் கற்றலா அன்றியஃதன்று? நுமதொரு சார்க்கேட்டலென்பது யாதுமீண்டைக்கேலாமையானும் அதனைது கற்றலேயாகலானும் அன்னபிறவாற்றானுமஃத தனிஞெரு

பகுதித்தென்றல் போலியாதலறிக. அல்லதூஉ மிவ்வாறே எல்லா நூன்முகத்து மெழுங்கேளாமுன் கேட்பதென வருவவெல்லாமப்பொருட்டாய்க்கற்போரையே யுணர்த்தி நிற்றலானு மன்னபிறவாற்றானுங் கற்றல் கேட்டல் என்பன ஒரு பொருண்மொழியாதல் தெற்றெனவறிக. கல்லாதார் கேட்பது என்பவற்றிற்கு மிஃதொக்கும் அஃதிஃதென்பதறியாது தூரபிமானங்கொண்டு நீயிரிவ்வாறு பிதற்றுவ வெல்லாம் வெறும்போலியென்பது நும்மோத்துப்பற்றியுமொருசிறிது காட்டுதும். அது வருமாறு நீயிர் நுவதாசிரியன் கற்று புலவரோடு பயின்று முந்து நூல் ஐயமருட்கை யற்றுணர்ந்து புல நிறைந்தனன். முக்காற்கேட்பினும் அவை அமைவரக்கொளினும் காற்கூறல்லது பற்றலன் ஆகலான் என்புழி நுமது முக்காற்கேட்டல் என்பதனுள் நின்ற முக்காற்கேட்டலும் நுமது கற்றலின் ஒருசாரதேயாயின் அது பற்றி யாம் ஈண்டொருசிறிதோதுதும் அது மனம் பற்றி கேட்கற்பாற்று (அதுவே முன் வருமாறு) முக்காற் கேட்டல் என்பதனுள் வரும் அக்கேட்டன் மொழியின் மேலியைந்து நின்ற கால் என்பது ஒருகாலிரு கால்களின்.

மேன்மேல் நிகழுமொருசாலேயாமென்பது நுமக்கு மொக்குமன்றே ஒப்பவே அம்முக்காற்கேட்டற்கு மேல்நிகழ்ந்து நின்றவையாவை ஒருகாற்கேட்டல் இருகாற்கேட்டலென்னும் அவ்விரு வேறு கேட்டலுமே அம்முக்காற்கேட்டற்குமேல் நிகழ்ந்து நின்றன வென்பதூஉம் நுமக்குமுடம்பாடாவதல்லது மறுக்கப்படுவதொன்றன்றும் ஆகவே அதனையுடம்பட்டீர்க்கு அந்நயம்பற்றி இனி இருகாற்கேட்டற்கு மேனிகழ்வதாய அவ்வொருகாற்கேட்டலென்னுமக்கேட்டலும் இருகாற்கேட்டலென்னும் அக்கேட்டற்கு முதற்கணிகழ்வதொரு கேட்டலேயாமென்பதூஉம் யாதுமறுக்கப்படுவதொன்றன்றும் அம்மூன்றனுள் வைத்து முதற்கணிகழ்வதாய அவ்வொருகாற்கேட்டலென்னுமக்கேட்டலு நுமது கேட்டலேத்தனதொருபகுதித்தாயியைத்துக்கொண்டெழுந்துநின்ற நுமது கற்றலுநிகழுங்கால் அவற்றுள் முன்னிகழ்வது அவ்வொருகாற்கேட்டலா, அன்றி அதனைத் தனதொருபகுதித்தாய்க்கொண்டியைந்து நின்றநுமதுகற்றலா இனி முன்னிகழ்வது நுமது கேட்டலாமெனின் அஃதெமது

கற்றலாய் முடிதலின் நீயிர் கேட்டல் கற்றலின் ஒருபகுதித்தென்றேது மவ்வேதுப் போலியாய் முடியுமென்றஞ்சிக்கற்றலாமெனின் அற்றேல் 174 நீயிர் கற்றுப்பயின்று உணர்ந்து புலநிரம்பினர் என்றேதி யொழிந்து அஃதேல் கற்றுப்புலநிரம்பினர் என்னாது கற்றுப்பயின்று புலநிரம்பினரென்றதெற்றுக்கென்னுங் கடாவைவிடுத்தற்கு முக்காற்கேட்பினும் அமைவாக் கொளினுங்காற்கூறல்லது அஃதொழித்தொழிந்துநின்றமுக்காற்கூறு அதுபற்றி நிரம்பாமையின் அவைநிரம்புதற் பொருட்டுப்பயிறல் உரைத்தல்கள் இன்றியமையாது வேண்டப்படுமென்றோதிப் போந்தவதனுள் நீயிர் ஆசிரியர் அகத்தியனாரிடைக்கற்று எனமேலோதிவைத்த அக்கற்றலு நுமது கேட்டலேயாம். முக்காற்கேட்பினுமென்னுமக் கேட்டன் மொழி ஆண்டுத் தலைப்பெய்தோதினீர். என்னை, கற்றுப்பயின்று புலநிரம்பினரென்புழி வருங்கற்றல் ஒருகாற்கற்றலாகலானும், அவ்வொருகாற்கற்றல்பற்றி புலமை நால்வேறுகூறும் நிரம்பும்போலுமெனவெண்ணற்க. எண்ணின் அது முக்காற் கேட்பினும் அமைவாக் கொளினுங் காற்கூறேபற்றுமல்லது வனை முக்காற் கூறும்பற்றான் என்பதனோடு முரணும் ஆகலானும் முக்காற்கேட்டல்பற்றி நிரம்புவது காற்கூறெனின் ஒரு காற்கற்றல்பற்றி காற்கூறுநிரம்புமென்பதேலாதெனப் போதிக்குமுகத்தான் அவ்வொருகாற்கற்றற்கினமாயாண்டெடுத்துக்காட்டிய அம்முக்காற்கேட்டலென்பது முக்காற் கற்றலென்பதே நுங்கருத் தாகலான். பிறவுமன்ன ஆகலான் ஆண்டு நீயிர் நுமது கற்றலையே கேட்டலென்னும் பெயரான் வைத்தோதியொழிந்தும் ஈண்டுநீயிர் நீயிரோதிய மொழிப்பொருள் இஃதென்றறியு மறிவறை போகி இவ்வாறோதும் போலியெல்லா மிபனூன்முறை யாதுமின்மையின் சுவானுபூதிமாத்திரையே யுடைய பெரும்பொருளு நுமக்கே யுரித்தென்றொழிக. இங்ஙனமாகலான் கேட்டலென்பது இழுக்கின்மை கேட்டலென்னு மப்பேய்க் கோட்பாட்டினை, யாம்பெருமறைமொழியா யெடுத்தீண்டு நிறுத்துவைத்த இம்மறைமொழி நோக்கான் நுணுகிநோக்கி யுணர்ந்தொழித்துக்கொள்க, இன்னு நீயிர் மேல் ஐங்கடம்பக்கம் கோடன்மரபாவது மாணக்கன்கேட்கு முறைமை, என்றீர், மாணக்கன் கேட்டலென்னு நுமதிக்கேட்டலும்,

கற்றலை வலியுறுத்தற் பொருட்டுக்கேட்கும் கேட்டலா நுமதொருசாராயகேட்டலா, ஆகலானிது நானுமறியேனவளும் பொய்சொல்லாளென்பதாம், ஆகலான் அக்கேட்டன்மொழிதலைப்பெய்துகொண்டு நுமதுகோடலும், எமது கேட்டலுந் தம்முளொருபொருள்மொழியாகவைத்தோதுதலான், கற்றல், கேட்டல், கோடலென்பன, ஒருபொருண்மொழியாதல் நுமக்கு முடம்பாடென்பதுதெற்றெனவறிக. இன்னும், ஐயம்மருட்கை யுள்வழிக்கேட்பவும்அவையொழித்தற்பொருட்டுக்கற்பனவேயாம் அல்லது உநீயிரோதுமக்கற்றலைக்கேட்டலும், கல்லாதவற்றைக் கேட்டலும் அக்கற்றலினொருசாரவன்மையானும் இன்னுமிவ்வாறே பிறுண்டெல்லாங்கற்றல்கேட்டலென்பன ஒருபொருண்மொழியாதல் காணப்படுதலானும்கேட்டல் பாடங்கேட்டலென்பதொருதலைபாதலறிக. இங்ஙன மாகலான் ஒருகுறிகேட்போன் இருகாற்கேட்பின் முக்காற்கேட்பினென்றித்தொடக்கத்தான் வருங்கேட்டல் கோடல்கற்றலென்பன ஒருபொருண்மொழியாதலெல்லார்க்கு மொப்பமுடிதலின் நும்மோத்துப்போலியாதலறிக இன்னுங்கற்போனுக்குரிய வியல்போதும்வழி “செவ்வன்றெரிகிற்பான் மெய்ந்நோக்கிக்காண்பான் பல்லுரையுங் கேட்பான் மிகப்பெரிதுங்காதலான் தெய்வத்தைப்போல மதிப்பான் திரிபில்லான்,, என்பதனுள் கேட்பானென்பதனுள் கேட்டலு நுமது கற்றலினொருசாரெனக்கோடுமாயின் ஏனைத்தெரிதல் நோக்கல் முதலியவும் அவ்வாறே யொருசாரெனப்படுமாகலானும் அன்ன பிறவாற்றானும் அஃதஃதாதலெவர்க்கு மெவற்றானுமொப்ப முடிந்து கிடந்தவாறு காண்க.

இன்னு நீயிர் கேட்போரென்றெழுந்து, குன்றக்கூறலானுமென்ற துணையும் போந்துநின்று ஏசேகோ தெரிந்தாரொப்பக்குழறினீர் நூன்முறையும் அதனையுள்ளவாறுணர்ந்துணர்த்தும் ஆன்றோர்முறையுமொருசிறிதாதலுணர்ந்தீராயின் இவ்வாறுகுழறுவீரல்லீர் அது நிற்க நும்மை இன்னுமீண்டொன்று வினவுதும் அஃதிது கூறினான்றிக் கூறுமையானுமென இவ்வாறோதினீர் அதனால் ஈண்டு நீயிரோது மாறெவ்வாறுயாமும் அவ்வாறோதுதும் அதுவே முன்வருமாறு நீயிர் வழக்கறிதல் பாடம்போற்றல் கேட்டவை நினைத்தல்

ஆசாற்சார்ந்தவை அமைவரக்கேட்டல் அம்மாண்புடையோர் தம்
மோடு பயிறல் வினாதல் வினாயவை விடுத்தலென்னுமேழும் பிறவும்
தம்முடகூடுங்கூட்ட மேகற்றலாமென்றீர் அற்றேல் அவ்வேழும் பிற
வுந்தம்முளியைந்த வியைபே கற்றலாவதல்லது கேட்டலென்ற மாத்
திரையே கற்றலென்னும் பெயர் பெறுமென இவ்வாறு நுமகோது
வாரெடுத்தோதாமையானும் அவரோத்து மாத்திரையே நுமக்குப்
பிரமாணம் அல்லன பிரமாணமல்லவென்பதே நும்முறையாகலானு
மென்பது. ஆகலான் அவ்வேழும் பிறவும் தம்முளியைந்த வியைபே
கற்றலென்னுமப்பெயர் பெறுமென அவ்வேதுப்போலி, யாண்டு
மெடுத்தோதா தொழியவும் அதனை நீயிர் இவ்வாறு புதுவதுப
டைத்தோதல் இழுக்கின் இழுக்கெனயாம் முழங்குவோம் அது
மந்தமதியுடையீர் தழுக்கறுத்தற் பொருட்டு இதற்கு நீயிரோதும்
பரிகாரமென்னை நும்மொப்ப இவ்வாறாசங்கித்தோதுவார் யாருமில
ரெனத்தருக்கி, தருக்க நூன்முறையின் மூலையுமறியாதிவ்வாறோதி
னீர், எல்லா நூலுந்தம் முளியைந்து நின்றதொரு திருவுருவாய்ந்த
ருளிப எமதாசிரியாராணை யியல்பாவதிஃதென்னு மின்னோன்ன
அரிய பெரிய சீரிய உரிமையாதும் அறியாது இவ்வாறோதிச் சிவப
ரம்பொருளியல்பறியாது பகைத்தொறுக்கப்பட்ட ஆசிரியர் நக்கீர
னாரொப்ப நீயிர் எமதாசிரியராணையியல் பறியாததனைப் பகைத்துக்
கெட்டீரன்றோ இங்ஙனமோது மிவ்வெதி ரோத்துக்கேட்ட மாத்தி
ரையே இடிபொலி கேட்டபாந்தளொப்ப நீயிர்மேல், கீழ், புடை,
யெங்கு நோக்கி நெட்டுயிர்ப்படைவீரன்றோ, அது கிடக்க இனி
நீயிர் கற்றல் கேட்டலின் வேறென்பதுணர்த்து வான்புகுந்து அறிதல்
போற்றல்களை மாத்திரையே செயப்படுபொருளோடியைத்தோதி,
மறித்து மோடி யோடி யொழிந்தவற்றையெல்லாம் ஒழித்தோதிப்
பின்ன ரொருவாறு தொகையுமெடுத்தோதி இன்னு மின்னோன்ன
ஒருசார் மறந்தொழியினுமது பற்றி நுமது மறுதலைக்கடா நிகழா
மைப்பொருட்டு, பிறிதென்றற்குமஞ்சி, பிறவுமெடுத்துப்படைத்துமு
டித்தீர் அதுமுடியாமை அறிபகில்லீர் நீயிர் யாதுசெய்குவீர் ஆழவ
முக்கிமுகப்பினு மாழ்கடலுள் நாழிமுகவாது நானாழிபன்றோ அது
நிற்க இனி இன்னுமோராற்றானும் அதுபோலியாதல் காட்டுதும்,

அதுவேமுன் வருமாறு நீயிர் கோடன் முறையெனக்கோடுமேனும்
நுமது வழக்கறிதல் நுமது கற்றலின் பாற்படு மென்பதுயாது மே
லாது அஃதொருவற்குக் கல்லாதே அவ்வந்நாட்டியல்பு பற்றியும்
பொருந்துமாறு பற்றியும் நிகழுமாகலானும் அல்லதூஉம் அஃதின்
னுமின்னோன்ன பிறவாற்றானுமாகு மாகலானுமென்பது, இதனானு
மது போலியாதல் தெற்றெனவறிக.

அஃதேலஃதாக அவ்வாறோதினர் யாவரென்னு நுந்தடைக்கு
விடை அவ்வாறே நம்மோத்தோதினர் யாவரென்னு நுமது மறுதலை
க்கடாவே யென்பதோதிய வாற்றானுணர்ந்து கொள்க, அற்றேலற்றற்
றாக, ஒரோவழி உலகவழக்கங்ஙனமா மாயினுஞ் செய்யுள்வழக்கும்
அங்ஙனமாலோவெனின் வழக்கிரண்டும் உள்ளவாறுணர்ந்தோர் ஒ
ரோவழி அதுவுமங்ஙனமாமென்றோதுப, ஆகலான் அவ்விரண்டு முணை
ராதயாமிருவேமும் அஃதுடம் பட்டுக்கோடலமையுமாகலான் அது
பற்றியெமக்கு நிகழுமாசங்கை யென்னை யென்றொழிக.

இனிப்பாடம் போற்றலென்புழி அப்பாடம் இப்பாடமெனக்கி
ளந்தோதப்படாது பொதுமையினிற்றலான் அஃதிதனின் வேறாய்ப்
போற்றற்குரித்தாய் அதன் அணிமைத்தாய் நிற்கும் அக்கேட்டபா
டமோ கேளாப்பாடமோ இரண்டுமில்பாடமோ இவற்றின் வேறுபா
டமோ அஃதிஃதென்றெமக்கொன்றிற்றுணிவுபிறந்திலதென்க. இனி
அப்பாடமுமொருதிறப்படாது பாடம்வரைதல் பாடம்வரைவித்தல்
பாடமோதல் பாடமோதுவித்தல் பாடம் பயிறல் பாடம் பயிற்றல்
முதலியவும் இவற்றெதிர்மறையும் பிறவுமாக நிகழ்வவெல்லாம், நுமது
பிறவுமென்றதனுள் அடங்கிக்கிடக்கும் போலும் ஆகலான் அவை
யெல்லாமீண்டுக்கற்றலின் ஒருசாரவோ அல்லவோ வென்னு மவ்வை
யப்பாடியாதுமின்றென்க அது நிற்க.

இனிக்கேட்டவை நினைத்தலென்புழியுமவ்வா றேகேட்டதிஃதெ
னக்கிளந்தோதாமையின் அஃதெஃதென்றவாவியவழி அஃதிதன்
மேல்நின்றபோற்றலின் செயப்படு பொருளாய பாடமென்னினும்
அப்பாடமும் பலவாகலான் அஃதெஃதென்றவாவியவழி எழுவா
ய்க்கணின்ற அவ்வழக்கேயோ அதனின் வேறேயோவென்பது யாது

மறிய கிற்றிலம் அது நிற்க இனிக்கேட்டவை யென்னும் பன்மைக்கு வழக்கென்பது எலாதாயினும் அஃதஃறிணையியற்பெயராகலான் ஒரு வாற்றானுக்கும் போலும். அது நிற்க, இனி ஆசாற்சார்ந்தவை அமைவரக்கேட்டல் என்புழி அவை அமைவரக் கேட்டலென்னுமச் சுட்டும் அவ்வாறே ஒன்றன்மேலொன்றாய்ச்சென்று சென்று மேல் நின்றவவ்வழக்கின் பாற்படும்போலும். அது நிற்க, இனி பயிறற்குச் செயப்படு பொருளின்மையின் அதுவுமிவ்வாறே அவ்வழக்கின் பாற்பட்டு முடியும் போலும் அது நிற்க இனி வினவல் வினாயவைவி டுத்தலென் பவற்றிற்கு மிஃதொக்குமென்க ஆகலான் பிறவென்பவற் றிற்குமிஃதொக்கு மென்க இங்ஙனமாகலான் இவை இவ்வாறே இற்றிற்றாக நஞ்சிற்றியல்பு பற்றி அவ்வேழும் பிறவும் பெருகிய அப்பேரியல்பு ஆயுமுறையானுய்வுழி, யாமோதிய வாறே நமது வழக்கோ பிறவோ அவையெல்லாமெல்லாவற்றானுமொன்றேயல்லது பலவேறாகாமையானும் அதனாற் பாடங்கேட்டல் கற்றலினொருசாரா காமையானும் அதனாற் கற்றல் கேட்டலென்பன யாதுந்தம்மு ளொன்றினொன்றடங்கு மாறின்மையானும் அதனாற்கேட்டல்கற்ற லினொருசாராகாமையின் அதுவுங்கற்றலென்னுமப்பெயர்பெற்று நிற் றலினையுடைத்தாகலானும் அதனன் நீவிரோதிய அக்கேட்டலென் பதூஉங் கற்றிலனாயினுங்கேட்க என்பதூஉம் தம்முளொன்றாகாது வேறாகலானும் அதனாற் கற்றல் கேட்டலென்பன ஒருபொருண்மொ ழியாதற்காசிரியர் பரிமேலழகனாருரையோத்தி யாதும் மாறுபாடின் மையானும் அதனன் யாமித்துணையுமோதிய வாறு பற்றியும் அன்ன பிறவாறு பற்றியும் ஒரு குறி கேட்போன் இருகாற் கேட்பினென்னு நமதவ்விருழியும் வரும் அவ்விருவேறு கேட்டலும் நமது கற்றலி னொருசாராகாது, பொது மொழியாகலானும் அல்லதூஉங் கேட்ட லென்பது நமதிழுக்கின்மை கேட்டலாமெனின் அவ்வாறே "ஆக்கி யோன்பெயர் வழியெல்லை நூற் பெயர், யாப்பு நுதல் பொருள் நூலிழுக்கின்மை, கேட்போர்" என்றிவ்வாறு அக்கேட்டற்கு செய ப்படு பொருளிஃதெனக்கிந்தோதினியையும் அன்றியிவ்வாறு பொது மையிற் கேட்போரென்றதுணையே நூலிழுக்கின்மை கேட்போரென் றோதற்கியாது மேலாமையானும் ஆக்கியோனென்புழி அஃதெதனை

யாக்கியோனென்றவாவிபவழி நூற்பெயரென்புழிப் படுமந்நூலே யென, அவ்வவாய் நிலை நிரப்புமாறேப்ப கேட்போரென்புழியும், எதனைக்கேட்போரென நிகழுமவ்வாய் நிலை, மேலையியைபு பற்றி அந் நூலைக்கேட்போரெனவேநிரப்பப்படும், ஆகலான் அவ்வியைபே ஆண்டைக்குரித்தாமல்லது நமது தூவிழுக்கின்மையென்றெடுத்துக் கோடற்குரிய தோரியைபியாது மாண்டின்மையானும் இனி அஃ தன்றாயெலனின் அற்றேல் அவ்வாறே அதன்மேலுங்கிழுநிற்பனவும் அவ்வினமெனப்பட்டு நூல் வழி நூலெல்லை நூல்பாப்பு நூல் நுத லிய பொருள் நூற்பயன் னெனப்படாது, நூலிழுக்கின்றாக்கியோன் நூலிழுக்கில் வழி, நூலிழுக்கிலெல்லை, நூலிழுக்கில்பெயர், நூலிழுக் கில் நுதலியபொருள், நூலிழுக்கில் பயனென்றேதவும் படுமாகலா னும் இனி அவ்வாறன்றி நூற்பெயரென்புழி நடுவிடைவிளக்காய் நின்ற அந்நூல், ஆண்டு யாண்டுஞ் சேறலியைபுடைத்தாகலானும் அ ந்நூலாண்டைய வற்றோடியைபு மவ்வியைபுக்கேற்ப நூல் கேட்போ ரென்னுமக்கேட்பு மோரினமாதல் இயைபுடைத்தாகலானும் அவ் வாறு நமது நூலிழுக்கின்மை இயைபிற்குபாது மஃதஃதன்மையானு மின்னுமின்னோரன்ன பிறவாற்றானுங் கற்றல் கேட்டலென்பன ஒரு பொருண்மொழியாதற்கியாது மிழுக்கின்மையின் நீயிரோதியவாறே தல் எல்லாவற்றானுமிழுக்காதலறிக. இனி "இவ்வாறு மாண்புடையார் க்குரைப்ப" எனப்பன்மைப்படுத்தோதுதலான் ஈண்டுக்கேட்போரெ னப்பன்மைவாசகத்தானோது தலுமுறையாதலறிக இனிக்கொள் வோன் கற்போனென ஒருமை வாசகத்தானோது மத்தாற்பரியம் வேறா கலான்

அதுபற்றி யாதுமிழுக்கின்மை யுமறிக இன்னும் அங்ஙனங் கேட்போரெனப்பன்மை வாசகம் பற்றியோதுதல் ஈண்டோருழி மாத்திரை யன்றி இத்தொடக்கத்துப்பலவேறுழி யெல்லாங்காணப் படுமாறு மறிக அல்லதூஉந்தொல்காப்பியனென இவ்வாறாக்கி யோன் பெயருணருமாறு கிளந்தோது நம்து சிறப்புப்பாயிரத்துள் இந்நூல் கேட்டற்குரியரிவர் இந்நூல்யாப்பு இஃதெனஅவ்விரு வேறு பெயருங்கிளந்தோது மதுவே நான்முறை யென்பதெல்லார் க்கு மொப்பமுடிதலின் அத்தன்மைத்தாய அச்சிறப்புப் பாயிரத்துள்

அத்தன்மையவாய வவ்விரண்டனையுங்கிளந்தோதாதொழிந்து
நுமது அரங்குடை யான்மைக்கு ஒருமை வாசகப்படுத்தன் மேலும்
அப்புலவன் பெயர் கிளந்தோதற் குரியதேரியையுயாது மீண்டின்
மையுமறிக. இனி அவ்வாறே யாதுமியைபின்றி யோதலுமுரித்
தெனின், நுமது அரங்கின்கட் கேட்டோர் நு மதுவழியின் வகை
நான்கனுள் இஃதிஃதென்னுமிரண்டும் முறையே காலகளங்களும்
வழியுமெடுத்தோதும வ்வோத்து முகத்தாற் பெறப்படும், அவ்வாறு
பெறப்படுமவற்றை அம்முறையாற் பெறுவித்தொழியாது அவற்
றைத்தனித்தனி யோத்தாற் பெறுவித்தொழிந்து ஒத்தாற் பெறு
வித்தற்குரிய அவ்விரண்டனையும் அதனுற்பெறு வியாதொழிதல்
குன்றக்கூறலாய் முடியுமாறறிக. அஃதன்று இழுக்கின்மையாய்
வோர் பெயர் யாப்பின்பெயர் என்பன ஒதுமாறு முறையன்று இனி
அம்முறை[illegible]மாறு மேற்காட்டினுமெனின் அற்றன்று அவ்வாற
னோடு நுமது இவ்விரண்டு மியைந்தாதலே முறையாம் யாமோது
மிரண்டும் அவற்றோடியைதல் முறையன்றென்பதற்கு யாதும் பிர
மாண மின்மையானும் அல்லதூஉம் யாமேற்காட்டிய வாறே
நூலிழுக்கின்மைகேட்போரென" அப்பாடமின்மையானும், பொரு
ந்துமாற்றிற்குமது பொருந்தாமையானும், அன்னபிறவாற்றானும்
யாமோது மவ்விரண்டுமே அவ்வாறனோடியைந்து நின்று எட்டாதல்
உண்மை முறையாகலானும் அங்ஙனமன்றி நும்ம வற்றை யெடுத்
தோதல் கூறியது கூறலாகலானு மென்பது அது நிற்க.

இனிப்பன்மை வாசகத்தானோது மதுவே அது பொருளன்மை
காட்டுமென்றீர் அற்றேல் அவ்வாறே நிலந்தருதிருவிற்பாண்டியற்கு
அதங்கோட்டாசாற்கு என்றிவ்வாறு நுமதிழுக்கின்மை ஆய்வோரை
வைத்தோதி அதன் மேல் நுமது அரில் தபத்தெரிந்து காட்டிபென்
பன எடுத்தோதாது ஆண்டு நுமது பாண்டியனை யொழித்தொழிந்த
ஆசானை மாத்திரையே ஆசாற்குக்காட்டியென்றொருமை வாசகக்
தான் வைத்தோது மதுவே அக்கேட்போரென்பது நுமதிழுக்கின்மை
கேட்போரென்னு நும்பொருளன்மை காட்டுதற்கமையுஞ் சான்றாத
லறிக, அறியுமதுவே அது பாடங் கேட்போரென்பதற்கமையுஞ்
சான்றுமென்பதூஉம் நுண்ணுணர்வானோ க்கியுணர்ந்து கொள்க.

அஃதற்றன்று ஆசாற்குக் காட்டியென்றோதிய மாத்திரையே
நமது கேட்டோர் பல்லோரென்பது பெறப்படு மாறியாங்ஙனம்
அல்லதூஉமெழுத்து முறை கேட்பித்தென்றது எழுத்துமுறை
காட்டி யென்றோது மதுவே அது நமது கேட்போரன்றென்பதற்க
மையுஞ் சான்றாதலுமறிக, இன்னு நீயிர்பனுவலென்பது அவையோ
டுஞ்சென்றியையுமென்பதிலைபயாதென்பதூஉமிதனானோர்ந்துணர்ந்
துகொள்க. இதனானே நமதுபொருளன்மையே பொருளன்மையாய்
த்தா, எமது பொருளுண்மையே பொருளுண்மையாய்த்தாவென்
பது தருக்க நோக்குடையரினிதுணர்ந்தோதுப, நமக்கந்நோக்கென்
பது யாதுமின்மையின் பாலாரும் விலாளமொப்ப இவ்வாறோதின்இ
வ்வாறெதிரோத்தோதுவாருமுளராவரென் னுமந்நோக்கினைக்காது
இவ்வாறோது மவ்வோத்தின்மைமாத்திரையே யுணர்ந்தோதினீரென்
பது. அதுகிடக்க. இனித்தொல்காப்பியனெனவருமித்தொடக்கத்தொ
ருசாருள் ஆக்கிபோற்கிளக்குமாறு போலாது, நீயிரோதியவாறே முந்
துநூல் பலவேறாயினும் யாமோதியவாறே அஃதொன்றேயாயினு
மொருசார அங்ஙனங்கிளந்தோதாமையின் ஈண்டவ்வெட்டன் பெயரு
மெஞ்சாதுகிளந்தோதினீரென்பது யாது மேலாமையானும், அஃ
தொப்பக் கற்போரியல்பும் இயைபினியல்பு மெடுத்தோதலியல் பன்
மையானும் முறை மாறி யோதலுமாமெனின் செய்வித்தோர் பற்றி
நிகழுமைய மறுத்தற்குரிய உரிமை முதலியவுமோதல்வேண்டுமா
கலின் தாமே அமைவன வற்றை யெடுத்தோதி இன்றியமையா
தொருதலையானெடுத்தோதற்குரியவற்றை யெடுத்தோதாது ஒழிந்த
வற்றை யெடுத்தோதல் மற்றொன்று விரித்தலென்னுங்குற்றமாய்
முடியுமாகலானும் அஃதேதலைவையுமாண்டைக்குரிமையுடைமையினி
ழுக்கா காதெனின் அற்றேல் அவ்வெட்டனோடு வைத்தோதற்
குரியவற்றுள் ஒரு சாரவற்றையொழித்து ஒழிந்தவற்றைக் கூட்டி
யெட்டெனத்தொகை கோடலிழுக்காகலானும் இன்னு மின்னோரன்
னபிறவாற்றானு மென்பது இருந்தவாற்றானிது வேற்றேது வென்னுந்
தோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக

241-1-கூறு இதனுள் யாப்பினை ஆக்குவது செயற்கை யறி
வென்றொன்றீர் நமக்கஃதஃதென்றோதினார் யாவர், எமதாசிரியர்

யாண்டானும் அவ்வாறுபதேசித்தருளகிற்றிலரென்க. நீயிரோதி
யவாறே வழக்கறிதன் முதலிய அவ்வைவழும் பிறவுந் தம்முளிமையயு
மவ்வியைபே கற்றலென, நுமக்கோதினர்தாமே இதுவுமோதினர்
கொல்லோ அன்றிப் பிறரோதினர்கொல்லோ அன்றி நீயிர்தாமே
யோதினீர்கொல்லோ நுமதுடம்பாடெவற்றிற்கு மோத்தேது வாத
லெவ்வாறு அவ்வாறே எமதுடம் பாடெவற்றிற்கு மதுவே யேது
வெனக்கொள்க, அல்லாக்கால் அஃதியாதும் பயன்படாமையறிக.
அஃதன்று அவ்வோத்துடையம்யாமே எனிற்படு மிழுக்கென்னை
யெனின், நன்றேயோதினீர் அவ்வாறே அஃததற்கேது வன்றென்றி
வ்வாறேது மிவ்வோத்துடையம் யாமெனயாமுமோது தும் நும்
மோத்தோத்தேயாயின் எம்மோத்தோத்தாகாது கொல்லோ, பருப்
பொருட்டுணராது நுண்பொருட்டுணரு நீயிர் நுண்பொருட்டுணரா
மை மேலும் பருப்பொருட்டுமுணராதவெம தாசிரியர் அடிப்பர்க்கடி
யராய பெரிய ரிற்பெரியீராகலான் நும்மோடெமக்கிடை யீடுபெரி
தாயினும் நும்மோத்துப்பற்றி பரமபத்த ராமபரமாசாரியரும் நம்
மனோரோடொப்புறுக்கப்படுதலான், யாமும், நும்மோடொத்தல
மையு மென்றொழிக அதுகிடக்க, இனி நீயிரீண்டியாப்பிது, செ
யற்கை யுணர்விஃதென அவற்றியல்பு அறிதற்கேது வாய அவ்வீரறி
வுமின்றி வறிதேகுழறினீர், அது நிற்க, இஃதாய்ந்தபின் இது கேட்
கற்பாற்றென்பதனையாக்குவது செயற்கையுணர்வாமென்றீர் நுமது
இப்போலிமுறை போலியாதலை யாமுன்னர்த்தந்து கண்டித்தொழிக்
குதும். அது நிற்க, நீயிரீண்டுச்செயற்கையுணர்வென்றது யாதனை
அது கல்வியுணர்வென்பீரேல், நீயிர் மேலோதிப் போந்தவாற்றால்
பயிறன் முதலிய அவ்வைவழும் பிறவுமியைந்த இயைபேயன்றே
நுமது, சற்றலென்னுமப்பெயர் பெறப்படும் ஆகலான் அப்பலவேறு
பாகுபாடுபற்றி நிகழுமவ்வறிவு மவ்வாறே பலவேறு திறப்படுமல்
லது ஒருதிறப்படாமையின் நீயிரீண்டுச்செயற்கை யுணர்வென்றோ
தியது அவற்றுள் ஒன்றன்பாற்படாது அவையனைத்திற்கும் பொது
வாய் நிற்றலான் அஃதவற்றுள் ஒன்றன் பாற்பட்டொருதலை துணிவு
பிறவாது பல தலைப்பட்டையப்பாட்டிற்கேது வாதலொருதலையாக
லான் அது போலியாமென்றொழிக. அற்றன்று அஃதீண்டுப்

பொதுமையினேதுதலின் அவ்வனைத்தானு மாபதோரறிவாலெனின், மாணுக்கனியல் புணர்ந்து அவனுணர்வுக்கேற்பக் கற்பித்தல் வேண்டுமென நீயிரோதியதனுள் கற்பித்தலென்னு மம்மொழிதலைப்பெய்தோதுதலான் அஃதவ்வனைத்தானுமாய வறிவென்பதேலாமையறிக, இருந்தவாற்றானிது மயில்நடமொப்பதொன்றாகலான் இதற்கு நீயிர் யாது பரிகாரமோதுவீர், அதுகிடக்க. இனி நீயிர் மாணுக்கனியல் புணர்ந்து அவனுணர்வுக் கேற்பக் கற்பித்தல் வேண்டுமென்பாது பெறப்படலாமெனன்றீர் என்றதனுனே "நெஞ்சறிந்த தொருவினைமறைப்பினும் மறையாது நெஞ்சத்திற்குறுகிய கரியில்லையாகலான்" என்னுமிலக்கணத்துக் கிலக்கிய முண்மையு மீண்டுக்காட்டுதும், அது வருமாறு, கற்றல், கற்பித்தலென்பவற்றை நிகழ்த்தும் வினைமுதல் தம்முள்வேறு வேறாயினும் முதனிலையொன்றேயாம் ஆகலான் நமது வழக்கறிதன் முதலேழும் பிறவுந்தம் முளியைந்தவழியே கற்றலாமென நீயிர் மேலோதிப்போந்தது வினைக்கற்பித்தற்கு மொக்கும் ஒப்பவே வழக்கறிவித்தல் முதலேழும் பிறவுந்தம் முளியைந்த வழியே கற்பித்தலாமென்பதூஉந் தானே போதரும் போதவே வழக்கறிதன் முதலிய நமது கற்றல் வேறுபாடுகளை மாணுக்கற்கு ஆசிரியன்கற்பித்தல் வேண்டுமென்றாரே, வேண்டவே வழக்கறிவித்தன் முதலிய வேழும் பிறவுந் தம் முளியைந்த வியைபாய அக்கற்பித்தலே நமதீதலியல்பென்பதூஉம் பெறப்படும் படவே அவ்வீதலியல் போதுமவ்வோத்துள் அது பெறப்படல் வேண்டுமே யன்றோ பெறப்படாமையின் நம்மோத்துப்போலியாதலறிக, அஃதேல், உலகியலறிதலென்றோதுப ஆகலான் அஃததனுட் பெறப்படாதென்பது பெறப்படாதாலெனின் அற்றன்று அவ்வாறாயவழக்கும் உலகியலுமாய இரண்டுந்தம்முளொன்றன்மையானென்பது எனவே அதனையின்றித்தனித்தமையமாட்டாத நமது கற்றலியல்பும் போலியாயொழிந்தவாறு காண்க. அது நிற்க, இனி மீண்டுச்செயற்கையுணர்வென்றோது நம்மோத்துள் அது நீயிரோதியவாற்றாற் பலவேறாகவும் அம்முறை யெல்லா மீண்டெடுத்தோதாமையும் போலியாதல் மேலோதினுமென்பது, அது நிற்க இனி அங்ஙனமாய அச்செயற்கையுணர்வானிகழ்வது நமது யாப்பேயாமெனின் அற்றேல் நம

க்கு செயற்கை புணர்வொன்றன்மையான் அச்செயற்கை புணர் வெல்லாந்தம்முளொருகால் நிகழ்வவோ பலகால் நிகழ்வவோ அவை தம்முளொன்றற்கொன்று முற்பிற்பாடுடைய வென்பதூஉம் அங்ஙனமாயினுமவையொன்றாய் நிகழுமென்பதூஉம் நுங் கருத்தாகலான் அவ்விரண்டு மேலாமையறிக. இனி நீயிர் ஈண்டுச் செயற்கை புணர்வென்றோதுதலானும் அகனன் அதனைச்செய்த தொன்றுளதாதல் பெறப்படலானும் அத்தன்மைத்தாய அஃதியா தோ அதுவுமாண்டை யாப்பேயாமெனின் அற்றேல் யாப்பானிகழ் வது செயற்கையுணர்வு, செயற்கையுணர்வானிகழ்வது யாப்பெனப் பட்டு அஃதொன்றனை யொன்றுபற்றுதலென்னுங் குற்றமாமாறு காண்க.

அஃதேல் அக்கற்றல் வழக்கறிதன் முதற்பலவேறு திறப்படுமா றெப்ப யாப்பும் பலவேறு திறப்படுமாகலான் அதனுள் ஒரோவொ ன்றே யேனைபதனுள் ஒரோவொன்றற்கேதுவெனிற்படுமிழுக் கென்னையெனின் அற்றன்று அது சித்தசாதனமாகலானும், இனி அஃதங்ஙனமாயினும் அவ்வாறே மேலும் வரம்பின்றி யோடுமாக லானுமென்பது ஆகலான் நுமது அகப்பாகு பாடுபற்றி நிகழுமவை யும் அவ்வப்பெயரேவயாகலான் இழுக்காகாமையாண்டையதென் றொழிக அது நிற்க இன்னும் ஆசிரியன்மார் அகப்பாட்டெல்லை யென்றொன்றோதாதொழிபவும், தென்பதுரையை யகப்பாட்டெல்லை யென்றோதலேலாதென்னும் நீயிர் கேட்டன் முதலிய வேழும் பிற வுங் கற்றலின் அகப்பாகுபாடென அவ்வாசிரியன்மார் ஓதாதொழிய நீயிர் அவற்றை அதனகப்பாகுபாடெனக்கொண்டோதல் நுமது மேற்கோண்மலேவயன்றோ ஆகலின் அது போலியாதலறிக.

இனி நீயிர் அதனையீண்டெடுத்தோதி னிழுக்காமென்றீர் இஃ தாய்ந்தபினிதுகேட்கற்பாற்றென்னுமெமது யாப்பாவது "உயிரறிய வல்லுஞ் செவ்வி" யாகலானும் அதற்கேதுவாய் நிற்பது தமது முதனு ணர்த்தற்கட்படு முபகாரவிசேடமே பிறிதன்றாகலானும் அதனன் வரம்பின்றியோடன் முதலிய நுமதிழுக்குகள் ஈண்டெய்தற்கோரி யைபின்மையானும் அல்லதூஉம் பெருநூல் இடைநூல் சிறுநூலெ

ன்னும் வேறுபாடு பற்றித் தனித்தனி முத்திறத்து மூன்றும் அவ்வாறே பலதிறப்படுவவுமாய முத்தமிழ்நூல் நாற்பொருள்நூல் என்பவற்றுள் வைத்து ஆண்டுச்சொல்லிய பொருண்மை யென்றோதுமப்பொருண்மை பெருநூற் பொருண்மை இடைநூற்பொருண்மை சிறுநூற்பொருண்மை பிறநூற்பொருண்மைகளுள் வைத்து இஃதியாதோவென நிகழுமையப்பாடொருதலையாகலானும் அதனுன் ஆண்டுச்சொல்லிய பொருண்மை யென்னுமப்பொருண்மை பொதுமையினெல்லா நூற்பொருண்மையாய அவ்வெல்லாவற்றினுஞ்சேறலானும் அதனுன் அஃதிக்நூற் பொருண்மை அதுகேட்டற்குயரின்னரெனச்சிறப்பு வகையாற் பெறப்படாமையானும் இனி அதுவும் ஆண்டேகாட்டப்படுமாயின் பொதுப்பாயிரமாதல் செல்லாமையானும் இன்னுமின்னோரன்னபிற வாற்றானும் இஃதாய்ந்த பின் இது கேட்கற்பாற்றென்னும் அவ்யாப்பு ஆண்டோதற்குரிய தோரியைபு யாது மின்மையறிக. ஆகலான் இஃதாய்ந்தபின் இது கேட்கற்பாற்றென்னுமம் முறைநெறி ஒழுக்கே கற்றற்குரியதொரு சீரிய நேரிய முறையாதலறிக அங்ஙனமல்லாக்கால், அவற்றுளெவையாய்ந்தாரும் எவையாயாருமாயவெவரும் தம்முளொப்ப யாதும் யாதும் வரையறை யின்றியெல்லாங்கேட்பான் புகுவர் புகுவராயின் அக்கேட்போர்மிகப் பெரிதுந்துன்புற்று மீளுவரென்பது. ஆகலான் அவ்வியாப்பு சிறப்புப்பாயிரத்துளின்றியமையாதொருதலையாற் காட்டற்பாற்றுமென்பது, இங்ஙனமாகலான் அஃதாண்டோதாதொழிதலே யிழுக்காமன்றியோதவிழுக்காமாறியாண்டைய தென்றொழிக அஃதிற்றிற்றெனப்புடைபட்டொற்றி நுணுகியாயு நுண்ணறிவின்மைமேலும் இந்நூற்கின்னரென்னுமிச்சிறப்புவகையியல்போது முண்மையோத்தின்சிறப்பிஃதென்பதியாது நோக்காதேதேதோதெரிந்தாரொத்தொழுந்து முகரோமமுறுக்கி முன்பின் புடையெங்குநோக்கி செயற்கையறிவிஃதியற்கையறிவிஃதென தனித்தனி அவற்றை நுனித்து நுனித்தெடுத்து வேறுவேறோதி அவற்றுள்ளுமெழானெய்து மியற்கையறிவென அவ்யாப்பு இயற்கையறிவிரண்டற்கு மெதுவுமடுத்தோதி ஏனைச்செயற்கையறிவிற்கு அவ்வேது ஓதாது வறிதே குறினீர் அஃதிஃதாகலான் நீயிர்

குழறுங் குழறுபடைக்கு யாங்கழறுங்கழறுபடையாது மின்றென்பது அதுகிடக்க.

இனி இயற்கையுணர்வு ஊழானுவதென்றீர் என்ற நீயிர் பேதைப்படுக்கு மிழவூழறிவென்னு மின்னோன்ன சுருதிபாது மறியகில்லீர் அஃதேலஃகதனை, விரிப்பதூ உமாண்டேபெறப்படுமாலெனின் விரிப்பதேயன்றி அஃததனுன் ஆக்குவதொன்றன்றென்பது, விரிதல் ஆதல்களின் வேற்றுமையுணர்ந்தார் வாய்க்கேட்டுணர்ந்து கொள்க, இன்னு நீயிர் இயற்கையறிவைப்பயப்பதூ உமவ்வூழாமென்றீர் எனவே செயற்கையறிவைப்பயப்பது அஃதன்றென்பது நுங்கருத்தாதல் பெறப்பட்டதுபடவே அது "இருவேறுலகத்தியற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு" என்னுஞ்சுருதியோடு முரணுமாறறிக அஃதன்று யாமீண்டு மொழன்றது நியமத்தெய்வமன்று ஊழானுணர்ந்து என்புழி நின்ற ஊழேயாலெனின் அற்றன்று அது சான்றோர்க்குரியதோர் சால்பாயகுண நிறைவாகலான் அது நுமது இயற்கையறிவாமாறியாங்ஙனமென்றொழிக. இதனன்யாப்பைப்பயப்பது செயற்கையறிவென்பதூ உம் அதன்பொருளாவததுவென்பதூ உம் அதுவே பொதுவுளமைந்து போந்ததென்பதூஉம் அன்னோன்னபிறவும் வெறும்போலியாதல் தேற்றுமுகத்தாற் சிறப்புப்பாயிரத்துள் அறியவல்லுஞ்செவ்வியாயயாப்பு ஒருதலைபானேதற்கின்றியமையாது வேண்டப்படுதல் சாதிக்கப்பட்டது அல்லதூஉம்யாப்பினைப்பயப்பது செற்கையறிவென்ற நீயிர்தாமே மறுவலும் அஃதியாப்பின் பொருளென்றிர், பயப்பதூ உம் பயக்கப்படுவதூ உந்தம்முள்வேறு, ஒன்று, காரியகாரண வேறுபாடுணரு முணர்ச்சி நுமக்கேது அஃதன்று, அவை தூல சூக்குமமென்னும். அத்துணையாலோவெனின், அற்றேல் அத்தூலஞ்சூக்குமமென்பன விரண்டு நும்வெள்ளறிவிற்குமாத்திரமொன்றாயுளது போலும், இன்னுமஃதஃதாயின் யாமீண்டு நாப்பெயர்த்தோதலிழுக்காதலறிக அது நிற்க இனிபொருதலைதுணியாதுபலதலைப்படவோதினுரென்றீர் பொருட்சிறப்பு அதன்சிறப்பின்மைகள் அறியுமறிவியாது மின்மையின் இவ்வாறெல்லாங்குழறினீரென்பது. இவ்வாறு குழறியநீயிர் அஃதறிந்து கழறுவார் வாய்க்கேட்

டுத்தெளிக. ஒருதலையபபடாது பலதலைப்படு நமக்கு அதுவுமல்லவும்
பலதலைப்படுவவேயாம் இனி அவ்வீரியல்பும் அறிந்தமைந்து பலதலை
ப்படாதொருதலைப்படுமவ்வறிவுடையர்க்கு அதுவும் பிறவுமொருதலை
ப்படுதலொருதலைபாமென்க, நமக்கெமதாசிரிய ருரையோத்தறியும
றிவின்றென்பது மேலுங்காட்டினு முன்னருங்காட்டுதும் அதுநிற்க
இனியஃதொருதலை துணிவின்றேலஃதிலக்கணமாகாதென்றீர் அதுவு
மாமென்பது யாமேலோதியவெல்லாம்புடைபடவொற்றி நுணுகியாயு
நுண்ணறிவுடையர்க்கினிது விளங்கும் இனி இவ்வாறே நம்மொப்ப
எமதாசிரியர் விகற்பம் நிறவுகற்பத்தலைக்துறை என்புழி பலதலைப்ப
ட்டு அதனை யொருதலைப்படுத்துமாறு போந்தாரொருவரும் இன்னு
மெமதாசிரியராக மங்கவுரையோத்தெல்லா மொருதலைப்படுத்துமா
றுசித்தித்த ஞானசித்தி யுடையரொருவரும் இன்னு நுமது தமிழ்ச்
சுலோக மல்லாத வாரியச்சுலோகங்களில் வல்லராயெமதாசிரியராக்
காதாக்கிய வாரிபநூல், மூலத்தோடு முரணிப்பலதலைப்படுவதனை
யொருதலைப்படுத்துமாறவதரித்தருளிய தேரடிமாடமுடையரொரு
வரும,எமதாசிரியர்மொழிபெயர்த்ததர்ப்படையாத்தருளியவெண்ணா
விழுக்குணருமெண்ணுவுடைய ரொருவருமாய் விந்நால்வரோடு நீயி
ருமுளப்பட நீயிரைவீ நமைவரொப்ப வோர்குடியிற் கொண்டனீ
ராம். இனி கானீனனைபனன பதிப்புரையுடையரு முள்ளிட்டு நீயிர
றுவீருமாவீர். இன்னும் வேதாந்தசித்தாந்த சமரசதசகாரியவிளக்கு
டைய ரொருவருளர தன் மேலுஞ் சிவஞானமுனிவர் வடமொழி
யுட்கண்டறியாத வொருசாரெமக்குக்கண்டு காட்டவல்லருமுட்பட
நீயிரட்ட மூர்த்திகளுமாம் அன்றியும் வீடு வைதிகசைவம்பகருமெ
ன்றவாறே வைதிகசைவசித்தாந்த சாத்திரமென்றன் மாத்தியேயன்றி
அவ்வேதாகம வசனங்களுள் பாதுமந்நூலுரைகளுளெடுத் துக்காட்
டிப் பொருள் விரிபாக்குறைவும் அவைகண்டோதுவாரின்மையுமு
ண்மையின் அவை அவையின்மை கண்ணுறுவார்காணுதற்பொரு
ட்டாக்கிய நூலுடைரொருவருமாக நீயிர் நவந்தருபேதமுடையரா
தன் மேலும் இன்னுஞ்சிவஞானசித்திமுதலிய நூலும் வாசிட்டமு
தலியநூலுந் தம்முட்பொருளொருமையுடைமையுணர்த்தற் கெழுந்
து சிவஸ்ரீ செந்திநாதையரவர்களை நீயிர் சிவஞானமுனிவர் வழிவந்த

வர்தாமோவெனவினவும் வினவுடையதசமரும் எமதாசிரியர் சிவ ஞானபோதநூற்குரைத்தருளிய காண்டிகை பாடியமிரண்டும் ஸ்ரீசி வாக்கிரயோகிகள் வடமொழியுட்செய்தவவ்விரண்டன் பெயர்ப்பேபி றவல்ல வென்பாருமுளப்பட நீயிரேகதசமூர்த்தியுமாமென்றொழிக.

இனி ஆனந்தரியப்பொருள் நூலைப்பயப்பித்தற் காரணமாய்க் கேட்போரை விசேடித்துநிற்றலான் வேறேதவேண்டாவென்பரொ ருசாரரென அவ்வொருசாரரோது முறையெடுத்து பதேசித்தருளு தலின்யாப்பு, கேட்போரென்பன இருபொருளாகாவாயொருபொரு ளாய்முடிந்ததென்றீர் இஃதிழுக்கோவன்றேவென்றுய்தல் மணற் சோற்றுட்கல்லாய்தலொக்குமாயினு நுமது அறிவின்றிருக்காய்த லெமதாசிரியரறிவின் பெருக்க உபதேசமாம் அதுநிற்க விசேட ணவிசேடியப்பொருளிரண்டற்கும் வேற்றுமையின்றென்றேது மிவ் வோத்து நுமது அறிவின்மையானுயதா அன்றியெமதாசிரியர் அறி வுண்மையானுபதாவென அஃதீண்டொரு சிறிதாயுமுறையானுப் குதும் அஃதாமாறு விசேடணவிசேடியங்கட்குத் தம்முள் வேற்று மையின்றென்றீர் அற்றேல் அது போலியாதல் நுமக்கீண்டொருவ மை முகத்தாற்காட்டுதும் அதுவேயிது,முத்தொழிலுடைய முதல்வ னெனத் தம்முள்விசேடணவிசேடியங்களாய் நின்ற அவ்விருவேறு பெயரையும் தனித்தனியெடுத்துக்கொண்டு முத்தொழிலுடையனெ னவும், முதல்வனெனவும் வைத்திவ்வாறு அவ்விருவேறு மொழியுந் தம்முள்வேறு வேறுதலைப்பெய்தோதப்படுமாயின் அவ்விருவேறு பெயரும் சிவபரம்பொருளொன்றற்கேயன்றித் திருமால்முதலிய பிறர் க்காதல் செல்லாமை வேண்டுமன்றே அஃதன்றி முதல்வன் தலைவன் இறைவன் என்றித்தொடக்கத்தான்வருவவெல்லாந் திருமான் முதலிய பிறர்க்குஞ்சேறல் காணப்படுதலின் ஆண்டு நுமது விசே டணவிசேடியமிரண்டுந் தம்முளொருபொருளவாதல் செல்லாமைகா ண்டும் இவ்வாறே பொருளினுமொட்டிக்கண்டு கொள்க. இஃதிற் றிற்றென்றறியுமறியாது மின்றி ஏதேதோ தெரிந்தாரொப்ப அவை தம்முளொன்றாய் முற்றியதென்றேகியது அஃதன்றேயாய்நும்வெள் ளறிவுக்குன்றேயாய் நின்றவாறு காண்க. ஆண்டெமதாசியர் வே

றோத வேண்டா என்றருளிய அவ்வருளொலிகேட்ட துணையே "தோ
ற்றிலீர்" என்னுங்குறிப்போத்தறியாது அவ்வோத்து மெய்யோ
த்தெனத்திரியக்கொண்ட அமணரொப்ப வேறோதவேண்டா என்
றருளிச்செய்ததூ உஞ் விசேடணவிசேடியப்பொருள் வேற்றுமை
யின்மைபற்றிப்போலுமெனத்திரியக்கொண்டு, யாப்பு, கேட்போ
ரென்னும் அவ்விருவேறு பொருளுந் தம்முள்வேறுபடாத விசேட
ணவிசேடியமாய ஒருபொருளாய் முடிதலானும் அதனான் அவற்றை
யிருபொருளாவைத்தெண்ணலாமையானும் அதனான் அவ்வோத்
து அமையுமொருசெவ்வோத்தன்றென்று இங்ஙனமொருவாறு முடி
ந்தது முடித்து ஒருபதமாக்கிய நீயிர் அஃதொவ்வாது இருபதமாத
லைநோக்ககில்லீர் அது நிற்க இனி ஒருபாற்றுணியாது பலபாற்படு
மாறோதினார் அதனாற்றுணிவில்லதிலக்கணமாகாதென்றீர். அது நும
திலக்கணமாதற்கியாது மிழுக்கின்றென்பது மேலோதினும் முன்ன
ருமோதுதும், அது கிடக்க, கூறுப என உபதேசித்தொழிந்தருளிய
வாசிரியர் அஃதவருளொருசாரர் என்பரெனப்பின்னுபதேசித்தரு
ளிய அம்மதமுடையர் வாய்ப்பக்காட்டுவவொழித்தொழிந்த
வாய்ப்பிலவாயக்காட்டுவ காட்டியருளும்வழி சம்பந்தங்காட்டுவார்
மதத்துளென்றுபதேசித்தருளிய அம்மதவேறுபாடுணர்ந்துடையர்
நும்பதவேறுபாடுமுணர்ந்திடுவர் ஆகலான் அவர்பாலப்பொருள்
வேறுபாடு கேட்டு நும்மருண்மாறுபாடொழித்துக்கொள்க. இத
னான் நீயிர் அஃதவரோதியவாறே இருபொருளன்றி யொருபொரு
ளாயிற்றென்றோதியது வெறும்மருளோத்தாய்முடிந்தவாறு காண்க.
இன்னுமஃதிவ்வாறு கொண்ட நீயிர் ஒட்டு உவமை முதலிய இன்
னோரன்னபிறவற்றையுமிவ்வாறே வேறோதவேண்டாமையானும்பொ
துவியல்பு வேறுபடாமையானும் அவை வேறுபாடுடைய விருபொ
ருளாகா ஒருபொருளாமென இவ்வாறோதவுந்தலைப்படுவீரன்றோ
அல்லதூ உம் நீயிர் வேறின்மை யென்னுமவ்வொலியாண்டுளது
ஆண்டெல்லாம் அவ்வாறே கொண்டுழிதருவீர்போலுமென்றொழிக
இன்னும் "காகத்திருகண்ணிற்கொன்றேமணி" என்றெழுந்துநின்ற
பரமசிவாசாரியப்பரம்பொருளின் பரமாப்த பரமோபதேசத்திரு
மொழியையும் இவ்வாறே யிழுக்கோதாதொழியீரன்றே. ஆகலா

னெம்மையாளுடைய மணிவாசகப்பரம்பொருளின் அரியபெரிய சிருணர்வையுங்கடக்குமறிவாற்றலுடைய நம்மறிவைக்கடக்குமறிவாற்றலுடையர் இவ்வுலகின்கண் யாருமிலரென்றெழிக. அது நிற்க.

இனி எமதாசிரியர் அவற்றுள் விசேடியமோதவே அதனை விட்டு நீங்காது யாண்டுமுடனுப்நின்ற விசேடணமோதாதே போதியதனுள் விளங்குமென்பது, அவ்வொருசாரார்கருத்தாதல் தேற்றியருளுவார் "வேறேதவேண்டா, என்னுங்கருத்தான்" எனறிவ்வாறு பதேசித்தருளினரென்பது, இப்பொருள் காணுங்கண்யாதுமின்றி ஆண்டுவேறேதவே ண்டா வென்றது அவை தம்முள்வேறு பொருளாகாதொருபொருளாதல் பற்றிப்போலுமெனமயங்கன்மேலும் பல வேறுதலைப்பட்டுத்துணியாததனை நீயிர் அங்ஙனமாக வொட்டாது ஒருவாறு தலைப்பட்டுத்துணிந்து அவை தம்முளொருபொருளாயமைத்து வைத்து இருபொருளன்றென்றோதிய நீயிர் முப்பொருள் நாற்பொருள் ஐம்பொருளறுபொருளெழுபொருளுமிழந்தவாறு காண்க. இங்ஙனமாகலான் நீயிர் கேவலாத்துவிதியோ, விசிட்டாத்துவிதியோ; ஐக்கியவாதியோ அவிகாரவாதியோ சிவாத்துவிதியோ எனப்பலதலைப்படுதலின் ஒருதலைப்பட்டுத்துணிவுபிறந்திலது ஆயினும் அசேதனமென்பதியாது மின்றியெல்லாஞ்சேதனமென்பது போதுமாறு முதற்கணோதுதலான் நீயிர் மாயாவாதமுடையர்க்கு முன்னையரேயோ அன்றி பின்னையரேயோ ஆதல்வேண்டும். இன்னு நீயிர் தலைமைப்பொருளோதவே தலைமையில்பொருளோதாதே பெறப்படு மென்புழியும் அவ்வொலிகேட்டலின் அவ்விருபொருளு மொருபொருளேயென்பீர்போலும். அது நிற்க தம்முளோரினமாய்நின்ற பலவேறு பொருள்களுளொன்றெடுத்தோதவே ஓதாதோதாதவேனைப்பொருளும் பெறப்படுமது தெரிந்துணர்ந்து கொள்க. இன்னுமிவ்வியல்பெல்லாம் மெய்கண்டபாடியத்துட்காட்டினுமாண்டுக்காண்க. இருந்த வாற்றானிது பிறனோதிய பொருளையனுவதிக்கமாட்டாமை யென்னுந்தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக, நீயிர் தமிழ் வியாகரணத்திற்கு ஒருமாபாடியமாக்குவீராயின் ஆசிரியர் பதஞ்சலனாக்கியருளிய மாபாடியத்தின் சாரமாயபொருளை வேறெ

டுத்துக்கொண்டினிது விளக்கிய ஆசிரியர் கையடனுமொப்ப யாம்
நமது மாபாடிபத்தின் சாரமாய பொருளை வேறெடுத்துக்கொண்டி-
னிது விளக்குதும் நீயிரிஃதிவ்வாறு விரித்தொழிந்து அது செய்யா
மை யாமேற்றவஞ்செய்யாமையேயாம். அது நிற்க ஈண்டு நமக்கு
அடை அடைகொளியென்னுமவ்வேறு பாட்டுணர்ச்சியாது மின்மை
காட்டுமுகத்தான் யாப்புகேட்போரென்பவற்றிற்கெமதாசிரியர் திரு
வோத்தே உண்மையோத்தாதல் சாதிக்கப்பட்டது. பிறவுமன்ன.
இனி உத்தரவேதமுடையர் அவ்வுத்தரவேதவுரையோத்துடையர்
திருவோத்திரண்டுமே நமது கேட்டல் கற்றலினொருசாரென்பதற்கு
பிரமாணமென நீயிரோதியதனை ஈண்டொருசிறிதாயுமுறையானுப்
குதும் அதுவே ஈண்டு முன்வருமாறு, கேள்வியெனவைத்தருளிநூ
லாசிரியருபதேசித்தருளிய வக்கேள்வி யென்னுமத்திரு மொழிப்
பொருளாவது கேட்கப்படுநூற்பொருளை கற்றறிந்தாரோதக்கேட்ட
லென இவ்வாறேதி யொழிபாது அவ்வுரையோத்துடையர் அற்றேல்
அக்கேட்கப்படுநூற்பொருளைக்கேட்டற் பொருட்டாய அக்கேள்வி
யதிகாரங் கல்வி கல்லாமைகளின் முதல்வாய் நடுவாய்களின் வைத்த
ருளாது அவற்றின் கடைவாய் வைத்தருளுமாறென்னை யென்னுங்
கடாவைவிடுத்தற்கு ஒருமகடூஉ தான் அடுதற்குரிய அட்டிற்றொழிலை
த்தாயர்முதலியோர் பாற்பயிலுமுறையாற்பயின்று பின்னர் அது
தனித்துத்தானே செய்யுமாறு முயலுமாயின் அவட்கு மேலடிப்பட்
டுப்போந்தபயிற்சி வலியின்மையின் ஒரோவழி யொருசிறிது ஐயந்தி
ரிபென்பன நிகழ்ந்று துணிவுபிறவாதுபிறழவும்படும் இனியவடானே
தனிமையிற் பயிறலாகாமையின் அவ்வட்டிற்றொழில் அடிப்பட்டுச்
செய்து போதல் செய்வித்தலென்னுமிருதிறத்தானும் ஐயவிபரீதமற்
றுடையர் அதனைப்பிறழாதோதவல்லர். ஆகலான் அதனை அவர்
பால் மறுவலுங்கேட்டுணருமாயின் மேற்பயிலுமப்பயிற்சி பற்றி நிக
ழுமைய விபரீதமற்றுப் பின்னர் அதுபிறழாது நிலைபெறுடைத்தாகும்
இனி அது மேற்பயிலாதாரும்பயின்றறிந்தார்பாற்கேட்பினும்
அவ்வாறே அவர்க்கப்பயிற்சியுணர்வு நிகழுமாறு நிகழ்த்தி நிலைபே
றுடைத்தாம் அஃதொப்ப வொருவன் கற்கப்படு நூற்பொருளைக்
கற்றவழியும் அவன்றான் அக்கற்பினது முடிவின்கண் மாத்திரநின்று

டையனல்லது அஃதடிப்பட்டுப்பட்டுமேற்போந்து முறுகியவறிவு அவற்காண்டு நிகழப்பெருமையின் தான் மேற்கற்றுமுற்றிய அந்நூற் பொருளைமறித்துத்தானே நனித்தாயுமாயினும் அன்றியதனைப்பிறர்க் குணர்த்துமாயினும் அஃதாண்டுப் பெரிதுந்துணிவுபிறவாதொரோ வோருழி ஐயவிபரீதநிகழவும்பெறும். இனிஅவன் இங்ஙனமாய தன் போலாதுகற்றல் கற்பித்தலென்னு மவ்விருவேறுதிறத்தானும் அடிப் பட்டுப்போந்துடையர் ஓதுமுறையானுதைக் கேட்டுணருமாயின் அவ் வையவிபரீதமற்றுத்தெளிவுபெற்று முற்றிய துணிபுடையனேயாம்.1. இனி, தாந்தாங்கற்றற்குரியவை கல்லாதார்க்கும் அவ்வாறே அவ்வ றிவு நிகழுமாறு செய்தலானும் அதனுற் அக்கேள்வி கல்விகல்லாமை யிரண்டற்கும் பொதுவாய் அவற்றினெழிபாய் நிற்றலானும் அன்ன பிறவாற்றானும் அஃதவற்றின் பின்வைத்தருளப்பட்ட தென்பது தேற்றுவார் கல்விகல்லாமைகளின் பின்வைக்கப்பட்டதென் றேதி னரென்பது இன்னுமாண்டெழுந்தநின்ற அக்கேட்டல் நுமதுபல வேறுறுப்பானுப அக்கற்றலது ஒருசாராதல் யாங்ஙனமெனப்பிறி தோராற்றானும் ஈண்டொரு சிறிதாயுமுறையானுய்குதும் இது வே அது, கேள்வியாவது. கேட்டல் கேட்டற்குரிவைபாவை கேட்டற்குரிய நூற்பொருள் இனி அவை கேட்டற்குரியர் யாவர் கற்றாருங் கல்லாதாரும் அவாது யாங்ஙனங்கேட்டார் ஓதக் கேட்டார் அது கேட்பித்தார்யாவர்? கற்றறிந்தடிப்பட்டுப் போந்த வாசிரியர் இனி அஃதெதன் பொருட்டுக்கேட்டார் முறையேயவ ற்றைக்கற்றூர் மேற்கேட்பினும் வலியுறுது நின்ற நூலறிவுவலியுறுத் தற்பொருட்டடும் ஏனைபர் மேல் நிகழாதநூலறிவு நிகழ்தற்பொருட்டு மேபாம் இனி இவ்வாறே ஏனைக்கல்வியினுமொட்டிக் கண்டு கோ டும்கொண்டு அது பற்றி அவை தம்முளொருநிகாவோ அல்லவோ வென ஆயுமுறையானுய்குதும் இது வேயது, கல்வியாவது யாது? கற்றல், கற்கப்படுவனயாவை? கற்றற்குரிய நூற்பொருள். அவை கற்றற்குரியர் யாவர்? விசேடவிபல்புடையராயமாந்தர், அவரவற்றை யாங்ஙனங்கற்றூர்? பிறர்கற்பிக்கக்கற்றூர். கற்பித்தார்பாவர்? கற்று ணர்ந்துடையவாசிரியர். இனி அவரெதன் பொருட்டுக் கற்றூர்? அறி வுடையராய்ப் பயன்கோடற்பொருட்டுக் கற்றூரென்பதாம் இன்னுமீ

ண்டு அக்கேள்வி நமது கல்வியின் பரியாயப்பெயரோ அன்றேவெ ன வேறு மோராற்றானுமாய்த்தும் அதுவுமிது, நமதுகற்றற்குச்செ யப்படுபொருளாவது நூல், நூலைக்கற்றலாவது அந்நூற்செய்யுளைக் கற்றல் இனி அச்செயுளாவது பாடம், அப்பாடங்கற்றலாவது? செய் யுட்சொற்பொருளை ஆசிரியன் கற்பிக்கக்கற்றல், இனிஇவ்வாறேயே ணைக்கேள்வியினுமொட்டிக் கண்டு கோடும் (அதுவுமிது) கேட்டற்கு ச்செயப்படுபொருளாவது பாடம், பாடங்கேட்டலாவது படிக்கப்ப டும் நூற்செய்யுளைக்கேட்டல், செய்யுளாவது படிக்கப்படும் பாடம் கேட்டற்கருவியாது, காது கற்றற்கருவியாது வாய் அவ்வாய் தொழிற்படு மாறு ஆசிரியன் நூற்பொருளைத் தன்வாயனெடுத்தோ துங்கால் அவ்வோத்தினைக்கேட்போன் முறையானே முன்னர்க்காது பற்றிக்கேட்டுப் பின்னர் மனம் பற்றியுணர்ந்து பின்னரதனை வாய்பற் றியெடுத்துக்கொண்டோது மென்க. ஈண்டுக்கேட்குந்தொழில் முன் னும் ஓதுந்தொழில் பின்னுமாய் நிகழ்ந்து அத்தொழில்கள் தம்முள் முற்பிற்பாடையவாயினும் வாயின் றொழில், காதின்றொழிலையின்றி நிகழாமையானும் அக்காதின்றொழில் வாயின் றொழிலையின்றியுநிகழு மாகலானும் முன்பின்னாகநிகழ்ந்து தம்முட்டொழில் வேறுபாடுடைய வாயினும் அவையிரண்டும் ஒன்றன் பொருட்டு நிகழ்வனவன்றித் தம் முள் வேறு வேறாயதொழிலிரண்டன் பொருட்டு நிகழாமையானும் அல்லதூ உம் நிகழ்ச்சியெவற்றானுந் தம்முளொப்பனவன்றி யாதும் வேறுபடாமையானுமென்பது.

இன்னு மோராற்றானுமஃதமையுமாறோதும் அஃதீது நமது கேட்டலாவது நமது கற்றலினொருசாரதாயின் முறையே அக்கற் றல் கேட்டலின் செயப்படு பொருளாய நூலும் பாடமுந் தம்முள் வேறாதல் வேண்டுமன்றே அங்ஙனமவைதம்முள் வேறெனப்படுமா யின் நூலையின்றிப்பாடமின்மையானும் பாடத்தையின்றி நூலின்மை யானும் அதனான் நமதுநூல் கற்றலென்பதூஉம் எமது பாடங்கேட் டலாகலானும் அதனான் எமது பாடங்கேட்டலென்பதூஉம் நமது நூல் கற்றலாகலானும் அதனால் கற்றல்கேட்டல்கட்குச் செய்யப்படு பொருளாய நூலும் பாடமுந் தம்முளொன்றேயன்றி வேறுவேறன்

மையானும் அன்னபிறவாற்றான் மஃதன்மையுமாறறிக. இன்னுமோரா
ற்றானு மதுவிடுக்குதும். அதுவுமிது, கற்பித்தல் கேட்பித்தல் இரண்
டுமொருபொருண்மொழி யாதல் நுமக்குமொக்குமன்றே ஒப்பவே
நுமது கேட்டல் நுமது கற்றலின் ஒருசாரதாமாறொப்ப கேட்பித்த
லுங் கற்பித்தலின் ஒரு சாரதாதல்வேண்டுமன்றோ, கேட்பித்தலை
யின்றிக்கேட்டல் தானே நிகழ் தலின்மையானும் கற்பித்தற்குரிய
வியல்பியாவை அவையெல்லாங்கேட்பித்தற்கு முரியவாதலொருதலை
யாகலானுமென்க. நுமக்கிஃதுடம்பாடன்றாயின் எமக்கு மஃதுடம்
பாடன்றென் றொழிக. இதனானுங் கேட்டல் கற்றலின் ஒருசாரென்
பது போலிபாயொழிந்தவாறுகாண்க. இங்ஙனமாயின் அங்ஙனமா
மென்னு முய்த்துணர்ச்சியென்பது நுமக்கேது அஃதியாது மின்மை
யின் இதுவுமதுவென்பதறியுமறி வொருசிறிதுமின்றியிவ்வாறோதினீ
ரென்பது இனி அதுவுமதுவாலோவெனின், நன்றேயோதினீர் அது
வுமதுவன்மை யோதியவாற்றானுய்த் துணர்ந்து கொள்க. விரிப்பிற்
பெருகும், தமிழ்ச்சுலோகத்தினீக்குதற்பொருட்டு ஆசிரியச்சுலோக
மென்றாங்கு ஏனைத் தய்யினீக்குதற்பொருட்டு அடைவித்தஅடையு
டைய நம் பஞ்சிற்றுய்யங்கி கண் முதலிய வெல்லா மியல்பானுடைய
வெமதா சிரியரானைக்கு எல்லாப்பகையுமெரி முன்னிருளொப்ப நெடு
ஞ்சேய்த்தென்பதறிந்து கொள்க.

அஃதேலஃதஃதாக, கற்றல் கேட்டலுடையரெனவும் கற்றிலனாயி
னுங்கேட்களனவும் வருமித்தொடக்கத்துள் அவ்விருவேறு மொழியுந்
தம்முள் வேறுவேறுதலைப்பெய் தோதுதலான் அதுவேஅவை தம்முள்
வேறென்பதற்கமையுஞ்சான்றெனவும் படுமன்றே அஃதேல் அத
னியல்பென்னை அஃதோரும் பேரவாவுடையன் அதற்கமைதியோது
கவெனின் அஃதோதுதும் அதுமனம் பற்றிக் கேட்கற்பாற்று.
அஃதாமாறு.

கற்குமுறையானே கற்றற்குரியவற்றைக்கற்றலும் அவையொரு
கால் இருகால் முக்கால் மாத்திரையே கற்றமை பற்றிமிகப்பெரிதும்
வலியுறாமையின் அவற்றை மறித்தும் ஐயந்திரிபற்று முற்றுணர்ந்தோ
ரோது முறையானேதக்கேட்கு முறையாற்கேட்டலுமாய இரண்டு

முடையரென்பதாம், இஃதவற்றுள் முன்னையதென்பதாம் அஃதேலலையீண்டு முறையானென்றன் பின்னென்றாய்நிகழ்த லுண்மையின்பின்னையது முன்னையதனொருசாரதாதற்கு முரித்தாகலான் அவையொருபொருளவாகாபோலுமெனின் அற்றன்று "பட்டராகிலென் சாத்திரங்கேட்கிலென்" எனவும் "கற்றவர் விழுங்குங்கற்பகக்கனியை" எனவும் வருமித்தொடக்கத்துப்பிறாண்டும் அவையிரண்டும் அவ்வொருபொருளை நுதலியெழுந்து நிற்பக்காண்டலானென்பது இருந்தவாற்றான் ஈண்டவற்றியல்பு யாமோதியவாறேயாமெனக்கொள்க. கற்றல் கேட்டலும், கேட்டல் கற்றலுமாமென்பதுணர்த்துதற்கன்றே, ஒரு நூறிகற்போன் இருகாற் கற்பின் முக்காற்கற்பினென்னினுமமையும் அமையவும் அவற்றை ஒருதரி கேட்போன் இருகாற்கேட்பின்முக்காற்கேட்பினெனவைத்தொழிந்ததூஉமென்பது அல்லாக்கால் "சாத்திரங்கேட்கிலெனென்றித்தொடக்கத்தவெல்லாம், கற்றல்வேண்டாது கேட்டன் மாத்திரையே யமையுமெனவும், கற்றவர் விழுங்குமென்னுமித்தொடக்கத்தவெல்லாம் கேட்டல் வேண்டாது கற்றன் மாத்திரையே யமையுமெனவும் பட்டு யாதும் பொருந்தாமையின்யாமோதியதே எல்லார்க்கு மொக்குமமைதியெனக்கொள்க. விரிப்பிற் பெருகும் ஆகலானொழிதும். எஞ்சி நிற்பதினி வருமாறு

மேலோதியவாற்றான் ஒருவன் கற்றலும் அதனைமறித்துக்கேட்டலுஞ்செய்க செய்யுமாயின் அவன் இவ்வுலகின் கண் தளர்தல் தளராமை எனப்படும் வெறுப்பு விருப்பாய வினை வழியொழிந்துய்யு மெய்நெறியைத்தலைக்கூடும். அவையிரண்டுமொருங்குடையர் உத்தமராதற்குரியர். இனி அவையிரண்டு மொருங்குடையராகமாட்டார் மத்திமரெனப்படுவர் இனி அவர் முன்னையது கைகூடப்பெறுதோராகலான், அவர் பின்னையதானுங்கைகூடப்பெறுக பெறுவராயின் தளர்ச்சி வந்துழி அஃதொழிந்து தளராது வைகலே உலகிற்குரியதோரியல்பாகலான் அஃதவர்க்கு அத்தளர்ச்சி யொழிந்து தளராது நிற்றற்குரியதொருபற்றுக் கோடாயதுணையாகுமென்பதாம் கற்றிலராயினுமென்னுமும்மைகற்கவேண்டுமென்பதுபடநின்றது என்றேது மதனானுமிதுவுமேலதேயாமென்பது இதனானுமவையிரண்டுந் தம்

முள் ஒரு பொருளைவேபாதல் காண்க. இவ்வாறு வருவ பிறவுமிவ்
வாறே உய்த்துணர்ந்து கொள்க அஃதேல் கல்வியென்றெழுந்து நின்
ற அதிகாரங் கேள்வி யெனவுங் கேள்வி யென்றெழுந்து நின்ற அதி
காரம் கல்வி யெனவும் மாறிப்போதினும் அமையவும் படும் போலு
மெனின் நன்றேபோதினீர். அதுவே எங்கருத்தாகலானென்பது,
அஃதாயினும் அவற்றுள் முன்னையதொருவற்கு மாத்திரையே உரித்
தாகலானும் பின்னையதிருவர்க்கு முரித்தாய் நிற்றலானும் அம்முறை
பற்றி அவைவேறுவேறு நின்றவாயினும் யாமோதிப்போந்தவாற்
றான் மேலையதென்பதுய்த்துணர்ந்து கொள்க. அது நிற்க.

இனி கால இயல்பு முதலிய வெல்லா இயல்பு முழுதொருங்குண
ர்ந்த நீயிரோதிய நுமதெதிர் காலம் நும்மை யெதிர்காலமோ அன்றி
யஃதெம்மை யெதிர்காலமோவென அதுபற்றியொரு சிறிதாயுமுறை
யானுப்குதும். அதுவே போதற்கு முன்வருவது.

241-3-கூறு இவனுள் நீயிர் காலமென்பதொரு நித்தப்பொரு
ளாமென்றீர் தத்துவங்களனையவொப்பத்தோன்றி நிலைபேறின்றிக்
கெட்டொழியுமோர் அநித்தப்பொருளாய அக்காலதத்துவத்தினைநித்
தப்பொருளென்றே தந்தார்க்கிக மதவியல்பிஃதென்றறியுமறிவின்றி
அதனை இங்ஙன நித்தப்பொருளெனக் கொண்டோதித் தார்க்கிகம
தானுசாரியாயினீர். பொய்யியல்பிஃதென்றறியு மறிவின்றிய நுமக்கு
மெய்யியல்பிஃதென்றறியுமவ்வறிவுநிகழுமாறியாங்ஙனம்அதுகிடக்க
அவ்வத்தொழில் வேற்றுமைபற்றி நிகழுஞ் செல்கால முதலியவக்
காலங்கள் அவற்றையாக்கற்கருவியாய ஞாயிறு முதலியவற்றுனுமெ
ன்பதே வேதாகமநூற்றுணிபு அங்ஙனமாகவும் அக் காலமாயவினை
முதற்றொழிற்பயனுறுஞ் செயப்படுபொருளாய வக்கால வாய்ப்
படும் பொருளை அத்தொழிலை நிகழ்த்தும் வினைமுதலாயஅக்கால
வேறுபாட்டிற்கேதுவெனப் பிறழக்கொண்டீர் அஃதன்று ஈண்டு
அஃதென்றோதிய அவ்வெல்லையாவது வேறுபட்ட அக்கால அளவை
யுமன்று அளத்தற்கருவியுமன்று அவற்றின் வேறுலெனின் அற்
றன்று ஆண்டவற்றை வேறுபடுத்தற்குரிய வினைமுதலாய், அவற்றின்
வேறுபுள். பொருள் வேறிபாது மின்றாகலானென்பது என்னை நீயிர்

காலவாய்ப்பட்டு நின்ற திங்கள் முதலிய பொருளை வேறுபடாதொ
ன்றாய் நின்ற வக்காலம் முத்திறத்தாற் பலதிறப்பட்டுச்சேறற்கேது
வென்றோதுதலானும் யாமுமக்கால முத்திறத்தாற்பலதிறப்பட்டுச்
சேறற்கே ஏது ஓதினமாகலானும் ஆகலான் ஓதியதனின் வேறாய்
அதனை வேறுபடுத்தும் வேறுபொருள் வேறியாதுமின்மையறிக. இங்
ஙனமாகலான் நீயிர் இறப்புமுதலியவாய்த் தம்முள் வேறுபடுமக்கால
வேறுபாட்டை நிகழ்த்துதற்கேதுவாய் நிற்பதூஉம் அக்காலவாய்ப்
படும் பொருளாமென்றல் வெறும்போலியாதலறிக, அக்காலம், அ
தன்றொழில், அத்தொழில் வேறுபாடு, அத்தொழிற்கேது, அத்
தொழிற்பயனுறுவது என்றிம்முறைபானிகழ்வவற்றுள் இறுவாய்
க்கண் நிகழ்வது எழுவாய்ப்பட்டு அதற்கேதுவாகாமை பற்றியும் அ
துபோலியாதல் தெற்றெனவறிக. அது நிற்க.

இனி முறையே நுமது திங்கள் புந்தியிரண்டற்கும் இறப்பு
எதிர்வென்னுமக்கால வேறுபாடுளதாதற்கேது ஆண்டு ஞாயிறு
முதலியவேயாமெனக்கொள்க. அங்ஙனமல்லாக்கால் நாளென
வொன்று போற்காட்டியெனவாசிரியருபதேசித்தருளன் மேலும்.
அவ்வுரையோத்துடையர் அக்காலம் ஆசித்தன் முதலிய அளவைக
ளாற்கூறுபட்டதென்னாது நீயிரோதிபவாறே அக்காலவாய்ப்பட்டு
நின்ற நும்பொருள் வேற்றுமைபற்றிக்கூறுபட்டதென்றோதல் வேண்
டும் அங்ஙனமோதாமையானும் இங்ஙனமோதுதலானும் அன்னபிற
வாற்றானும் அஃதஃதா காமையறிக. அவ்வுரையுடையரோத்தெமக்
குடம்பாடின்றாலெனின் அற்றேல் அஃதந்நூலுடையர்க்கு முடம்பா
டாதல் மேலோதினுங்கடைப்பிடிக்க, இனி அற்றேனு அவ்வுரையு
டையரோத்தெமக்குடம்பாடின்றாலெனின் நன்றேயோதினீர் நீயிரு
மோருரையாசிரியராகலான் உரையாசிராய நும்மோத்தெமக்குடம்
பாடின்மையின் யாமிருவேமுமெம்முளோத்து வேறுகாணுந்துணை
யும் அத்தொல்லோத்து நின்று நிலைபெறுமாறுடம்பட்டுக்கோடு
மென்பது இருந்தவாற்றானிது பிறன்பொருளையுடம்படலென்னுந்
தோல்வித்தானத்தின்பாற்படுமாறறிக.

242-3-கூறு இதனுள், நீயிர் ஒருபொருளின்றொழிற்கெல்லையா
வது பிறிதொருபொருளையாமென்றீர் அற்றேல் சாத்தன் கற்குமத்

தொழிற்கெல்லையாவது தேவதத்தனுதல் வேண்டுமென்றே ஆகலான் தொழில் நிகழ்ச்சிக்கெல்லை ஒருபொருளென்பது வெறும்போலியா தலறிக. இருந்தவாற்றானிது பொருளின்மையென்னுந்தோல்வித் தானத்தின் பாற்படுமாறறிக.

242-3-கூறு இதனுள் அத்தொழிற்கெல்லை யாதெனின் முன் வருமக்காலங்களுள் வைத்து ஒருகாலமாமென்றீர். இதனானே கால மும் அக்காலவாய்ப்படும் பொருளுந் தம்முளொன்றுமென்பது நுங் கருத்தாதல் பெறப்பட்டது. மேலடுக்கநின்றகூற்றுள் அத்தொழிற் கெல்லை அக்காலவாய்ப்படும் பொருளென்றேதுதலின் ஒருபொரு ளும் அப்பொருளையுடைய பிறிதொருபொருளுந் தம்முளொருபொ ருளாக வைத்தோது நமக்கு வினைமுதலும் வினைமுதற்றொழிற்பயனு றுவதுஉந் தம்முளொருபொருளாதலொருபொருளன்றென்க. மேல் விசேடணவிசேடிய மிரண்டுமொருபொருளென நீயிரோதுமாற்றான் யாமஃதறிந்தொழிந்தாமென்பது அது நிற்க தோல்வித்தான மிதுவு மேலையது.

242-பக்-3-கூறு இதனுள் எண்பொருளுங்காட்டலென்னுமவ் வாணைதந்து போந்தது நமது முதல்நூலாசிரியனென்றீர் என்றீர்க்கு இஃதொப்ப இத்தமிழியனூற்பொருள் தந்துபோந்தானுமவனென் பதூஉம் இதனாற் பெறப்படும் படவே அது சிவபரம்பொருள் ஆசிரி யர் பாணினியனார்க்கு வடமொழியியனூற் சூத்திர மீந்தருளியதொப் பத மிழியல்நூற்சூத்திரமும் அத்தமிழ் முதனூலாசிரியற்கீபப்பட் டுதென நீயிர் மேலோதியதனோடு முரணுமாறறிக. அஃதன்று ஆண்டுச் சூத்திர மீதலென்றது அவ்வாணையாவதொன்றன்று அஃததனின் வேறுமெனின் அற்றன்று நீயிர் சாகைமுதலிய வெல்லாம் வித்துளடங் கித்தோன்றுமாறொப்ப நூலெல்லா நமது அனுதியாபமொழியுளட ங்கித்தோன்று மென்றேதுதலின் ஆசிரியர் விரித்தோதுமியனூற் பொருளெல்லாம் அச்சூத்திரம் பற்றி விரித்தோதப்பட்டன வென் பது நுங்கருத்தாவதன்றி வேறன்மையின் அஃததனின் வேறுமாறி யாங்ஙனமென்றொழிக, இனி அதுவேவேறெனப்படுமாயின் நமது அவ் வாசிரியன் முதல்வனை வேண்டிப்பெற்ற தொரூமூலமின்றித் தானே

அந்நூலை ஆக்கல்வேண்டுமன்றோ அவ்வாறுதல் நுமக்குடம்பாடன் மையின் அதற்குமூலம் அதுவே பிறிதன்றெனக்கொள்க. அது கிடக்க, இனி மீண்டு நிகழுமெல்லாத்தொழிலுமிறைவனாணையானிகழ்வ வல்லது அதனின் வேறுயுயிர்கட்குச் சுதந்தரமாய் நிகழுந்தொழில் யாது மின்மையின் முதனூலாசிரியனாணையென வோராணை வேறு கோடல்யாது மேலாமையறிக, அஃதேல், நூலாசிபராணையெனவ் ழங்கவும்படுமாலெனின் அப்பெற்றித்தாயவழக் கஃதொன்று மாத் திரையேயதாமோ, இன்னுமஃதன்னபிறவுமுள, அவை யெல்லாமொற் றுமைபற்றிய உபசாரமேபிறிதன்றென்க. அவ்வியல்பெல்லாயாமீண் டுரைப்பிற்பெருகும் சிவஞானப்பாமாசாரியர் பேருபதேசப்பெரும் பரப்பு என்னுமந்நூலுட்காண்க. அற்றேலற்றற்றாயினும்பாயிரவாணை அவனாணையன்று இவனாணையென்னுமோவெனின் என்னும் என்னை, "எங்குமாணையே யாணையேகாண்" எனவும் "ஆணைவைப்பாலளிப் பன்" எனவும், "முதற்கடவுள தாணையானடப்பன உலகமும் அதற்கு றுதிபாய அறமுதலிய பொருளு" மெனவும், வருமித்தொடக்கத் தான் முழங்குஞ்சுருதிக ளெண்ணிறந்த வாகலானென்பது அது நிற்க.

அஃதேலெம தாசிரியராணையென நீயிரோதுமாணையை மறந்திஃ தோதினீர் போலுமெனின், அற்றன்று அஃதோதியதனு ளோதின மாகலா னோதியவாறுபற்றி யோதியுணர்ந்துகொள்க. அதுநிற்க

இனி நீயிர் பிறிதொன்றியை பின்மையினென்றோது நுமது இ யைபுண்மைக் கோதியவெல்லாம் வெறும்போலியுட்போலியாயினும் அவையுமிழுக்கி னிழுக்கென்பதூஉம் அதனுன் அவ்வோத்துச் சிறி துமேலாதென்பதூஉ மொருசிறிதுகாட்டுதும், அஃதிது, நீயிர் அவ் வெல்லையாவது முதல்நூலாசிரியன், நூலாசியன், நூல், பாயிரமென்னு மிந்நாற்பொருளின் காலங்களுள் வைத்த ஒருகாலமாயின் அவையே யியைபுடைய அன்றி அவற்றின் பிறிதொரு பொருளெல்லையாயின் அவை யாண்டியையயாமையினியையாதென்றீர் என்றீரேயன்றி அப் பிறிதொன்றென்ப திஃதென்பதூஉம் அஃதியைபின்மைக் குரியவே து இஃதென்பதூஉமோதினீரல்லீர். ஈண்டு நீயிர் அப்பிறிதுபொரு

ளென்றது இஃது அஃதிதனுனியையபின்றென்றேதாமையின் அஃ தாகாயத்தி னெழுதிய சித்திரமொப்ப வெறும்போலியாதலறிக. அதுநிற்க அஃதிந்நான்கனு ளொன்றுதல் வேண்டுமென்றீர். அற் றேல் அதற்கு நியாமகமென்னை அல்லதூஉம் முதனூலின் காலம் முதனூற் பாயிரத்தின் காலமிரண்டுங் கூட்டி இவ்வறு வேறுகாலத் து ளொன்றுதல் வேண்டுமென்றூற் படுமிழுக்கென்னை இன்னுமிவ்வா றே அன்னபிறவும் கூட்டவும் படுமாகலான் அஃதியாதும் வரைய றைப்படாமையின் ஈண்டைக்கு நுமது வேண்டுதல் வேண்டாவென் றொழிக. அஃதேல் நீயிரிஃதோதற்குரிய நியாமக மென்னையெனின் அற்றேல் நும்மோத்திற்குரிய நியாமகவென்னை யாதுமின்மையின் இரண்டுந் தம்முளொப்பவா மென்றொழிக. அதுநிற்க.

இனி நீயிர் ஈண்டாக்கியோன் பெயர்முதலிய மூன்றுந் தனித் தனி முக்காலத்துணர்த்தல் வேண்டுமென்புழி நூலாசிரியற்கு பாயிர முறுப்பாமாறி யாங்ஙனம் நூலை விசேடித்ததெனின் முன்னர் அதனை யுடைய நூலென்றேதினீர். அதற்கு நியாமகமென்னை அல்லதூஉமங் நியாமகம் அவ்வெட்டனுள் அவையொழித்தொழிந்த வழிமுதலிய பிறவற்றிற்கு வேண்டாவே கொல்லோ வேண்டாவாயின் இதுவுமது ஆகலான் அவையெல்லா நுந் தலைவிதியேபோலும் அதுநிற்க.

இனி பாயிரவிதிபுள் நீயிரோதியவாறே அற்றற்றேயாம் அல்லா க்கால் குற்றமேயாமென வரையறுத்தோதாமையானும் அவ்வோத் தே நுமக்கெடுத்தோத்தாகலானும் அன்னபிறவாற்றானும் அஃதந்நி யதியாதுமின்றிப் பிறழ்ந்தொழியுமாறு காண்க.

இனி அது நூலாக்கியோர் காலமாயின் நூலாக்கியோர் உரையா க்கியோர் அல்லாக்கால் அந்நூலாக்கியோர்க்கு முன்னை ஞான்று நூ லாக்கியோர் என இவ்வாறே ஆக்கியோன் என்பது இருவேறுபொ ருளவாமென்றீர் இனி நுதலியபொருளென்பதூஉம் அவ்வாறே இருவேறுபொருளவாமென்றீர் முன்னும்பின்னும் நோக்கு மிருநோ க்குடையீர்க்கு அவை யவ்வாறு இருவேறு பொருளவாதல் யாதும் வியப்பன்றென்க, இனி நுமது அறிவின் மறுதலையாய எமதாசிரிய ராணைக் கங்ஙனமாமென்பதூஉ மொருசிறிது காட்டுதும் (அதுவே யிது)

ஈண்டு நீயிரோதிவாறே அவை இருவேறுபொருள்படுவவாயின்
அவ்வாறே அதன்மேலடுக்க நின்ற வழியென்பதூஉம் அவன் பிறந்த
குடிவழி முன்னோர்போந்த கோத்திரவழி ஒழுகுதற்குரிய சூத்திர
வழி அஃதுணர்த்துமாசிரியர் வழி எனவும் இன்னுமின்னோரன்ன பல
பொருள்படுமன்றே அவ்வாறே ஆக்கியோன்பெயரும் கற்பித்தாக்கி
யோன் மணமுடித்தாக்கியோன் உணவீந்தாக்கியோனெனவு மின்னு
மின்னோரன்ன பலபொருள் படுமன்றே இன்னு மாக்கியோனென்னு
மவ்வுபலக்கணம்பற்றி அவனை ஆக்கியோனையும் அப்பெயர்பெறு
மேனைத்தாயர்தம்மையு முணர்த்துமன்றே இவ்வாறெல்லாம் விரித்
தாக்குதற்குரிய நுண்ணுணுக்கியாது மின்றி நீயிராக்கிய விருத்தி யிங்
ஙனம் விரித்தாக்கப்படாது அஃகிப்போகலான் அது பாயிரவிருத்தி
யென்னும் பெயர்பெறுதற் கேலாதாய்ப் பாயிர வஃகியென்னும்
பெயர்பெறுதலே முறையாகலான் நுமது இப்போலி யெல்லா மிஃ
திஃதென் றெஞ்சாதோத லெம்மாற் சாலாதென்க, இஃதிவ்வாறே
ஏனையவற்றினும் ஏற்குமாறுவைத்து கண்டுகொள்க அதுநிற்க.

இனி அவ்வெல்லையாவது முதனூலாசிரியன் காலமெனின் அ
வற்கு முன்னைஞான்று ஆக்கியோன் பெயரையும் அஞ்ஞான்று நு
தலியபொருளையும் பின்னைஞான்று கேட்போரையுமுணர்த்துமல்லது
அக்காலம் முக்காலத்து நிகழுமம் மூன்றனையுமொப்பவுணர்த்தாமை
யின் அஃதெல்லையாவதொன்றன்றுமென்றீர், என்றோதவுணர்ந்தீரே
யன்றி யொப்பவுணர்த்தாமைபற்றி யாகுந்தப்பு இஃதென்றுணர்த்த
லுணராமையின் அவ்வோத்துப்போலியாதலறிக அஃதன்று அவ்வா
றொப்பவுணர்த்தாக்கால் அவையொழித்தொழிந்த காலத்து ஆக்கி
யோன் பெயர் முதலிய பொருளுங்கேட்போரும் ஆண்டுளப்படா
தொழிதலானும் அவையுமுளவேயாகலானும் அவற்றையுணர்த்தலு
மொருதலையான் வேண்டுமாகலானும் அது பற்றியவ்வாறோதினமா
லெனின் அற்றன்று அஃதெல்லையன்றென்பது யாமேலோதினமாக
லானும் அல்லதூஉமதற்குப்பிரமாணமின்மையானும் பொருந்துமாற்
ற்குமது பொருந்தாமையானுமென்பது

இனி அது நூலது காலமெனின் அஃதாக்கியோன் ஆண்டுக்கே
ட்போனை யோதுங்கால் இந்நூலைக்கேட்போனென்றோதுமன்றே.

அங்ஙனமாயின் அவ்வாறே நுதலியபொருளும் அந்நூலை நுதலிய பொருளென விரியுமாகலான் அதற்குச்செயப்படுபொருள் நூற்பொருளாகாது அந்நூலெனவேபடும் அதனை நுதலியபிறிதொருபொருள் ஆண்டுக்காண்டுமாகலானென்றீர் நூலாக்கியோன் பாயிரமாக்கற்குரியனல்லன் அப்பாயிரமாக்கற்குரியன் ஒருபிறனேயாம் அவனானேதப்படுமவ்வெட்டனுளொன்றுப்வைத்தெண்ணப்படுதற்குரியது கேட்போனென முன்னேது நீயிர் நூலாக்கியோனே இந்நூல் கேட்பானிவனென அதனைத் தானே தன்னூனுள்வைத்தோதுமென விவ்வாறீண்டோதிபொழிந்தீர் இஃதென்னை கொல்லோ பாயிரமாக்கற்குடம்படுங்காலம் நூலாக்கிய பின்னரேயன்றோ அது முற்றுதற்கு முன்னுமஃதுடம்படுமாறுமுளதோ என்னுமைபமறுத்தற்குப்போலும் அது நிற்க இனி, பாயிரமாக்கற்குரியனொருவன், அறிஞர் அதனையாய்ந்து இஃதிழுக்கின்றெனக்கைக்கொள்வராயின் யாமஃதாக்குதுமென்றுடம்பட்டோதியபின்னன்றே அஃதிழுக்கின்மையாய்தற்கு அறிஞருடம்பட்டுக்கோடலாமென்றீர் இஃதொருதலையாலேதுணியாது பலதலையாலேதுணிவதொன்றன்றோ அதனையொருசிறிது முன்னும் பின்னுநோக்குமுறையானேக்குதிர், பாயிரமாக்குமாறுடம்பட்டுக்கோடற்கு, இழுக்கின்மையாயுமாறுடம்பட்டுக்கோடலும், இழுக்கின்மையாயுமாறுடம்பட்டுக்கோடற்கு, பாயிரமாக்குமாறுடம்பட்டுக்கோடலுமாயவிரண்டுந் தம்முளொன்றற்கொன்றேதுவாய் ஒன்றனையொன்றுபற்றுதலென்னுங் குற்றமாமாறு காண்க. இனி அஃதங்ஙனங்கோடுமேனும் அஃதஃதாமென்றற்கும் இஃதிஃதாமென்றற்கும் பிரமாணமென்னை? ஒன்றுங்காண்கிலம், அது நிற்க வாலாமை வாலாமையானெழியுமாறொப்ப போலி போலியானிகழுமாறுமொருசிறிது காட்டுதும் அஃதீது அறிஞரிழுக்கின்மையாய்தற்குடம்பட்டபின்னன்றே பாயிரமாக்கப்படுமாகலான் அவ்விழுக்கின்மையாய்வோர் அதனை யிறந்தகாலத்து நிகழ்த்தாது வருங்காலத்து நிகழ்த்தலான் அவ்வாறு கேட்பதனையே, வருங்காலம்பற்றி கேட்போனென்றோதலியையுமென்றீர், என்றோதியவிஃதெமக்கு நன்றேயாம். நுமதறிஞர் இழுக்கின்மையாய்ந்தொழியாது அஃதாய்தற்கு மாத்திரையேயுடம்பட்டுக்கோடலான் அஃதாயுமாறுவருவோர் எதி

ர்காலத்தாமன்றே அற்றேல் இந்நூலாசிரியர் ஆசிரியர் பனம்பாரனாரை நோக்கி இந்நூற்கு நீயிர் பாயிரமோதுகவென்றோதியருள அவ்வாசிரியர் நூலாசிரியரை நோக்கி அற்றேல், ஆசிரியர் அதங்கோடனாரும் அவரன்னார் பிறருமாய அவ்வறிஞர் இந்நூலிழுக்கின்மையாய்தற்குடம்பாடுடையாராயின் யாமஃதாக்குதுமென வுடம்பட்டோத அது கேட்டருளிய நூலாசிரியர் ஆசிரியர் அதங்கோடனார் முதலிய வறிஞர்பாற்போந்தருளி அவர் தம்மை யெதிர்முகப்படுத்து நோக்கியருளி அறிஞர்காள், யாமியற்றிய விந்நூற்குப் பாயிரமாக்கியீக எனபாங்கேட்டுக்கொண்ட ஆசிரியர் பனம்பாரனார் அறிஞராய நீயிர் இந்நூலிழுக்கின்மையாய்தற்குடம்பாடுகுவீராயின் யாமஃதாக்குது மென்றோதினர் ஆகலான் நீயிரிஃதிழுக்கின்மையாய்தற்குடம்பாடையாருகவென்றோதியருளக்கேட்டவறிஞர் அஃதேல் அவர்பாயிரமாக்கற்குடம் பாடுடையாராயின் யாமும் அஃதிழுக்கின்மையாய்தற்குடம் பாடுடையாமென்றிவ்வாறுடம்பட்டோதும் அவ்வறிஞருடம்பாட்டை நூலாசிரியரோத்தானுணர்ந்த ஆசிரியர் பனம் பாரனார் இந்நூற்குப்பாயிரமாமாக்கி முற்றியபின்னன்றே அறிஞரிந்நூலிழுக்கின்மையாயுங்காலம், ஆகலான் நும்மோத்து முறைபற்றிபாயிரமாக்குவோர் அறிஞர்க்கு யாமெமதெழுத்து முறையைக்காண்பிக்குதுமென நூலாசிரியரோதுமவ்வோத்தானுணர்ந்ததுணையேயல்லது அம்முறையை அவர் அவர்க்குக்காட்டியொழியாமையின் அறிஞரிழுக்கின்மைநோக்குமாறு நூலாசிரியர் காண்பிக்குமவ்வினை நிகழ்ச்சி வருங்காலமாமன்றே அற்றேல் அஃததங்கோட்டாசான் முதலிய வறிஞர்க்குக்காண்பிக்கப்படுமென்றுதல்அல்லது அதங்கோட்டாசாற்குக்காண்பிக்குதுமென்றுதல் இவ்வாறெதிர் காலம்பற்றியன்றே யாத்தோதல் வேண்டும் அங்ஙனமன்றி காண்பிப்பதனை, காட்டியென்றோதலிழுக்கினுமிழுக்கன்றே என்னை ஆண்டறிஞர் இழுக்கின்மையாய்தற்குடம்பட்டுக்கோடன் மாத்திரையல்லது அஃதாய்ந்தொழியகிற்றிலராகலானென்பது இதற்கு நீயிரோதும் பரிகாரமென்னை? இங்ஙனமாகலான் நீயிரெதிர்காலஞ் செல்காலமாதற்கமைதிதிறந்தெடுத்துக் காட்டுமாறுப்ப இனிச்செல்காலமெதிர்காலமாதற்கோருபாயமுநோக்குவீராயின் எல்லாம்வல்லநுமக்கு அதற்குரியதோருபாயமில்லாதொழி

யுமேகொல்லோ அதுகிடக்க, இனி நீயிர் அவையோரெனப்பன்மைவா சகத்தானேதினீர் அது பாயிரத்துளாசானென் றொருமைவாசகத் தானேதுதலிற் போலியேயாம். அது நிற்க, நீயிரோதியவாற்றான் ஆசிரியரதங்கோட்டனார் முதலிய நுமதறிஞர் இந்நூலிழுக்கின்மையா ய்த்தொழியாது அஃதியாம ய்குதுமென அஃதாய்தற்குடம்பாடுடை யராதன் மாத்திரையேகேட்டு ஆசிரியர் பனம் பாரனார் இப்பாயிரமா க்கினரென்பது பெறப்பட்டது படவே இப்பாயிரமாக்கியபின்னன்றே யவ்வறிஞர் இந்நூலிழுக்கின்மையாயப் பட்டதென்பதூஉமிதனாற் பெற்றும் அற்றேல் 60-1-கூற்றுள் "முந்துநூலெல்லாமுற்றக்கற்று ப்புலநிறைந்து முதிர்ந்தோரேயினும் வழான்மயங்கலியல்பாகலானும் இந்நூற் கண்ணுமிழுக்குளதோவெனக்கருதுமாகலானும் அது நீக் குதற்பொருட்டு இஃதின்னரிழுக்கின்மையாய்ந்தாரென்றோதல் வே ண்டுமென்றீர் என்றதனானே நூலாசிரியன் மாரெல்லாம் நுமதூ ழான் மயங்கலொருதலையாதல் பெறப்பட்டது. படவே அஃதிந்நூ லாசிரியர்க்கு மொக்குமென்பதூஉமிதனாற்பெற்றும் பெறவே இந்நூற் கண்ணுமிழுக்குளதென்பதே தேற்றம் இனி அஃதின்றேனும் அறி ஞர் அஃதின்றென்றோதல் இப்பாயிரமாக்கி முற்றியபின்னன்றே ஆக லான் அவ்வாறாக்கியபின்னர் அறிஞர், இவ்வெழுத்து முறையின்று, அரில்தபுதலின்று, தெரிதலின்று, மயங்காமரபின்று, என்றோதவும் படுமன்றே அங்ஙனமாகவும் முறைபடல், அதுபடாமை, அரில்தபல், அதுதபாமை, தெரிதல், தெரியாமை, மயங்காமரபு, மயங்குமரபு, என்னுமின்னோரன்ன விழுக்குண்மையின்மைகள் பற்றி ஐயப்பாடே யாம், இனி நூலாசிரியர்க்கு மிஃதொக்கும் அது நிற்க. அறிஞராய் ந்து இஃதெல்லாமிழுக்கு, அன்றியொருசாரிழுக்கென்றோதவும் படு மன்றே. அங்ஙனமாயின் பாயிரமாக்கியவாசிரியர் பனம் பாரனார் மு றைப்படல், அரில்தபல், மயங்காமரபு என்றித்தொடக்கத்தானிழுக் கின்மையெடுத்தோதற்கியைபென்னை? அவற்றை அவர்தாமேயாய்ந் தோதினரெனின் அங்ஙனமாய்ந்தோதுவார்க்கு அதுவேயமையும் அதன் மேலறிஞர் உடம்பாடு வேண்டுமென்றதெற்றுக்கு, இனி அஃ தங்ஙனங்கோடுமேனும் பாயிரமாக்கும்வார் அங்ஙனமிழுக்கின்மை யாய்ந்தொழிந்தகனை மறித்து நுமதறிஞர்பிறர் மிகைபடவிழுக்கின்

மையாய்வதெற்றுக்கு அல்லதூஉம், அதங்கோட்டாசாற்குக் காட்டியென்றிவ்வாறு வைத்துப் பாயிரமாக்குவோர் நுமதறிஞராய் வைகி அவ்விழுக்கின்மை காண்டற்குரிய வியல்பில்லாரே கொல்லோ? அல்லதூஉம் இங்ஙனம் பெயர் கிளந்தெடுத்துக்கொண்டு இன்னாற்குக் காண்பிக்கப்படுமெனப் பாயிரமாக்கிய பின்னர் அப்பெயர் கிளந்தோதப்பட்ட அவ்வறிஞர் தம்மினுமேம்பட்டாரோரறிஞர் ஆண்டுப்போந்துவைகின் அஃதவற்குக்காட்டாது இவற்கு மாத்திரையே காட்டுவார்கொல்லோ? அஃதேல் அஃதறிஞரென்பதனுளடங்குமெனின் அற்றேல் ஆண்டவர்பெயர்கிளந்தோதலிழுக்காதன்மேலுந் தலைமைப் பொருள் தலைமையில் பொருளுளடங்காமை முனிவர்வந்தார் அகத்தியனாரும் வந்தாரென்னுமித்தொடக்கத்தானுமறிக. அதுகிடக்க நீயிர் பாயிரமில்லது பனுவலன்றென்னு நூலியல்புள்ளவாறுணர்ந்து அஃதுளதாமாறுக்கி அது பனுவற்படுத்தற்பொருட்டு அதனோடொத்தவிலக்கணத்ததாய பாயிரமாக்கி இவ்வாறு பனுவற்படுத்துங்கால் நுமது நூல் கேட்டாரைக் கேட்போராக்குதற் பொருட்டு இழுக்கின்மையாயுமறிஞருடம்பாடின்றாயின் கேட்டோர்கேட்போராகாரெனக் கொண்டு அஃதாக்குதற்பொருட்டுமுதற்கட்பாயிரமாக்குவோருடம்பாடுளதாமாறு செய்து இங்ஙனமாக்குங்கால் யாமீண்டோதியவாற்றான் ஒன்றுக்கும் வழி அவற்றுளொன்றொழிந்து போதலின் அதுமயினட_மொப்பதொன்றுமென்றொழிக. இதற்கு நீயிர் யாதுசெய்குவீர் இருந்தவாற்றானிஃதறியாமையென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

244-1-கூறு இதனுள் நுமது பாயிரமோதற்குடம்படுங்காலமே அக்கேட்டற்கெல்லையாம் அங்ஙனமன்றி அரங்குடையர் நூலைக் கேட்டிழுக்கின்மையாய்ந் தொழிந்தபின்னர்ப் பாயிரமோதலுறுங்காலத்தை யெல்லையாக்கோடுமெனின் கேட்டோரென்றோதல் பொருந்தும் கேட்போரென்றோதல் பொருந்தாதெனின், அது பொருந்தாது, பொருந்துமெனின் அரங்குடையர் நூலொன்றேகேட்கற்பாலரல்லது பாயிரங்கேட்டலாகாமையின் கேட்டோரென்பது நூன்மாத்திரங்கேட்டோரையேயுணர்த்திப் பாயிரங்கேட்டோரை யுணர்த்தா

தாகலானும் அதுவுநூலவயவமேயாகலான் நூலொப்பப் பாயிரமும்
அரங்குடையாராற் கேட்டற்குரித்தாகலானுமென்றீர் இவை யெல்
லாம் வெறும் போலியுட்போலியாயினும் நீயிரீண்டுக்கூறுங்குழறுப
டையெல்லாம் யாம்நோக்குந்தோறு நோக்குந்தோறும் எமக்கு நும்
மேற்கழிபெருந்துன்புமீக்கூர்தலின் ஒருசிறிதாயு முறையானுய்க்கு
தும் (அஃதாமாறு) நீயிரீண்டுப் பாயிரமோதற்குடம்பட்டகாலமே
யெல்லையாக்கோடல் வேண்டுமென்றீர் அற்றேலதற்குப்பிரமாண
மென்னை? ஒன்றுங்காண்கிலம் நும்மனம்போயமுறையெல்லாம் பிர
மாணமாமெனின் அது நுந்துணையேயல்லது நும்மொழித்தொழிந்
தார்க்கெல்லாமேலாதென்க. இனிப்பிறருடம்பாடெமக்குவேண்
டா, யாமோதுவ பிரமாணமோபிறவோ எமக்குடம்பாடாகலான்
அது வேண்டுவார்வேண்டுக, வேண்டாதார் வேண்டற்க. அஃதத்து
ணையேயல்லது இழுக்கோதலெற்றுக்கெனின் நன்றே யோதினீர்,
நீயிரோதுமாறு நீயிரோதியவாறே பிறர்மாட்டு நிகழுமன்றே ஆக
லான் அஃதத்துணையேயல்லதுபிறிதன்றென்றொழியாது அதனையிழுக்
கோதலெற்றுக்கென்னுமறித்துணர்வு நும்பால் நிகழ்ந்தொழியாது
அஃதோதலானேதினுமென்பது, எம்மோத்து நும்மோத்தின் முன்
றோன்றுது பின்றோன்று மாறுபற்றியும் அஃதற்றேயாதல் தெற்றெ
னவறிக. அஃதேல் அது நுமக்கொக்குமாயினு நும் முன்னோரெம்
மன்னோராகலான் அஃதிழுக்கின்றாலெனின் அற்றன்று அது வேத
நூலுடையர் அஃதுள்ளவாறுணர்ந்துடையரெல்லார்க்கு முடம்பா
டென்பதூஉம் இஃதஃதன்றென்பதூஉம் மேற்காட்டி யொழிந்தா
மாகலான் அது கிடக்க.

இனி நீயிரிதன் மேற்பக்கத்தின் முதற்கூற்றுள் பாயிரமில்லது
பனுவலன்றே யென்றோது மதனானே பாயிரமில்லது நூலன்றென்
பது நுங்கருத்தாதல் பெறப்பட்டது படவே அஃதீண்டு நூன்மாத்
திரையே அரங்குடையாராற்கேட்கப்படுமல்லது பாயிரங்கேட்டல் பெ
றப்படாமையின் கேட்டாரென்பது நூன்மாத்திரங்கேட்டாரையே
யுணர்த்திப்பாயிரங்கேட்டாரையுணர்த்துமாறின்று பாயிரமும்நூலொ
ப்ப அரங்குடையாராற்.கேட்கற்பாற்றென்று என்பதனுள் பாயிரமு

நூலுந் தம் முள்வேறெனவும் அதனல் பாயிரமில்லதூ உம் பனுவலெ னவும் பெறப்பட்டதனேடு முரணி அது வெற்றுரைத்தாய் முற்றிய வாறு காண்க. விரிப்பிற்பெருகும் இவ்வாறே நுமதுரைக்கூற்றுக் கள்தோறு நிகழுமெ மதுரைக்கூற்றுக்க ளெண்ணிறந்தன அவை யெல்லாமாண்டாண்டுக் கிளந்தனவொழித் தொழிந்த னவுய்த்து ணர்ந்து கொள்க. நூன்மாத்திரங்கேட்டல் கூடுமென் றிவ்வாறு அந் நூற்பெயர் வேறுபிரித்தோதிப் பாயிரங்கேட்டல் கூடாதெனவும் நூல்கேட்டாரையுணர்த்திபென அப்பெயர்வேறு பிரித்தோதிப், பின் னர்ப்பாயிரங் கேட்டாரெனவுமோதுதலின் ஈண்டுப்பாயிரமொழித் தொழிந்தவே நூலாமென்பதூ உம் ஆண்டுப்பாயிரமில்லது பனுவ லன்று அதனல் பாயிரமொழித்தொழிந்தன பனுவலன்மையின பாயி ரமுள்ளிட்டு நிற்குமவையெல்லா நூலெனப்படுமென்பதூ உந்தம்முள் முரணுமாறு காண்க. இன்னுமிவ்வறு கூற்றுப் பொருளெல்லாஞ் சிறிதோத வல்லர் வாயோதியுணர்ந்து கொள்க இருந்த வாற்றுனிது மேற்கோண் மாறுபடுதலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமா றறிக.

244-2. கூறு இதனுள் பாயிரமோதிமுற்றியபின்னர் அதனைய ரங்குடையர் கேட்டபிற்றைஞான்று அவ்வெல்லையாகாது, எண்பொ ருளுங்காட்டலென்பது பாயிரமோதலுறுதற்கு முன்கொள்ளப்படு மாணையாகலா னென்றீர், இதுபோலியாதல் மேலோதினுங்கடைபிடி க்க அதுநிற்க. பாயிரமோதலுறுதற்கு முன்கொள்ளப்படுமாணையென் பதனுள் நிகழும் வினையெல்லா மொருவினைமுதல்வினையாதல் பெறப் படுதலின் அதனல் நுங்கருத்து வேறுசெயல் வேறுமாறுெப்ப அப் பொருளும் வேறுதல் கூறுதே யினிது விளங்கும், அதுநிற்க. இன்னு மிது மேற் பாயிரமாக்குவோர் நூலிழுக்காய் வோரென்னு மிருவரு டம்பாடுந் தம்முள் மாறிமாறி யொன்றற்கொன்றேது என்பதனேடு முரணுமாறுங்காண்க. இனி கொள்ளப்படு மாணை யென்பது போலி யாதல் நும்வாக்கிய மோதவல்லர் பாற்கற்றுப்புலநிரம்புக. இருந்தவா ற்றுனிது பொருளின்மை யென்னுந்தோல்வித்தானத்தின் பாற்படு மாறறிக.

3. கூறு இதனுள் நுமது கேட்போர் பாயிரமோதாமைக் கேது அதனையாய்தற்கு அவரறிவு மானமாகாமை யாமென்றீர் அதனை முன்னர்த்தந்து கண்டித்தொழிக்குதும் அது கிடக்க நுமதிம் மறுதலைக்கடா மாற்றமாத்திரையேயுணர்ந்தீரல்லது இதனு னிகழ்வன யாதுமறியகில்லீர். கேட்போர் பாயிரமோதாமைக்குக் காரணமோதினீர் அவ்வாறே பாயிரமோதுவோர் கேளாமைக்கு காரணமோதவறியகில்லீர் அறிந்தீராயின் இத்துணை யினமையாது இன்னும்மிகப்பெரிதும் புலம்புவீரன்றே அதுகிடக்க நுங்கேட்போரொருவரல்லர் பல்லோராகலானும் அதனானஃதெல்லோருமாக்கல் வேண்டாவாகலானும் அதனான் அஃதவர்தம்முளொருவராக்கல் செய்ய அவரொழித் தொழிந்தாருணர்வு அதனையாய்ந் தளத்தற்கு மானமாதலமையு மாகலானும் அதனனது கேட்டற்குப் பிறர் வேண்டாவாகலானும் அதனான் அஃதனவத்தா தோஷமாகாதாகலானும் அன்னபிறவாற்றானும் அது போலியாதலறிக இருந்தவாற்றா னிஃதறியாமை யென்னுந்தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக. இன்னு மிவ்வாறே நீயிர் ஆண்டாண்டென்னை? என்னையென்றெடுத்தோது நுமது மறுதலைக்கடா மாற்றமெல்லாம் ஆசிரியரவாதல் யாது மன்மையறிக அதுநிற்க.

245-1. கூறு இதனுள் கேட்போரென்பது அரங்கின்கட்கேட்போரேயாம் இனி அஃதங்ஙனமன்றெனின் யாமுன்னோது மேதுக்களான் அஃதிழுக்காமென்றீர் அவ்வேதுக்களெல்லாம் போலியாதல் முறையானே முன்னர்க்காட்டுமாற்றாற் காட்டித் தேற்றுமாற்றாற் றேற்றுதும். அதுநிற்க. மேற்பகத்திறுதிக் கூற்றுள் நீயிரதுகாறுமோதியவாறு பற்றிப்போந்த பொருளாய கேட்போர் பாடங்கேட்போரென நுமது முனிவருரைத்தல் பொருந்தாமைக்கு ஆக்கியோனெனவும் கேட்போனெனவும் வரும் இறப்பெதிர்வுபற்றி இயைபுகாட்டிக் கேட்போரென எதிர்காலம்பற்றி யோதலிழுக்கின்மையின் நுமது கேட்போரென்பது நுமது நூல் கற்போரன்மை பெறுவித்தொழிந்தனிர் அங்ஙனமொழிந்து போந்த நீயிர் மறித்ததனையே ஈண்டுப் புனருத்திபடுமாறெடுத்தோதிய தெற்றுக்கு அஃதன்று அஃதியாமெடுத்துக்கொண்ட பொருளாகவைத்து மேற்சாதித்தனம் சாதித்ததனை எமதுமறுதலைக் கடாமுகத்தாற் சாதிப்பதூஉ மெமக்குரியதோர்

முறையாகலானும் அதனான் அது விளங்கவைத்தல் உதாரணத்ததா
தலென்னுமழகின் பாற்படுமாகலானும் அதனாற் கூறியது கூறலாகா
துபோலுமெனின் அற்றன்று விளங்கவைத்தல் முதலிய நுமது மறு
தலைக்கடா மாற்றமெல்லாம் பற்றியுரைத்து முற்றிய முற்றே நீயிரித்
துணையுமென் றெடுத்துக்கொண்டு முடித்துவைத்த முடிபாகலானும்
அதுவே தொல்லாசிரியன்மாரெல்லார்க்கு முடம்பாடென்பது மேற்கா
ட்டினமாகலானும் அன்னபிறவாற்றானுமென்பது, அஃதேல்முடிந்தது
முடித்தலென்றேருத்தி யுண்மையின் அஃததுபற்றி யெழுந்ததென்
றாற்படுமிழுக் கென்னையெனின் அற்றன்று அதுவும் யாமேலோது
மம் முறையின் பாற்படுமல்லது வேறன்மையானென்பது. இன்னு
மஃதெவற்றானும் யாது மேலாதென்பது இதனானுய்த்துணர்ந்து
கொள்க. அஃதன்று ஒருசாரேதுமேலோதாதொழிந்தனம் அதுபற்றி
அவற்றை மீண்டொழிபாகவெடுத்துக்கொண்டோதினம் ஒழிபோத்
து முன்மைபின்னனிற்படு மிழுக்கென்னையெனின் நீயிரிஃதியாதும
றியாதோதினீர் அது நூன் முறையாவதல்லது உரை முறையாவதன்
மையானென்பது இனி அஃதங்ஙனங்கோடுமேனும் ஈண்டு நுமதொ
ழிபோத்துப்பொருள் ஒழிந்தபொருளோ டொருங்குளதாகாதொழி
ந்துளதாதற்குரிய தேரியைபென்னை? ஒன்றுங் காண்கிலமாகலானும்
அல்லதூஉமது தொல்லாசிரியருரை முறையாதல் காணப்படாமை
யானும் வேறுவிடுக்கு மாறின்மையானும் அது வெறும் போலியா
தலறிக, இனி அது வழிமொழியென்பதற்கு மிஃதொக்குமென்பது
இன்னுமிவ்வாறே நும்முறைவைப்பு சொல்லிழுக்கு முதலிய வெ
ண்ணிலிழுக்குப்படும் அவையெல்லாமிவ்வாறேயோர்ந்துணர்ந்து கொள்க,
இருந்தவாற்றானிது மேற்கோள் கெடுதலென்னுந் தோல்வித்தானத்
தின் பாற்படு மாறறி.

இனி பாண்டியனவைத்துக் காட்டி யென்பது மன்றென்று
விரித்தலாய் முடியுமென்றீர் அவ்வாறு முடிதல் நுமக்கு மாத்திரை
யேயோ எமக்குமேயோ எமக்கஃதன்றென்பது எமதாசிரிய ருபதே
சித்தருளியவாறு பற்றி யாமேலோது மாற்றானுணர்க. இனியது நு
மக்காயின் நுந்தலைவரையே வகுத்ததொரு நிலைவகுப்பேயாமென்க

அதுகிடக்க இனி மீண்டுக்குற்றமெல்லா முற்றவுணர்ந்தோதுவார் போலெழுந்து அது மற்றொன்று விரித்தலாமென்றீர். ஈண்டு நும து மற்றொன்றுவிரித்தலாவது யாதென்றுபுமுறைபானுய்து மாயின் அஃதெண்பொருளே மீண்டுவிரித்தற்குரியவாம் அஃதொழித்தொ ழிந்த நூலென்று கொள்ளும் புலவன் ஈண்டுவிரித்தற்குரிய னல்ல னென்பதேபோலும் அற்றேல் நும்மை மீண்டொன்று வினவுதும் (அதுவே முன்வருமாறு) நும்முறைபற்றி நூலாசிரியர் எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடல் நுமது தலைச் சங்கப்புலவரொடு பயி றல்முதலியவெல்லாம் நுமதெண்வகையின் பாற்பட்டவா! அல்லவா! பட்டவென்பது நுமக்கேலாமையின் அவையே மீண்டு மிகைபடக் கூறல மெனப்பட்டு அது நுமக்கே யிழுக்காய் முடியுமாறு காண்க, அஃதன்று அந்நூலாசிரிய னியல்பெடுத்துக்காட்ட லிழுக்கின்றலெ னின் ஆக்கியோன் பெயரென்பதொப்ப ஆக்கியோன் கற்பென்பது மியைத்துவைத்து ஒன்பதுங்காட்டல் பாயிரத்தியல்பாதல் வேண்டும் அவ்வாறோதாமையானும் இவ்வாறோதுதலானும் ஆசிரியர்க் கஃதின் றென்பது மேலோதின முன்னருமோது துமாகலானும் அன்னபிற வாற்றனு மதுபோலியாதலறிக. ஆயவாற்று னிஃதாக மப்பிரமாணத் தான் மறுக்கப்பட்டுக்கொண்டு வருவதென்னும் போலியேதுவாத லறிக

இனிக் குன்றக்கூறலியல்பெல்லா மோதுமாறெழுந்து கேட்போர் யாப்புகட்கு அவரோத்தியையுமாயின் அவற்றையோதாமை குன் றக்கூறலாமென்றீர். அவ்வாறோதாதோதினர் இவ்வாறோதுமீயிரேய ல்ல தெமதாசிரிய ரன்னரல்லரென்பது மேலோதினுங் கடைப்பிடிக்க. அஃதன்று அதுபிறிதொன்றோது முகத்தாற் பெறப்பெட்டதென் றோதினர் அதனுன் யா நேரோத்தின்மைபற்றி யோதினமாலெனின் அற்றேல் 185-1-சூற்றுள் ஐந்திரநிறைந்தவெனவே இந்திரன்கோள் மேற்கோடலானும் அவ்வாறே சூத்திரத்துள் அவன்கோளே தன் கோளாக்கொண் டோதுதலானும்.இந்நூலுடையர்க்கு ஐந்திரமுப தேசித்த வாசிரியரும் அகத்தியனுரென்பது பெறப்பட்டது என்றீர் என்னுமிவ்வோத்து நேரோத்தா அன்றிஅதுபிறிதொன்றோது முகத் தாற்பெறுமோத்தா நேர் நேரின்மையறியீர் நுமக்கேதிலார் குற்றம்

போல் நுங்குற்றங் காண்டலரிதென்ப தாசிரியர் பரிமேலழகனார் காண்டலருமைபற்றி காண்கிற்பினென்றா ரென்பதனானுணர்ந் தொழிந்தாமென்பது ஆயவாற்றானிது சார்பில்லதென்னு மேதுப்போலியாதலறிக.

இனி அவரோதியவாறே சிறப்பில்லவற்றைக்கிளந்தோதிச் சிறப்புள்ளவற்றை அவ்வாறோதாமை அவ்வோத்துடைய ருளத்திற்குமியையாதென்றீர் அஃதியையுமாறெல்லாமேலுணர்த்திப்போந்தாங்கடைப்பிடிக்க இன்னுமஃதவ் வியல்புணர்ந்தார்பாற்கேட்டுணர்ந்து கொள்க. இனி அஃதங்ஙனமோதிய நீயிர் ஆக்கியோன் பெயரேயன்றி ஆக்குவித்தோன் பெயர் முதலிய வோதலும் பாயிரத்தோடொத்த வியல்பாமென்றீர் தம்முளொத்துச்சிறந்த இருவேறு பாகுபாட்டினுள் ஒருபாகுபாடு மாத்திரையேயோதி அஃதொழித்தொழிந்த பாகுபாட்டினைக்குன்றக்கூறலாமாறோதாதொழிதல் நுங்கருத்துக்கே இசைவதெனவமைந்தொழிந்தனிர். எல்லா வியல்பு முணர்ந்தோது நமக்கு இஃதமைவதாயின் ஓரியல்புமுணர்ந்தொழியாதவெமக்கு அமையுமென்ப தோதாதேயினிது விளங்கும்.

இற்றிற்றென வறியுமறிவறைபோய நுங்குழறு பாடெல்லாம் வெறும் போலியாதலறிக. அது கிடக்க, இனி ஆசிரியர் நச்சினர்க்கினியனாரோதியவற்றை யெடுத்துக்கொண்டு கரந்துநிரப்புநீயிர் அஃதொப்ப எமதாசிரியர் திருவோத்துக்களையுங் கைக்கொண்டுநிரப்புமாறு தலைப்பட்டனிர் அத்துணையினுமமையாது அது பிறரறியாது கரத்தற்பொருட்டு சிறப்பில வென்னாது ஒத்தவிலக்கண மெனக்குழறினீர் அவை அவ்வாறொத்தவிலக்கணமாயின் ஆக்குவித்தோன் பெயர் முதலிய வாய நுமதவ்வொத்தவற்றையோதி ஏனை ஆக்கியோன் பெயர்முதலிய வோதாதொழியினும் அவையின்றியமையாச் சிறப்புடையவாதல் வேண்டுமன்றே அவ்வாறாதல் நும்முளத்திற்கு மியையாமையின் அது வெறும்போலியாதலறிக. அஃதன்று ஒப்பென்பதொருபுடையொப்பாகலான் அவையின்றியுமமையும் போலுமெனின் அற்றன்று இயலொத்தன தம்முட்சிறப்பு மொத்தனவாகலான் இன்றியமையுமாறி யாங்ஙனமென்றொழிக, பொய்யோதினும்

பொருந்தவேதல் வேண்டுமென்னும் பழமொழி யாது நீயிரறியகில்லீர் யாது செய்குவீர் அல்லதூஉம் பொருந்தாமை பொருந்தலும் பொருந்தல் பொருந்தாமையுமாய்ப்பொருந்தற்குப் பொருந்தியோர் நீயிரென்பது யாமேற்கண்டு காட்டியொழிதலின் அவ்வியல்புடையிரென்றேதும் யாமே அவ்வியல் புடையமென்றொழிக. ஆயவற்றானிது சார்புண்மை யுணரப்படாததென்னும் போலியேது வாதலறிக.

இனி ஆக்கியோன் பெயர் முதலிய நான்கும் எவ்வாற்றாற் பெறப்படுமாயினும் அவை பாயிரத்துளோதலின்றியமையாதென்பது மேலோதிப்போந்தாமென்றீர் அவை அதனுளோதலின்றியுமமையுமென்றீண்டு நமதுமறுதலைக்கடாவெடுத்துக்கொண்டுடையர்யார். யாரையுங்கண்டிலம் அது நமதுளத்திற்கு மாத்திரையேயியைந்தோதினீர் போலும். இன்னு மின்னோரன்ன பிறவுங் கூறலின்றியமைபாதென்பதூஉம் பிறவும்யாதுமேலா தென்பதோர்ந்துணர்ந்துகொள்க. ஆயவற்றானிது பக்கமிரண்டு மெய்தப்பெறுததென்னும் போலியேது வாதலறிக.

இனி அஃதின்னகாலமென்னின் அவர்கேட்டாரெனவும் இன்னர்களனெனின் அது பலவேறு களங்களுள் இஃதிக்களமெனவுமுணர்தலாகாமையின் "காலங்களத்துளடங்கலின் அதுவேறோதவேண்டா" வென்பது பொருந்தாதென்றீர், நீயிரெவருமெளிதினுணரப்படுமுரைவாக்கியங்களுண்மை யாது முணரமாட்டாததொருபெருமடவீரென்பது மேற்காட்டினும், அது கிடக்க, திருத்தொண்டர் புராணமாக்கி யேற்றியது அநபாயவரசன் காலத்து அவனரங்கின் கண்ணெனின் எனவே அக்காலத்து வைகியபுலவரிவரென்பதூஉம் ஒதாதுணரப்படும் அஃதொப்ப இன்னன் காலத்து இன்னனரங்கின்கண் இஃதாக்கி யேற்றியதெனவே அக்காலத்து வைகிய புலவரிவரிவரென்பதூம் அவருளாண்டு வைகற்குரியபுலரிவரென்பதூஉம் அவற்றுளடங்கிக்கிடத்தலானும் அதனன் அவற்றையெடுத்தோதாதோதியதூஉமா மாகலானும் அன்னபிறவாற்றானும் இஃதவற்றின்வேறோதவேண்டா என்பது தேற்றியருளுவார் காலங்களத்துளடங்குதலின்

வேறுகூறவேண்டாவெனவுபதேசித்தருளினரென்பது இப்பொருள் காணமாட்டாது நீயிர் குழறுவவெல்லாம் வெறுங்குழறுபடையாதல் அப்பொருளுணர்ந்தார் யார்க்குமினிது விளங்கும் இன்னு நீயிர் ஈண்டோதியவெல்லாம் வெறும்போலியாதல் மேலோதினுங்கடைபிடிக்க. அது கிடக்க ஈண்டாசங்கித்தற்குரியவும் அவற்றையேன்றுணர்தற் குரியவும் பலவேறுளவாகவும் அவையாது மறியுமறிவறைபோயினீர் ஆயவாற்றானிது மறுதலைப்பொருள் சாதிப்பதென்னும் போலியேது வாதலறிக.

இனி ஆசிரியன் மாரனைவரானு முடம்படப்படாத காலகளங்களுள் அவனைவரானு முடம்படப்பட்ட கேட்டோசடங்கு மென்றோதலுமேலாதென்றீர் நும்முந்து நூல் பலவாதல் தலைச்சங்கப்புலவரொடு பயிறன் முதலிய நும்பொருளொருசார வாசிரியரனை வரானு முடம்படப்பட்டவா? படாதவன்றே அவ்வாறாகவும் அவை அவற்றுளடங்குமென நீயிரிடுக்குறப் புகுத்தி இடர்ப்படட்க்கிக்கோடலுமாமென மேலோதியொழிந்து பிறர் பாலஃதோதல் நுமது மேற்கோண் மலைவாவன்றே? நீயிர் கறங்கோலைபொப்பச் சுழன்று யாண்டுப்புக்கொளிப்பினு மப்புக்குழிப்புக்கு நும்மைத்தப்பாதொறுப்ப தெமதாசிரியாணை யென்பதறியகில்லீர், இனி அஃதோதுதலுமாமென்பது அஃதோதியுணர்ந்தார் வாய்க்கேட்டுணர்ந்து கொள்க. ஆயவாற்றானிது பரனுக்குடம்பாடில்லதென்னும் போலியேது வாதலறிக.

இனி ஆக்கியோன் பெயர் முதலிய வெட்டும் நூல்செய்தார் காலத்தும் நூல் வழங்குங்காலத்து மொப்பநிகழ்வவென மேலோதியார்தாமே, கேட்போர் பெயரும் யாப்பும் அத்தன்மையவாகவும் ஆக்கியோன் பெயர் முதலிப போல நூல் வழங்குங்காலத்து நிகழ்வவல்ல ஆகலான் அவை அவற்றோடொருங்கு வைத்தெண்ணல் பொருந்தாதெனக்கூறினர் அது நுமது மாறுகொளக்கூறலாமென்றீர், நுமக்குச்செம்மை கொடுமையும் கொடுமை செம்மையுமாதலியல்பென்பது நும்மோத்துள் யாண்டுமுணரப்படும், அஃதியாமோத வேண்டா, ஆகலான் நீயிரஃதோதலெமக்குயாதும் வியப்பன்றென்க.

அது கிடக்க, அத்தன்மைய, நிகழ்வதன்று என்னுமிம்முரண்மொழிகளே நும்பொருண் முரணுமாறு முழக்கும் அஃதன்று அவை ஆக்கியோன் பெயர் முதலியவொப்ப நூல் வழங்குங்காலத்து நிகழ்வதன் றென்றீராலெனின் ஆண்டு அன்றென்றது நுமது கேட்போர் பெயர், யாப்பென்னு மிண்டனையு மொருங்கு வைத்தெண்ணிக்கொண்டன்று அல்லதூஉமாண்டு நுமது கேட்போரையுமொருங்குவைத்தெண்ணிக் கொண்டு அவ்வெட்டும் நூல் செய்தார் காலத்தும் நூல் வழங்குங்காலத்து மொப்பநிகழ்வ என்னுமையானும் அதனுன் அஃதாக்கியோன் பெயர் முதலிய வொப்ப நூல் வழங்குங் காலத்து நிகழ்வதன்மையானும் அன்னபிறவாற்றானுமதனை அவற்றோடொருங்குவைத்தெண்ணல் பொருந்தாதென்பது. இனி நுமது கேட்போர்பெயரும் யாப்பும் நிகழ்வதன்றென்னும் நுமது பன்மையொருமைகள் நுமது மாறுகொளக் கூறலாகாதவாறு நீயிரீண்டோதுமோத்தானே ஆண்டோதுமோத்துமன்னதேயாமென்பது கேட்போர் பெயரும் யாப்பும் நிகழ்வதன்றென்னும் நும்போலியோத்தே அஃதஃதன்றென்பதற்கமையுஞ் சான்றாதலறிக. அதுகிடக்க இனி நுமது கேட்போர் பெபரும் யாப்பும் ஆக்கியோன் பெயர் முதலிய வொப்பநூல்வழங்குங்காலத்தொப் பநிகழ்வ வல்ல என்றிவ்வாறு நுமக்கெமதாசிரியர் யாண்டுபதேசித்தருளினர். ஆகலானிதனை யாமாய்தல் நுஞ்சொல்லிழுக்கொப்ப மணற்சோற்றுட்கல்லாய்தல்போலுமாகலான் அஃதுய்த்துணர்ந்து கொள். ஆபவற்றானிது விபக்கத்துஞ்சேறலுடைத்தென்னும் போலியேயது வாதலறிக

இனி அதிகாரிகளைப்பாயிரத்துளெடுத்தோதுதலான் ஈண்டோதவேண்டாவென்றீர். ஈண்டும் வேண்டுமென்பது மேற்காட்டினுங் கடைபிடிக்க. அல்லதூஉம் நீயிர் பொதுச்சிறப்பென்பவற்றியல்பு பொதுவகையானுணர்ந்தமாத்திரையானிவ்வாறு குழறினீர் சிறப்பு வகையானுணர்ந்தீராயின் இவ்வாறு குழறியொழியீரென்க ஆயவற்றானிது சபக்கவிபக்கமென்னுமிரண்டு மெய்தப்பெறுதலென்னும் போலியேயதுவாதலறிக.

இனி மொழிபெயர்ப்பொழித்தொழிந்த மூன்றும் முதனூற்கு முண்மையின் அவை வழியுளடங்குமெனலேலாதென்றீர் நீயிரீண்

டோதியவாறே அவை அதனுளடங்குமென்றோதினர் யாவர் யாதா னுங்கனவுகண்டோதினீர் கொல்லோ அது கிடக்க இனி அவை அத னுளடங்குமென்னினுமாண்டிழுக்கென்னை முதனூற்கு மூன்று முண் மையின் அவைவழியுளடங்காவென்பதற்கு யாதும் பிரமாணமின்மை யின் அடங்குதலும் பொருந்துமாறறிந் தடங்கிக்கொள்க ஆயவாற் றானிது செயற்கைபற்றிய வியாத்தியுடைத்தென்னும் போலியேது வாதலறிக.

இனி ஈவை னியல்புகளுள் இயைபுமடங்குமாகலான் அதனை யாப்பென்றோதல் பயனின்றுமென்றீர் எமதியாப்பு நுமதியைபுப் பொருட்டன்றென்பது மேலினிது விளக்கியொழிந்தாம் அதனானஃ தவற்றுளடங்காதென்பதூஉம் அதனான் அதனை அஃதென்றோதலே பெரும்பயனென்பதூஉம் அன்னபிறவும் யாதுஞ்சிறுபயனுமறியா த நுமக்கறியலாகாதென்க, ஆயவாற்றானிது சாத்தியத்தோடு வியாத் தியுண்மையறியப்படாததென்னும் போலியேதுவாதலறிக.

இனி வடநூலுடம்பாட்டைத்தமிழ்நூற்கு மேற்கோளாக்கோ டல் பொருந்தாது அதனுள் நூலாக்கியோன் பாயிரமாக்கற்குமுரி யன். இஃதஃதன்றி தான்றற்புகழ்தல் தகுதியன்றென்னு மியல்பு டைத்தாகலானென்றீர். ஈண்டுக்கூறுதலுமமையுமென்னும் நுமதும் மைப்பொருளென்னை கொல்லோ. தம்பெருமையறியாததலைவனென் பதொப்ப நும்மொழிப்பொருளறியாத இத்தலைமைவாய்ந்த நீயிரு மொருதலைவர்தாமென்றொழிக. நுமதும்மைப்பொருள் நுமதும்மை மொழியோதுவார் மாட்டுக்கேட்பின் இரண்டுந் தமுளொப்பவுள வாதலுணரப்படும், அது கிடக்க, நுமக்குவடநூலுடம்பாட்டைத் தமிழ்நூற்கு மேற்கோளாக்காட்டினார்யாவர். எமதாசிரியர் அவ்வாறி யாதுங்காட்டியருளகிற்றிலர் அது மேற்கோளியல்புள்ளவாறுணர்ந் துடையர்க்கினிது விளங்கும் இனி ஈண்டு நீயிர் நூல்கொளுமென் னுமின்னோரன்ன வற்றிழுக்கெல்லாம் விரிப்பிற்பெருகும் ஆகலி னவையெல்லாமோர்ந்துணர்ந்து கொள்க அது நிற்க தான்றற்புகழ் தறகுதியன்றென்னுநுமதிக் கோளுடைத்து அத்தமிழ்நூலென்றீர் அருநெறியமறைவல்ல முனி ஒரு நெறியமனம் வைத்துணர் ஞான

சம்பந்தன்சொன்ன பெருநெறியதமிழென்னுமித்தொடக்கத்தின் மூலேயின் மூலேயுமறியகில்லீர் அத்தாற்பரியமிஃதென்றறிதற்கு நீயிர்யாவர் ஆபவாற்ருனிது மறுதலைப்பொருள் சாதிப்பதாய பிறிதோரே துவையுடன் கொண்டுவருதல் என்னும் போலியேது வாதலறிக

இனித்தமிழ்நூல்மாகாவிபாய நும்மொத்தவடநூல்மாகாவியாயகாளிநேசன் கற்ருர் கேட்டென்பதனுல் வடநூலாரும் அரங்கின்கட் கேட்டாரைபோதலே எதிர் மறுக்காரென்றீர் இஃதிழுக்காதல் முனனர்க்காட்டுதும் அது நிற்க, இதன் மேலடுக்கநின்றநும் போலியோத்துள் தமிழ்நூற்கு, வடநூல் மேற்கோள் காட்டல் பொருந்தாதென நீயிரோதியவாய்குவிங்தொழியாதே ஈண்டு வடநூலார் எதிர் மறுக்காரென அவ்வடநூற்கோள்காட்டி இஃதொருபெரும்பித்துப் பிதற்று நும்மை எமதாளுடைபவரசர் பெருமானுபதேசித்தருளியவாறே பித்தனீர் பேயனீர் பேதையிர் நாயனீரென்போமோ, அது கிடக்க, ஆண்டுக் கேட்டென்பதன்தாற்பரியமதுவன்று வேறென்பதறியுமுறையின்வைத்தறிக. இவ்வாருேதிய நீயிர் ஈண்டுரைத்தவெல்லாம் வேறும் போலியாதல் அறிக.

ஓதியவாற்ருல் கேட்போரென்பது பாடங்கேட்போரேயாம் கேட்டவை நினைத்தலென் ருேதுலான், சுருதிபோலுமென்னு மநுமானம்பற்றியு மஃதற்றே யாதல்தெற்றெனவறிக. அறியவே கேட்டற்கருவியாய சுரோத்திரத்தையின்றியமைந்து நிகழாவியல்புடைமையின், முதல்நூல் சுருதியெனப்படும் அதனுல் கவுணியன்வழிவந்தாரும் கவுணியரென வழங்கப்படுமாருெப்ப நூலெல்லாஞ் சுருதிவழித்தாய்த் தோன்றலின் அதுபற்றி அவையெல்லாஞ் சுருதியெனவழங்கப்படும் அதனுனச்சுருதி கேட்கப்படுமாறெவ்வாறு அவ்வாறே அந்நூலெல்லாங் கேட்கப்படுவவேயாம் அதனுனவற்றைக் கேட்டல் பாடங்கேட்டலும் அக்கேட்டல் கற்றலென்பன, வொருபொருண்மொழி யாதலும் பசுமரத்தாணிபோல் நாட்டப்பட்டவாருயிற்று, இனியிவ்வாறே யாப்பென்பது உயிரறியவல்லுஞ் செவ்வியேயாம், எல்லாநூலுள்ளுமெழுவாய்க்கண் இப்பொருள் கோடற்குரிமைபுடையர்க் கேயீக, அல்லர்க்கீயற்க அஃதிழுக்காகலானென் ருேதப்படுதலான், பொருட்

பொருளேற்றற் குரிமை யுடைமைபோலு மென்னு மநுமானப்பற் றியு மஃதற்றேயாதல் தெற்றெனவறிக. அறியவே இவ்விவ்வியல்பு டையர்க்கே பொருட் பொருளீதல் தக்கது அவரொழித்தொழிந் தார்க்கீதல் தகாதென்றோதுமாறே நூல் இவையிவையாய்ந்துடை யர்க்கே இந்நூற்பொருளீதல் நன்று அவரொழித்தொழிந்தார்க்கீதல் தீதென்றோதப்படுதலான் ஒருதலையான் அப்பெற்றித்தானின்றியமை யாச் சிறப்பிற்றாய் வேண்டப்படுமஃதச் சிறப்புப் பாயிரத்துளொரு தலையானோதற்பாற் றென்பது வச்சிரக்கவசபோல் நாட்டப்பட்டவா றாயிற்று. இஃதிவ்வா றேனையவற்றினு மேற்குமாறுவைத் தோதிக் கண்டுகொள்க இன்னுமிவற்றியல்பெல்லாங்கடாவிடைமுகத்தான்விள ங்குமாறு விரித்தெடுத்துக்கொண்டு மெய்கண்டபாடியம்உபோற்காதப் பகுதியு ளோதினுமாண்டுக்காண்க ஈண்டு யாப்புச்செவ்வி நியதி வரை யறையென்பன ஒருபொருள் மொழிகள் பிறவுமன்ன.

157-2-கூறு இதனுள் நூலியல்பு நூலுளடங்குமல்லது பாயிரத் துளடங்க விழுக்காமென்றீர் அஃதஃதன்று என்னை நூனுதல்பொரு ளைத் தன்னகத்தடக்கி யென்றோதுதலானும் ஆசிரியர் நக்கீரனார் பரு ப்பொருட்டாய பாயிரங்கேட்டார்க்கு நுண்பொருட்டாயநூலி னிது விளங்குமென்றோதுதலானும் நீயிர் அதனை யீண்டெழுவாய்க்கணெ டுத்துக்காட்டி யோதியதனை மறித்தறியு மறிவின்றி அது பாயிரத் துளடங்காதென்றீர், நூலாருந் ததிமுறையாவது இஃதென்பதியா துமறியகில்லீர் அல்லதூஉங் கேளாதார்க்கி னிதுவிளங்காது, கேட் டார்க்கினிது விளங்குமென எதிர்மறைமுகத்தானு முடம்பாட்டுமு கத்தானு மோதுமாற்றாற் பருப்பொருள் நுண்பொரு ளிரண்டுந் தம்மு ளொற்றுமைப்படுமாறு வைத்தோதியவாறு முணரகில்லீர். அதுநிற்க. ஆண்டுப்பருப்பொருட்டு நுண்பொருட்டென வைத்தோ துமலைவதாமென்னை, பருப்பொருட்டு வேறு நுண்பொருட்டு வேறெ னின் அவை மேருவும் அணுவுமொத்து தம்முள் யாது மியைபின் மையின் அல்வாறு தம்மு ளியையபிலவாய விருவேறுபொருள்கள் ஒரு ங்கியைங்கொரு நூலுட்படுத லேலாமையறிக. அஃதேல், இதுதமி ழை நுதலிற்றென்ப தொப்பன, பருப்பொருட் டாகலானும் இவ் வியல்பிற்று நூலென்ப தொப்பன, நுண்பொருட்டாகலானும்

மேலோதும் பொருளிரண்டு மவையாகலானு மஃதேலாமை சாலாதெனின் அற்றேல் நூலிவ்வியல்பிற்றென்பதூ உம் இந்நூலிதனை நுதலிற்றென்பதூஉந் தம்முள் வேறா? ஒன்றா? வேறாயின் தம்முளியைபின்றி வேறுவேறாய இருவேறு பொருள்கள் இருதலைப்படா தொருதலைப்படலேலாமை மேலோதினுமென்பது இனி யொன்றாயின் அதுபற்றி யாதுமாசங்கை யின்மையுமறிக இங்ஙனமாகலான் நமக்குப் பருப்பொருளிது நுண்பொருளிஃதென் னுமவ்வேற்றுமையுணர்ச்சியாதுமின்மையானும் எமதாசிரியருபதேசித்தருளிய வாறிஃதென்பதியாதுமறியாமையானும், பொருளியல்பெல்லாமுணர்ந்துணர்ந்தவாறேயுணர்த்தியருளுமறிவாற்றலெல்லாமொருங்குடையவெமதாசிரியருபதேசித்தருளியவியல்புள்ளவாறுணருமுணர்ச்சிவாயில்வலியின்றியிவ்வாறிழுக்காமென்றீர் இன்னுநீயிரிவ்வியல் பிற்று நூலென்பது நுண்பொருட்டன்றென்பதூஉம் பிறிதுபிறிதாமென்தூஉம் மெய்கண்டபாடியத்துட்காட்டினுமாண்டுக்காண்க. அது நிற்க இனி நீயிர் ஒருமைக்கட்டான் கற்றகல்வியொருவற்கெழுமையுமேமாப்புடைத்து” என்பது பற்றி இந்நூலாசிரியர் ஆசிரியர் தண்டீசப்பெருமான் முதலியோரொப்பத்தம்மைப் பெற்றார் தமக்கு விதித்த விதிபற்றியாசிரியாகத்தியனார் பாலொருசிறிதுகேட்டதுணையினேதாதெல்லாமொருங்குணர்ந்தாரொப்ப எந்நூற்பொருளுமுள்ளவாறுமுழுதொருங்குணர்ந்தருளியவியல்பான் உத்தமத்தினுத்தமக்கேள்வியெல்லாமமைந்தருளிய உத்தமத்தினுத்தமப்பரமாசாரிரென்பதூஉம் இன்னுமின்னோரன்னபிறவுமாய ஆசிரியாது மிக்கபேரிபல்புகாணும் அருந்தவக்கண்ணின்றி எஞ்சாதெல்லாமறிந்தோதுவாரொப்பவெழுந்து அப்பரமாசிரியரும் நம்மனோரொப்ப நமது பொல்லாசிரியர் வழக்குஞ்செய்யுளுநாடாது நமது நல்லாசிரியர் வழக்குஞ்செய்யுளுநாடன்மேலும் ஆசிரியாகத்தியனார் பாற்கற்று அக்கற்றதுணையினுமமையாது ஐயவிபரீதமுற்று அவையறுத்தற்பொருட்டு கற்றார் பிறரைநாடித்தலைப்பட்டு அவர்பாற்பலகாற்பயின்று “பின்னர்ப்புலமை நிரம்பி அதனனிந்நூலாக்கினாரென்றிவ்வாறெல்லாம்” நுஞ்சிறுபயிற்சி பற்றியோதிப்பரமாசாரியர்ப்பழிப்பு பெரிது நிரப்பியொழிந்தனீர் ஐயகோ இதனையாமோதினுங்கேட்பினும் அன்றி

நினைப்பினும் அல்லது நம்மையெண்ணினும் எமக்கு நெஞ்சம்மிகப் பெரிதும்நடுங்குகின்றதன்றே. அம்மம்ம நுஞ்செய்கைமிகச்சாலவழகி தேயாம் இங்ஙனமாக நீயிர் பரமாசாரியர் பேரியல் பறியாது பயின்று கொண்ட நுமதறவுஞ் சிறியதொரு பயிற்சி பற்றி அப்பரமாசாரியப் பரம்பொருளையும் நும்மனோரொப்பச்சிற்றறிவுடையராக்கன்மேலும் நும்மனோருளொருவராகவும் வைத்து மிகப்பெரிது மிழித்தோதி னீர். ஆசிரியர் நாடாத நாடினர் காணாத கண்டனர் அறியாதவறிந் தனர் பயிலாதபயின்றனர் எண்ணாத வெண்ணினர் தெளியாத தெளி ந்தனர் ஆக்காதவாக்கினரென்றின்னோரன்ன வாற்றானேது மிவற்றை யாமோதினுங்கேட்பினுமெண்ணினுமெஞ்ஞான்றுமெவற்றானுமெவ் வாற்றானும்யாது மொழிபாததொரு பெருங்கொடுநரகவேதுவேயாம் ஐயகோ பாவியுட்பாவியாயயாமிப்பரமாசாரியர்ப்பழிப்புரைகண்டுங் கேட்டு மின்னு முண்டுடுத்துயிர் வாழுமாறெண்ணுகின்றேனே இஃ தென்னைபாபத்துட்பாபம் "நிறுத்திடாவலான மலனூனெறியை யென்றும்" மறுத்திடவலானவலமார்க்கமதுதன்னை நிறுத்திலன் மறுத்திலனெனிற்கரிசனைய மறுத்தவனைமாய்க்கை கரிசல்லவறமா மே என்னு நல்லறமாற்றுவாரையாங்கண்டிலமென விங்ஙனமோதும் யாம் இன்னுமிதற்கு வேறுபரிகாரமுளதாகவும் அஃதாற்றாது நும் மொப்பப்போலி போத்தோது தும், ஆகலான் யாமு நீயிருமெம்மு ளொத்துமென்றொழிக. அது கிடக்க கேட்போர் உத்தமத்தினுத் தமராயினர்க்கு அக்கேட்டனை யாது மிடையீடின்றி அக்கேள் வியனுபவ நிகழுமாகலானும் அங்ஙனமய அப்பேரியல்புடைய ர்க்கு அவ்வினை யாளரொடுபயிறன்முதலிய அம்முறை யாதும் வேண்டாமையானும் உத்தமத்தின் மத்திமர்க்கு அங்ஙனமாகா மையின் அவ்வியல்புடையர்தாமே அம்முறையாற்சிறிது சிறிதாய்ச் சென்றுசென்று முற்றுப்பாடுபெறவேண்டுமென்பதூஉம் அத னான் அவ்வதிபரிக்குவமுடையர்க்கம்முறையாதும் வேண்டா என்ப தூஉம் உத்தமத்தினுத்தமராய அக்கேட்போரியல்பிஃதென்பதூ உம் கேட்பிக்குமாசிரியனியல்பு இஃதென்பதூஉம் ஏனை உத்தமத் தின் மத்திமமுடையர்தம் மியல்பிஃதென்பதூஉம் அவரைக்கேட்பிக் குமாசிரியனியல்பிஃதென்பதூஉம் இன்னுமின்னோரன்ன அம்முறை

கள்யாதுமறியுமறிவுயாதுமின்றி இவ்வாறுமுறையேயோதுமாறு புகுந்த நும்மோத்து முறை மாறுமுறையாய்ப்பரமாசாரியர்ப்பழிக்கும் பழிப்பு முறையாய் முடியுமாறுகாண்க பொய்படுமொன்றோபுனை பூணுமென்பதூஉமீண்டுய்த்துணர்து கோடற்பாற்று அது கிடக்க ஆசிரியருமிவ்வாறே நம்மனோரொப்ப வழக்குப்பயிறன்முதலிய இம்முறையாற் சிறிது சிறிதாய் அறிவுமேன்மேல் நிகழ்ந்து முற்றுப்பெற்று இப்பரம நூலாக்கியருளினரெனின் அவ்வாக்கும் நூல் பரமநூலாகாமையுமறிக இன்னுமிவ்வாறேதின் இவ்வாறேனைப்பரம நூலாக்கியருளிய பரமாசாரியரேனையரும் அவையாக்கியருளுமுன்னர் இம்முறையாற்போந்து போந்து ஐயவிபரீதமற்று ஆக்கியருளினரெனவேபடும்படுமாயின் அஃதவ்வாசிரியரகத்தியனார் முதலியபரமாசாரியரிடைக்காணப்படாமையானும் அல்லதூஉமவ்வாசிரியன்மார்மாட்டுமஃதுண்டெனக்கோடுமெனின் அவ்வாறுரைய நூல் பரமநூலாகாதென்றன்மேலும் நும்மனோர் எம்மனோராய யாம் இம்முறையாற்போந்துஐயவிபரீதமற்றுக்குமிச்சிறுநூலும் அதனோடொக்குமெனப்படும் படுமாயின், நூல்கள், தம்முள் தாரதம்மியம்வன்மைமென்மைஎன்பன வின்றிக்கெட்டொழிதன்மேலும் அவ்வாசிரியன்மாநும் நும்மனோரெம்மனோரொப்பரெனவும்படும் அம்முறையான் நீயிரும் யாமுமவரோடொத்துமன்றே அது கிடக்க இன்னுமவர் அம்முறையான் மேற்போந்து அறிவுமேம்பட்டாரென்றற்குப் பிரமாணமின்மையானும் அல்லதூஉமஃதெண்ணிறந்து போந்த பிறவிதொறுஞ் சிறிதுசிறிதாய்ப்போந்து போந்து பொலிவதென்பதே உண்மை நூற்றுணிபாகலானும் அடிப்பட்ட ஆன்றோர்கருத்துமதுவே பிறிதன்றாகலானும் அல்லதூஉமஃதிம்மையொன்றின் மாத்திரையினும் முறையாற்போந்துமேம்படுமெனக்கோடுமேனும் அதுபலவேறு சென்மப்பயிற்சிவயத்தால் பிறழ்ந்து போதலின் அதனைது பெரிதும் நிலைபெறுடைத்தாகாதொரோவழிப்பிறழ்ந்தொழியவும் படுமாகலானும் அன்னபிறவாற்றானும் அம்முந்து நூலுள் முறையின்றி விரவிக்கிடந்தன அற்றன்றி முறையுற்று நிற்குமாறவற்றை அம்முறையானெடுத்துக்கொண்டுதொகுத்தருளுங்கால் மேலோதியவாற்றானிவ்வறிவாற்றல் பெரிது நிலைபெறாது பிறழவும்படுமாகலான் அவரங்ஙனமெண்ணிய வெண்

ணியாங்கெய்தப்பெருமையும் பெறப்படும் படவே அவர் வெஃகல் வெகுடன் முதலியமனவயத்தராய் நம்மனோரொப்பச் சிற்றறிவு சிறுதொழிலுடையராகலான் மனிதராய் முற்றறிவு முற்றுத்தொழிலுடையரல்லராகலானும் அதனன் அவர்க்கு நூல்பரமநூலாவதன்மையானுமென்பது ஆகவே அவ்வியல்புடைய ஆசிரியன் மாரிவ்வியல்புடைய நம்மனோருளொருவராய் முடிதலொருதலையாமாகலின் யாமோதியவாற்றான் ஆசிரியல்பிவ்வாறு பெறப்படுதலானும் இன்னோன்னபிறவாற்றானும் நீயிரிவ்வாறொருவினை முதல் வினையாக்கியோதல்பாமாசாரியர்ப்பழிப்புரையாய் யாது முப்தி இல்லதோரிழுக்காய்முடியுமாறுகாண்க அது கிடக்க இனி வேதாகமங்களையுள்ளவாறுணர்ந்து உணர்ந்தவாறே உணர்ந்த அவ்வறங்கரைதலை அவ்வுணர்ந்தோரியல்பு அங்ஙனமன்றி அவ்வறத்தை நாவினான் மறையுணர்தற்குமுன்னர் கரைந்தொழிந்து பின்னர் அந்நான்மறையுணருமாறு சாலாமையுமறிக இன்னும் நீயிர் நமது நூலிழுக்கின்றி விளங்கிமயங்காமரபுள்ள அந்நாவின் முறைப்பட ஓதிவைத்த நமது பொருளை இழுக்கின்மையாயுமாசாற்குக் காட்டியென்றீர், நூலிழுக்குற்று விளங்காவாதல் மயங்குமரபும், இழுக்கின்றி விளங்கல் மயங்காமரபுமாகலான் அவ்வாறு விளங்கிமயங்காமரபாய முறையாதலை நூலாசிரியர் தாமேயுணர்ந்துடையராயின் அஃதத்துணையினமையாது ஆசாற்குக்காட்டுவதெற்றுக்கு, இஃதிழுக்கின்றி விளங்கிற்றோ மயங்காமரபுடைத்தோ: அல்லவோவென்னுமையமின்றித்தெளியின் அது "பொருட்குப்பொருள் தெரிதலையாய் முடியுமாறறிக அஃதன்று அஃதாசிரியர் பனம்பாரனாரோதத்தென்னின் இன்னும் முறையில்லன முறையினிற்குமாறெண்ணி அவற்றை இந்நூலுட்டொகுத்தனன் அதனை ஆசாற்குக்காட்டினானென்றீர் எனவே முறைப்படவோதிய பொருளென்பது நமதவ்வெழுத்தென்னு நூலாற்றானே அமைந்து கிடத்தலின் அவ்வாறே முறைப்படவோதிய பொருளை மறித்தெடுத்தோதல் மிகையாய் முடியுமாறுங்காண்க இங்ஙனமாகலான் நீயிரொருவினை முதல் நாடியது நமதிருவினைமுதலாய் முடிந்தவாறு காண்க. இதனை யின்னு மீண்டோதியவாறுபற்றி விரித்துணர்ந்துகொள்க. பிறவுமன்ன.

104-பக்கம் இறுவாய்வரிசையின்மேலைவரிசையின் மேலைவரிசையின் மேல்வரிசையின் பிற்பாதி, இதனுள் இலக்கணவிளக்கம் இலக்கணவிளக்கச்சூறாவளிசூத்திரவிருத்தி பிரயோகவிவேகம் இலக்கணக்கொத்து வீரசோழியம் நன்னூல் சின்னூல் முதலாகத்தோன்றிய நூலும்பல, அவை தொல்காப்பியத்தின் வழியவாய்ச்செய்யினும் ஆசிரியன் கருத்துணராது மரபுநிலைதிரியச்செய்தலின் பிரமாணமாகாவென்றீர் ஈண்டுப்பிரமாணமாகுமந்நூல்வழிச்செய்யினும் ஆக்கியோனுள்ள முள்ளவாறுணராது மரபுநிலை திரியச்செய்தலின் அவையெல்லாம் பிரமாணமாகாவெனவே ஆசிரியன் கருத்துணர்ந்து மரபுநிலைதிரியாது செய்தலின் பிரமாணமாவது யாம் விரித்த விருத்தியொன்றேயென்பதூஉம் இதனாற்பெற்றாம் அற்றேல் இசைநுணுக்கச்சிற்றுரை சண்முகவிருத்தியென்பவும் முதலாகவென்பதன்பாற்பட்டடங்குமெனின் அமைதி இதுவுமொன்றாமென்றொழிக. இருந்தவாற்றான் முறையே துணிந்த பொருட்கிடனாகாமை சார்பில்லது சாத்தியமேது இரண்டு முடைத்தாகாமை தானெடுத்துக்கொண்டமேற்கோளைச்சாதிக்கமாட்டாததட்குக்கேடுளதாமாறேதலென்னும்பக்கப்போலி ஏதுப்போலி உவமைப்போலி தோல்வித்தானங்களின் பாற்படுமாறறிக.

157-மூன்றாங் கூறு இதனுள் அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகிய நூலடங்காதென்றோதிய இலக்கண விளக்கமுடையபனை மூன்றுறுப்படக்கிய பிண்டத்தானுமெனவும் ஒத்துப்படலமென்னுமுறுப்பினெனவும் கிளந்தெடுத்தோதுதலின் நூலியல்பு அந்நூற்கவயவமென்றும் அதனனது பாயிரத்துளடங்கு மென்றுமோதினர் அதுவுமுறையன்றென்றீர் நூலியல்பு அந்நூற்கவயவம் அதனன் அது,பாயிரத்துளடங்கு மென்றாரென்றென்றீண்டோதினீர் அவரஃதவ்வாறேதியது யாண்டு அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகிய நூலடங்காதென்றார் அவற்றியல்புணராமையின் மூன்றுறுப்புபடக்கிய பிண்டத்தானுமெனவும் ஒத்துப்படலமென்னுமுறுப்பினெனவும் கிளந்தெடுத்தோதுதலின் அஃதவயவமென்பது அவரறிந்திலாபோலுமென்பதனுள், நூலியல்பு அந்நூலுக்கவயவம் அதனனது பாயி

ரத்துளடங்குமென்றது ஈண்டியாண்டுளது காண்டல் வல்லீராய நுமக்கு அஃதங்ஙனமாகும்போலும், ஓதியுமோதியதனை ஓதியவாறுணரவறியாத நீயிர் பிறர்க்குணர்த்துமாறுதலைப்பட்டனிர் அதுபற்றி "ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந்தானடங்காப்பேதையிற் பேதையாரில்" என்பதற்கு இலக்காயினீர் அஃதஃதன்று அஃதவயவமென்பதறிந்திலர்போலு மென்பதன் தாற்பரியமாவது நூலியல்பு அந்நூலுக்கவயவம் அதனனது பாயிரத்துளடங்குமென்பதாலெனின். தற்பரம்பொருளாய நீயிர் தாற்பரிய முணரவல்லீர்தாமென்றொழிக.

இவ்வாறே எமதாசிரியரோதியன அவ்வோதியவாறோதாது பிறழவோதல் நுமக்கியல்பென்ப தியைபுபற்றி மேலுமோதினும் முன்னருமோதுதும். அவயவியாகிய உடல், முகமுதலிய அவயவத்துள் அடக்குமாறு எவ்வாறு அவ்வாறே அவயவியாகியநூல் அவயவமாகிய பாயிரத்துளடங்கும் இங்ஙனமாய அவயவ அவயவிகளின் இயல்புணராமையின் அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகியநூலடங்காதென்றார் மூன்றுறுப்படக்கியபிண்டத்தானுமெனவும் ஒத்துப்படலமென்னு முறுப்பினென வுங்கிளந்தெடுத் தோதுதலினென் றேதுவெடுத்தோதி யருளி இதுபற்றி அஃதவயமென்பதுஅவரறிந்திலர் போலுமென்பது நூலாகிய அவயவிக்கு அப்பாயிர மவயவமென்பதறியகில்ல ரென்றவாறென்றி ஃதறியுமறிவின்மை மேலும் அவயவி அவயவத்து ளடங்காதென்பதனை யுடம்படாதார்க்கு உடம்பாடாவது அதன் மறுதலையாய அஃததனுளடங்குமென்ப தோதாது போதுவதாகவும் அஃதறியாது நூலியல்பு அந்நூலுக்கவயவமென்றார்அதனன் அது பாயிரத்து ளடங்குமென்று ரென்றிவ்வாறு பிதற்றும் பெரும்பித்துக்கு யாந்தரும்பத்திய மருந்து யாதுமின்மையின் அஃதினியாதும் யாதானும் தெளியாதென்றொழிக இருந்தவாற்றானிது பிறிதொருமேற்கோ ளோதலென்னுந் தோல்வித்தானத்தின் பாற்படுமாறறிக.

2-ம் கூறு நூனுதல்பொருளைத் தன்னகத்தடக்கியென்றலின்நூலியல்பு பாயிரத்துளடங்காதென்றல் கருத்தன்றென மறுக்கவென்றார் நூனுதல்பொருளைத் தன்னகத்தடக்கியென்பது இந்நூல் தமிழ்

அறம்பொருளின்பங்களுள் இதனை நுதலிற்றெனக்கூறி அதனைப்
பிறர்க்கறிவிப்பதாகலான் ஆக்கியோனாற் கூறப்படாத பாயிரவகையு
ளொன்றுதலு இவ்விவ்விலக்கணத்தது நூலென நூலியல்பு நூலுட்
கூறப்படுந்தன்மைத் தாகலின் அஃதாக்கியோனாற் கூறப்படுமியல்பிற்
றாகுமந்நூலுளடங்கிப் பாயிரவகையுளடங்காமையு முணரப்படுமென்
றீர் இஃதிழுக்காதல் முன்னரோதுதும். அதுநிற்க நுதலிற்றெனக்
கூறியதனை பிறர்க்கறிவிப்பதென்பதனுள் நுதலல் கூறல் அறிவித்த
லென்னும் வினைகளின் வினைமுதல் யாவையென்று ஆயுமுறையானாய்
தலுறுவார்க்கு நுதலல்வினைக்கு வினை முதல் நூலும், அறிவித்தல்வி
னைக்கு வினை முதல் பாயிரமு மாகும்போலும், ஆயினும் நுதலலைச்
செய் வினை முதல், நூல், இனி அது நுதலிற்றெனக் கூறலைச் செய்
வினை முதல் யாதென்றறியகிலம், நுதலிற்றெனக்கூறி யதனை அறிவி
ப்பதன்றே பாயிரவகை பிறர்க்கறிவிப்பதாம் நுதலிற்றெனக் கூறு
மென்றவினைக்கு வினைமுதல்யாது, நுதலல் கூறல் அறிவித்தலென்னு
மவ்வினை மூன்றற்கும் அவ்வாறே வினைமுதலும் மூன்றுளவாதல்
வேண்டுமன்றே ஈண்டு நுமதுவினை முதலிரண்டேயன்றி மூன்றுகா
ணப்படாமையின் செயப்படுபொருளைச் செயததுபோலக் கூறலென்
றுதல் அன்றி நுமது தானேநிகழுமென்றுதல் அதற்கியாமோரமை
தியோதுதும் அதுநிற்க வினைமுதல் வினையை வினைமுதலி லடக்கு
மறிவறைபோய நீயிர்தா மநூனுதல்பொருளைத் தன்னகத்தடக்கி
என்பதறியும் நிறையறிவுறுவீர் அதுநிற்க. இவ்விவ் இலக்கணத்தது
நூலென்னு நுமதுநூலியல்புநூலுட் கூறப்படுந்தன்மைத் தென்றீர்.
என்றதனானே தனித்தனி நூலெல்லாம் நூலாயநாம் இவ்விலக்கணமு
டையமென் றோதுமென்பது நும்கருத்தாதல் பெறப்பட்டது. அஃ
தேல் நுமதுநூற்றுச் சிலேடை இன்னிசையிருநூறு முதலியநூல்
கள் யாமிவ்விவ்விலக்கணமுடைய மென்னும் நுமதிலக்கணங் கூறு
வாய் தமிழ், அறம், பொருள் இன்பங்களு ளொன்றனை நுதலிற்றெ
னக் கூறியதெனப்பிறர்க்கறிவிப்பதாகிய பாயிரவகையே யுண்மையின்
அது நுஞ் சொல்லளவினு மில்லாது போயவாறுகாண்க. இனியா
மோதுஞ் சொல்லிழுக்கும் நீயிர் மேலோதுஞ்சொல்லிழுக்குந் தம்மு
ளொக்குமாகலின் இதுபற்றி நீயிரென்னை யாசங்கியேற்க. ஆகலான்

நூல்நுதல்பொருளைத் தன்னகத்தடக்கி என்பதுபற்றி அவயவியாகிய நூல் அவயவமாகிய பாரத்துளடங்குமென்பது தெற்றெனவறிக.

இனி ஈண்டு இவ்விலக்கணத்ததூ நூலென்னும் நுந்நூலியல்பு நுந்நூலுட்கூறப்படாமை மேலும் நூலேனையவற்றுள்ளும் அஃதஃதாகலானும் அன்னபிறவாற்றானும் இவ்விவ்வியல் பிற்றுநூலென்னும் நுந்நூலியல்பு நூலுட்கூறப்படுமென்பது வெறும்போலியாதலறிக, எமக்கீண்டு பக்கப்போலி ஏதுப்போலி உவமைப்போலி தோல்வித்தான மென்றவற்றுளொன்றுந்தோன்றாமையினிஃதக்குன்றக்கூறலின் பாற்படுமாறறிக.

இனி யொப்புநோக்கொழிபோதுதும் நீயிரவயவமாகிய பாயிரத்து அவயவியாகிய நூலடங்காமை சாதித்தற்கெடுத்துக்காட்டும் பிரமாணநூல் இலக்கணவிளக்கம், இனி 105-பிரமாணமாகாத நூலிஃதென்பதற் கெடுத்துக்காட்டுநூல் இலக்கணவிளக்கம் அஃதேலிஃதிதரேதராச்சிரயமென்னு மிழுக்காய் முடியுமாலெனின் முடியாது இலக்கண விளககநூல் அப்பிரமாணம் என்னை ஆசிரியன் கருத்துணாமல் மரபுநிலை திரியச்செய்தலான். இனி உறுப்பி யுறுப்புளடங்குதற்குப் பிரமாணமிலக்கண விளக்கம் என்னை அவ்வாறதனுளோதப்படுதலான் ஆசிரியன் கருத்துணாமல் மரபுநிலை திரியச்செய்தலின் இலக்கண விளக்கம் அப்பிரமாணநூலெனக் கட்டளையிட்ட கட்டளை யாசிரியர்தாமே ஆசிரியன் றிருக்கருத்துணரா துணர்ந்து உறுப்பி யுறுப்புளடங்காமைக்குப் பிரமாண நூல் இலக்கண விளக்கமெனக்கட்டளை யிடுதலானும் பிரமாணம் அப்பிரமாணம் மரபுநிலைதிரிதல் அது திரியாமைகள் இவ்விவ்விலக்கணமெனக் கட்டளையிட்டவாகலானும் ஆண்டு அப்பிரமாணமென்றது உறுப்பி யுறுப்புளடங்காதென்பதொழித் தொழிந்தவெனக் கோடலே பொருத்தமுடைத்தாம், என்னை, அங்ஙனங் கொள்ளாக்கால் இக்கட்டளையாசிரியர் கட்டளையாகிய விருத்தி விருத்தமாய் முடியு மாகலானும் முடியுமாயின் அகத்தேதவ வொழுக்க முற்றாமையின் ஊழ்வயப்பட்டு நின்று குற்றமுளவாச்செய்த சிவஞானமுனிவர் விருத்திபோலாமல் அகத்தேதவவொழுக்க முற்றினமையின் ஊழ்வயப்படாது நின்று குற்றமிலவாகச்செய்த விருத்தியாகலானும்.

இவ்வவயபவ அவபவிமுதலொருசார தலைதடுமொற்றமென்னும் பரிபாடைமுறை பற்றி யீண்டுமெழுந்தன இனி அது கத்தியத்திற் கேல தென்னற்க. இஃதுரைப்பாவின் பாற்படுமாகலானென்பது இன்னு மீண்டுக்கிளந்தெடுத்துக்கொண்டுரைத்தவாறு பற்றி விரிவஞ் சிக்கிளவாதொழிந்த ஒருசார் தோல்வித்தானம் எதுபோலி உவமைப்போலி பக்கப்போலிகளெல்லாமுய்த்துணர்ந்து கோடலெளிதாகலான் அவை யாமீண்டுரையாதொழிந்தனம்.

இன்னு மவ்விரண்டனையும் யாமொப்பு நோக்கிப்போதுங்கால் அவை தம்முளாண்டாண்டிடையறவுபடாது, கிளந்து கொண்டொப்புநோக்கின வொழித்து இடையறவுபட்டொழிந்தெழுந்த எழுகின்ற. எழுவவாய கிளந்தவல்ல வெல்லாம் யாநோக்கிப்போந்த வாறுபற்றி நோக்கியுய்த்துணர்ந்து கொள்க.

இனி ஈண்டைதோல்வித்தானம் எதுப்போலிகள் தம்முள் மாறி ஒன்று நின்றுழியொன்று நிற்பினு மமையுமெனிற்படுமிழுக்கென்னை யென்னுமின்றோன்ன ஆசங்கை ஆசங்கைகயல்ல வென்பதூஉம் அன்னபிறவும் போலியாதல்மெய்கண்ட பாடியத்துட்காண்க. இத்துணையும் உண்மை விருத்தியோடது நோக்கியாக்கிய விருத்தியொப்புநோக்கு நோக்குமுறையானேக்குமாறுபற்றித் தொல்காப்பியச்சண்முகவிருத்தி வியல்புபோலியாதல்.தேற்று முகத்தான உண்மை விருத்தியே உண்மையியல்புடைத்தாதல் மனநேர்மை, ஒருபாற்சாயாமை, அழுக்காறின்மை முதலிய சால்புடையராய் நுண்ணுணர் வானுணுகி நோக்கு வார்யார்க்குமினிது விளங்கும் ஏனையரன்னரல்லாாகலின் அவர்வாய் நிகழும் பழி மொழியெல்லாம் யாமணிமணியேயாமென்க எனத்தாமே "உணர்வதுடையார் முற்சொல்லல் வளர்வதன்பாத்தியுணீர் சொரிந்தற்று" மென்பது.

இனி யாமீண்டு நமது நூற்பெயர் முதலிய முறையொடு படுமோ படாவோவென் றிம்முறையானுயுமுறைகண்டு அம்முறையே முறையாக்கொண்டு சிறுமியர்சிறுசோறட்டாடு மாறெப்ப உண்மை விருத்தியோடது நோக்கியாக்கிய விருத்தியொப்பு நோக்குமுதலியவும் அதுவோவன்றோவெனவொருகாலோதற்குத்தலைப்படுதல் செப்

யினுஞ் செய்குவீர் நீயிர், "தொல்காப்பியச்சண்முகவிருத்தியென் றதனை அரசஞ்சண்முகவிருத்தி" யென்றேதிணறோத்திழுக்கென் றேது மறிவறை போதன் மேலும் பயனேடுபடாதவற்றை யெடுத் துக்கொண்டு வறிதேபிதற்றும் பிதற்றுப்பற்றியும் இவ்வாராய்ச்சி நுண்மைமுதலியவுடையர்வைகு நகர்வாய்வைகியுமுடையாலீரென் படுதெல்லார்க்குமினிதுவிளங்கும். இருந்தவாற்றான் அரசஞ் சண்முக விருத்தியனுபபத்தியுபபத்தியாதலுடைய நமக்கு எமதுண்மை விருத்தியோடது நோக்கியாக்கிய விருத்தியொப்பு நோக்கு முதலிய வுபபத்தியுமனுபபத்தி யாயினுமாகும் ஆமாயினும் ஆண்டொருதலை யானேதற்குரிய திஃதென அஃதறிந்தோதாத நீயிர் ஈண்டொருதலை யானேதற்குரியதல்ல தோதற்கேது பிறரோது மோத்துக்கண்டே பிறிதன்றாகலான் அது பிறழ்முறையேயன்றி பிறழாமுறையன்றெ னப்பிறரோது மோத்துக்கஞ்சி அஃதோதற்குத்தலைப்படமாட்டீர் ஒருகாற்றலைப்படுவீராயினுமது நமதிழிந்தோர் வழக்காய் முடியுமல் லது எமதுயர்ந்தோர் வழக்கன்மையுணர்க. ஆகலின் காணுதாற் காட்டுவான்றான் காணுன் காணுதான் கண்டானுந்தான்கண்டவாறு, கல்லாத மேற்கொண்டொழுகல் கசடறவல்லது உமையந்தரும் அறி விலார் தாந்தம்மை பீழிக்கும்பீழை செறுவர்க்குஞ் செய்தலரிது அற்றமறைத்தலோ புல்லறிவுதம் வயிற்குற்றமறையாவழிவெண்மை யெனப்படுவதியாதெனிறெண்மையுடையம் யாமென்னுஞ் செருக்கு என்னுமிலக்கணங்களுக்கிலக்கிய மாமாறுய்த்துணர்ந்து கொள்ளப் படும்.

ஆரணநெறி தழைப்ப வாகமத்துறை விளங்கச்
சீரணிமவுனவாசான் றிருமர பினிதிறோங்க
வேரணி திட்டைமுற்றத் தெம்மனோர்க்கெளிதின்வந்து
சாரணி தாயுமானேன் சரணிழல் சாருவாமே. 1

அறிவார் துறைசை யருட்கோ மெய்விருத்தி தன்னைக்
குறிவா யுறுமெல்லை கண்டு கும்பிட்டேனல்லேன்
சிறியே னறிவிற் கவர்தந் திருப்பாதந் தந்த
நெறியோர் சிறிதே யறிநீர்மை கும்பிட்டேனின்பால். 2

சிவஞான மாகுரவர் பாவநாசத் திருப்பதியின்
புடைக்கூத்தர் தம்பாற்றோன்றிக்
கவராநாக் காராளர் குலத்தையாண்டிற் காவேரித்
துறைசை முனிகணங்கட் கூட்டித்
தவராய மடமருவிக் குடமுனிமெய் யருளிற்
றண்டமிழாரிய முழுதும் வல்லாராய்நற்
சிவஞான பாடியமுன் னூல்களாற்றிச்
சேவிணரடிநிழற்கீழ் மேவினரே. 3

வைதிக நெறிதழைப்ப வாய்சைவத் துறைவிளங்கச்
செய்தமிழு லகமுய்யச் சிவஞான பாடியஞ்செய்
மெய்தவந் தங்குசிங்கைச் சிவஞான விமலனற்றாள்
கைதொழுதினியதொன்று கைதொழு துய்துமாதோ. 4

பேரின்ப மென்மேலும் பெருகிநிகழ் தன்மையினு
ஞேரிஞெருங் குறுமிதய முறுமன்பான் மிகவோங்கச்
சீரினவை யாரடியர் சிவஞான குரவர்புகழ்
பாரினின்ற தெஞ்ஞான்று மெங்கணும்பல் விளக்காமே. 5

பண்ணிசைவெம் பரிதிமதி யெட்டயிலம் பசாசமனல் பாணியுப்பு
விண்ணனில மாக்கையுயிர் கனவிரதஞ் சாயையுச்சிப் படிகம்பானீர்
கண்ணினனெற்றீப மறிவொளிபோலத் துவிதவியைபுகாட்டி [வாம்
வெண்ணையுள்வந் தெமையாண்ட மெய்கண்ட தேவனடி விரும்பிவாழ்

வாழி சிவ நெறி, வாழி சிவ வியல், வாழி சிவ குரு. வாழியுலகமே.

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ தாயுமானபிரான் தாணிழலோங்க.
ஸ்ரீ சிவஞானப் பெருமான் சீரடி வாழ்க.
ஸ்ரீ மெய்கண்ட பரமன் செய்யடி வெல்க.

ஸ்ரீ சிவமயம்.